# சங்கப் புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில்
முனைவர் ( Ph.D.,) பட்டத்திற்காகப் பணிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**மோ. பார்வதிபாய்**

சுழல் எண்: 1525060019

நெறியாளர்

முனைவர் **கோ. தங்கையன்**

இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை

தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர் - 608 002


2020

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் கோ. தங்கையன்**
இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002.

இடம் : அண்ணாமலைநகர்
நாள் : 27.01.2020

---

"**சங்கப் புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்**" என்னும் தலைப்பில் **மோ. பார்வதிபாய்** என்பவர் 2015 - 2019ஆம் கல்வியாண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் முனைவர் பட்ட ஆய்வாளராக ஆய்வு மேற்கொண்டதன் பயனாக, அவரின் முயற்சியில் இவ்ஆய்வு உருவானது என்றும், இவ்ஆய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு வழங்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

**(பேரா. முனைவர் ந. வெங்கடேசன்)**
**தமிழியல் துறைத் தலைவர்**

**(முனைவர் கோ. தங்கையன்)**
**நெறியாளர்**

# நன்றியுரை

தமிழ் வளர்க்கும் புகழ்ப் பூத்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் முனைவர் பட்டத்திற்காக **சங்கப் புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்** என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்த வாய்ப்பு நல்கிய பார்போற்றும் இப்பல்கலைக்கழகத்தின் **மாண்பமைத் துணைவேந்தர்** அவர்களுக்கும், மதிப்பிற்குரிய **பதிவாளர்** அவர்களுக்கும் **ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும்** என் பணிவார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தலைப்பில் ஆய்வு நிகழ்த்த பல்லாற்றானும் உதவி நல்கிய சான்றாண்மை மிக்கப் **பேராசிரியர் முனைவர். வி. திருவள்ளுவன்,** இந்திய மொழிப் புலமுதன்மையர் அவர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

இத்தலைப்பில் ஆய்வு செய்வதற்கு அனுமதி நல்கிய முன்னாள் தமிழியல் துறைத்தலைவர் பேராசிரியர் **முனைவர். அரங்க. பாரி** அவர்களுக்கு நன்றி கடப்பாடுடையேன்.

என் ஆய்விற்கு பல்வேறு நிலைகளில் ஆக்கமும், ஊக்கமும் வழங்கி நல்லாற்றுப்படுத்திய பெருமைமிகு **பேராசிரியர் முனைவர். ந. வெங்கடேசன்,** தமிழியல் துறைத் தலைவர் அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

என் ஆய்வுப்பணிக்கு வழிகாட்டியாகச் செயலாற்றி முழுமையாக ஆய்வில் ஈடுபடச் செய்து ஆய்வேடு செம்மையுற நெறிப்படுத்திய **நெறியாளர் முனைவர் கோ. தங்கையன்** இணைப்பேராசிரியர், தமிழியல் துறை அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

முனைவர் பட்ட ஆய்வுக்காக ஊக்கத் தொகையளித்த **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் ஆய்வுக் காலத்தில் பல்வேறு ஆய்வுக் கருத்துக்களை நல்கிய தமிழியல்துறை பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன். ஆய்வுக்கு உரிய நூல்களை வழங்கி உதவி புரிந்த தமிழியல்துறை நூலகர்கள் **திரு. ஜோசப், திரு. பிரபு, திரு. அறிவழகன்** ஆகியோருக்கும், மைய நூலகத்தார்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வாழ்வின் உயிராக உரமாக திகழ்ந்த தகைசால் பெற்றோர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் கல்வி வளர்ச்சியில் தோன்றாத் துணையாய் திகழும் என் கணவர் **S.N. ரமேஷ்பாபு** அவர்களுக்கு என்றும் நன்றி. ஆய்வுக் காலத்தில் பொருமைக்காத்த என் உயிரினும் மேலாகிய என் மகன்கள் **R.P. ஆதித்யா, R.P. ஜெயஹரிஹரன்** இருவருக்கும் என் நன்றி. என் கல்வி வளர்ச்சியில் உளம் நெகிழும் என் குடும்பத்தினர் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

என் ஆய்வுக் காலத்தில் சக ஆய்வாளர்களாகப் பயணித்த தோழிகள் **இரா. ஜெபஸ்ரீ, பா. மாலதி, இரா. அனுமாதா** மற்றும் பிற நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துத் கொள்கிறேன். இவ்வாய்வேட்டிற்குப் பலநிலைகளில் உதவிபுரிந்த அனைத்து நல்நெஞ்சங்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி உளம் மகிழ்கிறேன்.

ஆய்வேட்டினை உரிய முறையில் அச்சிட்டு பிழைநீக்கி பொலிவுடன் வழங்கிய சிதம்பரம், அண்ணாமலைநகர் **ஆனந்த் கணினியகத்தார்க்கும்** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மோ. பார்வதிபாய்)**
**ஆய்வாளர்**

# முன்னுரை

அகம், மனித வாழ்வினைச் செம்மைப்படுத்தும் இலக்கிய வகை. வாழ்விற்கு அகமும், புறமும் அடிப்படை. புறம் நேரிடையாகக் கூறும் இலக்கியம். அகம் ஆணையும், பெண்ணையும் மையப்படுத்திப் பொதுநிலையில் எக்காலத்திற்கும் பொருந்தி வரும் நிலையில் அமையப்பெற்றனவாகும். சங்க அகம் குறித்து இன்றளவில் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இருப்பினும், அவற்றின் ஆழமும், அகலமும் மிகவும் உடையனவாக உள்ளதை மறைக்க இயலாது. இந்நிலையில் அவற்றின் மீதான கருத்துச் செறிவும், ஆய்வாளர்களால் தொடர்ந்து விளக்கப்படுகின்றன.

உலக மொழிகளான கிரேக்கம், சீனம், எபிரேயம், சமஸ்கிருதம், பழம்பாரசீகம், அரபு ஆகியன பழமையானவைகள். கிரேக்கத் தத்துவஞானிகள் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் இவர்கள் கி.மு. 4,6 நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள் எனவும், பாணினியும், தொல்காப்பியமும், கி.மு. நான்காம் நூற்றாண்டு எனவும் அறிஞர் அ.அ.மணவாளன் உணர்த்துவர். மேலும், இவர்கள் இலக்கியக் கோட்பாடுகளாக, இலக்கிய அமைப்பு, காலம், இடம், சூழல், துன்பவியல், இன்பவியல் போன்ற கட்டமைப்பினை விளக்கி உணர்த்துவர்.

தொல்காப்பியம் வாழ்விற்கு அடிப்படையான, அகத்திற்கு விதி வகுத்தது. இந்த அகம் குறித்து மிகப்பரவலாக விளக்குவது சங்க இலக்கியம். அவற்றின் மூலமாகத் திகழ்பவர்கள் புலவர்கள். அவர்களின் அகக்கருத்தாக்கத்தை வெளிக்கொணரவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுத் தலைப்பு**

**"சங்கப் புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்"** என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

**ஆய்வு நோக்கம்**

படைப்பாக்கம் சமுதாயத்தின் அடிப்படையாகவே அமைவனவாகும். சமூக நிகழ்வுகள் புலவரின் கருவிற்குக் காரணமாகும். சங்க காலத்தை கி.மு. 4, 5

மற்றும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை எனக் காலத்தை உணர்த்துவர்கள் அறிஞர்கள். இந்தக் கால எல்லையில் அழிந்ததுப் போக கிட்டியப் புலவர்களின் எண்ணிக்கையை 473 எனப் பட்டியலிடுகிறார் டாக்டர் ந. சஞ்சீவி. பல ஆண்டுகள் சமுதாயத்தில் நிலவிய பல்வேறு அகப்பரிமாண வளர்ச்சியின் வெளிப்பாடு சங்க இலக்கியம் எனில் மிகையாகா. அகப்பொருளின் தன்மை, அகமாந்தர்களை வெளிப்படுத்திக்காட்டும் புலவர்களின் படைப்பாற்றல் ஆய்வு நோக்கில் அறியத்தகுவனவாகும். தொல்காப்பியரின் களவு, கற்புக் கோட்பாடுகளை அகப்புலவர்கள் கையாண்டுள்ள முறைகளை அறிவதும் நோக்கமாகும். எப்பொருள் மாறினும் உரிப்பொருள் மாறாதன்மை பல்லாற்றானும் உயர்வாம் என்பதை உணர்த்துவதும் நோக்கம். இலக்கியம் போன்று சமுதாயமா? அன்றிச் சமுதாயம் போன்று இலக்கியம் படைக்கப்பட்டதா? என்பதை உணர்த்திக் காட்டுவதும் நோக்கமாம்.

**ஆய்வின் கருதுகோள்**

அகம் அழகாகவும், அறிவாகவும் இருக்கும் நிலையில் சமூகம் பண்பானச் சமூகமாக அமையும். இவ்வியல்பு குறைபடின் சமூகத்தில் குழப்பம் நிலவும் என்பது திண்ணம். இவற்றின் உறுதிப்பொருளை உணர்ந்தே அகப்புலவர்கள் மிகவும் அகத்தையே பாடி உள்ளனர் என்பது வெள்ளியிடைமலை. இவ்அகஉணர்வே அனைத்திற்கும் அடிப்படை என்பது புலவர்களின் துணிவு. இக்கோட்பாட்டினைப் பதினேழாம் நூற்றாண்டில் சிக்மண்ட் பிராய்டு பல்லாற்றானும் உறுதிப்படுத்தி ஆய்வில் நிறைவுக்காட்டி உள்ளார். செம்மையான அகப்புலவர்களின் அகக்கருத்தாக்கத்தைக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெறுகின்றன.

**ஆய்வு எல்லை**

சங்க இலக்கிய எட்டுத்தொகை அகநூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை மற்றும் பத்துப்பாட்டு அகநூல்களான முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியனவற்றை மட்டும் ஆய்வு எல்லைகளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பெறுகின்றன.

**ஆய்வின் முதன்மை ஆதாரங்கள்**


- **முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ)**
  நற்றிணை மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **முனைவர் வி. நாகராசன் (உ.ஆ)**
  குறுந்தொகை மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **முனைவர் அ. தட்சிணாமூர்த்தி (உ.ஆ)**
  ஐங்குறுநூறு மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **முனைவர் அ. விசுவநாதன் (உ.ஆ)**
  கலித்தொகை மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **முனைவர் இரா. செயபால் (உ.ஆ)**
  அகநானூறு மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **முனைவர். இரா. மோகன் (உ.ஆ)**
  பத்துப்பாட்டு மூலமும் உரையும்,
  நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
  சென்னை - 98.
  ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் 2014.
- **தொல்காப்பியம் பொருளதிகாரம்,**
  இளம்பூரணனார் உரை,
  சாரதா பதிப்பகம்,
  கௌரா ஏஜென்ஸீஸ்,
  சென்னை - 5.
  11 ஆம் பதிப்பு - ஜீன் 2011.

**துணைமை ஆதாரங்கள்**

சங்க இலக்கியங்கள் குறித்த ஆய்வு நூல்களும், திறனாய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், ஆய்வுத்தொடர்புடைய பிற நூல்களும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வு முன்னோடிகள்**

சங்க இலக்கியத்தில் புலவர்கள் மற்றும் அகநூல்கள் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு பல வெளிவந்துள்ளன. வ.சுப. மாணிக்கம், ந.சுப்புரெட்டியார், தமிழண்ணல் முதலானோர் புலவர்கள் பற்றியும், அகத்திணைப் பற்றியும் உற்றுநோக்கியுள்ளனர்.

மேலும்,

1. **அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு,**
   ஆ. இராமகிருட்டிணன்,
   தியாகராசர் கல்லூரி, மதுரை - 1982.
2. **சங்க இலக்கியத்தில் தோழி**
   சரளா ராசகோபாலன் - 1986.
3. **சங்க அகநூல்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு ஒப்பீடு,**
   ச. சுபாஷ், முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல் துறை,
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 2002.
4. **சங்கத் தொகை நூல்களில் ஒருபாடற் புலவர்களின் கவிநுண்மை**
   த. சிவக்குமார், முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல் துறை,
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 2017.

ஆகிய ஆய்வேடுகள் இவ்வாயின் முன்னோடிகளாகப் கொள்ளப்பெறுகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் பகுப்புமுறைத் திறனாய்வும், விளக்கமுறைத் திறனாய்வும், ஒப்பியல் அணுகுமுறையும் ஆய்வின் அணுகுமுறைகளாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

## ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை,

முன்னுரை

**இயல்-1:** சங்கப் புலவர்களின் அகக்கருத்தாடல்கள்

**இயல்-2:** சங்கப் புலவர்களின் உரிப்பொருள் கருத்தாக்கம்

**இயல்-3:** சங்கப் புலவர்களின் அகமாந்தர்கள் உருவாக்கம்

**இயல்-4:** சங்கப் புலவர்களின் அகஉணர்வும் சமூகமும்

முடிவுரை

துணைநூற்பட்டியல்

பின்னிணைப்புகள்

## இயல் விளக்கம்

முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு கருதுகோள் ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்வேட்டின் அமைப்பு, இயல் விளக்கம் ஆகியவை புலப்படுத்தப்படுகின்றன.

## இயல்-1: சங்கப்புலவர்களின் அகக்கருத்தாடல்கள்

**"சங்கப் புலவர்களின் அகக்கருத்தாடல்"** என்ற முதல் இயலில் சங்கக் காலத்தில் உள்ள மொத்தப் புலவர்களின் எண்ணிக்கை, இவற்றில் ஆண்பாற் புலவர்களின் எண்ணிக்கைகள், பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கைகள், அகத்திணைக் கோட்பாடுகள், முப்பொருள் மரபுகள், அகப்பொருள் விளக்கம், அகப்பொருள் பற்றி இலக்கண நூல்கள் மற்றும் உரையாசிரியர்கள் கூறுவதை விவரிக்கிறது. அகம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதில் புலவர்கள் எவ்வகையான உத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும், களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் தலைவன் நெஞ்சுக்கு உரைத்தக் கூற்றுகள், தலைவி நெஞ்சுக்கு உரைத்தக் கூற்றுகள், தலைவன்-தலைவி உரையாடல்கள், தலைவி-தோழி உரையாடல்கள், தலைவன்-தோழி உரையாடல்கள் பற்றியும்

இவ்வுரையாடல்களில் அறிவுநிலை, உணர்ச்சி இவற்றைச் சித்தரிப்பதில் புலவர்கள் மேற்கொண்ட கற்பனை, இயற்கைப் பின்னணி, இறைச்சி ஆகியவைப் பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல்-2: சங்கப் புலவர்களின் உரிப்பொருள் கருத்தாக்கம்**

**"சங்கப் புலவர்களின் உரிப்பொருள் கருத்தாக்கம்"** என்ற இரண்டாவது இயலில் "உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" என்ற நூற்பாவிற்கிணங்க முதற்பொருளும், கருப்பொருளும் மாறும் தன்மைக் கொண்டவை. ஆனால் உரிப்பொருள் மாறாத் தன்மைக் கொண்டது என்பதை விளக்குகிறது. அகம் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கையும், அகம்- புறம் பாடியப் புலவர்களில் அகப்பாடல்கள் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கையும் திணை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், உரிப்பொருள் குறித்துத் தொல்காப்பிய அகத்திணையியல் கூறுவனப் பற்றியும், கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப்பாடல்களும், உரிப்பொருள் மட்டுமே அமைந்தப்பாடல்களும் ஆராயப்படுகின்றன. உரையாசிரியர்கள் முதற்பொருளால் கருப்பொருளும், கருப்பொருளால் உரிப்பொருளும் சிறக்கின்ற தன்மையைச் சுட்டிக்காட்டுவதையும் உரிப்பொருளில்லாத அகப்பாடல்கள் எதுவுமே இன்றிச் சங்கப்புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். ஐவகைத் திணைக்குரிய உரிப்பொருள்களும் அவற்றிற்கான பாடல்கள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல்-3: சங்கப் புலவர்களின் அகமாந்தர்கள் உருவாக்கம்**

**"சங்கப் புலவர்களின் அகமாந்தர்கள் உருவாக்கம்"** என்னும் மூன்றாம் இயலில் "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்பது அகப்பாடல் மரபாகும். இம்மரபு புறப்பாடல்களில் இல்லை. சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவன், தலைவியின் பெயர்கள் இடம் பெறாது. இவை பொதுமைத் தன்மை வாய்ந்ததாகவும், எக்காலத்திலும் ஒருவர் சங்கப்புலவர்கள் எழுதிய அகப்பாடல்களைப் பயிலும் நிலையில் தமக்காக உருவாக்கப்பட்டப் பாடல்களாகப் பாவித்துக் கொள்வதாக அமைந்துள்ளது. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், பாங்கன், பாணன் ஆகிய மாந்தர்களின் பண்புநலன்களும்,

அகத்துறைகளும் ஆராயப்பட்டுள்ளன. மேலும் அகமாந்தர்களின் மனஉணர்வுகளை வெளிப்படுத்துவதில் தொல்காப்பியர் உரைத்துள்ள எண்வகை மெய்ப்பாடுகளைப் புலவர்கள் தமது பாடல்களில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்பதைப் பற்றியும், தலைவன், தலைவியாகிய இருவரின் அகம் சார்ந்த கருத்துக்களையும், பிரிவில் அடையும் துயரங்களையும் கூறும் நிலையில் தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், பாணன் முதலானோர் இருவரையும் எவ்வெவ்வகையில் செம்மைப்படுத்துகின்றனர் என்பதைப் பற்றியும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல்-4: சங்கப் புலவர்களின் அகஉணர்வும் சமூகமும்**

**"சங்கப் புலவர்களின் அகஉணர்வும் சமூகமும்"** என்னும் நான்காவது இயலில் அகம் அனைத்திற்கும் அடிப்படை. அகத்தின் வழி அமைவது இல்லம். அகம் உள்ள நிகழ்வாக உணரப்படுகிறது. புறம் உலக நிகழ்வாக உணர்த்தப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்கப்புலவர்கள் தமது பாடல்களில் தலைவன், தலைவியின் அகஉணர்வுகளை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதையும், இவ்வகையான பாடல்களைப் பாடும் நிலையில் கற்போர் பெறும் உணர்வுகளான பரிவு, இரக்கம், சினம், மருட்கை ஆகிய மெய்ப்பாடுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் அறியலாம். சங்க காலமக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலஅடிப்படையில் எவ்வகையான சமூகம் சார்ந்த வாழ்வினை வாழ்ந்துள்ளனர் என்பதையும், சமூக மக்களின் குடும்ப வாழ்க்கை, நம்பிக்கைகள், பழக்கவழக்கம், மக்களின் தொழில்கள் ஆகியன பற்றியும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**முடிவுரை**

ஒவ்வொரு இயலிலும் பெறப்பட்ட ஆய்வு முடிவுகள், இறுதியாகத் தொகுக்கப்பட்டு ஆய்வு முடிவுரைகளாகத் தரப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட அனைத்து நூல்களும் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுத் துணைநூற்பட்டியலாகத் தரப்பட்டுள்ளது.

**பின்னிணைப்புகள்**

இதழ்களில் வெளியான ஆய்வாளரின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சங்க இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை என்ற ஐவ்வகை திணைப்பாடியப் புலவர் பெயர்கள், கூற்றுகள், பாடிய பாடல் எண்கள், மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை ஆகியவை பகுப்பு, பகுப்பாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு திணை, இரு திணை, மூன்று திணை, நான்கு திணை, ஐந்து திணைப் பாடிய புலவர்களின் பெயர்கள், கூற்றுகள், பாடல் எண்ணிக்கைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அனைத்தும் அகம் மட்டும் பாடியப் புலவர்களின் பகுப்பாகவும், அகமும் - புறமும் பாடியப் புலவர்களில் அகப்பாடல்கள் மட்டும் பகுப்பாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்களின் எண்ணிக்கைகள் திணை அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன.

## இயல் - 1

# சங்கப் புலவர்களின் அகக்கருத்தாடல்

தமிழர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு துணைநிற்பவை இலக்கியங்களே. காதலும், வீரமும் தமிழர்களின் உயர்நிலையாகக் கருதப்பட்டன. வாழ்வியல் நெறிகளான அகத்தையும், புறத்தையும் கருத்துவளம் மிக்கப் பாடல்களாகப் புலவர்கள் பாடியுள்ளனர். வாழ்வியல் நெறியை அகம், புறம் எனப் பாகுப்படுத்திப் பாடிய புலவர்களின் நுட்பமான அணுகுமுறையும், பாடிய முறையும், இன்றைய நிலையிலும் வியப்பதற்குரியதாக உள்ளது. மனித வாழ்க்கையின் உயிராக திகழும் காதல் பற்றியும், காதலின் நுட்பமான உள்ளுணர்வு பற்றியும் புலவர்கள் பல்வேறு பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். பெண்பாற்புலவர்களும் இலக்கியப் பாடல்களைப் பாடினர் என்பது தமிழ் மகளிரின் புலமைதிறனை வெளிப்படுத்துகிறது. மேலும் வேறு எந்நாட்டு இலக்கியத்திற்கும் இல்லாத தனிப்பெருமையினையும் புலப்படுத்துகின்றன. புறத்தே தோன்றும் காட்சிகளையும், அகத்தே தோன்றும் கருத்துக்களையும் புனைந்து நிற்கும் அழியாத வடிவமாக விளங்குவது சங்கப்பாடல்கள். மனித வாழ்க்கையின் உயிர்நாடியாய் விளங்கும் காதலைப் பற்றி காதலின் நுட்பமான உள்ளுணர்வு பற்றியும் புலவர்கள் பாடியுள்ளனர். காதலும் வீரமும் இலக்கியங்களின் கருத்தாகக் காணப்படுகிறது. தமிழின் செவ்வியல் தன்மையை வெளிப்படுத்தும் சங்க இலக்கியப் பாடல்கள் கருத்துச்செறிவும் பொருட்சிறப்பும் மிகுந்தவைகள் என்ற உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் புலவர்கள் பாடியுள்ளனர்.

### சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்வினைப் பிரதிபலிப்பதாக உள்ளன. அறிஞர்களால் "பாட்டும் தொகையும்" என குறிக்கப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்களாகும். இவை அகம் புறம் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. அகப்பாடல்கள் மனம் ஒத்த தலைவனும் தலைவியும் இணைந்து வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதாக உள்ளன. புறப்பாடல்கள் போர், வெற்றி, கொடை, நாட்டுநிகழ்வுகள், வாழ்க்கையின் குறிக்கோள் பற்றிக்

கூறுவதாக உள்ளன. சங்க இலக்கியத்தில் காதலரின் உள்ளத்து உணர்வுப் பற்றிய பாடல்களே மிகுதியாக உள்ளன. சங்க நூல்களில் மிகுதியாக உள்ள பாடல் அகப்பாடலே ஆகும். இது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதற்குக் காரணம் அகமே அனைத்திற்கும் அடிப்படை என்பதை ஒவ்வொருவரின் உள்ளமும் ஏற்றுக் கொண்டதே ஆகும். **"அகம்" உணர்வையும் "புறம்" அறிவையும் உணர்த்தும். அகம் உயிர் போன்றது. புறம் உடல் போன்றது. உடலின்றி உயிர் உருப்பெற இயலாது. இரண்டும் இணைந்ததே முழுவாழ்வு, நிறை வாழ்க்கை"**[1] என பேராசிரியர் மது. ச. விமலானந்தம், அகம் குறித்த சிந்தனையை முன்வைக்கிறார்.

மேலும், **"நின்ற சொல்லர் நீடு தோறு இனியர் என்றும் என் தோள் பிரிபு அறியலர் என அகத்தும் புறத்தும் தூய்மையுடையவரே சான்றோர். "அவருடைய சொந்த வாழ்வைப் பார்க்க வேண்டா, பொது வாழ்வைப் பாருங்கள்" என்பது பக்கவாதமுற்ற உடலனையது என்று கூறுவதற்கொப்பாகும். தமிழர் வாழ்வு அகத்தும் புறத்தும் பளிங்கனைய கறையில்லாத் தூய்மை கொண்டது என்பது பழந்தமிழ் இலக்கியம் காட்டும் செய்தியாகும்"**[2] என கு.வெ. பாலசுப்பிரமணியன் உரைப்பர்.

சங்க இலக்கியங்கள் பிற இலக்கியங்களினும் கருத்துச்செறிவு அதிகம் கொண்டதாக உள்ளன. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலும் பல்வேறு பொருள் தரும் சொற்களைத் தேர்ந்தெடுத்தும், ஒவ்வொரு சொற்களிலும் ஆழ்ந்த கருத்துகள் உருவாகும் முறையில் புலவர்கள் பாடியவைக் கற்பவரை வியப்பிற்குள்ளாக்குகிறது. **"கி.பி முதல் இரு நூற்றாண்டுகளில் கடைச்சங்கப் புலவர்களால் ஆய்ந்தெடுக்கப்பெற்ற பாடல்களின் தொகுப்பே சங்க இலக்கியங்கள். இச்சிறு துகளே பிறமொழிகளின் முழு இலக்கியத்தை அளவிலும் பொருள் பெருமையிலும் ஒத்து விளங்குகிறது. சங்க நூல்கள் அனைத்தும் தனிப்பாடல்கள். ஒரு பாடலை வைத்துக் கொண்டு ஒரு நூலே தீட்டி விடலாம். அத்துணைப் பொருட் செறிவு, பெரிய கருத்துக்களைச் சிறிய பாவில் பகர்வது. நிறைந்த பொருளைக் குறைந்த சொற்களால் கூறுவது. பெரும் பாடல்கள் கொண்ட காப்பியங்களைக் காண்டல் அரிது.**

**இத்தன்மை புலமைப் பொதுமையைப் புலப்படுத்துகிறது"**[3] என்பர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

**"தமிழ் இலக்கியம் முழுமையும் ஓர் உறுப்புக்கட்டமைப்பு எனக் கொண்டால், சங்கப்பாடல் மரபு என்பது அதன் வாழ்வியற் குருதி எனலாம். தமிழ்ச் செய்யுள் தோன்றி வளர்ந்த பழம்பெரும் தமிழகத்தின் இமயம் எனச் சங்க இலக்கியத்தைச் சுட்டுதல் பொருந்துவதாகும்"**[4] எனச் சங்க இலக்கியச் செறிவினைத் தமிழண்ணல் உரைப்பர். அகப்பொருள் காதல் என்ற கருத்தாக்கத்தையும், புறப்பொருள் வீரம் என்ற கருத்தாக்கத்தையும் கொண்டதாக உள்ளது. காதலும் வீரமும் சங்க காலமக்களின் உயிராகக் கருதப்பட்டது. காதலுக்கும் போருக்கும் வீரமே அடிப்படையாக உள்ளது. காதல் கொள்ளும் தலைவன் வீரம் இருக்கும் நிலையில் அவனால் காதலை வெல்ல இயலும். அவ்வாறே போருக்குச் செல்லும் தலைவனுக்கும் வீரம் வெற்றியைத் தேடித்தரும். ஆகவே, காதலையும், வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டும் அகம், புறம் எனச் சங்கப்பாடல்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியச் செறிவினை,

**"பழம் போலும் சங்கப் பனுவலைக் கற்றால்**
**கிழம்போகும் கீழமையும் போம்"**

அறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் கருத்துரை நினையத்தகுந்ததாகும்.

**எட்டுத்தொகை**

எட்டு நூல்களின் தொகுப்பே "எட்டுத்தொகை" எனப்படுகின்றது. இதனை "எண்பெருந்தொகை" எனவும் அழைப்பர். இவற்றின் பெயர்களை

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்குபரிபாடல் - கற்றறிந்தார்**
**ஏத்தும் கலியொடு அகம் புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**

இச்செய்யுள் எட்டுத்தொகையை முறைபடுத்திய செய்யுள் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகநூலாகவும் பதிற்றுப்பத்து, புறநானூறு புறநூலாகவும், பரிப்பாடல் அக, புறநூலாகவும் கருதப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்கள் புலவர் தம் பெயராலோ அல்லது பாடப்பட்டவர் பெயராலோ தொகுக்கப்பெறாமல் பாடல் எண்ணிக்கை அடிவரையறை அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. பத்துப்பாட்டைவிட எட்டுத்தொகையிலேயே மிகுதியான அகப்பொருள் நூல்கள் காணப்படுகிறது.

**பத்துப்பாட்டு**

பழந்தமிழ் நூல்களில் பத்துப்பாட்டு பண்டையத் தமிழர்களின் நாகரிக வாழ்க்கையை விளக்கி கூறும் நூலாகக் கருதப்படுகிறது. இயற்கைக்கு மாறான கற்பனைகளை எங்கும் பத்துப்பாட்டில் காண முடியாது. கற்பவருக்கு இயற்கைப் பொருள்களின் தோற்றங்களைக் காண்பது போன்ற எண்ணம் உருவாகும். பத்துப்பாட்டுக் கற்பனைகளும், கதைகளும் நிறைந்த காவியமன்று கண்ணாற் கண்ட காட்சிகளை அப்படியே செய்யுள்களாக புலவர்கள் இயற்றியுள்ளனர். பத்துப்பாட்டின் பொருண்மையைச் சுந்தரம் பிள்ளை,

**"பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ**
**எத்துணையும் பொருட்கு இசையும் இலக்கணமில்**
**கற்பனையே"**

எனச் சுட்டுவர். புலவர்கள் தன்னுடன் பழகி வாழ்ந்த மக்களைப்பற்றியும், இயற்கைப் பொருட்களைப் பற்றியும் பாடியுள்ளனர். பத்துப் பாடல்கள் ஒன்றாக சேர்ந்துத் தொகுக்கப்பட்ட நூல் பத்துப்பாட்டு ஆகும். இவற்றை,

**"முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து"**

என்னும் செய்யுள் குறிக்கிறது.

இவற்றில் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படை நூல்கள். அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்பனவாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை அக நூலாகவும், மதுரைக்காஞ்சி புறநூலாகவும், நெடுநல்வாடை அகமும் புறமும் சார்ந்த நூலாகவும் திகழ்கிறது.

**சங்கப்புலவர்கள்**

பழந்தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை எக்காலத்தவரும் அறிந்து கொள்வதற்கும் என்றுமே துணைநிற்பவை சங்க இலக்கியங்கள். இலக்கியக் கருவூலங்களாகத் திகழும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் அகத்தையும், புறத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பல்வேறு காலத்தில் வாழ்ந்த ஆண், பெண் புலவர்களாலும், அரசர்களாலும் பாடப்பட்டவையாகும். சங்கப்புலவரின் அறிவு, கதிர்போல் ஒளிறுகின்றது. சங்கப்பனுவல்கள் ஞாயிறு, திங்கள் போல் நின்று பரந்து வாழ்வொளி வீசுகின்றன என்ற அறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் ஆய்வுரை பொருள் உடையதாகும். புலவர்கள் தமது பாடல்களில் கற்பவரின் எண்ணம், இறுதி வரை இலக்கிய நுகர்வதில் தொடர்ந்து இயங்கும் நிலையில் படைத்து உள்ளதை உணர முடிகிறது.

அகத்திணை பற்றி வ.சுப. மாணிக்கனார் **"அகத்திணை புலவனின் புதுக்கூர்மையை ஒடிக்கும் இலக்கியமன்று. ஏன்? அவ்விலக்கியத்தின் பொருளே காதல். காதலைப் பாடாத காலத்தவர் இலர், நாட்டவர் இலர், மொழியவர் இலர், இனத்தவர் இலர். சிறுகதைக்கும், புதினத்திற்கும், நாடகத்திற்கும், தனிக்கவிதைக்கும், காவியத்திற்கும் காதலே பொருள். இசைக்கும், ஓவியத்திற்கும் வளர்ந்து வரும் திரைக்கும் எல்லாக் கலைக்கும் காதலே பொருள். நாளிதழ், கிழமையிதழ், திங்கள் இதழ், ஆண்டு மலர்க்கெல்லாம் காதலே பொருள்"**[5] எனும் கருத்துரை பொருள் உடையதாகும்.

புலவர்கள் புதிய புதிய கோணத்தில் வாழ்க்கையைப்புனைத்துக் களவு வாழ்வையும், கற்பு வாழ்வையும் பாடியுள்ளனர். **"புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண், பெண் காதலே அக்காதல் இலக்கியத்தின் வற்றாத ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதையின் சிந்தனையை உருவாக்கும் சால்புகளுள் ஒன்று எனக் கவிஞனுக்கும் காதலுக்கும் உள்ள இணைப்பை"**[7] மேனாட்டு ஆய்வறிஞர் சி. எச். ஆர்போர்டு அவர்கள் கூற்றின் வழி ஆண், பெண் காதல் வாழ்வினைப் புலவர்கள் போற்றினர் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

"2381 சங்கப்பாக்களை 473 சான்றோர் பாடினர். இப்பாக்கள் அகத்திணையும் புறத்திணையும் பற்றியவை. இவற்றுள் அகத்திற்கே உரிய செய்யுட்கள் 1862. இவை தம்மை இயற்றியோர் 378 அகப்புலவோர். இவருள் பெண் புலவோர் இருபத்து மூவர். அவர் பாடிய அகங்கள் 97. சங்கத் தொகையின் 473 புலமையோருள், அகம் பாடாது புறமே பாடியவர் தொகை 95 (ஆண் 86 பெண் 9) புறம்பாடாது அகமே பாடியவர் எண் 301: அகமும் புறமும் பாடிய இருதிணைப்புலவோர் எண்ணிக்கை 71. அகத்திணையிற் கற்பியல் பாடாது களவியல் மட்டும் பாடியோர் தொகை 145; களவியல் பாடாது கற்பியல் ஒன்றே பாடியவர் எண் 140; களவும் கற்பும் பாடிய இரு கைகோட் புலவர் எண்ணிக்கை 93"[8] என வ.சுப மாணிக்கம் அவர்கள் வகைப்படுத்தி உள்ளார்.

மேலும், ந. சுப்புரெட்டியாரும் **"473 சங்க சான்றோர்களுள் அகத்திணை பாடாது புறத்திணையை மட்டிலும் பாடியவர்களின் தொகை 95, இவர் தம்முள் ஆண்பாலார் 86, பெண்பாலார் 9, புறத்திணை பாடாது அகத்திணை மட்டிலும் பாடியோரின் தொகை 301, அகத்திணை, புறத்திணை ஆகிய இரண்டு திணைகளையும், பாடியோரின் எண்ணிக்கை 71. அகத்திணையுள் கற்பியல் பாடாது களவில் மட்டிலும், பாடியோரின் தொகை 145, களவியல் பாடாது கற்பியல் மட்டிலுமே பாடியோரின் தொகை 140, களவு, கற்பு என்ற இரு கைக்கோள்களையும் பாடியவர்கள் 93 பேர் ஆவர்"**[9] என சங்கப் புலவர்களை வகைப்படுத்திக் காட்டுவர்.

சங்க இலக்கியத்தில் **"மொத்தப் பாடல்கள் 2387 அவற்றுள் அகப்பாடல்கள் 1877, புறப்பாடல்கள் 510, இவற்றைப் பாடிய புலவர் நானூற்று எழுபத்து மூவர். அவருள் பெண்பாற் புலவர் முப்பதின்மர். இந்த எண்ணிக்கை குறித்து, வேறுபாடுகளும் உள்ளன. உ.வே.சாவும், பின்னத்தூரரும் 38, இராகவஐயங்கார் 31, அபிதான சிந்தாமணியும் பூரணலிங்கனாரும் 26, ஔவை துரைசாமிப்பிள்ளை 34, வையாபுரிப்பிள்ளையும், துடிசை கிழாரும் 32 புலவர், கா. கோவிந்தன் 27, ஔவை நடராசன் 41 என்று வரையறை செய்துள்ளனர். அரசப் புலவர் இருபத்தைவர்"**[10] என வகைப்படுத்துவர் ச.வே. சுப்பிரமணியன்.

இவ்ஆய்வுரையின்வழி சங்கபுலவர்களின் எண்ணிக்கையிலும், அகப்புறப் பாடல்களில் எண்ணிக்கையிலும் மாறுபாடுகள் காணப்படுகிறது என்பதைப் புலனாக்கிக் கொள்ளலாம். இவற்றில் புறப்பாடல்களை காட்டிலும் அகப்பாடல்கள் மிகுதி என்றும், மிகுதியானப் புலவர்கள் அகம் பாடியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. அகப்பொருள் மட்டும் பாடிய பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கை 15.

அகம் பாடிய புலவர்களது பாடல்கள் அக்கால மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. சங்கச் சமூகமரபுகளை அறிய அக்காலத்தவர் இயற்றிய பாடல்களிலிருந்தே அறிதல் இயலும் என்பதை **"பண்டைக் காலத்துத் தமிழ் மக்களுடைய தினசரி வாழ்க்கை நெறியை அவர்கள் இயற்றியுள்ள பாடல்களிலிருந்து ஊகிப்பதே தக்கது"**[11] என வையாபுரிப்பிள்ளைக் கூற்றை ஆ. தனஞ்செயன் மேற்கோள் காட்டுவர்.

காதல் வாழ்வினைப் புலவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களின் நடைமுறை வாழ்வையும், இயற்கையின் வழியாக, தமது பட்டறிவில் இருந்தும், தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனது கற்பனையின் வாயிலாகவும், செறிவுள்ளக் கருத்துக்களைக் கொண்டும், நாகரீகமானச் சொற்களைக் கொண்டும், தமது உணர்வுகளை பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தியும், பிற்காலத்தவரும் தமது பாடல்களைப் படித்து உண்மையான அகப்பொருளின் கருத்துக்களை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தி வாழவேண்டும் என்பதற்காகப் பாடல்களைப் புனைந்து உள்ளனர்.

**<u>நற்றிணை</u>**

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் முதலில் இருக்கும் நூலாக நற்றிணை திகழ்கின்றது. இதனை நல் + திணை - நற்றிணை என்பர். திணையின் அடிப்படையில் பெயர் பெற்ற நூல். நல் என்பதை 'நறு' என்ற பொருளைக் கொண்டு விளங்குகிறது. இந்நூலில் நல், நறு என்ற சொற்கள் 130 இடங்களில் பயின்று வந்துள்ளதே நூற்பெயருக்குக் காரணம் எனலாம். நல்ல ஒழுக்கத்தை உடைய நூல் என்பதால் நற்றிணை என்ற பெயர் பெற்றது என்றும் கருதலாம். கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள். இதில் 234 ஆம் பாடல் முழுமையாகக்

கிடைக்கவில்லை. மேலும் 385 ஆம் பாடலில் ஒரு பகுதி பாடல் மட்டுமே கிடைத்துள்ளது.

**நற்றிணை பாடிய புலவர்கள்**

நற்றிணையைப் பாடிய புலவர்கள் 175 என்றும் 192 என்றும் கூறுவர். "மர்ரே புதுமுறைப் பதிப்பு நற்றிணையில் பாடினோர் தொகை 192 என்றும், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய தமது இலக்கிய வரலாற்றில் நற்றிணைப் புலவர்கள் 175 என்றும் குறிப்பிட்டுள்ளார். பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்களது பதிப்பலும் பாடினோர் வரலாற்றில் இத்தொகை 175 என்றே குறிப்பிட்டுள்ளார்"[12] எனப் புலவர் த. கோவிந்தன் குறிப்பர்.

மேலும் "இவ்வேறுபாட்டிற்குப் புலவர்களின் பெயர்களில் அடைமொழி சிறிது வேறுபட்டமையே காரணம்"[13] என்று புதுமுறைப்பகுப்பில் கூறப்பட்டுள்ளதாகத் த. கோவிந்தன் எடுத்துரைப்பர்.

இதில் 98-வது பாடல் உக்கிரப்பெருவழுதி என்றும், 97, 301 பாடல்கள் வழுதி என்பவராலும் பாடப்பட்டுள்ளன.

நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடல்களை 83 புலவர்களும், முல்லைத்திணையை 25 புலவர்களும், மருதத்திணையை 22 புலவர்களும், நெய்தல் திணையை 50 புலவர்களும், பாலைத்திணையை 80 புலவர்களும் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

நற்றிணையில் புலவர் மட்டும் அல்லாது அரசர்கள், குறுநில மன்னர்கள், சான்றோர்கள் ஆகியோர்களும் பாடியுள்ளனர். சொற்றொடரால் பெயர் பெற்றவர் புலவர்கள் எழுவர். வண்ணப்புறக் கந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கண்பேதைப் பெருங்கண்ணனார், தும்பீசேர் கீரனார், தேய்புரி பழங்கயிற்றனார், மடல் பாடிய மாதங்கீரனார். நற்றிணையில் 5 பெண்பாற் புலவர்கள் 8 பாடல்களைப் பாடியுள்ளனர். பாடியோர் பெயர் காணாதப் பாடல்கள் மொத்தம் 56. திணை அடிப்படையிலும், கூற்று அடிப்படையிலும், அறிஞர்களிடையே மாறுபாடுகள் காணப்படுகிறது.

**திணைப் பாடல்கள்**

"திணை அடிப்படையில் பார்க்கும்போது குறிஞ்சித் திணைப்பாடல்கள் 130, பாலைப் பாடல்கள் 107, நெய்தல் பாடல்கள் 101, மருதப்பாடல்கள் 33, முல்லைப் பாடல்கள் 28."[14] என ச.வே. சுப்பிரமணியன் உரைப்பர். மேலும் குறிஞ்சி 131, நெய்தல் 102, பாலை 104, முல்லை 30, மருதம் 32"[15] என ந. சஞ்சீவி சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணையில் குறிப்பர். நற்றிணையில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன.

**கூற்றுப் பாடல்கள்**

"நற்றிணையில், தோழிக் கூற்றாக 217 பாடல்கள், தலைவிக் கூற்றாக 84 பாடல்கள், தலைவன் கூற்றாக 73 பாடல்கள், நற்றாய் கூற்றாக 11 பாடல்கள், பரத்தைக் கூற்றாக 9 பாடல்கள், கண்டோர் கூற்று 2 பாடல்கள், செவிலிக் கூற்று 1 பாடல், தேர்ப்பாகன் கூற்று 1 பாடல், பாங்கன் கூற்று 1 பாடல் உள்ளன"[16] என ச.வே. சுப்பிரமணியன் குறிப்பர். மேலும் கூற்றின் அடிப்படையில் "தலைவன் 75, தலைவி 83, தோழி 218, தாயர் 11, பரத்தையர் 9 ஏனையோர் 3"[17] என ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணையில் குறிப்பர். நற்றிணையில் தோழி கூற்றுப்பாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

நற்றிணையில் மிகுதியானப் பாடல்களைப் பாடியப் புலவர்கள் கபிலர், உலோச்சனார் ஆவார்கள். இவர்களில் கபிலர், உலோச்சனார் முறையே 20 பாடல்களையும், இவர்களுக்கு நிலையில் பரணர் 12 பாடல்களையும் பாடியுள்ளார்.

அகப்பொருள் மட்டும் பாடிய பதினைந்து பெண்பாற் புலவர்களுள் ஐவர் நற்றிணையில் இடம்பெற்றுள்ளனர். வெள்ளிவீதியார் 3 பாடல்கள், கழார்க்கீரன் எயிற்றியார் 2 பாடல்கள், அஞ்சில் அஞ்சியார், குறமகள் இளவெயினி, நப்பசலையார் இவர்கள் ஒவ்வொருவரும் முறையே 1 பாடல் பாடியுள்ளனர்.

பிற நூல்களில் பாடாமல் நற்றிணையில் மட்டும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 83. இவர்கள் 94 பாடல்களைப் பாடியுள்ளனர்.

தொகை நூல்களில் ஒரேயொரு பாடல் மட்டுமே பாடிய புலவர்களும் உள்ளனர். இப்புலவர்களும் பல பாடல்கள் பாடிய புலவர்களின் திறனுக்கு ஒப்ப,

ஒரே பாடல்களில் தனது முழு திறனையும் நிலைநிறுத்தி உள்ளனர். நற்றிணையில் ஒருபாடற் புலவர்களின் எண்ணிக்கை மொத்தம் 72. அவை குறிஞ்சி 27, முல்லை 7, மருதம் 3, நெய்தல் 14, பாலை 21.

**குறுந்தொகை**

"நல்ல குறுந்தொகை" என்றும் அடைமொழிக்கு உரிய நூல் குறுந்தொகை ஆகும். குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை எனப்பெற்றுள்ளது. குறுந்தொகை நானூறு என்று பெயர் பெற்றது. இப்பெயர் வழக்கு இறையனார் களவியல் உரையால் அறியப்படுகிறது. தொகுத்தவர் பூரிக்கோ, தொகுப்பித்தவர் யார் எனத் தெரியவில்லை.

குறுந்தொகைப் பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் பெண்பாற்புலவர்கள் இருபத்தேழுப்பாடல்களைப் பாடியுள்ளனர். ஆசிரியர் பெயர் தெரியாதப் பாடல்கள் 10 உள்ளன. பாடல் வரிகளால் பெயர் பெற்ற புலவர்கள் பத்தொன்பதின்மர். செம்புலப் பெயல்னீரார், அணிலாடு முன்றிலார், நெடுவெண்ணிலவினார், மீனெறி தூண்டிலார், விட்ட குதிரையார், ஓரேருழவனார், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், காலெறி கடிகையார், ஓரிற்பிச்சையார், எயிற்றியனார், கல்பொருசிறுநுரையார், கள்ளிலாத்திரையார், குப்பைக் கோழியார், பதடி வைகலார், கவைமகனார், வில்லகி விரலினார், கங்குல் வெள்ளத்தார், தும்பிசேர்கீரனார், குறி இறையன்.

**திணைப் பாடல்கள்**

திணை அடிப்படையில் "குறிஞ்சி - 147, முல்லை - 44, மருதம் - 49, நெய்தல் - 72, பாலை - 89"[18] என ச.வே. சுப்பிரமணியன் வகுப்பர். மேலும் குறிஞ்சி - 147, நெய்தல் - 71, பாலை - 90, முல்லை - 45, மருதம் - 48"[19] என ந. சஞ்சீவி வகைப்படுத்துவர். நற்றிணையைப் போன்று குறுந்தொகையிலும் குறிஞ்சித்திணைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன.

**கூற்றுப் பாடல்கள்**

குறுந்தொகையில் கூற்று அடிப்படையில் "தலைவி கூற்று - 178, தோழி கூற்று - 142, தலைவன் கூற்று - 62, செவிலித்தாய் கூற்று - 9, கண்டோர் கூற்று -

3, காதற்பரத்தை கூற்று - 2, பாங்கன் கூற்று - 2, பரத்தை கூற்று - 2, இற்பரத்தை கூற்று - 1"[20] என ச.வே. சுப்பிரமணியன் வகுப்பர். மேலும் கூற்றின் அடிப்படையில் "தலைவன் 61, தலைவி 180 தோழி 141, தாயர் 9, பரத்தையர் 5, ஏனையோர் 5"[21] என ந. சஞ்சீவி வகுப்பர். அகஇலக்கியங்களில் தோழி கூற்றுப்பாடல்கள் மிகுதியாக காணப்படுகிறது. ஆயின் குறுந்தொகையில் மட்டும் தலைவி கூற்றுப் பாடல்கள் மிகுதியாக காணப்படுகிறது. தலைவியின் உணர்வுகளை மிகுதியான பாடல்களில் குறுந்தொகை உரைக்கிறது.

குறுந்தொகையில் புலவர் கபிலர் 28 பாடல்களையும், பரணர் 17 பாடல்களையும், பெண்பாற் புலவரான ஔவையார் 15 பாடல்களையும் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் 182 ஆண்பாற் புலவர்களும், பதின்மூன்று பெண்பாற்புலவர்களும் பாடியுள்ளனர். பெண்பாற் புலவர்களின் பெயர்களாவன ஆதிமந்தி, ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், நக்கண்ணையார், நன்னுகையார், நெடும்பல்லியத்தை பூங்கணுத்திரையார், வருமுலையாரித்தி, வெண்பூதியார், வெண்மணிப்பூதி, வெள்ளிவீதியார் என்பதாகும்.

அகப்பொருள் மட்டும் பாடிய பதினைந்து பெண்பாற்புலவர்களுள் ஒன்பது பேர்கள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளனர். நன்னாகையார், வெள்ளி வீதியார் இருவரும் முறையே எட்டுப்பாடல்களையும், வெண்பூதியார் 3 பாடல்களையும், கழாக்கீரனெயிற்றியார், நெடும்பல்லியத்தை இருவரும் முறையே 2 பாடல்களையும், ஆதிமந்தி, ஊண்பித்தை, வருமுலையாரித்தி, வெண்மணிப்பூதி இவர்கள் நால்வரும் முறையே 1 பாடல்களையும் மொத்தம் 9 பெண்பாற் புலவர்களும் 27 பாடல்களைப் பாடியுள்ளனர்.

ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பூங்கணுத்திரையார் ஆகியோர் அகமும், புறமும் பாடிய புலவர்கள் ஆவார்கள்.

பிற நூல்களில் பாடாமல் குறுந்தொகையில் மட்டும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 112. இவர்கள் 133 பாடல்களைப் பாடியுள்ளனர்.

குறுந்தொகையில் ஒருப்பாடற் புலவர்களின் எண்ணிக்கை 118. திணை முறையில் குறிஞ்சி 49, முல்லை 12, மருதம் 12, நெய்தல் 18, பாலை 27 உரியனவாகும்.

## ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என முறையே திணைக்கு நூறு பாடல்களாக ஐந்நூறு பாடல்களை உடையது. ஒவ்வொரு நூறு பாடல்களும் பத்து பத்து பாடல்களாகப் பிரிக்கப்பட்டு உலகப் பொதுமறையான திருக்குறள் போல ஒவ்வொரு பத்துக்கும் ஒவ்வொரு தலைப்புத் தரப்பட்டுள்ளது. ஐந்து புலவர்கள் பாடியதை,

> மருதம் ஓரம்போகி; நெய்தல் அம்மூவன் ;
> கருதும் குறிஞ்சி கபிலன் - கருதிய
> பாலை ஓதலாந்தை; பனிமுல்லை பேயனே;
> நூலை ஓது ஐங்குறு நூறு

என்பது ஐங்குறுநூறு குறிக்கும் செய்யுள் ஆகும்.

இந்நூலினைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவன் கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. ஐங்குறுநூற்றில் பெண்பாற்புலவர்கள் இடம்பெறவில்லை.

## ஐங்குறுநூற்றின் திறன்

"சங்க இலக்கியம் என்ற பழந்தமிழ்ச் சோலையில் ஐங்குறுநூறு ஒரு வண்ண நறுமலர்க்கொடி"[22] என மொழிகுவர் டாக்டர் ஆறு. அழகப்பன்.

எட்டுத்தொகை அக நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு போன்றவை தனிநிலைச் செய்யுள்களைத் தொகுத்த தொகை நூல்களாகவும், இவற்றுள் ஒரு செய்யுளுக்கும், அடுத்த செய்யுளுக்கும் தொடர்பு இல்லாமலும் காணப்படுகிறது. ஆனால் ஐங்குறுநூறு தொடர்நிலைச் செய்யுள் போன்ற அமைப்பை உடையது. தொடர்நிலைச் செய்யுள் என்பது சொல்லாலும், பொருளாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகப் பாடப்பெறுவது, இவ்வகையை **வனப்பு** என்று வகைப்படுத்துவர் தொல்காப்பியர்.

ஐங்குறுநூறு செய்யுட்கள் பத்துப்பத்தாக அமைந்து பொருள் தொடர்பு உடையனதாக காணப்படுகிறது. தொல்காப்பியர் கூறும் அம்மை, அழகு என்னும் வனப்பினைக் கொண்டு புனையப்பட்டுள்ளதனால் ஏனைய அகநூலைக் காட்டிலும், வேறுபாடு பெற்றுக் காணப்படுகிறது. மேலும் பொருட்செறிவு, தெளிவு, திணை, ஒழுக்கம், நுழைபுலம் பெற்றுக் காணப்படுகிறது.

**திணைப் பாடல்கள்**

"குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் ஆகிய திணைக்கு நூறு பாடல்கள் என்றும், நெய்தல் திணையில் மட்டும் 96 பாடல்கள்"[23] என டாக்டர் ந. சஞ்சீவி வகுப்பர்.

**கூற்றுப்பாடல்கள்**

ஐங்குறுநூறு கூற்று அடிப்படையில் "தோழி கூற்று - 200, தலைவி கூற்று - 149, தலைவன் கூற்று - 90, செவிலித்தாய் கூற்று - 13, பரத்தை கூற்று - 13, நற்றாய்க் கூற்று - 13, காதற்பரத்தை கூற்று - 6, கண்டோர் கூற்று - 6, பரத்தையின் தோழி கூற்று - 1, வாயில்கள் கூற்று - 1, பரத்தை (அ) தோழிக் கூற்று - 1, பாங்கன் கூற்று - 1, அந்தணர் கூற்று - 1, அயலோர் கூற்று - 1, காதல் உணர்ந்தோர் கூற்று - 1, பாணன் கூற்று - 1, மூலம் கிடைக்காத பாடல் - 2"[24] என ச.வே. சுப்பிரமணியன் வகுப்பர். மேலும் கூற்றின் அடிப்படையில் "தலைவன் 94, தலைவி 150, தோழி 196, தாயர் 26, பரத்தையர் 20, ஏனையோர் 12"[25] என ந. சஞ்சீவி வகுப்பர்.

**கலித்தொகை**

சங்க நூல்களில் பா வகையால் பெயர்பெற்ற நூல்கள் இரண்டு. அவை குறுந்தொகையும், கலித்தொகையும் ஆகும். நாடக வழக்காலும், உலகவழக்காலும் கொண்ட செய்யுள்களாக கலித்தொகையையும், பரிபாடலையும் தொல்காப்பியர் உரைப்பர்.

**"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்"[26]** என்பர்.

தொல்காப்பிய இலக்கண விதிப்படி கலிப்பாவால் அகத்திணையைப் பாடும் ஒரே எட்டுத்தொகை நூல் கலித்தொகை மட்டுமே.

மு. வரதராசனார் அவர்கள் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி, கல்வி வலார் கண்ட கலி' என உரைப்பது பொருள் உடையதாகும். கலித்தொகையின் மாண்பினை,

திருத்தகு மாமுனி சிந்தாமணி, கம்பன்
விருத்தகக் கவிவளமும் வேண்டாம் - திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளோம், நனிஆர்வம்
பொங்கும் கலி இன்பப்பொருள்

எனும் செய்யுளில் அறியலாம்.

ஐங்குறுநூறு போல திணைக்கு ஒருவர் வீதம் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர். மொத்தப் பாடல்கள் 150. தொகுத்தவர் நல்லந்துவனார். பெண்பாற் புலவர்கள் இதில் இடம்பெறவில்லை.

**திணைப் பாடல்கள்**

திணை அடிப்படையில் "பாலைப்பாடல்கள் - 35, குறிஞ்சிப் பாடல்களைப் பாடியவர் கபிலர். பாடல்கள் - 29. மருதப் பாடல்களைப் பாடியவர் மருதன் இளநாகனார். பாடல்கள் - 35, முல்லைப்பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன். பாடல்கள் - 17. நெய்தல் பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார் பாடல்கள் - 33"[27] என ச.வே. சுப்பிரமணியன் வகைப்படுத்திக் காட்டுவர்.

**கூற்றுப் பாடல்கள்**

கலித்தொகையில் கூற்று அடிப்படையில் "தோழிக் கூற்று - 66, தலைவி கூற்று - 45, தலைவன் கூற்று - 12, கண்டோர் கூற்று - 11, காமக்கிழத்தி கூற்று - 8, சான்றோர் கூற்று - 2, வாயில்கள் கூற்று - 2, சுற்றத்தார் கூற்று - 1, அடியோர் கூற்று - 1, பாணன் கூற்று - 1, கடவுள் வாழ்த்து - 1"[28] என ச.வே. சுப்பிரமணியன் உரைப்பர். மேலும் கூற்றின் அடிப்படையில் "தலைவன் 11, தலைவி 39, தோழி 63, பரத்தையர் 8, ஏனையோர் 28"[29] என ந. சஞ்சீவி என்பர். இவ்விருவரின் கூற்றும் வேறுபாட்டிற்கு உடையவனதாக உள்ளது.

கலித்தொகையில் உள்ள காதல் பாட்டுகள் சொல் நயமும், ஓசைநயம் உடையனவாகவும் இருக்கின்றன. இவற்றின் பாடல்கள் கருத்துவளம் உடையனவாகும்.

**அகநானூறு**

மனவாழ்வாகவும், மனைவாழ்வாகவும் அகவாழ்வு அமைவதால் இதனை அகநூல்களில் முதலில் கூறுவர். மொத்தப் பாடல்கள் 400. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 144. அகப்பொருள் மட்டும் பாடிய பெண்பாற்புலவர்களில் ஐவர் அகநானூற்றில் 9 பாடல்களைப் பாடியுள்ளனர்.

கழார்க்கீரன் எயிற்றியார் 4 பாடல்கள், வெள்ளிவீதியார் 2 பாடல்கள், அஞ்சியத்தை மகள் நாகையார், குமிழிஞாழலார் நப்பசலையார், போந்தைப் பசலையார் ஆகியோர் முறையே 1 பாடல் பாடியுள்ளனர்.

**திணைப் பாடல்கள்**

அகநானூறு பாடல்களைத் திணை அடிப்படையில் பிரித்துள்ளனர். பாலைப் பாடல்கள் மொத்தம் 200. இவை 1,3,5,7,9 என ஒற்றைப்படை எண்ணுள்ள பாடல்களாக அமைந்துள்ளன. குறிஞ்சிப் பாடல்கள் மொத்தம் 80. இவை 2,8,12,18 என இரட்டைப்படை எண்ணுள்ள பாடல்களாக அமைந்துள்ளன. முல்லைப் பாடல்கள் மொத்தம் 40. இவை 4,14,24 எண்ணுள்ள பாடல் அமைந்துள்ளன. மருதப் பாடல்கள் மொத்தம் 40. இவை 6,16,26 எண்ணுள்ள பாடல்களாக அமைந்துள்ளன. நெய்தல் பாடல்கள் மொத்தம் 40. இவை 10, 20, 30 என எண்ணுள்ள பாடல்களாக அமைந்துள்ளன.

**கூற்றுப் பாடல்கள்**

அகநானூற்றில் கூற்று அடிப்படையில் "தோழிக் கூற்று - 156, தலைவன் கூற்று - 103, தலைவி கூற்று - 95, செவிலி கூற்று - 16, நற்றாய் கூற்று - 9, பரத்தையர் கூற்று -9, உழையர் கூற்று - 3, பாணன் கூற்று - 1, கண்டோர் கூற்று - 1, தோழி (அ) தலைவி - 5, தலைவி (அ) தோழி -2"[30] என ச.வே. சுப்பிரமணியன் வகுப்பர். மேலும் கூற்றின் அடிப்படையில் "தலைவன் 102, தலைவி 97, தோழி 162, தாயர் 25, பரத்தையர் 9, ஏனையோர் 5"[31] என ந. சஞ்சீவி வகுப்பர்.

பரணர் 33 பாடல்களையும், மாமூலனார் 27 பாடல்களையும் பாடியுள்ளனர்.

பிற தொகை நூல்களில் இடம் பெறாமல் அகநானூற்றில் மட்டும் இடம்பெற்றுள்ள புலவர்களின் எண்ணிக்கை 55. இவர்கள் 61 பாடல்களைப் பாடியுள்ளனர்.

அகநூனூற்றில் ஒருபாடற் புலவர்களின் எண்ணிக்கை மொத்தம் 60. அவை குறிஞ்சி 11, முல்லை 7, மருதம் 5, நெய்தல் 9, பாலை 28.

**பத்துப்பாட்டு அகநூல்கள்**

**முல்லைப்பாட்டு**

முல்லைப்பாட்டின் ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார். 103 அடிகளைக் கொண்டதாகும். 'இல் இருத்தல் முல்லை' என்பது இலக்கணம். வினைமேற்சென்ற தலைவன் வீடு திரும்பும் வரை தலைவி இல்லத்தில் இருந்து தனது பிரிவுத் துயரை ஆற்றியிருத்தல் என்பதாகும். இதன் உரிப்பொருள் இருத்தலும், இருத்தல் நிமிர்த்தம். தன்னைப் பிரிந்துச் சென்ற தலைவனை நினைத்துத் தலைவி துன்பப்படுவதும், தலைவன் கூறிய சொல்லிற்கு, கட்டுப்பட்டு தன்னைத்தானே நிலைப்படுத்திக் கொள்வதுமான நிகழ்வுகள் முல்லைப்பாட்டில் இடம் பெறுகின்றன.

**"நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புரம்பொடு**
**நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்"**[32]

என்பது நப்பூதனார் கூற்று. இதில் "நெஞ்சாற்றுப்படுத்த நிறை" என வரும் தொடரின் வழி முல்லைப்பாட்டு 'நெஞ்சாற்றுப்படை' எனவும் வழங்கப்படுகின்றது. முல்லைப் பாடல் ஏனையோர் கூற்றாகக் கருதப்படுகிறது.

**குறிஞ்சிப்பாட்டு**

261 அடிகளைக் கொண்டக் காதல் பாட்டாகும் குறிஞ்சிப்பாட்டு. இந்நூல் முழுமைக்கும் குறிஞ்சி நிலமும், புணர்தல் ஒழுக்கமும் ஆகிய திணை ஒழுக்கம் பாடுவதால் குறிஞ்சிப்பாட்டு என அழைக்கப்படுகிறனது. நச்சினார்க்கினியர் இந்நூலினை 'பெருங்குறிஞ்சி' என குறிப்பிடுவர். குறிஞ்சிக்குக் கபிலர் என்றும், குறிஞ்சி பாடுவதில் வல்லவர் கபிலர் ஆவார். ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ்

அறிவித்தற்குக் கபிலர் பாடியது. தமிழ் அறிவித்தல் என்பது தமிழ் இலக்கிய மரபை உணர்த்துவதற்காகப் பாடியது. தமிழ் என்றால் அகத்திணை என்று பொருள். அகத்திணை ஒழுக்கத்திலும் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுவது களவொழுக்கம்.

**"தள்ளாப் பொருள் இயல்பின் தன்தமிழ் ஆய்வந்திலர்**
**கொள்ளார் இக்குன்று பயன்"[33]**

என்னும் பகுதியில் பரிமேலழகர் கூறும் உரையிலிருந்து தமிழ்மொழிக்குச் சிறப்பாக அமைவது களவொழுக்கம் என்றும், தமிழ் என்னும் சொல் களவினைக் குறிக்கும் என்றும் அறிகின்றோம். 'என் பயக்குமோ இது கற்க எனின் வீடுபேறு பயக்கும்' என்ற களவியல் உரைகாரர் கருத்தான அறம், பொருள், இன்பம், வீடென்னும் நாற்பொருளும் இவ்வொழுக்கத்தில் அடங்கி இருப்பதை கபிலர் தம் பாடலில் விளக்கியுள்ளார். எனவே தமிழறிவித்தல் என்பது வீடு பேற்றினைப் பெற புலவர்கள் கையாண்ட வழிமுறைகளை அறிவித்தல் என்று பொருள்படுகின்றது.

தலைவன் தலைவியரிடையே நிகழ்ந்த களவொழுக்கத்தையும் அவர்கள் ஒருவர் மற்றொருவரிடம் கொண்டுள்ள அன்பின் பிணைப்பினையும்; இருவரும் இனி திருமணம் செய்து கற்பறம் வழுவாது இல்லறத்தில் ஈடுபடுவதையும்; தான் சொல்வதை எவரும் மறுத்துக் கூற இயலாத வகையில் அறிவு நலந்தோன்றத் தோழி; செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்பதாகக் குறிஞ்சிப்பாட்டு அமைகிறது. குறிஞ்சிப்பாட்டில் உணர்த்தப்படும் **"அறத்தொடு நிற்றல்"** என்பதற்குக் **"களவுவழிப்பட்ட கற்பு - மணத்தினை விரும்பி நிற்றல்"[34]** எனப் பொருள் கொள்ள வேண்டியதாகிறது என மு. சுதர்சன் குறிப்பிடுகின்றார். இதன்வழி தமிழ் களவொழுக்கம் திருமணத்தில் தான் முடியவேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டு தோழிக் கூற்றுப்பாடலாக உள்ளது.

**பட்டினப்பாலை**

பட்டினப்பாலையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். 301 அடிகளைக் கொண்டு பாடப்பட்ட அகநூல். இருப்பினும் புறச்செய்திகள் மிகுதியாகக் கொண்ட அகநூல் ஆகும். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடும் நூல். செலவழுங்கல் துறையைச்

சார்ந்தது. அதாவது தலைவியைப் பிரிந்து செல்லுதலைக் கைவிடுதல். திணை பாலை. உரிப்பொருள் பிரிதலும், பிரிதல் நிமிர்த்தமும், தலைவன் நெஞ்சிற்குக் கூறுவதாக அகப்பொருள் கருத்தை ஆறே அடிகளால் கூறினாலும், அவ்வடிகளே பாடல் முழுமைக்கும் திறன்சேர்ப்பதாகவும், தலைவன் தலைவியின் மேல் கொண்ட காதலின் உண்மைத்தன்மையை உணரும் வகையில் உள்ளது. இவை தலைவன் கூற்று பாடலாக அமைந்துள்ளது.

**அகப்பொருள்**

அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காமஇன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருட்கள் கூறப்படுகிறது.

அகம் இன்ப உணர்வின் தொகை, நெஞ்சமே இதற்கு அடிப்படை. காதல் ஒழுக்கம் அகம். அகம் என்பது ஒருவன் தனது மனத்தளவில் உய்த்துணர்வதாகக் கருதப்படுகிறது. இவ்வுணர்வினை பிறருக்கு கூற இயலாது.

அகத்தின் அடிப்படை உள்ளம். ஆண், பெண் இருவரின் நெஞ்சமும் மாசற்று இருந்தால் அகமும் தூய்மையானதாக இருக்கும். ஒருவர் மற்றொருவரிடம் தன் உள்ளத்தில் நிறைந்திருக்கும் அன்பினை வெளிப்படுத்துகின்றான். இதுவே அகம். உள்ளத்தில் தோன்றிய அன்பு காதலாகி இருவருள்ளும் வினைப்பட்டு அவர்களை மனையற வாழ்விற்குக் கொண்டு சென்று, உறவாக மாற்றும். உறவாக மாறுவதற்குத் துணிவு வேண்டும். இவ்வகத்தையே தொல்காப்பியர் தொடங்கி நவீனக் காலத்தில் உள்ள கவிஞர்கள் வரை சுட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

இதனையே,

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை யன்றே"**[35]

என விதி வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

"அகமாவது போக நுகர்ச்சியாகலான் அதனால் ஆயபயன் தானே அறிதலின் அகம் என்றார் அகத்தை இன்ப நுகர்ச்சியுடன் இணைத்துக் காட்டுவர்"[36] என்பார் இளம்பூரணர்.

"ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவர்களால் இத்தகையதெனக் கூறற்கியலாததாய், யாண்டும் உள்ளத்தளவே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாகலின் அது அகம்"[37] என்பார் நச்சினார்க்கினியர்.

"அகத்திணைக்குப் பொருளான காமமோ ஆண், பெண் என்னும் பால்வாய்ந்த உயர்திணை அ.்.றிணை உயர்க்கெல்லாம் பொதுவாயது;

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்

என்று பாலியலறின் சுட்டியாங்கு. உடம்போடு ஒட்டிய இயற்கைத்து. ஆதலின், அகப்பாடல் உயிரிகள் பிறந்ததற்கும் பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்பவுணர்வை - உலகின் மருங்கு அறாது வழிமுறை காக்கும் காமத்துடிப்பைப் பொருளாகக் கொண்ட தலைமையுடையது என அறியத்தகும்"[38] என்பர் வ.சுப. மாணிக்கனார்.

"ஒன்றுபடுத்தும் ஊழ்நிலையானும், வேறுபடுத்தும் ஊழ்நிலையானும், அமையும் வாழ்க்கையில் ஒன்று தலைச் செய்யும் உயர்ந்த ஊழின் ஆணையால் ஒத்த தலைவனும், தலைவியும் காண்பர்"[39] என உரை வகுப்பர் ச.வே. சுப்பிரமணியன்.

"பண்டைய தமிழர்கள் அகம் என்பது காதலைப் பற்றியும் காதல் தொடர்பாக விளையும் பிறவற்றையும் குறிக்கும், எனப்பொருள் கொண்டு அவ்வகையிலே இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அகம் என்பது அகத்தே நிகழ்கின்ற காதல் இன்பத்தை அகம்"[40] என்பர் ந. சுப்புரெட்டியார்.

"காதல் என்பது நாகரிகப் பண்பாட்டின் அளவு தெரிவிக்கும் உரைகல் என்றும் உரைக்கலாகும். சாதி, மத நிலை வேறுபாடற்ற மக்கள் வாழ்வின் நிலைக்களமும், ஆண், பெண் சமத்துவ உரிமைப்பண்பும் கொண்டது காதலே.

அக்காதல் வாழ்வே இலக்கியத் தோற்றத்திற்குரிய விளை நிலமாதலின், அது பற்றிக் கூறும் இலக்கிய மரபுகளைத் தொகுத்துரைப்பதே அகமாகும்”[41] என்பர் சி. இலக்குவனார்.

"காதலே உலகத்தின் உயிர் என்று கூறலாம். உலகப் பெருக்கத்திற்கும், வளத்திற்கும் காதல்தான் அடிப்படை, காதலின்றேல் சாதல் என்பது காதலர்க்கு மட்டுமன்று, உலக வாழ் எல்லோருக்கும் பொருந்தும், காதலை இலக்கிய ஊற்று என்றே கூறலாம். உலக இலக்கியங்களை ஆராயின் காதல் அடிப்படையில் தோன்றியுள்ள இலக்கியங்கள் எண்ணிக்கையில் நிறைந்து இருப்பது எளிதில் தெளிவாகும்”[42] என்பர் சி. இலக்குவனார்.

"அகம் என்பது மக்களின் உள்ளத்தில் உள்ளது எனப்படும். திணை என்பது ஒழுக்கம் மக்களின் காதல் ஒழுக்கம் அகமாகும். காதலர் உள்ளத்தில் உள்ளவையும், அவர் மனையடி வாழ்க்கையில் தொடர்புறுவதும் காதலைக் கருதிய ஒழுக்கத்திணையும் அகம் எனக் கொள்வது பொருந்தும்”[43] என்பர் நா. இராமையா.

அகம் பற்றிய அறிஞர்களின் கருத்து அவர்கள் சுட்டிய விளக்கம் அறியத்தகுந்தனவாகும். "அகம் என்பது ஆழ்கடல்; புறம் என்பது வான்வெளி. அகத்தில் உள்ளனவெல்லாம் அறிய நீள் நினைவும் நெடும் பயில்வும் வேண்டும்”[44] என கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் அகம் என்பது ஒருவன் தன் மனதளவில் உய்த்துணரக் கிடக்கும் ஆழ்உணர்வு. அவனின் உள்ளம் நுகரும் உணர்வு. பிறருக்கு இன்னதென்று கூற இயலாதது. காதல் தொடர்பாக உள்ளவை அனைத்தும் அகம் எனப்படும். காதல் இன்பமே அகம். காதல் ஒழுக்கமே அகம். அன்பின் வெளிப்பாடு அகம். காதல் உணர்வு உறவாக மாறுவது அகம். ஒரு நொடிப்பொழுதில் முன்பு கண்டறியாத இருவர் காதல் வயப்படுகின்றனர். காதலே இலக்கியத்தின் ஊற்றாகக் கருதப்படுகிறது. இவ்வகமே சங்கப் புலவர்களின் படைப்பாக்கத்திற்குத் துணை நிற்றது என்பதை மறுக்க இயலாது.

**"உள்ளம் ஊற்றின்பத்திற்கு உயிர்த்தனன் ஆயினும்**
**உள்ளத்தால் உள்ளலும் தீதே”** [45]

உள்ளமே அகத்திற்கு அடிப்படை என்பது வள்ளுவர் கூற்று. மேலும், காதல் செயல் அனைத்திற்கும் உள்ளமே காரணம் என்பதை நம்மால் உணரமுடிகிறது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே ஏற்படுகின்ற காதல் உணர்வினை மையமாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணம் அமைகிறது.

அகம் என்பது காதல் என்ற கருத்தாக்கத்தைக் கொண்டுள்ளது. உள்ளத்தில் ஒன்றுபட்டு இல்லறம் சேரும் தலைவன், தலைவியின் இன்ப ஒழுக்கத்தினைக் கூறுவதால் இதனை அகத்திணை என்பர். திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கிறது. அகத்திணை வீட்டு வாழ்க்கையைக் குறிப்பது. "அகத்திணை என்ற தொடரில் 'அகம்' என்னும் சொல்லுக்கு இயல்பான பொருள் வீடு என்பது. "அகம் புகல் மரபின் வாயில்கள்" என்பது தொல்காப்பியம் (1097) வீடு அல்லது குடும்பம் ஆகும் காதலே அகத்திணை நுதலுவது. அகத்திணை மாந்தரெல்லாம் ஒரு வீட்டுறுப்பினர்களே. ஆதலின் அகம் என்னும் சொல் வீடு என்பதனையே முதலாவதாகக் குறிக்கும்"[45] என்பர் வ.சு.மாணிக்கனார்.

"உள்ளத்தே எழுந்த அவா உடல் வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிர்விப்பது ஆகலின் உள்ளம் என்பதோடு தொடர்புபட அகம் என்றனர். அன்பிற்கும், இன்பத்திற்கும் அடிப்படை உடல் அன்று. உள்ளமே என்பதை இப்பெயர் உணர்த்தி நிற்கின்றது. உள்ளத்தையே அகம் என்று குறித்தனர்"[46] என்பர் சரளா ராசகோபாலன்.

**அகப்பொருள் கூறும் இலக்கண நூல்கள்**

அகப்பொருள் பற்றிக் கூறும் இலக்கண நூல்கள் 12 ஆகும். 5 நூல்கள் அகப்பொருள் செய்திகளை மட்டுமே கூறுகிறது. மற்ற 7 நூல்களும் ஒரு பிரிவாக அகப்பொருளைக் கூறுவதாக உள்ளன.

**அகப்பொருள் கூறும் நூல்கள்**

இறையனார் களவியல், நம்பி அகப்பொருள் விளக்கம், தமிழ்நெறி விளக்கம், களவியல் காரிகை, மாறனகப்பொருள்.

**ஐந்திலக்கணம் கூறும் நூல்கள்**

தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம்

**அறுவகை இலக்கணம் கூறும் நூல்**

அறுவகை இலக்கணம்

**தொல்காப்பியம்**

காதல் பற்றி கூறப்படும் அனைத்து நிகழ்வுகளும் அகம் என்பர் சான்றோர்கள். எனவே காதல் தொடர்பாக நிகழும் களவு, கற்பு நிகழ்வுகளையும் அகமாக குறித்துள்ளனர்.

**"மக்கள் நுதலிய அகனைந்திணையும்"**[48]

என்றும்

**"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது**
**அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"**[49]

என்றும்

**"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்"**[50]

என்றும்

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**அகம்புகல் மரபின் வாயில்கட்குரிய"**[51]

எனத் தொல்காப்பியர் 'அகம்' என்னும் சொல்லை நான்கு நூற்பாக்களால் கையாண்டுள்ளார். தொல்காப்பியம் அல்லாத பிறஇலக்கண நூல்களும் அகப்பொருளுக்கு விளக்கம் தருகின்றன.

**தமிழ்நெறி விளக்கம்**

**"முதல்கரு வணைந்த உரிப்பொருள் அகமே"**[52]

என்பது அகப்பொருள் உணர்த்தும் அகம்.

**மாறனகப்பொருள்**

> **"திருமகள் கொழுநன் சேவடி பணிந்தவ**
> **னருள்செய விளம்புவ லகப்பொருள் வகையே"[53]**

என்பது மாறனகப்பொருளின் அகப்பொருள் விளக்கம்.

**இலக்கண விளக்கம்**

> **"அகம்எனப் படுவது வகைஒரு மூன்றனுள்**
> **இன்பம் என்னும் இயல்பிற்று ஆகி**
> **அகத்துநிகழ் ஒழுக்கம் ஆதல் வேண்டும்"[54]**

என்பது இலக்கண விளக்கத்தின் அகப்பொருள் விளக்கம்.

**அறுவகை இலக்கணம்**

> **"பூவின் மணம்எனப் புனிதத் தமிழினுக்கு**
> **ஆவி ஆகும் அகப்பொருள் இயல்பே"[55]**

என்பது அறுவகை இலக்கணம் தரும் விளக்கம்.

அகப்பொருள் இத்தகையது என எடுத்துரைக்கும் அகப்பொருள் நூல்களின் பொருள் அமைப்பு எண்ணுதற்குரியதாகும்.

"அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல்; திணை என்பது ஒழுக்கம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாகிய காதல் ஒழுக்கமே அகத்திணை எனப்படும். அது பண்டைத் தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை ஒருபாற்காதல், ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என்ற முத்திறச்சார்பாய ஒழுக்கங்களாம்"[56] என்பார் கா.சு.பிள்ளை.

"அகத்திணை மக்களின் அகவொழுக்கம் (அ) காதலற வழக்குகளின் பொதுவிலக்கணம் கூறுவது. அகமாவது காதலர் உள்ளக்கிடையும், அவர் காதல் கதிர்த்து வினைப்பட்டு அன்னோர் மனையற வாழ்க்கையில் தொடர்புறுவதாகும். திணையாவது ஒழுக்கம், ஆகவே அகத்திணை கண்ணிய ஒழுகலாறாம். அவ்வொழுக்கப் பொதுவியல் கூறும் பகுதி அகத்திணையியலெனப் பெயர் பெற்றது எனலாம்"[57] என்பர் பாலசுந்தரம்.

அகப்பொருள் என்பது கண்ணிய ஒழுக்கத்தினைக் குறிப்பிடுகிறது. ஆணும், பெண்ணும் உண்மையாக ஒருவரையொருவர் காதல் கொண்டு எத்தகைய இடையூறுகள் ஏற்படினும் அதனை எதிர்த்து இருவரும் இணைந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது ஆகும். இதனைக் கருத்தில் கொண்ட புலவர்கள் அகப்பாடல் மூலம் அகப்பண்பாட்டு வாழ்வினைக் கடைபிடித்து மக்கள் வாழவேண்டும் எனக் கருதி உள்ளதை அறிய முடிகிறது.

**சங்க அக மரபுகள்**

மரபு என்பது 'பெரியோர் எவ்வழிச் செப்பினர், அவ்வழிச் செப்புதல் மரபு' என்பர். மனிதர்கள் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களைத் தொன்றுதொட்டு வழிவழியாகக் கடைபிடித்து வருவதை மரபு என்கிறோம். மரபு பற்றி தொல்காப்பியர்

**"மாற்றருஞ் சிறப்பின் மரபு"**[58]

என்பார்.

மேலும், நச்சினார்க்கினியர், **"காலந்தோறும் இடந்தோறும் வழக்குத் திரிந்தவற்றிற்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமை"**[59] என உரைவகுப்பர். சேனாவரையர் மரபிற்கு விளக்கம் கூறுமிடத்து **"பிரிதோர் காரணம் பற்றாது ஒரு பொருட்குரிய வழக்கு ஒரு பொருண்மேற் சென்ற தெனப்படும்"**[60] என உரைவகுப்பர். தொல்காப்பியத்தின் வழிநூலாகக் கருதப்பெறும் நன்னூல் மரபு என்பதற்கு,

**"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"**[61]

என உரைக்கிறது.

மரபு என்பது உலகில் உள்ள இருதிணைப் பொருளையும், இருவகை வழக்காகிய உலக வழக்கு, நாடகவழக்கு என்ற நிலைகளில் சான்றோர்களால் தொன்று தொட்டுப் பின்பற்றப்படும் முறை என்பது புலனாகிறது.

**தொல்காப்பிய வழி இலக்கிய மரபு**

தொன்மையான மரபுகளை உடையது தமிழிலக்கியம். தொல்காப்பியம் இலக்கிய மரபுகளைப் பற்றி,

> **"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலனெறி வழக்கம்"[62]**

என்ற நூற்பாவால் புனைந்துரையும், உண்மையும் கூடிய இலக்கிய மரபினை விவரிக்கின்றது. காதலில் நல்லவற்றைப் பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதை 'புலன் நெறி' வழக்கமாகும்.

> **"காமத்திணையிற் கண்நின்று வரூஉம்**
> **நாணும் மடனும் பெண்மைய ஆகலின்"[63]**

எனப் பெண்ணின் நாணத்தையும், மடனையும் பெண்ணின் பெருமை பண்பாகக் காட்டுவர். தொல்காப்பியர் சிறப்புப்பாயிரத்தில் 'மயங்காமரபின்' என பனம்பாரனார் குறிப்பிடுவதால் தொல்காப்பியர் மரபுவழி இலக்கணம் இயற்றியவர் என்பதை அறியலாம்.

**சிறப்புடை மரபு**

தலைவன் பெருமையும், வலிமையும் உடையவன். தலைவியானவள் அச்சம், மடம், நாணம் உடையவள்.

> **"அச்சமும், நாணும் மடனும் முந்துறுதல்**
> **நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"[64]**

எனும் சூத்திரத்தின் வழி பெண்ணின் வாழ்வியல் மரபு உணர்த்தப்பட்டுள்ளது.

**முறைப்பெயர் மரபு**

தலைவன், தலைவி, தோழி, பாங்கன் ஆகிய நால்வரும் ஒருவரையொருவர் அழைக்கும் போது 'எல்லா' என்ற பொதுப் பெயரைக் கொண்டு அழைத்தல் மரபாகும். இதனை

> **"அன்னை என்னை என்றலும் உளவே**
> **தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்**
> **தோன்றா மரபின என்மனார் புலவர்"[65]**

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ‘அன்னை’ என்று தலைவி தோழியையும், தோழி, தலைவியையும் அழைப்பது மரபாகும். தலைவியும், தோழியும் தலைவனை ‘என்னை’ என்று விளங்கும் சொல்லால் வழங்குவதையும் மரபு ஆகும்.

**பிரிவு பற்றிய மரபு**

தலைவன், கல்வி, நாடுகாத்தல், பொருள்தேடல் ஆகியவற்றிற்காகப் பிரிந்து செல்லும் நிலையில் தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் மரபில்லை என்பதனைத் தொல்காப்பியர்

**"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை"[66]**

என கடல் கடந்து செல்லும் பழக்கம் பெண்களுக்கு இல்லை என்று கூறுவர். கல்வியின் பொருட்டுப் பிரியும் நிலையில் மூன்றாண்டுகள் மேற்படக்கூடாது என்பது மரபு ஆகும்.

**பண்பு பற்றிய மரபுகள்**

இளமைப்பண்பு பற்றிய மரபுகளைக் குறிப்பிடுவதற்கு பார்ப்பு, பறழ், குட்டி, குருளை கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என வரும் ஒன்பதும் இளமைப்பண்பு பற்றிய மரபுப்பெயர்களாகும். இதனை தொல்காப்பியர்,

**"சொல்லிய மரபின் இளமைதானே**
**சொல்லுங் காலை அவையல திலவே"[67]**

என்ற நூற்பாவினைச் சுட்டி இவ்வொன்பதில் குழவி, மகவு என்ற இரு பெயர்களே மக்களுக்கு உரியனவாய் வழங்கப்படும் என்பதை உணர்த்துகிறார்.

இலக்கிய மரபின் இன்றியமையாமைப் பற்றித் தொல்காப்பியர்

**"மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
**மரபுவழிப்பட்ட சொல்லி னான"[68]**

என்றும்,

**"மரபு நிலை திரியின் பிறிதுபிற தாகும்"[69]**

மரபு வழிப்பட்ட சொல்லினாலேயே செய்யுள் செய்ய வேண்டுமென்பதையும், மரபுநிலை மாறுபட்டுவரின் பொருள் வேறுவேறாகும். எனவே, அது வழுவாகும் இதுவே மரபின் முதன்மை எனத் தொல்காப்பியர் உரைப்பர்.

இலக்கியத்தில், தலைவியின் காதல் பாட்டுக்கள் அகத்திணைப் பாடல்களாகச் சிறப்பிக்கப்படல் வேண்டுமெனில் சுட்டி ஒருவன் பெயர் கொள்ளாமை காதலரின் பெயர் சுட்டாமல் பாடவேண்டும் என்பது தொல்காப்பியரின் மரபு, இதனை,

**"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**
**சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறா அர்"**[70]

என்ற நூற்பா வழி அறியலாம். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் 'எலியட்' என்னும் ஆங்கில கவிஞர் **"இலக்கியத்தில் பாடப்படும் காதல், யாரோ, ஒருவரை நோக்கில் புலப்படுத்தும் உணர்ச்சியாக இருப்பினும் அது பிறரால் கேட்கப் படுவதற்கென்றே இயற்றப்படுவதாகும். அவ்வாறு பிறரால் கேட்கப்படாமல், காதலர்க்கு மட்டுமே உணர்த்தத்தக்கதாயின், அதை எவரும் பாட்டாக இயற்றுவதில்லை. அத்தகைய உணர்ச்சிக்கு உரியது உரைநடையே அல்லாமல், பாட்டு அன்று என்பர். ஆகவே, பாட்டாக வடிக்கப்படும் உணர்ச்சி, அனைவருக்கும் உரிய பொதுவான கற்பனைச் செல்வம் என்பதும், இன்னர்க்கு மட்டும் என்று குறிப்பிட்ட காதலுணர்ச்சி பாட்டு வடிவம் பெற்றத்தக்கது அன்று"**[71] என்பர்.

மரபைப் பற்றி சு. இராசாராம் அவர்கள் கூறும்பொழுது **மரபு என்றும் சொல் எதனையும் குறிக்கலாம். சுருக்கமாகக் கூறினால் இறந்தகாலம் தற்காலப் பயன்பாட்டிற்கு வழங்கும் எதுவும் மரபேயாகும். கொஞ்சம் விரிவாகக் கூறினால் மரபு முந்தைய தலைமுறையினர் இன்றைய தலைமுறையினர்க்கு விட்டுச் செல்லும் ஒரு கருத்தாவோ, படைப்பாகவோ, நம்பிக்கையாகவோ இருக்கலாம்"**[72] என்பர்.

மேலும் அவர் **"கருத்தானால் அது முந்தைய தலைமுறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். படைப்பானால் அது முந்தைய தலைமுறையினரால் முழுவதுமாக நம்பப்பட்டிருக்கவேண்டும். ஒரு**

**சமூகத்தின் நடைமுறைகளால் உருவாகிக் கருத்தும் கற்பனையும் கலந்த கட்டமைக்கப்பட்டுப் பிற்காலத் தலைமுறையினர்க்கு வந்து சேரும் எதுவும் மரபே"**[73] எனவும் குறிப்பர்.

மேலும், புலவர்கள் எப்பொருளை எச்சொல்லால் கூறினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் கூறுவது மரபாக இருந்தது.

மனிதன் படைக்கும் இலக்கியமும் காலத்திற்கேற்ப புதிய வடிவங்களைப் பெற்ற போதிலும் பழைய இலக்கியங்களின் தொடர்பையும் அடிப்படையையும் விடுவதில்லை. அவற்றையே இலக்கிய மரபு என்று கூறுதல் வழக்கம்" என மு.வ. அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**"ஆங்கிலப் பேராசிரியர் சான்லிவிங்டன் லாவே கவிதையின் மரபும் புரட்சியும் என்னும் நூலில் புலவர்தம் பெற்றியை மூன்று நிலைகளாகக் காட்டுவர். 1. மரபுகளை அப்படியே போற்றிக் கொள்ளுதல். 2. மரபுகளைப் போற்றுங்கால் புதிய அறிவும் வனப்பும் பொலியச் செய்து கொள்ளுதல். 3. மரபுகளை முற்றும் ஒதுக்கி விடுதல். சங்கச் சான்றோர் நடுப்பிரிவைச் சேர்ந்தவர். காலங்கடந்த காதல் மரபுகளைத் தத்தம் காலத்திற்கியையப் பொருத்திப் பாடியவர்"**[74] என மேற்கோள் சுட்டுவர் வ.சுப. மாணிக்கம்.

**சங்க காலத்தில் உள்ள மரபிற்குத் தற்காலத்தில் உள்ள மரபிற்கு சில மாறுபாடுகள் காணப்படுகிறது.**

இயற்கைப் புணர்ச்சியில் முதல் சந்திப்பிலேயே தலைவன், தலைவியர் ஒருவரை ஒருவர் விரும்புவதும், கூடி மகிழ்தலும் சங்க இலக்கிய மரபாக இருந்தது. ஆனால் தற்காலத்தில் ஆணும், பெண்ணும் நண்பர்களாகப் பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பிறகு காதலர்களாக மாறுகின்றனர். சங்க இலக்கியத்தில் தோழி நம்பிக்கையின் இலக்கணமாக விளங்கினாள். ஆனால், தற்காலத்தில் தோழி நம்பிக்கையானவளா என்ற கேள்வி எழும் நிலை உள்ளது.

சங்க இலக்கியத்தில் தலைவனும், நற்றாயும் பேசிக் கொண்டார்கள் என்ற நிகழ்வு இல்லை. ஆனால், தற்போது இந்நிலைமாறி மருமகனும், மாமியாரும் சரிசமமாக அமர்ந்து பேசும் நிலை உள்ளது.

சகுனம் பார்த்தல், நம்பிக்கைகள், குறிக்கேட்டல், நன்நிமிர்த்தம் ஆகியவற்றிற்குச் சங்க கால மக்கள் மிகுதியாகப் போற்றினர். ஆனால், தற்போது இதன் முக்கியத்துவம் குறைந்துள்ளது.

மரபின் அடிப்படை பழமை பாராட்டுவது. உலகில் பல பொருட்களில் மரபு பின்பற்றபடுகிறது. இத்தகைய மரபு இல்லையெனில் ஒருவரால் படைக்கப் பெற்ற படைப்பு மற்றவரால் உணர இயலா நிலை ஏற்படும். காலமாற்றத்தால் மக்கள் வாழ்க்கையும், நாகரிகமும், குறிக்கோளும் மாறிவருகின்றன.

**அகத்திணைக் கோட்பாடுகள்**

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பல காலம் நிலைத்து இருப்பதே கோட்பாடாகிறது. பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறையை, அவர்கள் விட்டுச் சென்ற தடயங்கள் மூலமாகவும் அக்காலத்தில் அவர்கள் பின்பற்றிய நெறிமுறைகள் வழியாகவும் அறியலாம். நெறிமுறைகள் சமூகத்தின் கொள்கைகளாகவும், கோட்பாடுகளாகவும் மலர்கின்றன. சங்க கால மக்களின் வாழ்வியலை அகம், புறம் என திணைக்கோட்பாடுகளாக அறிஞர்கள் உணர்த்துகின்றனர்.

**திணைக்கோட்பாடு**

திணை என்பது **ஒழுக்கம்** என்ற பொருளில் கையாளப்படுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனத் திணையினைக் குறிப்பர். ஒரு நிலத்தின் ஒழுக்கத்திணை அடிப்படையாகக் கொண்டு அகப்பாடல்களின் கரு அமைந்துள்ளது. அவ்வொழுக்கமே அந்நிலத்திற்குரிய திணை எனப்படும்.

முதல், கரு, உரி எனும் முப்பொருள்களும் முதன்மை பொருளாகக் கருதப்படுகிறது. மேலும், களவு, கற்பு, கூற்று, பிரிவு, ஆடவர், இயல்புகள், பெண்டிர் இயல்புகள், மெய்ப்பாடு என்பன அகத்திணை குறித்து தெளிவாக உணர்த்தும் பகுதிகளாகத் திகழ்கிறது.

தொல்காப்பியர் ஏழுதிணையை,

> **"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப"[75]**

என்றும் சூத்திரத்தில் சுட்டுவர். கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பன ஏழு திணைகளாகும்.

"திணை ஏழாயினமைக்கு உண்மையான காரணம் ஏழு வகைக் காதல் ஒழுக்கங்களாகும். காதல் ஒழுக்கங்களை இலக்கணம் உரிப்பொருள் என வழங்கும் இவ்வொழுக்கங்கள் தனிநிலை கொண்டவை தம்முள் தொடர்பு வேண்டி நில்லாதவை ஆதலால் தான் குறிஞ்சி முதலிய ஐந்தும் ஒத்த காமத்தன்மையால் ஒன்றாயினும் ஐந்திணை எனத் தனிநிலை குறிக்கும் என்று பெயர் பெற்றன."[76] அ.ச. ஞானசம்பந்தனின் ஆய்வுரை ஈண்டு நினையத்தகுந்ததாகும்.

**கைக்கிளை**

'கைக்கிளை' என்பது ஒரு மருங்கு பற்றிய குற்றமற்ற காதல் என்பர் இளம்பூரணர். கைக்கிளையை 'ஒருதலைக் காமம்' என்பர் நம்பியகப்பொருள் ஆசிரியர்.

கை என்பது 'சிறுமை' பற்றி வரும் என்றும், கிளை என்பது 'உறவு' என்ற பொருளில் வரும் என்றும் கூறுவர். கைக்கிளையை ஒரு பக்கத்தில் கிளைப்பதாகிய அன்பு என்பது புலனாகிறது.

**"காமஞ்சாலா இளமை யோள்வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி,**
**நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தான்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"[77]**

என்பது தொல்காப்பிய நூற்பா. ஒத்த அன்பில்லாத ஒருத்தி, அவளோ பருவம் எய்தாதவள். இதனை அறியாத பருவம் எய்திய ஆண் அவளின் மேல் காதல் கொள்வதாகக் கூறுகின்றான். அவன் கூறுவதைப் புரிந்து கொள்ள முடியாத அப்பெண்ணோ மறுமொழியாக எதையும் கூறவில்லை. இருப்பினும் அவன் அவளின்மீது கொண்ட அன்பினை இனிமையான வார்த்தைகளால் பேசிக் கொண்டே இன்புறுகின்றான்.

நச்சினார்க்கினியர் ஐந்திணை ஒழுக்கம் நிகழ்வதற்கு முன்பு தலைவன், தலைவியை விருப்பம் கொள்ளல், அவளை இவள் இன்னாள் என்று துணிதற்குமுன் ஐயுறுதல், பிறகு இன்னாள் என்று துணிதல், பின்னர் அவளுக்குக் குறிப்பு உரைத்தல் என்கின்ற நான்கு துறைகளையும் கைக்கிளைப் பகுதிகளாக வகுப்பர்.

இப்பொருண்மையே,

**"காட்சி ஐயம் துணிவு குறிப்பறிவென**
**மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை"[78]**

என்னும் நம்பியகப்பொருள் நூற்பா வலியுறுத்துகிறது.

மேலும் **"கைக்கிளை என்னும் குறியீடு இருபாலார்க்கும் சொல்லத்தக்க பொதுநிலையில் அமைந்துள்ளது. எனினும் ஆண்பாற் படுத்துவதே இளையவன் காதலைக் கூறுவதே இலக்கண மரபாகும்"[79] என வ.சுப. மாணிக்கனாரும்,**

**"அகத்திணையின் உட்பிரிவான கைக்கிளை ஒரு குறுவடிவமாகும். தடுமாறு காட்சியால் ஆணிடை எழுந்த பாலுணர்ச்சியின் நிலையா மனப்பதத்தைப் புலப்படுத்துவது கைக்கிளையின் உட்கிடையாகும். இதில் ஒருத்தியைக் கண்ட ஆடவனுக்கும் அவனால் காணப்பெற்ற நங்கைக்கும் யாதொது பழியும் இல்லை"[80]** என ந. சுப்புரெட்டியார் உரைப்பதும் ஒப்பத்தக்கதாகும். இவற்றில், காட்சியின் தன்மையை முன்னிலைப்படுத்தி ஆணின் ஒருதலைக்காமம் அமைந்துள்ளதாக சுட்டுகின்றனர்.

**பெருந்திணை**

ஒவ்வாக் காதல், மிகுதிக்காதல், முதுமைக்காதல், பொருந்தாக்காமம், வலிந்த காமம் என பெருந்திணையைக் கூறுவர். இவ்வகையான காதலைக் கண்டு அனைவரும் எள்ளி நகையாடுவர். ‘கடல்நீரைக் கைக்குள் அடக்க முடியாது’ என்று தெரிந்தும் அடக்கநினைப்பது போன்றதும், கதிரவனைக் கைக்குள் அடக்க நினைப்பது போன்றதாகும் பெருந்திணை.

**"ஏறிய மடல் திறம் இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇ**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"[81]**

என்பது தொல்காப்பியர் நூற்பா.

**"பெருந்திணையோ தூய காதலர்களிடையே அளவு கடந்து போகும் சில பால்வினைகளைப் புலப்படுத்துவதாகும். ஆகவே, இந்த மனநிலைகளைப் புலப்படுத்துவனவே இத்திணையின் நான்கு துறைகளும் இவை தனிநிலையுடையன அல்ல"[82] என்பர் ந. சுப்புரெட்டியார்.**

**மேலும், "பெருந்திணையில் தலைமக்களாக வருவோர் உயர் குலத்து மக்கள் அல்லர். பெரும்பாலும் இழிந்தோரிடத்தில் தான் அவ்வொழுக்கங்கள் இருப்பதாகக் கவிதைகள் புனையப்பெறும். அறத்தில் வழுவாமல் நடத்தல் மேன்மக்களால் தான் முடியும். இவையெல்லாம் இன்றைய சமூகஅமைப்பில் நாகரிகப் போர்வையால் மூடப்பெறுகின்றன. இத்தகைய செயல்கள் எந்தக் காலத்திலும் மக்களிடம் காணத்தான் செய்யும்"[83] என உரைப்பர் ந. சுப்புரெட்டியார்.**

தொல்காப்பியர் குறிப்பிடும் ஏறிய மடல்திறம், இளமைதீர்திறம், தோறுதல் ஒழிந்த காமத்தது மிகுதிறம், மிக்கக் காமத்து மிடல் என்ற நான்கும் தூய காதலின் வெளிப்பாடுகளில் அமையும் பெருந்திணையின் துறைகளாக உள்ளது என்பது சுப்புரெட்டியாரின் கருத்தாக உள்ளது.

**"ஐந்திணையாவது அளவுக்காதல்:**
**பெருந்திணையாவது மிகுதிக்காதல் பெரும்"[84]**

என குறிப்பர் வ.சுப. மாணிக்கனார்.

**"ஒரு மென் மலரில் உள்ள தேனை வண்டு உண்பது அன்பினைந்திணை. அம்மலரிலுள்ள தேனை, யானை துதிக்கையால் எடுப்பது பெருந்திணை"[85] என்பர் ஆறு. அழகப்பன்.**

தலைவன், தலைவியர் தன் காதலை உள்ளத்தாலும், சொல்லாலும் செயலாலும் ஒரு வரன்முறை அமைத்துக் கொள்வது ஐந்திணை. இவ்வாறு

இல்லாமல் மிகுதியான காதற்செயல்களை மேற்கொள்வதும், வரன்முறைகளை மீறுவதும் பெருந்திணையின் குறிப்புகள் ஆகும்.

**அகன் ஐந்திணை**

ஐந்திணை என்பதை ‘அன்பின் ஐந்திணை’ எனத் தொல்காப்பியரால் சுட்டப்படுகிறது. தமிழர் வாழ்வின் உயிர்நாடியாக விளங்குவது அன்பு. ஐந்திணையாவது ஐவகையான ஒழுக்கம். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். ஒருவனும், ஒருத்தியும் நுகரும் தூயக்காதலுக்கு குலத்தையோ, செல்வத்தையோ, ஒரு பொருட்டாக நினைத்தாரில்லை. மாறாக அகத்தில் அன்பை மட்டும் கொண்டு ஒருத்தியையோ (அ) ஒருவனையோ பார்த்தவுடன் இவளே (அ) இவனே என் வாழ்க்கைத் துணை என நினைத்து உருகும், நெஞ்சமல்லவா தூயக்காதல், அன்பு காதல், உண்மைக் காதல். இதனையே அன்பின் வழித்தோன்றிய ஒழுக்கம் என்பர்.

தலைவன், தலைவி இருவரும் தோழி முதலான வாயில்களாலும் தலைவி தலைவனோடு இணைக்கப்படுகின்றாள். அந்நிலையில் ”புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்” எனும் ஐவகை உரிப்பொருளுக்குக் களனாக அமைகிறாள். இந்நிகழ்வுகளில் உருவாகும் உணர்வுகள் அன்பின் ஐந்திணையாகும். இந்த ஐவகை உரியையும்,

**“போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி**
**ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் நோக்குங்கால்**
**இல்லிருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல்**
**சொல்லிருந்த நூலின் தொகை”**

என்னும் செய்யுள் உணர்த்துகிறது.

இந்த ஐவகை ஒழுக்கங்களும் எல்லா நிலத்து மக்களுக்கும் பொதுவானது ஆகும். மேலும் இலக்கணங்கள் திணைக்குரிய உரிப்பொருளைத் தனித்தனியாக உரைத்துள்ளன. அன்பின் ஐந்திணைக்கு முதல், கரு, உரி வரிசைப்படுத்தும் நிலையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவற்றிற்கு நிலங்களைக்கூறி, நடுவண் ஐந்திணை என ஐந்திணையுள் நடுநிற்கும் பாலைக்கு

நிலம் குறிப்பிடவில்லை. நடுவுநிலைத் திணைக்கு நண்பகல், வேனில் எனச் சிறு பொழுதுகளைச் சுட்டுவர்.

**"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே"[86]**

எனச் சுட்டுவர். காடுறை உலகம் முல்லை, மைவரை உலகம் குறிஞ்சி, தீம்புனல் உலகம் மருதம், கடலுடை உலகம் நெய்தல் என நிலங்களை வரையறுத்து மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என நிலத் தெய்வங்களையும் உரைப்பர். பாலை நிலம் குறித்து,

**"முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"[87]**

எனச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது. மேலும் சிறுபாணாற்றுப்படை,

**"வேணி னின்ற வெம்பத் வழிநாட்**
**காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்பப்**
**பாலை நின்ற பாலை நெடுவழி"[88]**

ஞாயிற்றின் வெம்மையால் பாலை உருவானதைக் குறித்து நிற்கிறது.

"சிலப்பதிகாரம், சிறுபாணாற்றுப்படை ஆகிய இரு நூல்களும் பாலை நிலம் பற்றிய ஒரு பகுதியை மட்டுமே விளக்கியுள்ளன. இது மட்டுமின்றி வேறு சில தன்மை கொண்ட நிலப்பகுதிகளும் பாலை என அழைக்கப்பெற்றுள்ளன"[89] என்பர் அ. செல்வராசு.

பாலைத் திணையை 'வெம்மை' என்பர். இவ்வெம்மை பாலைக்கே உரியது என்பதும் பாலைத்திணையின் சூழ்நிலைக்கருத்தாகும்.

ஐந்திணைகளாவன அகத்திணை ஏழனுள் கைக்கிளை, பெருந்திணை நீங்கிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன இவற்றை ஐந்திணை என்று மூன்று இடங்களில்

**"நடுவண் ஐந்திணை"[90]**

என்றும்

**"அகனைந்திணை"[91]**

என்றும்

**"அன்பொடு புணர்ந்த ஐந்திணை"[92]**

எனவும் தொல்காப்பியர் சுட்டுவர்.

**முப்பொருள் பாகுபாடு**

குறிஞ்சி முதலாகிய ஐந்திணைகளுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பாகுபடுத்துவர். இவைகள் இடம், காலம், சூழல் என்ற இயல்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இடம் என்பது நிலத்தையும், காலம் என்பது பொழுதையும், சூழல் என்பது உரிப்பொருளையும் குறிப்பதாக உள்ளது. இவை அனைத்தும் அகன் ஐந்திணைக்கு அமைவனவாகும்.

**"முதல் உரி கரு என்பன எல்லாத்திணை வகைகளுக்கும் உரியனவா? இல்லையா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐந்து உரிப்பொருள்களே சொல்லப்பட்டுள்ளன. கைக்கிளை, பெருந்திணை பற்றிய விளக்கங்கள் தனியாக உள்ளன. எனவே நடுவிலுள்ள ஐந்திணைகளுக்கே உரியவை இவை என்று முடிவு செய்ய முடிகிறது. பாடலுட் பயின்றவை நுவலுங்காலை முதல், கரு, உரி என்ற முறையானது உள்ளது"[93]** என்பார் துரை. சீனிச்சாமி.

கைக்கிளை, பெருந்திணைகளுக்கு நிலம் குறிக்கப்படவில்லை.

நாற்கவிராச நம்பி அவர்கள்,

**"கைக்கிளை உடையது ஒரு தலைக்காமம்"[94]**

என்றும்

**"ஐந்திணை உடையது அன்புடைக்காமம்"[95]**

என்றும்

**"பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்"[96]**

எனவும் உரைப்பது நோக்கற்குரியதாகும்.

**முதற்பொருள்**

நிலமும், பொழுதும் காதலர்களுக்கு அகவுணர்வு மிகுதிக்கு காரணமாகிறது. இன்பம் தோன்றுவதற்கு அடிப்படையான காரணமாக அமைகிறது. நிலத்தைச் சார்ந்தும், மாறிமாறி வருகின்ற பொழுதைச் சார்ந்தும், களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் மனிதர்களின் உணர்வுகள் அமைவதால் திணையாகிய ஒழுக்கத்தில் முதற்பொருளின் முதன்மையாக உள்ளது. ஒரு ஆண்டை, ஒரு நாளை பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டாக வகுத்தனர்.

**"முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பு எனமொழிப இயல்புஉணர்ந் தோரே"[97]**

என்னும் நூற்பாவால் உரைப்பர்.

நம்பியகப்பொருள் முதற்பொருளுக்கு,

**"நிலமும், பொழுதும் என முதல் இரு வகைத்தே"[98]**

என்று உயிரினங்கள் வாழ அடிப்படையாக அமைவது நிலமும், காலமும் என விளக்கம் தருகிறது.

"முதற்பொருள் என்பது இயற்கை நிலக் காட்சியையும், நாளின் சிறுபொழுதையும் உள்ளடக்கிய பருவத்தையும் குறிக்கிறது. இயற்கை நிலம் என்பது நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பெறும். அவையாவன, மலையும் மலை சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், ஆற்றின் மருங்கான வயலும் வேளாண்பகுதியும், கடற்கரை நிலப்பரப்புமாகும். கடுங்கோடை காலத்தில் மலை சார்ந்த பகுதிகளும் காடு சார்ந்த பகுதிகளும் வறண்ட நிலப்பரப்புகளாகும். சங்க மரபின்படி இவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைப் பாடல்களில் பாடப்பெறும். காலம் என்பது பெரும்பொழுது (பருவம் அல்லது ஆண்டின் பகுதி) என்றும், சிறுபொழுது (மணி அல்லது நாளின் கூறு என்றும் பகுக்கப்பெறும்"[99] என முதற்பொருளைத் தமிழண்ணல் வகைப்படுத்தியுள்ளார்.

ஒரு செயல் இயல்பாக நடைபெறுவதற்கு இடமும், காலமும் இன்றியமையாதவை என்பதனை,

**"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்"[100]**

எனக் குறிப்பர் வள்ளுவர். மேலும்

**"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி,**
**மாலை மலரும் இந்நோய்"[101]**

எனக் காமத்தின் காலத்தை உரைப்பர். மாலைப்பொழுது காதலர்களின் காமத்தை மிகுதிபடுத்தும் பொழுதாகும். கார்க்காலத்திற்குரிய சிறுபொழுதான மாலைப் பொழுதை,

**"பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"[102]**

கார்காலத் துவக்கத்தில் வந்துவிடுகிறேன் அதுவரை ஆற்றியிருக்க வேண்டும் எனக் கூறிச் செல்கின்றான் தலைவன். கார் காலம் வந்தது தலைவன் வரவில்லை. தலைவியானவளின் மாலை பொழுதின் பிரிவு துயரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'கல் தோன்றி மண் தோன்றா காலத்தே' என்று புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் நிலத்தோற்றம் குறித்துக் குறிப்பிடுகின்றார். மனித வாழ்வில் அனைத்து நிகழ்வுகளுக்கும், பண்பாட்டிற்கும் ஆதாரமாக அமைவதாக முதற்பொருள் அமைகிறது. இதனை **"உலகத்திற்கு முதன்மையாக இருப்பன முதற்பொருள். இவை யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப்பெற்றன என்று வரையறுத்துக் கூற முடியாத இயல்பினவாக இருக்கின்றன. இடமும், காலமும் என்றும் உள்ளனவாதல் வேண்டும் என்பர்"[103] சி. இலக்குவனார்.**

மேலும், **"முதலெனப்பட்ட நிலத்துடனான பருவ மாற்றங்களின் இணைவு அதன் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் ஆதாரமாக அமைந்து மனித வாழ்விற்கு அடிப்படையாகின்றது. வாழ்க்கைக்கான இருப்பிடமும் காலமும் மனித வாழ்வின் எல்லா நிகழ்வுகளுக்கும் ஆதாரமாக அமைவதால் இவை இரண்டுமே முதற்பொருள் எனப்பட்டுள்ளன"[104]** என்பார் பெ. மாதையன் உரைப்பதும் நிலம் பொழுதின் அருமையை உணர்த்திக் கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது. மேலும் நிலமும், பொழுதும் மனிதனின் அனைத்து நிகழ்வுகளுக்கும்

ஆதாரமாக விளங்குவதால் முதற்பொருள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அகப்பொருளின் அடிப்படையாக முதற்பொருள் அமைகிறது.

**கருப்பொருள்**

முதற்பொருளாகிய நிலம், பொழுது ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு அமைவது கருப்பொருள். நிலத்தை அடிப்படையாகக் கொண்டு தெய்வமும், மக்களும், குறிக்கப்படுகின்றனர். மேலும், மரம், செடி, கொடி, தொழில், பூ, மழை, நீர் இவை அனைத்தும் நிலம், பொழுது என்னும் முதற்பொருள் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட கருப்பொருள் ஆகும்.

தொல்காப்பியர் கருப்பொருள், முதற்பொருளின் அடிப்படையாகத் தோன்றுவதை

> **"தெய்வம், உணாவே மா, மரம், புள், பறை**
> **செய்தி, யாழின் பகுதியோடு தொகைஇ**
> **அவ்வகை பிறவும் கருஎன மொழிப"**[105]

என்பர். நிலத்தில் வாழும் மக்களுடன் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ் முதலியவற்றையும் அவற்றோடு தொடர்புடைய பிற உயிருள்ள, உயிரற்ற பொருட்களையும் கருப்பொருளாகச் சுட்டுவர்.

அகம், புறம், அகப்புறம் என மூன்று பொருள் பாகுபாட்டினை உடைய அகப்பொருளின் இலக்கணமான 'தமிழ்நெறி விளக்கம்' கருப்பொருளினை,

> **"தெய்வம் மானிடஞ் செய்தி யுணவோ**
> **டெய்திய விசைவிலங் கினையன பிறவும்**
> **பொய்தீர் கருவெனப் புகன்றனர் கொளலே"**[106]

தெய்வம், மக்கள், செயல், உணவு, இசை, விலங்கு என உரைக்கிறது. இந்நூற்பாவில் மரம் மற்றும் விலங்கு பற்றிக் கூறப்பட்டுள்ளது. புள் பற்றிய செய்திகள் குறிப்பிடவில்லை. 'இணையன பிறவும்' என்று சுட்டியுள்ளதால் மேலும், கருப்பொருள் உண்டு என்று கொள்ளலாம்.

கருப்பொருள் வகையைத் தொல்காப்பியர் **எட்டாகவும்,** தமிழ்நெறி விளக்கம் **ஏழாகவும்,** நம்பியாசிரியர் **பதினான்காகவும்** வகைப்படுத்தியுள்ளார்கள். இவற்றை,

**"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு**
**ஊர்நீர் பூமரம் உணாபறை யாழ்பண்**
**தொழில்எனக் கருஈ ரெழுவகைத் தாகும்"[107]**

என்னும் நூற்பா சுட்டும். தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டோடு உயர்ந்தோர், அல்லோர், (உழைப்போர்) ஊர், நீ, பூ, பண் ஆகியவற்றையும் சேர்த்து பதினான்கு எனக் குறிப்பிடுகின்றார்.

**"ஓர் இலக்கியப் படைப்பில் முக்கியமான உள்ளடக்கமாக விளங்கும் கருத்தான உரிப்பொருளை அதனோடு இயைபுப் பெற்று விளங்கும் நிலக்காட்சியின் கூறுகளோடு தொடர்புபடுத்திட இயலும். அதுபோலவே நிலத்தில் காட்சியளிக்கும் உலகப்பொருள்கள் தொடர்பான கருப்பொருள்களையும் நிலக்காட்சியோடு தொடர்புபடுத்திட இயலும்."[108]** என சா. சிவமணி சுட்டுவர்.

**"உயிர்ப்பொருள், உயிரல்லாத பொருள் ஆகியவற்றைக் கருப்பொருள் என்று குறிப்பிடுகின்றார். இவை நிலமும் காலமுமாகிய முதற்பொருளின் கண்ணே கருக்கொண்டு தோன்றுவனவாதலின் கருப்பொருள் என வழங்கப்பட்டன"[109] எனச் சுட்டுவர் க. வெள்ளைவாரணனார்.**

**"முதலும் உரியுமல்லாத அகப்பொருள்களுள் அகத்திணைக்குக் கருவாய் அமைவனயாவும் கருப்பொருள்"[110] எனச் சுட்டுவர் நா. செயராமன்.**

**"மனிதனின் வினை நிகழ்ச்சிக்குத் துணைபோவதும் முதற்பொருளில் தோன்றுவதும் கருப்பொருட்கள்"[111] எனச் சுட்டுவர் அ.அ.மணவாளன்.**

இதன்வழி, முதற்பொருளின் துணையுடன் கருப்பொருள் அமைகிறது என்பதும் தலைவன், தலைவியின் காதல் உணர்வினை அன்பினைப் பரிமாறிக்கொள்ள துணையாக இருக்கிறது என்பதும் மக்களின் வாழ்வில் முக்கியப் பங்காற்றுவது முதற்பொருளும், கருப்பொருளுமே என்பது புலனாகிறது.

**உரிப்பொருள்**

உரிப்பொருள் பின்னிலையில் விரிந்துரைக்கப்படுகிறது.

**புலவர்களின் உத்தி**

சங்க இலக்கியம் மனித உணர்வுகளையும், உறவுகளையும், செயல்பாடுகளையும் காலமாற்றத்திற்கு ஏற்ற முறையில் நோக்க இடம் அளிப்பதாக இருக்கிறது. புலவர்கள் தம் கருத்துக்களைப் புலப்படுத்துவதில் பல்வேறு வகையான உத்திகளைப் பயன்படுத்தி சமுதாயத்திற்கு உரைத்து உள்ளனர்.

உத்தி என்பதற்குச் 'சொல்லுகின்ற' அல்லது 'புலப்படுத்துகின்ற' வழிமுறை என்பது பொருளாகிறது.

"கருத்துப் புலப்பாட்டிற்காகக் கையாளப்படும் வழிமுறைகளே உத்தி எனப்படும். இவ்வுத்தி பற்றி ஒரு செயல் மிகுதியான அளவில் பயனை அளிப்பதற்கு ஏதுவாக உருவாக்கப்படும் திறமையான திட்டமே உத்தி"[112] என்று கிரியாவின் தற்காலத் தமிழகராதி விளக்கம் தருகின்றது. மேலும், தமிழ்ப்பேரகராதி பல்வகை அடிச்சொல்நிலையில் இதற்குப் பல்வேறு வகைப்பொருள் நிலைகளை "உத்தி, அனுமானம், அறிவு, தேர்தல், இசைவு, இணக்கம், தந்திரவுத்தி, திருவுறுப்பு, தூக்கங்கள், தேமல், படப்பொறி, சொல்"[113] என உரைக்கிறது.

**உத்தியின் இலக்கணம்**

> **"நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக்காட்டி**
> **ஏற்புழி அறிந்திதற் இவ்வகை யாமெனத்**
> **தகும்வகை செலுத்துதல் தந்திரவுத்தி"[114]**

என உரைக்கிறது நன்னூல். இந்நூற்பாவிற்குச் சிவஞானமுனிவர் 'ஓர் இலக்கண நூலால் உணர்த்தப்பொருந்த உணர்த்தி, அப்பொருளை மற்றொரு இலக்கிய நூற்களும் ஏற்கும் இடம் அறிந்து இவ்விடத்திற்கு இது தான் எனக் கருதித் தக்கவகையாகச் செலுத்துவது தந்திரஉத்தியாம்' என்பர். இவ்வுரையின் மூலம் இலக்கிய வழக்கிற்கும் உத்தி உண்டு என்பது புலனாகிறது.

தொல்காப்பியம், மாறனலங்காரம் போன்ற இலக்கண நூல்கள் உத்தியை

> **"ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பின்**
> **நுதலிய தறிதல், அதிகார முறையே**

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

**நுனித்தகு புலவர் கூறிய நூலே”**[115]

என்கிறது தொல்காப்பியம். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் “அது சூத்திரத்தின்பால் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது” என உரைப்பர்.

மேலும், மாறனலங்காரம்,

**“உள்ளுறுத்தமைத்த உத்திவகை”**[116]

என மொழிகிறது.

இதில் ‘ஒத்த காட்சி உத்தி வகை’ என்பதற்கு உரையாசிரியர்கள் பல வகையான பொருள் கூறியிருப்பினும், கூறவிரும்பும் பொருளை அதற்கு ஒப்புமையான மற்றொருப் பொருள் வழியாகவும், உட்பொருளாகவும் உணர்த்துவது உத்தி எனும் விளக்கத்தை அளிப்பனவாக உள்ளது.

**“கவிஞர் தான் படைக்கும் மொழியிலுள்ள சொற்களை மிகுதியும் அறிந்தவனாகிறான். எண்ணிக்கை மிகுதிப்பற்றி கவலை இல்லை. சொற்களை அறிந்தவன் எவ்வாறு கையாள்கிறான் என்பதில்தான் அவன் தனிச்சிறப்பு விளங்குகிறது. அவ்வகையில் அவன் பொருள் புலப்பாட்டுக்கு ஏற்ப சொல்லாட்சி அமைகிறது. கவிஞன் தான் கூறவந்த கருத்தாகிய உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே உத்தி”**[117] என நா. பிச்சமூர்த்தியின் கருத்தை மேற்கோளாகச் சுட்டுவர் சந்திரசேகரன்.

**“ஒருவர் ஒன்றைச் செய்யும்போது பயன்படுத்தும் தொழில்நுட்பக் கூறுகளே உத்தியாகிறது”**[118] என்று சேதுமணியன் குறிப்பிடுகின்றார்.

**“ஓர் இலக்கியப்படைப்பில் படைப்பாளி வழங்க விரும்பும் செய்தி அல்லது அடிக்கருத்தைத் தவிர ஏனையன அனைத்தும் உத்திமுறையில் உருவாக்கப்பட்டவையே”**[119] என மார்ட்டின் கிரே கூற்றை மேற்கோள் காட்டுவர் காசிநாதன்.

புலவர்கள் தாம் கூறவந்தப் பொருளை அதற்குத் தொடர்புடைய வேறு பொருளின் வழியாக தாம் கூறவந்தக் கருத்தில் அடிக்கருத்து மாறாமல்

கற்பவரின் மனதினை உருக்கும் நிலையில் பாடல்களைப் பாடியுள்ளனர். பலவகையான உத்திகளின்வழி புலவர்களின படைப்புத் திறன் புலனாகிறது. புலவன் தனது எண்ணவோட்டத்தில் உருவாகும் கற்பனைத் திறனை இயற்கையோடும் அஃறிணைப் பொருள்களோடும் தொடர்புப்படுத்திப் பாடுவதற்கு உத்திகளைப் பயன்படுத்தினர்.

## உத்திகளின் நோக்கம்

புலவர்கள் பாடுபொருளை விளக்குதல், புலமைத்திறனை விளக்குதல் ஆகிய இரு நோக்கில் உத்திகள் கையாண்டுள்ளனர். பாடுபொருளை விளக்குதல் என்பது சுருக்கமாகவும், செறிவாகவும், கூறவந்த பொருளுக்குகேற்ப வெளிப்படுத்தப்படும் முயற்சி ஆகும். புலமைத்திறன் என்பது புலவர்கள் உணர்த்த எண்ணிய கருத்துக்களைப் பட்டறிவினாலும், கண்ணுற்ற திறனாலும் எடுத்தியம்புவது புலமைத்திறன் ஆகும். இருவகை நோக்கத்திலும் புலவனின் திறமை வெளிக்கொணரப்பட்டாலும் பின்னதில் புலவனின் நோக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. புலவர்கள் தமது புலமைத்திறத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் சூழல் இருந்திருக்கிறது. இதன்வழி பல்வேறு உத்திகளைக் கையாளுதல் இயற்கையாக அமையப் பெற்றிருக்கிறது.

புலவர்கள் தமது பாடல்களில் உண்மை நிகழ்வுக்கு முதலிடம் கொடுத்தனர். மேலும், தமது கருத்துக்கள் சமுதாய மக்களுக்குப் பயனுள்ள வகையில் இருக்க வேண்டும் என்பதற்காகவும், கூறுவதனைச் சுவைப்படக்கூற வேண்டும் என்னும் நோக்கில் உத்திகளை கையாண்டு உள்ளனர். நிகழ்வுகளோடு மக்களையும், மக்களோடு நிகழ்வுகளையும் ஒப்ப பலவிதமான உத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

## இலக்கியத்தில் புலவர்கள் புகுத்திய உத்தி

சங்கப்பாடல்கள் தனிநிலைப்பாடல்களாகும். இவை ஒரே யாப்பினதாகும், சுருக்கமும் தெளிவும் இவற்றின் படைப்புப் பண்புகளாகும். அதனால், சங்கப்பாடல்களில் இறைச்சி, உள்ளுறை, உவமை என்பன மிகுந்துக்காணப்படுகின்றன.

**"இலக்கிய உத்திகள் என்பது கவிதையின் இலக்கிய உத்தியைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் இலக்கண உத்திகளை மட்டும் கூறாது இலக்கிய உத்திகளைச் செய்யுள் உறுப்புகளாகவும் மெய்ப்பாடு, உவமை என்ற பெயரிலும் குறிப்பிட்டுள்ளார். அவர் இலக்கிய உத்தி என்ற பெயரிலும் குறிப்பிட்டுள்ளார். அவர் இலக்கிய உத்தி என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. எனினும் இலக்கிய உத்தி என்ற பொருண்மையைக் கையாண்டதாகவே கொள்ளலாம். சான்றாகக் குறிஞ்சி முதலிய மலர்க் குறியீடுகள் திணை ஒழுக்கத்தின் குறியீடுகளாக அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கதாகும்"[120]** என்பது ச.வே. சுப்பிரமணியனின் ஆய்வுரை இதன்வழி இலக்கியத்தில் உத்தியின் இயல்பினை உணர்ந்து கொள்ள இயலும்.

**ஒலிநிலை உத்திகள்**

இலக்கியங்கள் எழுத்து நிலையில் இல்லாமல் வாய்மொழியாகவே கூறப்பட்டக் காலங்களில் பாடலை, அப்படியே மனனம் செய்துதான் படிக்க வேண்டும் என்ற சூழல் இருந்த நிலையில் எளிமையாகவும், முழுப்பாடலையும் கற்றுக் கொள்ள சில சொற்கள் திரும்பதிரும்ப ஓசையுடன் பயின்றால் எளிமையாக இருக்கும் என்பதைக் கருதி ஒலிநிலை உத்திகளைக் கையாண்டனர்.

"உத்தி வகைகளில் மிகவும் இன்றியமையாதது ஒலிநிலை உத்தியாகும். ஒலிநிலை உத்தி மன உணர்வுகளை வெளிப்படுத்துவதையும் மனத்தின் உணர்வுகளைத் தொடுவதையும் மையமாகக் கொண்டது. ஒலிச்சொற்கள் இயற்கை ஒலிகளை எதிரொலிப்பது என்று இல்லாமல் மனக்கருத்துக்களைக் கண்முன் கொண்டுவரத்தக்கன"[121] என லீக் கூறியுள்ளதை மேற்கோள் காட்டுவர் சீ. மாணிக்கம்.

"ஒலி தொடர்பான உத்திகள் ஒலிநிலை உத்திகளாகும். ஒலிநயம் பற்றி ஓசை வெறும் ஓசையாக இருப்பின் அது இசையாகி விடும். கவிதையில் காணப்படும் ஒலிநயமானது இசையோசையில் இருந்து மாறுபடுவது கவிதைக்குரிய ஒலிநயம் வேறுபட்ட, நுட்பமான பண்புகளை உடையது. சொற்கள் எதுகை, மோனை முதலான யாப்பின் கூறுகளால் பல்வேறு ஒலிகள் ஒலிநிலைகள் அமைகின்றன"[122] என்பார் பொன்மணி வைரமுத்து.

ஒலிநிலை உத்தியின் மூலம் எளிதில் மனனம் செய்யும் திறன், படிக்கத்தூண்டும் அவா, இவ்வாறே பாடலை எழுத வேண்டும் என்ற எண்ணங்கள் தோன்றும். இவ்வுத்தியின் மூலம் ஒரு படைப்பாளனுக்கும், மற்றொரு படைப்பாளனுக்கும் உள்ள வேறுபாட்டை அறிய முடியும்.

ஐங்குறுநூற்றில் வரவுச் சிறப்பு உரைத்த பத்தில் ஆண்மகனின் கடமையான வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியதான 492 வது பாடலில் ஒலிநிலை உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**"நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்**
**நல் நுதல் நாறும் முல்லை மலர,**
**நின்னே போல மா மருண்டு நோக்க,**
**நின்னே உள்ளி வந்தனென் -**
**நல் நுதல் அரிவை - காரினும் விரைந்தே"**[123]

தலைவன், தலைவிடம் என் உள்ளத்தில் உள்ள இடங்கள் அனைத்திலும் நீயே நிறைந்திருந்ததனால் காண்பவை அனைத்தும் உன் சாயலாகத் தோன்றியது. "காண்பவையெல்லாம் அவையே போறல்" என்பது காதலர்களுக்கு இயல்பாகத் தோன்றுவது ஆகையால் தலைவன் தன் வினையில் தலைவியை எண்ணாது தன் கடமையை முடித்தவுடன் தன் அகப்பொருள் மிகுதியாள் தான் கண்ணால் கண்ட அனைத்தும் தலைவியாகத் தோன்றியது. புலவர் கருப்பொருளை ஒப்புமைக் கூறி தலைவியின் சாயலுக்கு மயிலையும், பார்வைக்கு மானையும் ஒத்தவளாக தலைவியை சித்தரிக்கின்றார். ஆகையால், காதலியை காணத்துடிக்கும் மனஎண்ணத்தினால் குதிரையின் வேகத்தை அதிகரிக்கச் செய்து தலைவன் தன் இல்லத்தை அடைந்தான் என்ற கருத்தினைக் கூறுவதில் ஒலிநிலை உத்தியை புலவர் பேயனார் படைத்துக் காட்டியுள்ளார்.

**சொல்நிலை உத்திகள்**

புலவர்கள் பாடல்களில் தனித்தன்மையைப் புலப்படுத்த சொல்லை ஆளும் நிலையில் இவ்வுத்தியைப் கையாண்டுள்ளனர். புலவர்கள் சமுதாய மக்களின் உணர்வுகளை கண்டு, கேட்ட பட்டறிவு, எண்ணங்கள் ஆகியவற்றில் கற்பனையை அமைத்து கவிதையில் சொல்லங்காரத்தில் கவி புனைந்து உள்ளனர். இக்கவிதைகள் நிலைத்தும், நின்று விட்டன.

"சொற்கள் ஒருவனுடைய மனப்பண்பிற்கேற்ற வண்ணம் பிறக்கின்றன. கவிஞனின் மனமுதிர்ச்சி சொற்களில் வெளிப்படுகின்றது செறிவாகவும், அளவாகவும், அமையும் சொற்களே கவிதைக்கு வளம் சேர்ப்பவை. தேவையற்ற இடங்களில் திணிக்கப்படும் சொற்கள் கவிதையை நலிவுபடுத்தி விடுகின்றன"[124] என்பார் ஜெ. நீதிவாணன்.

மேலும் "சொல் கவிஞனின் கருவி. அவன் விருப்பங்களுக்கும், பண்பிற்கும் சூழலுக்கும் ஏற்பச் சொற்கள் அமைந்து அவனை இனங்காட்டி வருகின்றன. மேலும் திரும்பத் திரும்ப வரும் சொற்கள் (ஒரு சில சொற்கள்) கவிஞர்களின் தனித்துவப் பண்பினைக் காட்டுகின்றது. அதே போழ்தில் ஒரு நாணயச் சாலை போல புதுப்புதுச் சொற்களை உருவாக்கக் கூடியவர்களே கவிஞர்கள்"[125] என்றும்,

"கவிதையின் மற்றக் கூறுகளை அரண் செய்து கவிதையை நிலைபேறு உள்ளதாகச் செய்வது சொல்லாட்சியே கவிதையில் அமையும் மந்திரச் சொற்கள் கவிதையின் மதிப்பீட்டை உயர்த்தி விடுகின்றது"[126] பொன்மணி வைரமுத்து உரைப்பர். இவர்களின் கூற்று வழி கவிதைகளில் சொற்களின் ஆளுமையை உணரலாம். சங்கப் அகப்பாடல்களில் கண்ணைக் குறித்து,

**"<u>மயிற்கண்</u> அன்ன மாண்முடிப் பாவை"[127]**

**"<u>செங்கண்</u> இரும்புலி குருமும் அதனால்"[128]**

**"புனம் உண்டு கடிந்த <u>பைங்கண்</u> யானை"[129]**

என குறுந்தொகையிலும்,

**"பேர் <u>அமர்க்கண்ணி</u> - ஆடுகம், விரைந்தே"[130]**

என ஐங்குறுநூற்றிலும்,

**"<u>கடுங்கட்</u> கறவையின் சிறுபுறம் நோக்கி"[131]**

**"<u>கருங்கண்</u> யானை நெடுங்கை சேர்த்தி"[132]**

**"<u>கடுங்கண்</u> மறவர் கல்கெழு குறும்பின்"[133]**

என அகநானூற்றிலும் புலவர்கள் கையாண்டுள்ள சொற்களின் இயல்பினை உணரலாம். கண்ணிற்கு; மயிற், செங், பைங், கடுங், அமர் ஆகிய

அடைச்சொற்களைப் புலவர்கள் பயன்படுத்திய நிலைக்கு சொல்நிலை உத்தி என்பது பொருளாகும்.

**பின்னோக்கு உத்தி**

காப்பியங்களில் இவ்வகை உத்திகள் பெரிதும் இடம் பெற்றுள்ளன. இக்காலத்தில் சிறுகதை, புதினம், நாடகம் போன்றவற்றிலும் இத்தன்மை மிகுந்துள்ளது. நடந்த நிகழ்வுகளை அவ்வப்போது கூறாது பிறகு ஓரிடத்தில் ஒரு காலகட்டத்தில் பின்னோக்கு முறையில் காட்டப்படும் முறை பின்னோக்கு உத்தியாகும். இவ்வகையான உத்திகள் நிகழ்ச்சிப் பின்னலில் செறிவை ஏற்படுத்திப் படைப்பின் கட்டமைப்பிற்கு உதவுகிறது. சங்க இலக்கியத்தில் தினைப்புனக்காவல் ஆயத்தார் விளையாட்டு, திடீர் மழை, அருவியாடல், இரவில் தலைவன் வருதல், நாய்குறைப்பு, தாய் துயில் எழுதல், காவலர் கடுகல் போன்ற இடங்களில் அமைந்து வரும். கலித்தொகை நாடகப் பாங்குடன் அமைந்துள்ளதால் இவ்வுத்தி சிறப்பாக அமைந்துள்ளது. கலித்தொகை 42 ஆம் பாடலில் முன்பு நடந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறும் விதமாக அமைந்துள்ளது.

> **"என்று யாம்பாட, மறைநின்று கேட்டனன்,**
> **தாழ்இருங் கூந்தல் என் தோழியைக் கை கவிய**
> **சாயல் இன் மார்பன் சிறுபுறம் சார்தர**
> **ஞாயிற்று முன்னர் இருள் போல மாய்ந்தது, என்**
> **ஆய் இழை மேனிப் பசப்பு"**[134]

இப்பாடல் தலைவியானவள் கலங்கிக் கூறியதாக அமைந்துள்ளது. தோழி இயற்பழித்துப் பாடினாள். நான் இயற்பட மொழிந்து பாடிய வள்ளைப் பாடலைத் தலைவன் மறைவாக முன்பொரு நாள் கேட்டான். கேட்டவன் எனக்கே தெரியாமல் நீண்டக் கூந்தலை உடைய என் தோழியின் கையைக் பிடித்து அவனின் வரவை எனக்குத் தெரியாமல் இருக்கச் செய்து என் பின்னே வந்து நின்றான். அவன் நின்றதனால் என் மேனியின் பசலை நிறம் கதிரவன் முன் இருள் மறைவது போன்று மறைந்தது.

ஆனால், அன்றுபோல நானும் என் தோழியும் வள்ளைப்பாட்டுப் பாடினோம். அவன் ஏனோ தெரியவில்லை, முன்பு போல் தற்பொழுது என் பின்னே

வந்து நிற்கவில்லை என்று பழைய நிகழ்ச்சியை நினைப்பூட்டித் தலைவி கலக்கத்தோடு தோழியிடம் கூறுகின்றாள். இப்பாடலில் பின்னோக்கு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வந்த சொற்களே மீண்டும் வருதல் உத்தி**

புலவர்கள் கருத்துக்களை வலியுறுத்த சங்கப்பாடல்களில் ஒரே சொல்லையே மீண்டும், மீண்டும் பயன்படுத்துவர். இது புலவர்கள் கையாண்ட ஒரு வகையான உத்தியாகும்.

**"நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே"**[135]

**"அகவன் மகளே அகவன் மகளே"**[136]

**"நன்று நன்று என்னும் மாக்களோடு"**[137]

**"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே"**[138]

எனக் குறுந்தொகையிலும்,

**"செறிமுறை பாராட்டி னாய் மற்றுஎம், பல்லின்**
**பறிமுதல் பாராட்டி னையோ? - ஐய்"**[139]

எனக் கலித்தொகையிலும் புலவர்கள் ஒருமுறைக் கையாண்ட சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளனர்.

செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்ததாக குறுந்தொகை 20 ஆம் கோப்பெருஞ்சோழன் பாடியப் பாடல் காணப்படுகிறது. இப்பாடலில் பயின்றச் சொல்லே மீண்டும் மீண்டும் பயின்று பாடலின் கருத்தை திண்மையுடையதாக்கிறது.

**"அருளும் அன்பும்நீக்கி, துணை துறந்து,**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்**
**உரவோர் உரவோர் ஆக்**
**மடவம் ஆக மடந்தை நாமே"**[140]

தலைவி தனிமையில் வாடுவதற்கு இரக்கம் கொள்ளாதவர், தன்னை காவாமல் நீங்கியதனால் அருளும், அன்பும் நீங்கியவர் தலைவன் எனத் தோழியிடம் கூறுகின்றார். அருளையும், அன்பையும், துறந்து பொருள் வேண்டிச் செல்லும்

அறிவினை விட அருளும் அன்பும் உடையவராய் என்னோடு இருப்பதே அறிவுடையச் செயல் என தலைவி உரைக்கின்றாள். ஆனால் தலைவன் அவ்வாறு இல்லை.

தலைவன் அறிவுடையவராக (உரவோர்) இருக்க வேண்டும் என்பதற்காக 'உரவோர்' 'உரவோர்' என்றும் சொல்லைக் கோப்பெஞ்சோழன் பயன்படுத்துகிறார். இம்முறை புலவர்களின் கருத்து உறுதிப்பாட்டை நிலைநிறுத்த ஏதுவாக அமையப்பெற்றுள்ளது.

**உவமை**

மொழி தோன்றுவதற்கு முன்பே உவமை தோன்றியது என்பர். அணிகளுள் தாயாக அமைவது உவமை ஆகும். இரண்டு பொருள்களிடையே காணும் ஒப்புமைகளை ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.

கருத்துக்களை ஒப்பிட்டுச் சொல்லுவதில் உவமையின் பயனை அறிந்த தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உவமஇயல் பகுதியை வைத்துள்ளார். தொல்காப்பியர் உவமை பிறக்கும் இடங்களாக வினை, பயன், மெய், உரு என்ற நான்கினை குறிப்பிடுகிறார்.

**"வினைபயன் மெய்உரு என்ற நான்கே**
**வகைவெற வந்த உவமத்தோற்றம்"**[141]

என்பது நூற்பா.

ஒரு பொருளுடன் பிறிதொன்றை உவமையாக சொல்லும் நிலையில் அவ்விரண்டிற்கும் இடையே தொழில் ஒற்றுமை, பயன் ஒற்றுமை, உருவ ஒற்றுமை நிற ஒற்றுமை ஆகியன ஒத்து அமைதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

உவமை பிறக்கும் இடங்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் நான்கினை தண்டியாசிரியர் மூன்றாக வகுக்கிறார். தொல்காப்பியர் கூறும் மெய், உரு என்ற இரண்டையும் பண்பினுள் அடக்கி

**"பண்புந் தொழிலும் பயனுமென்றி வற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"**[142]

என உரைப்பர். ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தினைத் தெரிந்த பொருளோடு ஒப்பிட்டு விளக்குவதே உவமையாகும். இதன் பயன் யாது எனின் புலப்படாதச் சொற்கள் அனைவருக்கும் புலப்படும். அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலுமாம் என்பர் இளம்பூரணர்.

புலவர்கள் உணர்வினைக் கற்பனை நயத்துடன் கூறும் நிலையில் அவர்களின் ஆக்கத்தில் பல விதமான ஒப்புமைகள் தோன்றும் அவற்றையே கவிதையாக வடிக்கின்றனர்.

"உவமைகளைக் கூறிப் பொருளின் பெருமைகளையும், சிறுமையையும் உணர்த்தும் பொழுது எண்வகை மெய்ப்பொருளின் சுவைகள் மேம்பட்டு விளங்கும்"[143] என்றும் ரா. சீனிவாசன் அவர்களின் கருத்தும்,

"கவிஞன் ஐம்புலன்களால் நுகர்ந்தவற்றையும் சிந்தித்து உணர்ந்தவற்றையும் அப்படியே மக்கள் உள்ளத்தில் பதிய வைப்பதற்குத் துணை செய்யும் கருவிகளுள் உவமையே தலைசிறந்தது"[144] என்னும் ஆ. வே. இராமசாமி அவர்களின் கருத்தும்,

"சாதாரணமாக நாம் காணும் பொருள்களை எடுத்துக் கொண்டு அவற்றுள் அசாதாரணமான தொடர்புகளை உண்டாக்கிக் காட்டலே இச்சக்தியாகும்"[145] என்னும் அ. ச. ஞானசம்பந்தன் கருத்தும் உவமையின் கவிஆளுமைப் பண்பை உணர்த்திக் கொள்ள ஏதுவாக அமைகிறது.

உவமைகள் இலக்கியங்களில் பாடுபொருளை நுட்பம் வாய்ந்ததாகச் செய்ய துணை நிற்கிறது. தலைவியை மணம் செய்துகொள்ளாமல் பகற்குறியில் வரும் தலைவனிடம் தோழி விரைவில் மணம் புரிய வேண்டும் என்றும் கருத்தாக்கத்தைக் கபிலர்

**"இளம் பிறை அன்ன கோட்ட கேழல்**
**களங் கனி அன்ன பெண்பால் புணரும்**
**அயம் திகழ் சிலம்ப கண்டிகும்**
**பயந்தன மாதோ, நீ நயந்தோள் கண்ணே"[146]**

எனப் பாடுவர். பன்றியின் கோடு வடிவத்தாலும், நிறத்தாலும் இளம்பிறையை ஒத்திருப்பதை 'இளம்பிறையன்ன கோட்ட' என்றாள். மேலும் மிகவும் கருமைக்குக் களங்கனியை உவமையாக கூறுவது மரபு. 'காக்கையிற் கரிது களம்பழம்' என்பர்.

சிலம்பினின்றும் வீழும் அருவி ஒளிரும் தன்மையுடையது என்பதால் ‘அயம் திகழ் சிலம்பு’ என்றாள் தோழி.

‘பெண் பாற்புணரும் அயந்திகழ் சிலம்பு’ என்பதற்குப் பன்றி களங்கனிபோல் கரிய பெண்பன்றியோடு கூடிச் சென்று அருந்தும் நீர் மிக்கச் சிலம்பு என்று உரை கூறினார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.

களாப்பழம் போன்ற கருநிறமமைந்த தனது பிணவுப் பன்றியினது செவ்வி தேர்ந்து கூடிக்களித்தற்கு இடனான கோடையினும் நன்னீர் அருவியால் விளங்கா நின்ற பக்கமலை என்பது பெருமழைப்புலவரின் உரையாகும் இவர்களின் உரைவிளக்கம் உவமையின் தன்மையை இன்னது என உணர்த்தி நிற்கிறது.

பன்றியின் கோட்டுக்குப் பிறைமதி உவமையாதல் அகநானூறு

**"பிறைப்புறழ் மருப்பின் கடுங்கண் பன்றி"** [147]

உரைக்கிறது. புலவர்கள் பாடலில் உவமையை அமைப்பது மட்டுமின்றி நுட்பமான கருத்துக்களையும் புலப்படுத்துகின்றனர்.

**உள்ளுறை - இறைச்சி - கருத்தாக்கம்**

அகஇலக்கியங்கள் மனிதனின் உணர்வுகளை நாகரீகமாகச் சொல்லும் மரபினைக் கொண்டது. தலைவன், தலைவியின் அகஉணர்வுகளை வெளிப்படையாகச் சொல்லாமல் இலைமறைக்காய்ப்போலச் சொல்லும் பண்பாடு மிக்கவர்களாகப் புலவர்கள் திகழ்ந்து காதற்சார்ந்த அகஉணர்வுகளை விளக்குவதற்குப் புலவர்கள் இலக்கிய மரபோடு குறிப்புப் பொருளையும் கையாண்டனர். அதுவே உள்ளுறை, இறைச்சி எனும் உத்தியாகும்.

உள்ளுறை, இறைச்சி என்பன கூறிய கருத்திலிருந்து கூறாத கருத்தினை உய்த்துணர வைக்கும் ஒரு குறிப்புமுறை ஆகும்.

"உள்ளுறை, இறைச்சி ஆகியன அகப்பொருளிலே வரும். புறப்பொருளில் வரலாகாது என விதியில்லையெனினும் அவற்றைப் புறப்பொருளில் கையாளும் மரபு இல்லை என சோம. இளவரசு சுட்டுகிறார்"[148] என கு.வெ. பாலசுப்ரமணியன் அவர்களின் கருத்தும்,

"புலவன் தான் கூறக் கருதும் கருத்தைப் புறப்பாடல்களில் தன் கூற்றாக நேரிடையாகக் கூறுவான். ஆனால் அகப்பாடல்களில் அத்தகைய உரிமை அவனுக்கு வழங்கப்படுதல் இல்லை. ஆகவே தன் எண்ணங்களைக் கூற்றுகளின் வாயிலாக மட்டுமே அவனால் உணர்த்தமுடியும். மேலும் உள்ளுறை, இறைச்சி என்பது அகத்திற்கே சிறப்புடையதாதலின் இது கூற்றின் பாற்படுவதேயாகும்"[149] எனும் இளவழகனாரின் கருத்தும் உள்ளுறை, இறைச்சி அகத்திற்கு மிக்கு பயனுடையது என்பது புலனாகிறது.

**உள்ளுறை**

உள்ளுறை என்ற சொல் உள் + உறை எனும் அமைப்புடையது. உள்ளே தங்குதல் என்பது உள்ளுறையின் பொருளாகும். உள்ளுறை என்பது புதைந்துள்ள பொருள் அல்லது மறைந்துள்ள பொருள் என்பதாகும். புலவர்கள் கூறும் கூற்றில் பொருள் வெளிப்படையாக இல்லாமல் மறைந்து நின்று உய்த்துணரும் போது வெளிப்படுவது உள்ளுறை எனப்படும்.

உள்ளுறை என்று தனியே தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. உள்ளுறை உவமம் என்ற தொடரே உள்ளுறைக்குரிய இணையான தொடராகத் தொல்காப்பியர் உரைப்பர்.

**"உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்**
**தள்ளா தாகும் திணையுணர் வகையே"[150]**

உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்ற இரண்டு உவமைகளாலும் திணை இன்னது என்பதை உணர முடியும் என்பது தொல்காப்பியரின் துணிவு.

இதற்கு இளம்பூரணர், உள்ளுறையில் **வரும் உவமம், ஒழிந்த உவமம்** என இரு வகைகளாக உள்ளுறை உவமம் வரும் என்கிறார்.

"உவமவியலுள் அகத்திணை கைகோள் இரண்டிற்குப் பொதுவகையான் உரியதென்று கூறினார். திணை என்று மட்டும் தொல்காப்பியர் குறிப்பிடுவதால் இது புறத்திணைக்கும் பொது என்று உரை எழுதியுள்ளார். ஆனால் புறத்திணைப் பாடல்களில் உள்ளுறை போல வரும் இடங்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் அதைக் குறிப்புப் பொருள் என்று சொல்லி மரபை மீறாமல் விடுகின்றனர்"[151] என உரை வகுப்பர் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியர், உள்ளுறை உவமம் தெய்வம் நீங்கிய பிற கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் என்பதை,

> **"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்**
> **கொள்ளும் என்ப குறியறிந் தோரே"[152]**

என்னும் நூற்பா வழி உணர்த்துவர்.

உள்ளுறை உவமமானது இயற்கைக்காட்சி வருணனையாகவே அமைந்துள்ளது.

> **"உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென**
> **உள்ளுறுத் துரைப்பதே உள்ளுறை உவமம்"[153]**

எனத் தொல்காப்பியர் உரைப்பது பொருள் உடையதாகும்.

உள்ளுறை உவமையில் வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள் உள்ளே அடிப்படையாக உறைந்து கொண்டிருக்கும் கருத்துக்களுக்கு உவமையாக வரும்படி அமைக்கப்பெற்றிருக்கும். இதைக் **"கருப்பொருட்களின் துணைகொண்டு பெறப்படும் ஒரு குறிப்பு உவமை"[154]** ரா.சீனிவாசன் உரைப்பதும்,

**"அகப்பொருள் பாடல்களில் பெரும்பாலும் பயின்று வருவது உள்ளுறை உவமமாகும். இதில் வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள் உள்ளே அடிப்படையில் உறைந்து கொண்டிருக்கும் கருத்துக்களுக்கு உவமையாகி வரும் படி அமைக்கப்பெற்றிருக்கும்"[155]** ந. சுப்புரெட்டியார் உரைப்பதும்,

**"உள்ளுறை என்பதற்கு உள்ளே பொருத்தி வைப்பது என்பது பொருள். எடுத்துக் கூறப்படும் பொருள் ஒன்றை விளக்குவதற்கு யாவரும் அறிந்த பொருளை உவமமாகக் கூறுவது போல, இந்த உள்ளுறையும் கூறப்படுவது பற்றி உள்ளுறை உவமம் என்பது வழக்கம், உள்ளுறைப் பொருட்கள் எடுத்தோதப்படும் பொருட்டுக் காரண காரிய இயைபிலோ இடமும் இடத்துநிகழ் பொருளுமாம். இயைபிலோ, உவமமும் பொருளுமாம் இயைபிலோ யாதானும் ஓர் இயைபு பற்றி நிற்கும் இயைபு இல்லாதவை**

**உள்ளுறையாகப் பயன்படா"**[156] என ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உரைப்பதும்,

**"தாழ்வென்று கருதும் அஃறிணையே தவறாது நடக்கும் போது உயர்ந்தவன் என்று தம்மை மதிக்கும் மனிதன் தவறலாமோ எனக் குத்திக் காட்டவே அவனை விடத் தாழ்ந்த கருப்பொருள்கள் உள்ளுறையில் அமைகின்றன"**[157] என அர. சிங்காரவேலன் உரைப்பதும் கொண்டு உள்ளுறை உவமையின் நுண்பொருளை அறிய இயலும்.

குறிப்பால் புலப்படுத்துவதே அறிவின்பம் பயக்கும் என்பதனால் புலவர் உள்ளுறையை அக இலக்கியங்களில் பயன்படுத்தினர். அகஇலக்கியத்தில் உள்ளுறை பொதிந்தப்பாடல்கள் அதிகம்.

**"நறு வடி மாஅத்து மூக்கு இறுபு உதிர்ந்த**
**ஈர்ந் தண் பெரு வடு, பாலையில் குறவர்,**
**உறைவீழ் ஆலியின், தொகுக்கும் சாரல்**
**மீமிசை உயிர் வாழ்தல் கூடும் - அன்னாய்"**[158]

என்னும் பாடலில் 'நறுவடி மாஅத்து - நல்நாட்டவர் என்ற இயற்கைக் காட்சியில் புலவர் மிகவும் நுட்பமான கருத்தைப் பதிய வைத்துள்ளார். இந்த அடிகளை நீக்கினால் இந்த அகப்பொருட் பாடலின் உரிப்பொருள் தெளிவுற விளங்காது. மரத்திலிருந்து எவ்விதமான முயற்சியுமின்றித் தானாக விழும் மாவடுக்களைத் தொகுப்பவர் தலைவன் நாட்டினர் என்பது இப்பாடலின் மையக்கருத்து. அருமுயற்சியைப் புறக்கணிக்கும் இயல்புடைய நாட்டினர் வாழும் நாட்டில் தலைவன் வாழ்ந்தாலும் என்னை வலிய வந்து திருமணம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவான். அவ்வாறு தலைவன் திருமணம் முயற்சியில் ஈடுபட வில்லையெனில் நான் உயிர் வாழ்தல் அரிதான செயல் என்றால் தலைவி. இதுவே இப்பாடலின் நுட்பமான கருத்தாகும். இவ்வாறு புலவர்கள் இயற்கைக் காட்சியை வருணித்து அகமாந்தர்களின் உணர்வினை உள்ளுறையாக உரைப்பது ஈண்டு நோக்குதற்குரியதாகும்.

இதற்கு, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், மாவினின்றும் தாமாக உதிர்ந்த மாவடுக்களைக் குறவர் ஆலிபோலத் தொகுத்துக் கொள்ளும் நாட்டவர்

ஆதலின், என்னின் நீங்கித் தானாகச் சென்று வீழ்ந்த நெஞ்சினைப் பெரும் பேறாக ஏற்றுக் கொள்வர் என உரைப்பதும்,

பெருமழைப் புலவர், இற்று வீழும் வடியினைக் குறவர் தொகுப்பர் என்றது, பாலை நிலத்தின்கண் வெம்பி வடுக்களைத் தொகுக்கும் குறவர் போன்று நம் பெருமானும் யான் துயரத்தாலே நைந்து இறந்துபடும் எல்லைவரை வாளாவிருந்து அவ்வெல்லைக்கண் வரைதற்கு வரமுயல்வானாயினை எனத் தலைவனைப் பழித்தபடியாம் என உரைப்பதும் உள்ளுறையின் நுட்பம் கருதியதே ஆகும்.

**இறைச்சி**

இறைச்சி என்ற சொல்லின் பொருளாகக் **"தசை, மாமிசம், கருப்பொருள்"**[159] என்ற மூன்றை மதுரைத் தமிழ்ப்பேரகராதி குறிப்பிடுகின்றது.

இறைச்சி என்னும் சொல் **இறுத்தல், தங்குதல்** எனப் பொருள்படும். இறைச்சி எனும் உள்ளுறைப் பொருளும் அகத்திற்கே உரியனவாகும். சொற்பொருளின் புறத்தே தோன்றும் பொருளே இறைச்சியாகும். இறைச்சி அகப்பொருட்பாடல்களில் தெய்வம் ஒழிந்த ஏனைய கருப்பொருட்கள் மூலம் பிறக்கும். இதனை சேனாவரையர் இறைபயப்பது இறைச்சி என்பர். உள்ளுறை போன்றே இறைச்சியும், குறிப்புப் பொருளை உணர்த்தும் ஓர் உத்தி எனலாம்.

**"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே"**[160]

என்னும் நூற்பாவில் இறைச்சி உரிப்பொருளின் புறத்ததாகத் தோன்றும் பொருள் எனக் குறிப்பர். சொல்லப்பட்ட ஒரு பொருளுக்கு வெளிப்படையாக வேறொரு பொருள் புலப்படுவதே இறைச்சி ஆகும்.

இறைச்சி இன்னது என்பதை

**"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே**
**திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே"**[161]

எனவும்,

**"அன்புறு தகுவன இறைச்சியுட் சுட்டலும்**
**வன்புறை யாகும் வருந்திய பொழுதே"**[162]

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இறைச்சிப் பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தே தோன்றும் பொருள் ஆகும். மேலும், கருப்பொருளில் நாட்டிற்கும், ஊர்க்கும், துறைக்கும் அடையாகி வருவது என உரைப்பர் இளம்பூரணர்.

ஓர் அகப்பாடலில் அது கருதும் துறை (உரி) பொருளுக்குத்தானும் உதவியாக அமையுமாறு சொல்லப்படும் கருப்பொருட் கருத்தே இறைச்சியாகும் என்பர். மேலும் அவ்வாறு திணைப் பொருட்கு உபகாரமாக வருவது மட்டுமல்லாமல் ஒரு திணைப்பொருள்தரும் பாடலின் இடையே வரும் ஒரு கருத்துக்காக உபகாரப்படுவது இறைச்சி நச்சினார்க்கினியர் அளிப்பர்.

எதிரொலியாக வருவதே இறைச்சி என்று புறச்சூழலைபார்க்கும் போது மனம் புலம்பி நினைக்கச் செய்யும் செயலே (அ) நிகழ்ச்சியே இறைச்சி என்பர் எனக் குறிப்பர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.

உரிப்பொருள் அடிப்படையில் கருப்பொருள் தொடர்பால் விளங்குவது என உரைப்பர் சோம. இளவரசு.

சங்கஇலக்கியத்தில் இறைச்சிப் பொருள் அமைந்த பலப்பாடல்கள் காணப்படுகிறது. 'வரைவுமலிந்தது' என்னும் துறையில்

**"கோட் சுறா வழங்கும் வாள் கேழ் இருங் கழி**
**மணி ஏர் நெய்தல் மா மலர் நிறைய,**
**பொன் நேர் நுண் தாது புன்னை தூஉம்**
**வீழ் தாழ் தாழைப் பூக் கமழ், கானல்,**
**படர் வந்து நலியும் சுடர் செல் மாலை,**
**நோய் மலி பருவரல் நாம் இவண் உய்கம்**
**கேட்டிசின் - வாழி, தோழி - தெண் கழி**
**வள் வாய் ஆழி உள் வாய் தோயினும்**
**புள்ளு நிமிர்ந்தன்ன பொலம் படைக் கலி மா**
**வலவன் கோல் உற அறியா**
**உரவு நீர்ச் சேர்ப்பன், தேர்மணிக் குரலே"[163]**

எனப்பாடுவர் கீரங்கீரனார். இருங்கழியின் நெய்தல் மலர் நிறைந்து காணப்படுவது போன்று புன்னையின் பொன்போன்ற நுண்ணிய தாதினை உதிர்க்கும் இது இயற்கை நிகழ்வு. திருமணத்திற்காக பொருளீட்டி வந்த தலைவன் சேரியிடத்துத்

தலைவியின் கைகளில் நிறைந்த பொற்குவியலை மணம் புரிய கொடையாக வழங்குவான் என்ற இறைச்சி பொருள் காணப்படுகிறது.

இயற்கையாகவே தாழம்பூவின் மணம் கடற்கரைச் சோலையெங்கும் வீசும் என்றது தலைவிக்கு நடைபெறும் திருமணம் நாடெங்கிலும் உள்ள அனைவருக்கு தெரியும்படி நிகழும் என்ற இறைச்சி பொருள் அமைத்துப் புலவர் பாடியுள்ளார்.

தலைவன் தலைவியின் அன்புணர்வைத் தூண்டும் உணர்வைச் சுட்டப்புலவர்கள் கருப்பொருளினைக் கருவியாகக் கையாண்டுள்ளனர். இத்தகைய நிகழ்வுகளின் உள்ளே ஒரு உட்கருத்து இருக்கும். இதுவே இறைச்சி ஆகும். குறிஞ்சித் திணையையே உள்ளுறை, இறைச்சிக்குக் களமாக உள்ளதைப் புலவர்கள் பாக்கள் வழி அறியலாகிறது.

உத்திகள் வேறுவேறு பெயர்களில் வேறுவேறு முறைகளில் பெருகினும் அவற்றின் அடிப்படை **"குறிப்பு, வெளிப்படை"** என்ற இரண்டே ஆகும்.

சங்கப்புலவர்களின் கருத்தாழத்திற்கும், கட்டமைப்பிற்கும், உள்ளுறை, இறைச்சி உத்தி ஆகியன காரணிகளாகத் திகழ்கின்றன.

**கருத்தாடல் தோற்றம்**

மனிதன் தன் மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு மொழியையே கருவியாகப் பயன்படுத்துகிறான். மனிதனை மனிதனாக வாழச்செய்வது மொழி ஆகும்.

**"மொழி என்பது மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது ஆகும்"** [164] என்பர் கி. கருணாகரன்.

மொழிவழித் தோன்றும் எண்ணங்களின் பரிமாற்றமே கருத்தெனப்படுகிறது. கருத்துக்களை ஒருவர் மற்றவரிடம் பரிமாறிக்கொள்வதே கருத்தாடல் எனப்படும். கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் மனிதன் தன் தேவைகளையும், தான் மற்றவருக்குச் சொல்ல விரும்பும் செய்திகளையும், சொல்லி விடுகின்றான். ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு கருத்தாடல் முக்கிய காரணியாகத் திகழ்கிறது.

**கருத்தாடல் விளக்கம்**

ஒருவரையொருவர் தங்களுக்குள்ள தொடர்பினால் கருத்துக்களை உருவாக்குகின்றனர். இதன் மூலம் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. பேசுதல், கேட்டல், எழுதுதல், படித்தல் என்ற எந்தச் செயலினைச் செய்பவராக இருந்தாலும் அவர்களுக்கிடையே நிகழும் மொழிவழி கருத்துப் பரிமாற்றத்திற்குக் கருத்தாடல் என்றுப்பெயர். ”கருத்தாடல் என்பது மொழி மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளும் செயல் நிகழ்வினைக் குறிக்கும்” என செ. சண்முகம் கூறியுள்ளார். வாழ்க்கை அனுபவங்களை மொழி மூலம் அறிந்து கொள்கிறோம். கருத்துக்களைப் பரிமாறுவதன் மூலம் கருத்தாடலின் செயல் நிகழ்கிறது. கருத்தாடல் நிகழ்வுகள் பல்வேறு முறைகளில் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அவற்றில் மொழியைப் பயன்படுத்தி வருகின்ற பேச்சு, எழுத்து மூலம் நடைபெறும் கருத்தாடலே தகுதியுடையதாகிறது.

**கருத்தாடல் பொருள் விளக்கம்**

கருத்து + ஆடல் = கருத்தாடல் எனப்படும். கருத்து என்பது எண்ணம், நோக்கம், சிந்தனையையும், ஆடல் என்பது அசைதல், சொல்லுதல், நட்புரையாடல் என்பதையும், குறிப்பன எனக் கழகத்தமிழ் அகராதி பொருள் தருகிறது. கருத்தாடல் என்பது தனது கருத்தினை மற்றவருக்கு தெரிவித்தல் (அல்லது) வெளிப்படுத்துதல் என்னும் பொருளைத் தருகிறது.

**“கருத்தாடல் என்னும் சொல், பேச்சு, எழுத்து போன்ற மொழிசார் கூறுகளையும், முகபாவங்கள், கைகால் அசைவுகள், படம், அட்டவணை போன்ற மொழிசாராக் கூறுகளையும் பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது. கருத்தாடல் நடைபெறுவது சமுதாயத்தின் நிகழ்வுகளினைக் கருத்தாகப் பெறுவதோடு மட்டுமல்லாமல் பெற்றக் கருத்துகளானது, மீண்டும் சமுதாயத்திற்கு வெளிப்படுத்தப்படுகிறது. கருத்தாடலானது மனிதர்களைப் பல வகையான செயல்களில் ஈடுபடுத்துகிறது. இதனால் மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளும், உணர்ச்சிகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு வெளிப்படுவதன் மூலம் சமுதாய உறவுகள் வளர்க்கப்படுகின்றன”[165] என்பார் மா. வசந்தகுமாரி.** இவ்வாறு ஒருவர்

மற்றவருடன் உரையாடும் நிலையில் அதற்கான பதில் பெறப்படுகிறது. பதில் பேச்சாகவும், எழுத்தாகவும் வெளிப்படும்.

**கருத்தாடல் வகைகள்**

1. பேச்சுக் கருத்தாடல்
2. எழுத்துக் கருத்தாடல்
3. மொழி சார் கருத்தாடல்
4. மொழி சாராக் கருத்தாடல்
5. ஒரு வழிக் கருத்தாடல்
6. இருவழிக் கருத்தாடல்

போன்றவை கருத்தாடலின் வகைகளாகும். இதில் உரை உத்திகளும், முறைகளும் சமுதாயத்திற்கு சமுதாயம் மாறுபடும். இலக்கியம், சட்டநூல், நாட்டுப்புறப்படைப்புகள், பழமொழி, விடுகதை போன்றவற்றில் பல விதமான மாறுப்பட்டக் கருத்தாடல்களை உணர இயலும்.

**பேச்சுக் கருத்தாடல்**

சமுதாயத்தில் முதன்முதலில் தோன்றியக் கருத்தாடல் பேச்சுக் கருத்தாடல் ஆகும். இவ்வகையான கருத்தாடல் எழுத்து, வடிவம் காண்பதற்கு முன்புத் தோன்றியது. ஆகவே, இவை சீர்மையற்றுக் காணப்பட்டது. பேச்சுக் கருத்தாடல் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடும்; வட்டாரச் சொற்கள் உண்டு. மொழி துறைச் சார்ந்து மாறுபடும் தன்மையுடையது ஆகும். இவை மொழி சார்ந்தவையாகவும், மொழி சாராதவையாகவும் நடைபெறும். அமைத்தல், கேட்டல், வினா எழுப்புதல், விடையளித்தல் ஆகியவை மொழி சார்ந்தவையாகவும், சைகைகள், உடல் அசைவு மொழி சாராதனவாகவும் நடைபெறும். **"பேச்சு மொழியானது அன்பாகப் பேசுதல், ஆணையிடுதல், வாதிடுதல், பெயரிடுதல், புகழ்தல், இகழ்தல், கருத்தை நிலைநாட்டுதல், வினாஎழுப்புதல், விடைகூறுதல், ஊக்குவித்தல் போன்ற செயல் நிகழ்வுகள் நடத்துவதற்குப் பயன்படுகிறது"**[166] என மா. வசந்தக்குமாரி வகைப்படுத்துவர்.

பேச்சு கருத்தாடல் முதலில் தோன்றிய மனித சமுதாயத்தில் முக்கியப் பங்கு ஆற்றிருக்க வேண்டும். ஆகவே, இதனை ‘நேர்முகப்புலப்பாடு’ எனக் கருத இடமுண்டு.

**எழுத்துக் கருத்தாடல்**

ஒருவர் பேசும் பேச்சானது வரிவடிவம் பெறும்நிலையில் எழுத்தாகின்றது. இதுவே எழுத்துக் கருத்தாடல் ஆகும். பேச்சுக் கருத்தாடலின் வளர்ச்சியே எழுத்துக் கருத்தாடல் ஆகும். இருவரோ, பலரோ சேர்ந்து தனது மனதில் தோன்றும் எண்ணங்களை எழுத்துக்களின் மூலம் கருத்துக்களாகப் பகிர்ந்து கொள்வது எழுத்துக் கருத்தாடல் ஆகும். எழுத்துக் கருத்தாடல் மொழி வரலாறு, சமுதாயத்தின் வளர்ச்சி, ஆகியவற்றை ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறது. இக்கருத்தாடல் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம் ஆகியவற்றை அழியாமல் காக்கிறது. எழுத்துக் கருத்தாடல் வரி வடிவம் சார்ந்தது. அவரவர் மொழிக்கேற்ப வடிவம் அமைத்துக் கொள்கிறது. இவை கதை, கட்டுரை, கவிதை, அறிவிப்பு, படங்கள், அட்டவணைகள் மூலம் வளர்ந்து வருகின்றன. எழுத்துக்களின் மூலம் பரிமாறிக்கொள்ளும் கருத்தாடல்கள் அச்சு இயந்திரம், கணினி, கைபேசி இவற்றின் தாக்கத்தால் தொடர் வளர்ச்சி நிலையை அடைகிறது. பேச்சுமொழியும், எழுத்து மொழியும் கருத்தாடலில் முக்கியப் பங்காற்றுகிறது.

**மொழிசார் கருத்தாடல்**

மனிதர்கள் தம்முள் தோன்றும் கருத்துக்களையும், எண்ணங்களையும் மொழி வழியே தெரிவிக்கின்றனர். மொழியின் வழியே கருத்தினை வெளிப்படுத்துவதே மொழிசார் கருத்தாடல் ஆகும். “அழைத்தல், அறிவுறுத்தல், எச்சரிக்கை செய்தல், கட்டளையிடுதல், தெரிவித்தல், மன்னித்தல், மன்னிப்புக் கேட்டல் ஆகியவை மொழிவழிச் செயலினைக் கொண்டு மொழி சார்ந்த கருத்தாடலுக்கு வருவன”[167] என மா. வசந்தகுமாரி மொழிச்சார் கருத்தாடலை வகுப்படுத்துவர்.

**மொழிசாராக் கருத்தாடல்**

மொழியினைப் பயன்படுத்தாமல் மனிதன் தனது எண்ணங்களையும், கருத்துக்களையும், வெளிப்படுத்துவதே மொழிசாராக் கருத்தாடலாகும். இவ்வகையான கருத்தாடல் உணர்வுகளின் மூலம் வெளிப்படும். மொழிசாராக் கருத்தாடலில் உணர்வுகளின் களன்களாக முகக்குறிப்புகள், கை, கால்களின் அசைவுகள் இடம் பெறுகின்றன.

> **"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
> **அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"** [168]

என மெய்ப்பாட்டைச் சுட்டுவர் தொல்காப்பியர். இவ்வகையான மெய்ப்பாடுகளின் வழியில் மனிதர்களின் எண்ணங்கள் கருத்தாடல்களாகப் பரிமாறப்படும். இவ்வாறான, கருத்தாடல் ஒரு குறிப்பிட்டச் சமூக மக்களின் கருத்தாடலாக இல்லாமல் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும்.

**ஒருவழிக் கருத்தாடல்**

எழுதுவதும், பேசுவதும் ஒரு வழிக் கருத்தாடல் ஆகும். இதனுள் கதை, கட்டுரை, சொற்பொழிவு ஆகியவைகள் அடங்கும். இதில், பேசுபவர் மற்றும் எழுதுபவர் செயல்படுவார்கள். கேட்பவரும், படிப்பவரும் படைப்புச் செயலில்லாமல் இருப்பார்கள். இக்கருத்தாடலை "ஊடாட்டமில்லாக் கருத்தாடல்"[169] என மா. வசந்தகுமாரி குறிப்பர்.

அகமாந்தர்களின் நெஞ்சோடு கிளத்தல் பாடல்களில் இவ்வகையான கருத்தாடல் அமைந்துள்ளது. பிறரிடம் செப்ப முடியாத ஏக்கம், துயரம், மனக்கிளர்ச்சி போன்றவற்றைத் தன் நெஞ்சிடமே உரைத்துக் கொள்வதாகும். பட்டினப்பாலையின் தலைவன் தன் நெஞ்சிடத்தே

> **"புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்**
> **முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
> **வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய,**
> **வாரேன் வாழிய, நெஞ்சே"** [170]

எனக் கூறிக் கொள்கிறான். வினையே ஆடவர்க்குயிர் என்பதையும், இல்லறம் நடத்த பொருள் தேவை என்பதனை நன்கு அறிந்தவன் தலைவன். இருப்பினும், காதலியைப்பிரிந்து செல்வது என்பது தலைவனால் முடியாத நிலையில் வேதனை அடைகிறான். கடமையா? காதலா? என்ற இருவேறு எண்ணங்கள் தலைவனைக் கவலையுறச் செய்கிறது. தன் நெஞ்சினை நோக்கி என் காதலியைத் துறந்து பொருள் தேடச் செல்லுதல் என்பது இயலாதச் செயல். 'நெஞ்சானது மறுமொழி பேசாது' என அறிந்து தலைவன் தன் நெஞ்சினையே முன்னிலைப்படுத்துகிறான். இந்நெறி ஒரு வழிக்கருத்தாடலாகும்.

**இருவழிக் கருத்தாடல்**

ஒருவர், எண்ணங்களைக் வெளிப்படுத்தவும் அதற்கு மறுமொழியாக மற்றவர் அதற்கான பதிலினை உரைப்பதும் இருவழிக்கருத்தாடல் எனப்படும். "கடிதப்போக்குவரத்து, கலந்துரையாடல், பட்டிமன்றம், பேட்டி, வாய்மொழித் தேர்வு ஆகிய கருத்தாடல் நிகழ்வுகள் இருவழிக்கருத்தாடலைக் காண்பிக்கின்றன"[171] என்பர் நா. இளங்கோ.

பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. வினாவிற்கேற்ப விடைக்கூறுவது, ஒருவர் கூறிய கருத்திற்கேற்ப மறுமொழி உரைப்பதும் இவற்றில் அடங்கும். கலித்தொகை தலைவன், தோழியிடத்தே

**தலைவன் எதிர்சென்று, அவனை நோக்கித் தோழி வினாவுதல்**

எல்லா நீ முன்னத்தான் ஒன்று குறித்தாய் போல் காட்டினை:

நின்னின் விடாஅ நிழல் போல் திரிதருவாய்

என், நீ பெறாதது? ஈது என்?

**தலைவன்**

சொல்லின், மறாதீவாள் மன்னோ, இவள்?

செறாஅது ஈதல், இரந்தார்க்கு ஒன்று, ஆற்றாது வாழ்தலின்

சாதலும் கூடுமாம் மற்று.

**தோழி**

இவள் தந்தை காதலின் பார்க்கும் கொடுக்கும், விழுப்பொருள்:
யாது நீ வேண்டியது?

**தலைவன்**

பேதாய் பொருள் வேண்டும் புன் கண்மை ஈண்டு இல்லை யாழ
மருளி மடநோக்கின் நின் தோழி என்னை
அருளீயல் வேண்டுவல், யான்”[172]

உரையாடிக் கொள்கின்றனர். தலைவன் தலைவியை நேசிக்கிறான். ஆகவே, தோழியின் உதவியை நாடுகின்றான். அதற்கு தோழி தலைவனிடம் உமக்கு யாது வேண்டும் நீ பெறாதது தான் யாது? அதனை இதுவென்று கூறுவாயாக எனக் கூறினாள். அதற்கு தலைவன் தலைவியால் நான் இரந்து வேண்டியும் தலைவியின் முகம் மாறாது, அவள் தாராது போனால் யான் உயிர் வாழ்வதைவிட உயிரைத் துறப்பதே மேல் என உரைத்தான். மறுமொழியாக தோழி தலைவியின் தந்தையானவர் இரப்பாருக்கு வேண்டிய பொருளினைத் தருபவர் நீவீர் வேண்டியதைக் கேள் என தோழி கூறுகிறாள். இந்நெறி இருவழிக் கருத்தாடலாகும்.

**நெஞ்சொடு உரைத்தல்**

மனிதர்களுக்கு உள்ளத்தில் உணர்வுகள் மிகுதி. தமது உள்ளத்தில் தோன்றும் அகஉணர்வுகளை வெளிப்படையாகப் பிறருக்கு உரைக்கும் பழக்கம் சமுதாயத்தில் மிகக் குறைவு. அகமாந்தர்கள் தம் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை தன் உள்ளத்திடமே உரைத்துக் கொள்வதாகப் புலவர்கள் பாடல்கள் இயற்றினர். இதனை, நெஞ்சொடு உரைத்தல் என்னும் துறைப்பகுப்பில் அடங்குவர்.

நெஞ்சு என்னும் சொல்லுக்கு, “மனம், இதயம், மார்பு, நடு, தைரியம், தின்னக்கம், தொண்டை”[173] என்னும் 7 பொருளினை சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி கூறுகின்றது.

**“நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வடை யதுபோல்**

**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரிய வாக**
**உவம வாயிற் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி"[174]**

என்னும் தொல்காப்பிய சூத்திரத்திற்கு "துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலையினையுடையக் காமத்தைக் குறித்த மரபு இடையீடுபடுதலான் மெய்ப்பிரிவு எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருந்திய உறுப்புடையது போலவும், உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்ந்து கூறுவது"[175] என்பது இளம்பூரணர் உரை.

தொல்காப்பியர் நெஞ்சொடு உரைத்தல் என்பதனை "நீடு நினைந்த இரங்கல்" எனக் குறிப்பர். நெஞ்சொடு உரைத்தல் என்பது ஒருவர் தமது உள்ளத்தில் எழும் கருத்துக்களை தம் நெஞ்சுக்குக் கூறுவது போன்று தாமே கூறிக்கொள்வதனைத் தொல்காப்பியர் 'ஒருபாற்கிளவி' எனக்குறிப்பர்.

மனக்கிளர்ச்சியால் உணர்வுகள் எழுகின்றன. இது ஆங்கிலத்தில் எமோஷன் (Emotion) எனப்படுகிறது. இதன் பொருள் "கிளர்ச்சி" அல்லது "பதற்றம்"[176] என மெரியம் வெப்ஸ்டர் ஆங்கில அகராதி பொருள் தருகிறது.

தலைவன் தலைவியின் நெஞ்சத்தில் தோன்றும் அகஉணர்வுகள் களவுக் காலத்திலும், கற்புக் காலத்திலும் வேறுபாடு உடையதாகிறது.

'எஞ்ஞான்றும் காதலர் இருவர் கருத்தொருமித்து, ஆதரவு பட்டதே இன்பம்' என்பது ஔவையின் கருத்து. அகவுணர்வு இயல்பானது. காதற்பருவத்தில் ஆணும், பெணும் ஒருவரையொருவர் நோக்கும் நிலையில் உள்ளக் கிளர்ச்சியினைக் காதல் என்கிறோம்.

**"காதல் காதல் காதல்**
**காதல் காதல் காதல் காதல் போயிற்**
**சாதல் சாதல் சாதல்"[177]**

எனப் பாடுவர் பாரதி. அகஇலக்கியங்கள் காதலையே முதன்மையானதாகச் கொண்டு திகழ்கிறது.

களவு வாழ்வில் தலைவனும், தலைவியும் எதிர்ப்பட்டு காதல் வாழ்வில் ஈடுபடுவர். தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் சந்தித்த நாள் முதல் திருமணநாள் வரையுள்ள வாழ்வினைக் களவுவாழ்வு எனவும், திருமணத்திற்குப் பின்னர் வாழும் வாழ்வினை கற்புவாழ்வு எனவும் வரையறை செய்து உள்ளது அகஇலக்கணங்கள். அகவுணர்வுகளைத் தலைவன் தலைவி கூற்றாக பல்வேறு உத்திகளால் புலவர்கள் பாடல்களாக இயற்றி உள்ளனர். நெஞ்சொடு கிளத்தல் துறையில் ஓதலாந்தையார் 28 பாடல்களைப் பாடியுள்ளார்.

**களவில் தலைவன் நெஞ்சுக்கு உரைத்தல்**

சங்க இலக்கிய அகப்பாடல்களில் களவு வாழ்வில் பின் நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல் 14 இடங்களிலும், புணர நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல் 5 இடங்களிலும், புணர்ந்து நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல் 19 இடங்களிலும், அல்லக்குறிப்பட்டு நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல் 11 இடங்களிலும், உடன்போகும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல் 2 இடங்களிலும் என 51 இடங்களில் தலைவன் நெஞ்சுக்கு உரைத்ததாக அமைந்த கூற்றுகள் இடம்பெறுகின்றன.

**பின் நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 77, 80, 140, 190, 204, 209, 265, 356 ஆகிய எட்டுப்பாடல்களிலும், குறுந்தொகையில் 29, 165, 173, 182, 199, 276 ஆகிய ஆறுபாடல்களிலும் எனப் பதினான்கு பாடல்கள் பின் நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்ததாக அமைந்துள்ளன.

> **"மகிழ்ந்ததன் தலையும் நற உண்டாங்கு,**
> **விழைந்ததன் தலையும் நீ வெய்துற்றனை -**
> **இருங்கரை நின்ற உப்புஒய் சகடம்**
> **பெரும்பெயல் தலைய வீஇந்தாங்கு, இவள்**
> **இரும்பல் கூந்தல், இயல் அணி கண்டே"[178]**

எனப் பாடுவர் பரணர். தலைவன் நாண் அழிந்த பின்னும் தலைவியை விரும்புவது என்பது கள் உண்பார், தன் முழு உணர்வினையும் இழந்த போதிலும், மீண்டும் மதுவையே அடையும் வேட்கையுடையவராக இருப்பதைப் போல, தலைவியை நீ விரும்புகின்றாய் நெஞ்சே! இச்செயல் உனக்குச் சரியா? எனத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்துக் கொள்வதாகப் பாடுவர் பரணர்.

**"உப்பியல் பாவை உறை உற்றது போல**
**உக்குவிடும் என் உயிர்"**[179]

எனக் கலித்தொகை உரைக்கிறது. தலைவி மீது கொண்ட காமத்தினால் நாணழிந்த தலைவனும், கடத்தற்கரிய மணற்பரப்பில் சகடத்தில் ஏற்றப்பட்ட உப்பு பெருமழையால் சிறுகச் சிறுகக் கரைந்து அழிந்து பின் இல்லாமல் போவது போலவும் என்பது தலைவனின் உயிர் இருக்க உள்ளம் சிறுக சிறுக அழியும் என்பதை விளக்குகிறார் புலவர்.

**"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்**
**வெளிப்படும் தோறும் இனிது"**[180]

எனும் வள்ளுவரின் குறள்வழி, காமத்தின் ஆற்றலை உணர்ந்து கொள்ள இயலும்.

**புணர நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

குறுந்தொகையில் 2 எண்ணுள்ள ஒரு பாடலும், ஐங்குறுநூற்றில் 174, 259, 281, 288 ஆகிய நான்குப் பாடல்களும் என **ஐந்து** பாடல்கள் புணர நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்ததாக அமைந்துள்ளன.

தினைப்புனத்தில் கிளிகள் மேய்வதனைக் காக்கத் தலைவியைக் காவலுக்கு அனுப்பியதை அறிந்த தலைவன் நெஞ்சிற்குக் கூறியதாக

**"நன்றே செய்த உதவி - நன்று தெரிந்து**
**யாம் எவன் செய்குவம்? நெஞ்சே - காமர்**
**மெல் இயல் கொடிச்சி காப்பப்**
**பல் குரல் ஏனல் பாத்தரும் கிளியே"**[181]

எனக் கபிலர் பாடுவர்.

நெஞ்சே! தினையை உண்ணவரும் கிளிகளுக்கு நான் எவ்வகையிலும் நன்மையைச் செய்தவனல்லன். கிளிகள் பயன் கருதாது செய்த உதவிக்கு, அக்கிளிகளுக்கு என்ன உதவிச் செய்தாலும், கிளிகள் செய்த உதவிக்கு ஈடாகாது. தலைவன், தலைவியுடன் புணர கிளிகள் உதவி செய்தன என்பதே புலவரின் பாடமாகும்.

**புணர்ந்து நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 8, 39, 44, 155 ஆகிய நான்கு பாடல்களும், குறுந்தொகையில் 62, 70, 116, 137, 142, 312 ஆகிய ஆறுபாடல்களும், ஐங்குறுநூற்றில் 197, 299 ஆகிய இரண்டு பாடல்களும், அகநானூற்றில் 142, 152, 162, 198, 208, 230, 262 ஆகிய ஏழு பாடல்களும் எனப் பத்தொன்பது பாடல்கள் புணர்ந்து நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்ததாக அமைந்துள்ளன.

இயற்கைப் புணர்ச்சி தலைவன் தலைவியின் கூந்தலாகிய மெல்லணையில் துயின்றமை நினைத்து

**"யான் நயந்து உரைவோள், தேம்பாய் கூந்தல்,**
**வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை**
**நுண்மணல் அறல் வார்ந்தன்ன,**
**நல்நெறியவ்வே, நறுந் தண்ணியவே"** [182]

தலைவன் கூற்றாகப் பாடுவர் இளங்கீரனார். தலைவன் தலைவியைக் கண்டபொழுது, கூந்தலின் காட்சியின்பம் கருதி 'நல்நெறிய' என்றும், நெருங்கிய வழி, பின்னின்று நுகர்ந்து பெற்ற இன்பத்தினை நினைத்து 'நறிய' என்றும், கலந்தவழிப் பெற்ற ஊற்றின்பம் நினைத்து 'தண்ணிய' என்றும் பாராட்டினான். இவ்வாறாக, புணர்ந்து நீங்கும் தலைவன் தலைவியை எண்ணி தன் மனதிடம் சொல்லி மகிழ்கின்றான்.

**"தண்ணிய கமழும் தாழ் இருங் கூந்தல்"**[183]

என நற்றிணை உரைப்பதும் ஈண்டு ஒப்பத்தகுந்ததாகும்.

**அல்ல குறிப்பட்டு நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

தலைவன், தலைவியைக் காணக் குறித்தக் குறித்தவறும் நிலையில் தலைவன் ஏமாற்றம் அடைவதே அல்லகுறி என்பதாகும். குறுந்தொகையில் 120, 128 ஆகிய இரண்டு பாடல்களும், அகநானூற்றில் 62,126, 212, 258, 280, 322, 338, 342, 372 ஆகிய ஒன்பது பாடல்களும் எனப் பதினொரு பாடல்கள் அல்ல குறிப்பட்டு நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்ததாக அமைந்துள்ளன.

இரவுக்குறிக்கண் இயற்கையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தலைவன் செய்தக் குறி என நினைத்துத் தலைவியும், தோழியும் குறியிடத்துத் தலைவனைக் காணா நிலையில் வருத்தம் மிகுதியில் இல்லம் சேர்வர். பின்னர் தலைவன் குறி செய்ததை இயற்கை நிகழ்ச்சி எனக் கருதி தலைவியும் தோழியும் வராமல் இருப்பர். இத்தலைவனின் உணர்வினை,

> **"வருந்தினம் மாதோ எனினும், அ/து ஒல்லாய்,**
> **இரும்பணைத் தொடுத்த பலர்ஆடு ஊசல்**
> **ஊர்ந்து இழி, கயிற்றின், செலவர வருந்தி"**[184]

எனப்பாடுவர் பரணர்.

தலைவியைக் காணாததால் கிளையில் கட்டப்பெற்ற ஊசலினது ஏறியும், இறங்கியும் ஆடும் கயிற்றினைப் போல் தலைவனின் நிலை இருந்தாகப் பாடுவர் புலவர். இது தலைவனின் அன்பு மிகுதியை எடுத்துரைக்கும் குறிப்புரையாகும்.

**உடன் போகும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 384 எண்ணுள்ள ஒரு பாடலும், அகநானூற்றில் 121 எண்ணுள்ள ஒரு பாடலும் என இரண்டு பாடல்கள் உடன் போகும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்ததாக அமைந்துள்ளன.

தலைவன் தலைவியைக் 'கொண்டுதலைக் கழிகையில்' பரற்கற்கள் மிகுந்த சுரத்தின் வழியே செல்லும் பொழுது தலைவியின் ஒரு கால் வேங்கை மலர்மீது பயின்றதை,

> **"பைம் பறப் புறவின் செங் காற் சேவல்**
> **களரி ஓங்கிய கவை முடக் கள்ளி**
> **முளரி அம் குடம்பை ஈன்று, இளைப்பட்ட**

**உயவு நடைப் பேடை உணீஇய, மன்னர்**
**முனை கவர் முது பாழ் உகு நெற் பெறூஉம்**
**அரண் இல் சேய் நாட்டு அதர் இடை, மலர்ந்த**
**நல் நாள் வேங்கைப் பொன் மருள் புதுப் பூப்**
**பரந்தன நடக்க, யாம் கண்டனம் மாதோ:**
**காண் இனி வாழி - என் நெஞ்சே - நாண் விட்டு**
**அருந் துயர் உழந்த காலை**
**மருந்து எனப்படூஉம் மடவோளையே"[185]**

எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ தலைவன் கூற்றாகப் பாடுவர். புறா இறைத்தேடிச் செல்கிறது. குழந்தைகளைக் காப்பது நோக்கம். இப்பண்பு தலைவனுக்குரியதாக உள்ளது. ஆனால், அவன் செல்லும் வழி துன்பம் தரும் பாலை வழியாகும். அவ்வழியில் மலர்ந்த வேங்கைப்பூ பரவி மலர்ந்து உள்ளது. இவற்றில் தலைவி பயில்வதாக நினைத்து இன்பம் எய்துகிறான் தலைவன்.

மேலும், பார்ப்பை ஈன்ற பேடை உண்ணுதற்குப் புறவின் சேவல் முதுபாழில் விளைந்த செந்நெல்லைக் வழங்கும் என்பது தலைவியைக் 'கொண்டு தலைக் கழிந்து' இல்லறம் நடத்தும் தலைவன் பாங்கினை உள்ளுறையாக உணர்த்துவர் புலவர்.

புறா கள்ளியிற் கூடு சமைத்தலை:

**"பொறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை**
**பொரிகாற் கள்ளி விரிகாய் அம் கவட்டுத்**
**தயங்க இருந்து புலம்பக் கூஉம்**
**அருஞ்சுர வைப்பின் கானம்"[186]**

எனக் குறுந்தொகை உணர்த்தும்.

**"இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு,**
**நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து"[187]**

என வள்ளுவம் உரைக்கும்வழி இன்பத்தின் ஊற்றாயும், நெறியாயும் தலைவியே உள்ளாள் என்பது நோக்குதற்குரியதாகும்.

**களவில் தலைவி நெஞ்சுக்கு உரைத்தல்**

இருவகைக் குறியாகிய பகற்குறியும், இரவுக்குறியும் பிழையுற்றக் காலத்தும் தலைவன் வருகையைக் காணாத நிலையிலும், பொழுது வீணே கழியும் நிலையிலும் என பத்துவகையான சூழ்நிலைகளில் தலைவி வெளிப்படையாகவும், நெஞ்சொடு உரைத்தல் போலவும் கூற்று நிகழ்வதை

**"இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்துங்**
**காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்**
**தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையிற்**
**காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி**
**வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்"**[188]

எனக் குறிப்பர் தொல்காப்பியர்.

நற்றிணையில் 187, 196, 249 என்ற மூன்று பாடல்களும், குறுந்தொகையில் 305, 401 என்ற இரண்டு பாடல்களும், ஐங்குறுநூற்றில் 295 - வது பாடலும் களவு வாழ்வில் தலைவி நெஞ்சிற்கு உரைத்த உரையாடல்களாக ஆறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**பகற்குறியில் பிரிந்த தலைவனை நினைத்து தலைவி உரைத்தல்**

தலைமகன், பகற்குறி வந்து மீள்வானின் செலவு நோக்கி,

**"நெய்தல் கூம்ப, நிழல் குணக்கு ஒழுக,**
**கல் சேர் மண்டிலம் சிவந்து நிலம் தணிய,**
**பல் பூங் கானலும் அல்கின்றன்றே**
**இன மணி ஒலிப்ப, பொழுது படப் பூட்டி,**
**மெய்ம் மலி காமத்து யாம் தொழுது ஒழிய,**
**தேரும் செல் புறம் மறையும் ஊரொடு**
**யாங்கு ஆவதுகொல் தானே - தேம் பட**
**ஊது வண்டு இமிரும் கோதை மார்பின்**
**மின் இவர் கொடும் பூண், கொண்கனொடு**
**இன் நகை மேவி, நாம் ஆடிய பொழிலே?"** [189]

எனத் தலைவி கூற்றாகப் பாடுவர் ஔவையார்.

அந்திமாலையும், கடற்கரைச் சோலையும் தலைவிக்கு வெறுப்பை உருவாக்கின. கண்ணிற்படாமல் தலைவனின் தேரும் மறைந்தது. தன் தலைவனுடன் இணைந்து வாழவியலாத இடத்து இவ்வூர் தனக்கு எத்தகையதாக இருக்குமோ என துன்பம் அடைகிறாள். தாம் அவனை முயங்கியிருந்த சோலையும் இனி, நமக்கு எவ்வாறு இருக்குமோ எனத் தலைவி நினைக்கிறாள். "பிரிந்தவழிக் கலங்கினும்"[190] எனத் தொல்காப்பியரின் தலைவிக்கூற்றுச் சூத்திரம் ஈண்டு ஒப்புதற்குரியதாகும்.

வரைவிடை வைத்துப் பிரிந்து நீடித்த தலைவனுடன் தன் நெஞ்சம் சென்றதை

**"வருவதுகொல்லோ தானே - வாராது**
**அவண் உறை மேவலின், அமைவது கொல்லோ -**
**புனவர் கொள்ளியின் புகல் வரும் மஞ்ஞை,**
**இருவி இருந்த குருவி வருந்துறப்**
**பந்து ஆடு மகளிரின் படர்தரும்**
**குன்று கெழு நாடனொடு சென்ற என் நெஞ்சே?"[191]**

தலைவிக் கூற்றாகப் பாடுவர் கபிலர்.

தலைவன், வரைவை எதிர்கொண்டு பொருள் ஈட்டல் அகமரபாகும். அவ்வாறு பொருள் ஈட்டச் சென்ற தலைவனுடன் நெஞ்சமும் உடன் சென்றது என்கிறாள் தலைவி. எனது நெஞ்சமானது வருமா? அன்று வாராதா? என ஐயம் கொள்கிறாள். எனக்குத் துணையாக இருக்க வேண்டிய நெஞ்சம் என்னை கைவிட்டுத் துணைதேடிச் சென்றது என்கிறாள். மேலும், என் நெஞ்சம் துணையாதற்கு வருதல் அரிது என்றும் உரைக்கிறாள்.

**கற்பில் தலைவன் நெஞ்சுக்கு உரைத்தல்**

களவு வாழ்வில் அகமாந்தர்கள், இல்லற வாழ்வில் கிழவன், கிழத்தியாக வாழும் வாழ்வே கற்பு வாழ்வாகும்.

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"[192]**

எனத் தொல்காப்பியம் உணர்த்தும்.

**பிரிவு வலித்த தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 3, 16, 52, 62, 126, 137, 141, 205, 298, 308, 312, 366 ஆகிய பன்னிரெண்டு பாடல்களும், குறுந்தொகையில் 63, 71, 151, 168, 256, 267, 274, 347, 376 ஆகிய ஒன்பது பாடல்களும், அகநானூற்றில் 3, 5, 43, 51, 77, 131, 149, 167, 191, 193, 199, 225, 239, 245, 327, 335,353, 377, 379 ஆகிய பத்தொன்பது பாடல்களும், பட்டினப்பாலையில் ஒரு பாடலும் என 41 பாடல்கள் பிரிவு வலித்த தலைவன் நெஞ்சிற்கு உரைத்த வகைப்பாட்டில் காணப்படுகின்றன.

அன்பும், மடனும், சாயலும் நிறைந்தத் தலைவியை,

**"அன்பும், மடனும் சாயலும், இயல்பும்,**
**என்பு நெகிழ்க்கும் கிளவியும், பிறவும்**
**ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி,**
**இன்றே இவணம் ஆகி, நாளை,**
**புதல்இவர் ஆடுஅமை, தும்பி குயின்ற**
**அகலா அம்துளை, கோடை முகத்தலின்,**
**நீர்க்குஇயங்கு இனநிரைப் பின்றை வார்கோல்**
**ஆய்க்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்,**
**தேக்குஅமல் சோலைக் கடறுஓங்கு அருஞ்சுரத்து,**
**யாத்த தூணித் தலைதிறந் தவைபோல்,**
**பூத்த இருப்பைக் குழைபொதி குவிகுணர்**
**கழல்துளை முத்தின் செந்நிலத்து உதிர,**
**மழைதுளி மறந்த அம்குடிச் சீறூர்ச்**
**சேக்குவம் கொல்லோ - நெஞ்சே - பூப்புனை**
**புயல்என ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்**
**செறிதொடி முன்கை, நம் காதலி**
**அறிவுஅஞர் நோக்கமும் புலவியும் நினைந்தே"**[193]

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் இளங்கீரனார்.

அன்பு, மடன், மென்மை, ஒழுக்கம் என்ற பண்புகளைக் கொண்ட தலைவியுடன் முயங்கியிருக்கின்றேன். ஆயின், நாளையோ நீரில்லாமல் இருக்கும் கடும் வெயிலினை உடைய பாலை வழியினைக் கடக்க வேண்டுமே! இல்லத்தில்,

தலைவியும் என்னைப் பிரிந்து வேதனையுறுவாள், நானும் அன்பு காதலியை விடுத்துக் காட்டில் துன்பப்படுவேன் என்பது தலைவியின் உட்கிடக்கையாகும்.

**"மருந்து எனின் மருந்தே வைப்பு எனின் வைப்பே-**
**அரும்பிய கணங்கின் அம்பகட்டு இளமுலை**
**பெருந்தோள், நுணுகிய நுசுப்பின்,**
**கல்கெழு கானவர் நல்குறு மகளே"**[194]

என்னும் கருவூர் ஓதஞானி பாடலும் ஈண்டு ஒப்பத்தகுந்ததாகும்.

**இடைச்சுரத்தில் தலைவனின் நெஞ்சுக் கூற்று**

நற்றிணையில் 103, 105, 113, 157, 284, 346, 352 ஆகிய ஏழு பாடல்களும், குறுந்தொகையில் 56 எண்ணுள்ள ஒரு பாடலும், அகநானூற்றில் 19, 21, 33, 41, 47, 57, 79, 83, 109, 123, 169, 181, 279, 287, 289, 291, 297, 299, 339, 343, 361, 365, 371, 373, 381ஆகிய இருபத்தைந்து பாடல்களும் என 33 பாடல்கள் இடைச்சுரத்து நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்த வகைப்பாட்டில் காணப்படுகிறது.

**"பொருள்வயிற் பிரிந்து போகா" நின்ற தலைமகனின்**
**"அணிவளை முன்கை, ஆய்இதழ் மடந்தை**
**வார்முலை முற்றத்து நூல் இடை விலங்கினும்,**
**கவ்வுப்புலந்து உறையும் கழிபெருங் காமத்து**
**இன்புறு நுகர்ச்சியின் சிறந்தது ஒன்றுஇல்" என**
**அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்,**
**பொருள்புரி வுண்ட மருளி நெஞ்சே"**[195]

என தலைவன் கூற்றாகப் பாடுவர் இளங்கீரனார்.

நெஞ்சே! தலைவியுடன் இருக்க விரும்புகிறேன். ஆயினும், பொருள் கருதி பிரிய நேர்ந்தது. உள்ளமோ அவளை தழுவ எண்ணுகிறது என் செய்வேன் யான். பொருள் ஈட்டப்பெரும் மலைகளையும், வெப்பப் பறைகளையுடன் கடந்து வந்திருக்கிறேன். இருப்பினும், இனிய குளிர்ச்சிப் பொருந்திய தோளினை முயங்க வேண்டுமென எண்ணுகிறாய். இந்நிலையினை நீ மறந்து எனக்கு துணை செய்ய வேண்டுமென உரைத்துக் கொள்கிறான் தலைவன். இங்குப் புலவனின்

பாடமாவது யாதெனின், கருத்தொறுமைமிக்க அகமாந்தர்களைப் புலப்படுத்திக் காட்டுதல் ஆகும்.

மேலும் 'தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போல் காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண்'[196] என்னும் திருத்தக்கதேவரின் உவமை நலம் ஈண்டு ஒப்பதற்குரியதாகும்.

**பாசறைத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 341 எண்ணுள்ள ஒரு பாடலும், ஐங்குறுநூறு 441-450 ஆகிய பத்து பாடல்களும், அகநானூறு 24, 84, 164, 174, 214, 304 ஆகிய ஆறு பாடல்களும் என 17 பாடல்கள் பாசறைத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்த வகைப்பாட்டிற்குரியதாகத் திகழ்கிறது.

தலைவன் கூறிச் சென்ற கார்பருவம் வந்தும் தலைவன் வரவில்லையே எனத் தலைவி தூது உரைக்கிறாள். அதனைக் கேட்டத் தலைவன்

**"ஐய ஆயின, செய்யோள் கிளவி**
**கார் நாள் உருமொடு கையறப் பிரிந்தென,**
**நோய் நன்கு செய்தன எமக்கே**
**யாம் உறு துயரம் அவள் அறியினோ நன்றே"[197]**

எனத் தன் நெஞ்சிற்கு உரைப்பதாகப் பேயனார் பாடி உள்ளார்.

நெஞ்சமே! கார்காலம் வந்தும் இல்லம் திரும்பமுடியவில்லை. மேலும், தலைவி அனுப்பிய தூதானது இடியோடும் மழையோடும் தம் மனதிற்குத் துன்பத்தினை நல்கியது. இந்நிலையிலும் தலைவியின் மீது கொண்டுள்ள அன்பு குறையவில்லை. இல்லம் திரும்பாமைக்குக் காரணம் வினை முடியாமையே. இதனை யார் சென்று தலைவியிடம் தெரியப்படுத்துவார் எனத் தன் நெஞ்சிடம் உரைத்துக் கொள்வதாகப் பாடுவர் பேயனார். புலவரின் கருத்தாவது அகத்தைப் போற்றுவதே ஆகும்.

**வினை முற்றியத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 169 எண்ணுள்ள ஒரு பாடலும், குறுந்தொகையில் 131 எண்ணுள்ள ஒரு பாடலும், அகநானூற்றில் 87, 93, 351 ஆகிய மூன்று

பாடல்களும், ஐங்குறுநூற்றில் 94, 365 ஆகிய இரண்டு பாடல்களும் என 7 பாடல்கள் வினை முற்றியத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்த வகைப்பாட்டிற்கு உடையதாகும்.

தலைவன் தலைவியைப் பிரியும் நிலையில் வினை முடிந்து உடனே திரும்புகின்றேன் எனக் கூறிச் சென்றான். சென்ற வினை முடிந்தது. உடனே, காண வேண்டுமென்ற எண்ணம் தலைவனுக்கு உண்டானது.

**"ஆடு அமை புரையும் வனப்பின் பணைத் தோட்**
**பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே**
**நெடுஞ்சேண் ஆர் இடையதுவே நெஞ்சே,**
**ஈரம்பட்ட செவ்விப் பைம் புனத்து**
**ஓர்ஏர் உழவன் போல**
**பெருவிதுப்பு உற்றன்றால், நோகோ யானே"[198]**

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் ஒரேருவழவனார்.

தலைவன், தலைவியின் கண்களையும், தோள்களையும் நினைக்கின்றான். வானம் பார்த்த பூமியில் வாழும் உழவர்கள் உழவுக்கு மழையைப் பெரிதும் எதிர்பார்த்திருப்பர். மழை எப்பொழுது வரும் என ஏங்கிருக்கும் போது மழை பெய்தவுடன் ஓரேருழவர் நிலத்தின் ஈரம் காய்வதற்குள் எவ்வளவு விரைந்து நிலத்தினை உழுவாரோ, இவ்வாறே நானும் இருக்கிறேன் என்கிறான். இந்த ஒரேருவழவனாரின் பாடல் அகத்தலைவனின் திண்ணிய உணர்வை வெளிக்காட்டுக்கின்றன.

**வாயில் வேண்டிப் பெற்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல்**

நற்றிணையில் 120 எண்ணுள்ள ஒரு பாடலும், ஐங்குறுநூற்றில் 97, 99, 188 ஆகிய மூன்று பாடல்களும் என 4 பாடல்கள் வாயில் வேண்டிப் பெற்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்த வகைப்பாட்டிற்கு உரியதாகும்.

பரத்தமை ஒழுக்கம் இல்லாதிருந்த தலைவனிடம் உமக்குப் பரத்தமை உள்ளதென்று சினந்து ஊடல் கொண்டாள் தலைவி. அவளின் ஊடலை நீக்கி அவளுடன் புணர்ந்தான் தலைவன். அப்புணர்ச்சியின் பின்

**"பகன்றை வால் மலர் மிடைந்த கோட்டைக்**
**கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்,**
**பொய்கை, ஊரன் மகள், இவள்**
**பொய்கைப் பூவினும் நறுந் தண்ணியளே"[199]**

எனத் தலைவன் கூற்றாகப்பாடுவர் ஓரம்போகியார்.

தலைவியானவள் பொய்கையில் மலர்ந்த ஆம்பல் மலரினைவிடத் தண்மையும், நறுமணமும் உடையவளாக உள்ளாள் என தலைவியை தன்னுள்ளே புகழ்கிறான் தலைவன்.

"பரத்தையருக்கு வாழ்வளிக்கும் வகையில் ஆடல், பாடல், அழகு என்ற கலைத் துறைகள் சிறப்பாக அமைந்தமையின் அவற்றை ஆதரித்து அளிக்கு முகத்தான் தலைமக்கள் தொடர்பு உண்டாதலின் அக்காலச் சூழ்நிலை பரத்தையர் சேறலை இழுக்கென விலக்கவில்லை"[200] என்பார் சு. துரைசாமிப்பிள்ளை.

இருப்பினும், தலைவன் வாயில் மாந்தர்களின் துணையோடு தலைவியின் ஊடலை தவிர்த்துத் தலைவனை மன்னிக்கும் நிலையில் உள்ளவளாகத் தலைவித் திகழ்ந்தாள் எனப் புலவர்கள் சுட்டி உள்ளனர். பரத்தையர் ஒழுக்கத்தினை இழுக்கெனக் கருதியதாகப் புலப்படவில்லை.

**கற்பில் தலைவி நெஞ்சுக்கு உரைத்தல்**

குறுந்தொகையில் 91, 157, 306 என்ற மூன்று பாடல்களும், ஐங்குறுநூற்றில் 12, 318, 320 என்ற மூன்று பாடல்களும், அகநானூற்றில் 303 வது பாடலும் கற்பு வாழ்வில் தலைவி நெஞ்சிற்கு உரைத்த உரையாடல்களாக் ஏழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள்,

**"புலம் கந்தாக இரவலர் செலினே,**
**வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்**
**உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்**
**நிரைபறைக் குழீஇயினம் காலைப் போகி,**
**முடங்குபுறச் செந்நெல் தரீஇயர், ஓராங்கு,**
**இரைதேர் கொட்பின ஆகி, பொழுதுபடப்**

**படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு,**
**வருவர்என்று உணர்ந்த, மடம்கெழு, நெஞ்சம்"**[201]

எனத் தலைவிக் கூற்றாக பாடுவர் ஔவையார்.

வள்ளல் பாரி, தம்மிடம் பரிசில் வேண்டுவோருக்கு களிற்றையும், அணிகலனையும், கொடுத்தலைக் கடமையாக கொண்டு வாழ்பவன். இத்தகைய பரம்பு மலையில் வாழும் குருவிக் கூட்டம் காலையில் பறந்து சென்று முற்றிய நெற்கதிர்களைத் தேடிக் கதிரவன் மறையும் துன்பம் தரும் நேரமான மாலையில் இல்லம் தேடி வரும், அதுபோல தம் தலைவரும் பொருளீட்டிக் கொண்டு குறித்தக் காலத்து மீண்டு தவறாது வருவார் எனத் தலைவி நெஞ்சிற்குக் கூறினாள் என்பது கருத்தாகும். ஔவையார் காட்டியத் தலைவி இல்லறத்தில் இனிமை என்பது தலைவனுடன் வாழ்தல் என்பதே பொருளாக உள்ளதை உணர்ந்து கொள்ள இயலுகிறது.

தலைவி, தலைவன் பிரிந்துழிச் சுரத்து கொடுமை நினைத்து

**"முள் அரை இலவத்து ஒள் இணர் வான்பூ**
**முழங்கு அழல் அசைவளி எடுப்ப, வானத்து**
**உருமுப் படு கனலின் இரு நிலத்து உறைக்கும்**
**கவலை அருஞ்சுரம் போயினர் -**
**தவல் இல் அரு நோய் தலைத்தந்தோரே"**[202]

எனப்பாடுவர் ஓதலாந்தையார்.

காற்றினால் கீழே உதிரும் வெண்ணிற இலவம் பூக்களை இடிக்கும் இடையே தோன்றி நிலத்திலே உதிரும் தீப்பொறிகளோடு உவமித்துக் கூறப்படுகிறது. இத்தகைய இயல்புடைய சுரமானது கடப்பதற்குக் கடுமையான வழியில் தலைவன் செல்வதனை நினைத்துத் தலைவி வேதனையுறுகிறாள். தனிமை துயரும் தலைவிக்கு துன்பத்தினை நல்கிறது என்பதை ‘தவல்இல் அருநோய் தலைத் தந்தோர்’ என்றாள்.

சங்க இலக்கியப் பாடல்களில் தலைவி நெஞ்சிற்கு உரைத்த கூற்றுகளைவிட தலைவன் நெஞ்சிற்கு உரைத்தக் கூற்றுப் பாடல்களே மிகுதியாகக் காணப்படுகிறது.

இதன்வழி தலைவியானவள் தன் உணர்வினைத் தோழியிடம் கூறும் நிலையில் தோழியானவள் தன் அறிவாற்றலினாலும், திறமையாலும் ஊகித்து அறிந்து தெளிவான முடிவினை எடுத்துத் தலைவிக்கு ஆறுதலாக இருப்பதனால் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறும் கூற்றுகள் குறைவாகக் காணப்படுகின்றன. ஆயின், தலைவன் தன் உணர்வினை பாங்கனுக்குக் கூறும் நிலையில் தோழியைப் போன்று அறிவுரை வழங்குபவனாகப் பாங்கன் வெளிப்படவில்லை. ஆயின் உடன் இருக்கிறான்.

**தொகுப்புரை**

மக்களின் வாழ்வியல் நெறியை அகம், புறம் எனச் சான்றோர் வகுத்தனர். காதலையும் வீரத்தையும் சங்கப் பனுவல்கள் நுண்ணதின் உரைத்து உள்ளன. அகத்தை மிகுதியும் போற்றி உள்ளது.

சங்கப்புலவர்களின் எண்ணிக்கையிலும், அகப்புறப் பாடல்களின் எண்ணிக்கையிலும் உரையாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை காணப்படுகிறது. இருப்பினும் புறப்பாடல்களை விட அகப்பாடல்கள் மிகுதி. பெண்பாற் புலவர்களிடையே காணலாகும் வேற்றுமைக்கு அடைமொழிகள் காரணமாக உள்ளதை உணரமுடிகிறது.

சங்க இலக்கிய அகநூலான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டிணப்பாலை ஆகியவற்றில் திணை அடிப்படையிலும், கூற்று அடிப்படையிலும் பாடல்களின் எண்ணிக்கை கூறப்பட்டுள்ளது.

அகத்தியம் என்னும் இலக்கண நூல் இருந்ததாக சான்றோர்கள் இடையே கருத்து உண்டு. ஆயினும், தொல்காப்பியம் இலக்கிய இலக்கண நூலாகப் போற்றப்படுகிறது. மேலும் தொல்காப்பியம் மொழிக்கு மட்டுமின்றி வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளது. அகப்பொருள் பற்றி தொல்காப்பியத்தில் கூறிய கருத்துக்களையும், அகப்புலவர்களின் பாடல்களையும் ஒப்பாய்ந்து கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சங்க அகமரபுகள் பற்றியும், அகத்திணைக்கோட்பாடுகள் பற்றியும் அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

கருத்துப் புலப்பாட்டிற்குப் புலவர்கள் கையாண்ட உத்தி முறை சங்கப் பனுவல்கள் நிலைபெற காரணமாயிற்று.

அகமாந்தர்களின் உணர்வினை உள்ளுறை, இறைச்சி, உவமை ஆகிய இலக்கிய வடிவங்களில் புலவர்கள் பாடி உள்ளனர்.

கருத்தாடலின்வழி அகமாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளும், உணர்ச்சிகளும் பிறருக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், கருத்தாடலின் வகைகள், இலக்கியக் கருத்தாடலில் உத்திமுறைகள் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் நெஞ்சொடு கிளத்தலை 'ஒரு பாற் கிளவி' என்றே உரைத்துள்ளார்.

நெஞ்சொடு உரைத்தலில் தலைவனின் உணர்வினை மிகுந்து பாடி உள்ளனர் புலவர்கள். தலைவியின் உணர்வில் தோழி முக்கியப் பாங்காற்றுகிறாள்.

ஓதலாந்தையார் நெஞ்சொடு உரைத்தலில் தனியிடம் பெறுகிறார். பாலைத்திணை நெஞ்சொடு உரைத்தலில் மிகுந்த பரப்பினைக் கொண்டு திகழ்கிறது.

பொருள் வாழ்க்கை இன்றியமையாதது என்னும் கோட்பாடு புலவர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. ஆயினும், அவற்றின் முதன்மைப் பண்பாகத் தலைவன், தலைவியின் அன்பு உணர்வினை வெளிக்காட்டியதன் வழி அகமே திண்ணிய வாழ்வினுக்கு வழிவகை ஆற்றும் திறன் உடையதை உணர்த்தி உள்ளனர் புலவர்கள்.

# சான்றெண் விளக்கம்

1. மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் ப. 93
2. கு.வெ. பாலசுப்பிரமணியன், தமிழில் அகமும் புறமும் என்னுரை
3. T.P. Meenakshi sundaram, A History of Tamil Literature P. 45.
4. தமிழண்ணல், சங்க மரபு, ப. 17.
5. வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 275.
6. மேலது, ப. 274
7. L.H. Herford, Shakes peare's Treatment of Love and Marriage and other essays P. 152
8. வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 269.
9. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக்கொள்கைகள், ப. 507.
10. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 9
11. ஆ. தனஞ்செயன், சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலும், ப. 10.
12. த. கோவிந்தன், நற்றிணைச் சொற்பொழிவுகள், ப.123
13. மேலது ப. 123
14. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 129
15. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் ப. 305.
16. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 130
17. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 306.
18. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 75
19. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 305.
20. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 75
21. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 306
22. டாக்டர் ஆறு. அழகப்பன் (ப.ஆ) பதிப்புரை. ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும் ப.1
23. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 305
24. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 14.
25. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 306

26. தொல். அகத். செய். நூ. 35
27. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும்,ப. 312
28. மேலது ப. 312.
29. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 306.
30. ச.வே. சுப்பிரமணியன், (ப.ஆ) சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப. 206.
31. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப. 306.
32. முல்லைப்பாட்டு அடிகள் 81-82
33. பரிபாடல் பா - 9 : அடி 25-26
34. மு. சுதர்சன், குறிஞ்சிப்பாட்டு மீள்பார்வைகள், ப. 49
35. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ப. 402
36. தொல். பொருள். இளம். உரை. ப. 19
37. தொல். பொருள். நச்சினார்க்கினியர் உரை, ப. 12
38. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 14
39. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ப. 403
40. டாக்டர். ந. சுப்புரெட்டியார், அகத்திணைக்கொள்கை, ப. 7
41. டாக்டர் சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப. 129
42. மேலது, ப. 136
43. இராமையா. நா., தொல்காப்பியர் அகத்திணை விளக்கம், ப. 1
44. கு.வெ. பாலசுப்பிரமணியன், தமிழில் அகமும் புறமும், என்னுரை
45. திருக்குறள் நூ. 282
46. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 268
47. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியம் அகம். ப. 13
48. தொல். பொருள். அகத். நூ. 54
49. தொல். பொருள். அகத். நூ. 55
50. தொல். பொருள். அகத். நூ. 56
51. தொல். பொருள். கற்பு. நூ. 152
52. தமிழ்நெறி விளக்கம் நூ. 2
53. மாறனகப்பொருள் அகத். நூ. 1
54. இலக்கணவிளக்கம், பொரு. நூ. 375

55. அறுவகை இலக்கணம் பொரு. நூ. 281
56. கா.சு. பிள்ளை, பழந்தமிழர் நாகரிகமும், தொல். பொருளதிகாரக் கருத்து, ப. 56
57. பாவலேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பிய ஆராய்ச்சி, காண்டிகையுரை தொகுதி - I ப. 5
58. தொல். பொருள், நூ. 545
59. தொல். மரபு. நூ. 1
60. தொல். சேனாவரையர். சொல், நூ. 11
61. நன்னூல், நூ. 388
62. தொல். பொருள். அகத். நூ. 53
63. தொல். களவியல். நூ. 18
64. மேலது நூ. 8
65. தொல். பொருளியல். நூ. 45
66. தொல். பொருள். அகத். நூ. 37
67. தொல். மரபியல். நூ. 26
68. தொல். மரபு. நூ. 91
69. தொல். மரபு. நூ. 92
70. தொல். அகத். நூ. 54
71. The there voices of poetry, P-6
72. சு. இராசாராம், இலக்கணவியல் மீக்கோட்பாடும், கோட்பாடுகளும், ப. 108.
73. மேலது, ப. 109
74. வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல் ப. 274
75. தொல். பொருள். அகத். நூ. 1
76. அ.ச. ஞானசம்பந்தன் - அகமும் புறமும் ப. 52.
77. தொல். பொருள். அகத். நூ. 53
78. நம்பியகப்பொருள், களவு. சூ. 118
79. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.220
80. ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள் ப. 14
81. தொல். பொருள். அகத். நூ. 54

82. ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள் ப. 14
83. ந. சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ப. 29
84. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 194
85. ஆறு. அழகப்பன், தொல்காப்பியச் சிந்தனை, ப. 188
86. தொல். அகத். நூ. 2
87. சிலம்பு. காடுகாண். 64
88. சிறு. பா: 9-11
89. அ. செல்வராசு, சங்க இலக்கியத்தில் பாழ்நிலப்பயணம், ப.12
90. தொல். அகத். நூ. 2
91. தொல். அகத். நூ. 50
92. தொல். களவு. நூ. 1
93. துரை. சீனிச்சாமி, திணைக்கோட்பாடு, ப. 25-26
94. நாற். அகப். நூ. 3
95. மேலது நூ. 4
96. மேலது நூ. 5
97. தொல். பொருள். அகத். நூ 4
98. நம்பி. நூ. 8
99. தமிழண்ணல், சங்க மரபு ப. 105-106
100. குறள் - 484
101. குறள் -1227
102. முல்லைப்பாட்டு அடி 5-6
103. டாக்டர் சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி ப. 133
104. பெ. மாதையன் அகத்திணைக் கோட்பாடும், சங்க அகக் கவிதை மரபும் ப. 27
105. தொல். பொருள். அகத். நூ. 20
106. தமிழ்.நெ.வி. நூ. 6
107. நம்பியகப்பொருள், நூ. 19
108. சா. சிவமணி சங்க அகத்திணைக் கோட்பாட்டு நோக்கில் தமிழ் மலையாள நெய்தல் நில நாவல்கள் ப. 26.
109. நம்பியகப்பொருள், க. வெள்ளைவாரணன் (ப.ஆ) ப.12

110. நா.செயராமன், தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை, ப.22
111. அ.அ.மணவாளன், தமிழ் இலக்கியக் கொள்கை, ப. 32.
112. பா. ரா. சுப்பிரமணியன் (ப.ஆ) கிரியாவின் தற்காலத் தமிழகராதி ப. 134
113. எஸ். வையாபுரிப்பிள்ளை (ப.ஆ) தமிழ்ப்பேரகராதி தொகுதி-1 ப. 97
114. நன்னூல் நூ. 15
115. தொல். பொருள். நூ. 656
116. நாராயண ஐங்கார் மாறனலங்காரம், நூ. 25
117. இரா. சந்திரசேகரன், சிற்ப கவிதை வளம் ப. 127
118. ரா. சேதுமணியன், மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளும், உத்திகளும், ப. 164
119. இரா. காசிநாதன் (ப.ஆ) தமிழியல் ப. 113.
120. ச. வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப. 79-80
121. சீ. மாணிக்கம், சொற்பொருண்மை நோக்கில் தமிழ் நாளிதழ் விளம்பரங்கள் (ஆய்வேடு) ப. 310.
122. பொன்மணி. வைரமுத்து சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள், ப. 38
123. ஐங். பா. 492
124. ஜெ. நீதிவாணன், நடையியல், ப. 64.
125. பொன்மணி. வைரமுத்து சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள், ப. 40
126. மேலது ப. 41
127. குறுந். பா. 184 : அடி - 5
128. குறுந். பா. 321 : அடி- 6
129. குறுந். பா. 333 : அடி - 2
130. ஐங். பா. 412 : அடி - 4
131. அகம். பா. 49 : அடி - 5
132. அகம். பா. 63 : அடி - 4
133. அகம். பா. 87 : அடி - 7
134. கலித்: பா. 42 அடி : 28 - 32
135. குறுந். பா. 4 : அடி- 1
136. குறுந். பா. 23 : அடி- 1
137. குறுந். பா. 146 : அடி - 4

138. குறுந். பா. 156 : அடி - 1
139. கலித். பா. 22:10-11
140. குறுந். பா. 20
141. தொல். பொருள். உவமை.1
142. தண்டி. நூ. 29
143. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள் ப. 5
144. ஆ. வே. இராமசாமி, சிந்தாமணி நயம். ப. 10
145. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப. 245
146. ஐங். பா. 264
147. அகம். பா. 322: அடி - 10
148. கு.வெ. பாலசுப்ரமணியன், தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை ப. 544
149. சு. மகேஸ்வரி, நற்றிணையில் உள்ளுறை ப. 15
150. தொல். பொருள். அகத். 49
151. நச்சினார்க்கினியர் (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம். ப.1
152. தொல். பொருள். அகத். நூ. 50
153. தொல். பொருள். அகத். நூ. 51
154. ரா. சீனிவாசன், சங்கஇலக்கியத்தில் உவமைகள் ப. 224
155. ந. சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப. 218
156. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் உரையும் ப. 27-28.
157. அர. சிங்காரவேலன், சங்க இலக்கியத்தில் உவமைகள் ப. 133
158. ஐங். பா. 213
159. மதுரைத் தமிழ் பேரகராதி ப. 35
160. தொல். பொருள். பொருளி. நூ. 33
161. தொல். பொருள். பொருளி. நூ. 34
162. தொல். பொருள். பொருளி. நூ. 35
163. நற். பா. 78
164. கி. கருணாகரன் வ. ஜெயா, மொழியியல் ப. 185
165. மா. வசந்தகுமாரி சங்க இலக்கியத்தில் கருத்தாடல் ப. 24
166. மேலது. ப.22

167. மேலது ப. 42

168. தொல். பொருள். மெய். நூ. 3

169. மா. வசந்தகுமாரி, சங்க இலக்கியத்தில் கருத்தாடல் ப. 40

170. பட்டின. அடி. 217-220

171. ந. இளங்கோ, கருத்தாடல் ஆய்வு ப. 25

172. கலித். பா. 61 அடி: 7-17

173. தமிழ் லெக்சிகன் (Tamil Lexion) சென்னைத் தமிழ் பேரகராதி vol. IV Part - 1 P. 2332.

174. தொல். பொருள். பொருளியல். நூ. 2

175. தொல்காப்பியம் பொருளதிகாரம். இளம்பூரணர் உரை ப. 316

176. The Merriam Webster Pocket Dictionary of Synonyms, New York, Report Books, Division of Simon and Schister Inc. 1972.

177. சி. சுப்பிரமணிய பாரதியார், குயில் பாட்டு -71

178. குறுந். பா. 165

179. கலித். பா. 138

180. திருக்குறள். 1145

181. ஐங். பா. 288

182. குறுந். பா. 116

183. நற். பா. 137: அடி - 1

184. அகம். பா. 372, அடி: 6 - 8

185. நற். பா. 384

186. குறுந். பா. 154, அடி: 5 - 8

187. குறள்: 1091

188. தொல். பொருள். நூ. 107, அடி: 1 - 5

189. நற். பா. 187

190. தொல். பொருள். நூ. 112, அடி 9

191. ஐங். பா. 295

192. தொல். பொருள். கற்பு. நூ. 1

193. அகம். பா. 225

194. குறுந். பா. 71

195. அகம். பா. 361

196. சிந்தாமணி 2133: 1-2

197. ஐங். பா. 441

198. குறுந். பா. 131

199. ஐங். பா. 97

200. சு. துரைசாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும், உரையும், முன்னுரை. ப. XXI

201. அகம். பா. 303: 8-15

202. ஐங். பா. 320

# இயல் - 2

# சங்கப் புலவர்களின் உரிப்பொருள் கருத்தாக்கம்

ஐவ்வகை ஒழுக்கங்களான புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன எல்லா நிலமக்களுக்கும் பொதுவான ஒழுக்கங்களாகும். இருப்பினும், மலைநாட்டில் புணர்தல் மலர்வதும், பாலை நிலத்தில் பிரிதல் பெருகுவதும், காடு சார்ந்த நிலத்தில் இருத்தல் இன்பமும், வயல்வெளியில் ஊடல் வருத்துவதும், கடற்கரைப்பகுதியில் இரங்கல் வருத்தத்தை உண்டாக்குவதை மரபாகக் கொண்டு இலக்கணம் வகுக்கப்பெற்றிருக்கின்றது. அந்தந்த நிலத்தில் அந்தந்தச் சூழ்நிலைகளில் அந்தந்த ஒழுக்கங்கள்தான் நிகழவேண்டும் என்று தொல்காப்பியர் விதி வகுத்துள்ளார். இவ்விதியை அடிப்படையாகக் கொண்டு புலவர்களும் அந்தந்த நிலத்திற்கேற்ற ஒழுக்கங்களை முதன்மைப்படுத்தி செய்யுள் இயற்றினர். உள்ளுறையும், இறைச்சியும் இயல்பாய் அமையும் நிலையில் செய்யுள்கள் காணக்கிடக்கின்றன.

**தொல்காப்பியர் உரைக்கும் உரிப்பொருள்**

உலகில் உள்ளனவற்றைத் தொல்காப்பியர் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாக வகைப்படுத்தி,

> **"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
> **நுவலுங் காலை முறைசிறந் தனவே**
> **பாடலுட் பயின்றவை நாடுங் காலை"[1]**

என உரைப்பர்.

இப்புவியுலகில் மனிதன் வாழ்வதற்குக் காரணமாக உள்ள நிலமும், பொழுதும் முதற்பொருளாக உள்ளன. மனிதனின் அகஉணர்வுகள் நிலத்தையும், பொழுதையும் சார்ந்து அமைந்துள்ளதால் இதனை முதற்பொருளாக கருதினர். உலகவாழ் உயிரினங்கள் அனைத்திற்கும் நிலம், பொழுது என்ற முதற்பொருள்களே இன்பம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாகிறது.

இதனைத் தொல்காப்பியர்

**"முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"[2]**

என உரைப்பர். முதற்பொருளையும், கருப்பொருள்களையும்விட உரிப்பொருள் சிறந்ததென்பது தொல்காப்பியரின் துணிவு.

"முறைமையிற் சிறத்தலாவது யாதேனும் ஒரு செய்யுட் கண் முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானேவரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம்"[3] என உரைவகுப்பர் இளம்பூரணர்.

இளம்பூரணர் உரைவழி முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றைக் கொண்டே வருவது திணை. முதற்பொருளும், கருப்பொருளும் இல்லாமல் பாடல் அமையும். ஆனால், உரிப்பொருள் இன்றி பாடல் அமையாது என்பது தெளிவுப் பெறுகிறது. ஆகவே, அகப்பொருள் பாடல்களில் கருவாக அமைவது உரிப்பொருள்.

மேலும், முப்பொருளினும், உரிப்பொருளே சிறந்தது என்பதைத் தொல்காப்பியர்,

**"முதல்எனப் படுவ தாயிரு வகைத்தே"[4]**

எனவும்,

**"அவ்வகை பிறவும் கருவென மொழிப"[5]**

எனவும்,

**"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"[6]**

எனவும் உரைப்பர். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் குறித்து தனி நூற்பாக்களில் உரைந்துள்ளார். இந்நூற்பாக்களின் வழி முதல், கரு நூற்பாக்களைச் சுருக்கமாகவும், உரிப்பொருளை நுட்பமாக உரைத்து உள்ளதை அறியலாம். **"உரிப்பொருள் என்பது இன்றியமையாத பாடற் பொருள். ஓர் அகப்பாட்டு முதல் இன்றியும், கரு இன்றியும் புனையா ஓவியம் போல**

**வரமுடியும். அங்ஙனம் வருவதையும் காண்கின்றோம். ஆனால், உரிப்பொருள் அற்றது ஓர் அகப்பாட்டாகாது. ஆதலின் முதலும், கருவும் ஓவியத்திற்கு நிறம் போலவும், தலைவிக்குத் தோழி போலவும் உரிப்பொருளுக்குத் துணையாகி வருவன. அவை உரிப்பொருளுக்கு ஒத்த நிகர் பொருளாகாது''**[7] என்னும் வ. சுப. மாணிக்கனாரின் ஆய்வுரை உரிப்பொருளின் நுட்பத்தை அறிய ஏதுவாக அமைகிறது.

உரிப்பொருள் அகப்பாடலில் அமைய வேண்டும். அதுவே, மனித உணர்ச்சியுள் வலியது ஆகும். ஐந்திணைக்கும் உரிய ஒழுக்கங்களாக உரிப்பொருள் அமைகிறது. ஒவ்வொரு திணைக்கு உரிய உரிப்பொருளை,

**''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிய பொருளே''**[8]

என்பர் தொல்காப்பியர். இவை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணைகளுக்கு உரிய உரிப்பொருளாகவும் ஒவ்வொரு திணையில் வாழும் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகும். ''தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணை என்ற இரண்டின் இலக்கணங்களையும் வகுத்துரைத்தவர். வீரம், கொடை, புகழ் என்பனவெல்லாம் புறத்திணைப் பொருளன. இத்திணைக்கு முதற்பொருள், கருப்பொருள் அவர் கூறவில்லை. புறப்பாடல்களிலும் முதலும், கருவும் ஆகிய அமைப்பு முறை காணவில்லை. (தொல். 948) இதனால் அகத்திணை உரிப்பொருளுக்கே புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய காதற் பொருளுக்கே முதலும், கருவும் வகுக்கப்பட்டன, பயன்பட்டன, பாடப்பட்டன என்பது தெளிவு''[9] என்னும் வ.சுப. மாணிக்கரின் ஆய்வுரை வழி அகப்பாடல்களில் உரிப்பொருளின் மேண்மையை உணரலாம்.

உரிப்பொருளின் சிறப்பினை நம்பியகப்பொருள்,

**''புணர்தலும், பிரிதலும், இருத்தலும், ஊடலும்,**
**இரங்கலும், இவற்றின் நிமித்தமும் என்று ஆங்கு**
**எய்திய உரிப்பொருள் ஐ இரு வகைத்தே''**[10]

என்றும்,

மாறனகப்பொருள்,

**"பாடலுட் புணர்தல் பிரித லிருத்த**
**லூடலிரங் கலவற் றினிமித் தமென்றா**
**யிரண்டைந் திணைக்கமைத்தவுரிப் பொருள்"[11]**

என்றும்,

தமிழ்நெறி விளக்கம்,

**"புணர்தலும் பிரிதலு மிருத்தலு மூடலும்**
**மனைவயி னிரங்கலு மவற்றி னிமித்தமும்**
**களவொடு கற்பெனக் கவைநர் கூறிய**
**அளவி லுரிப்பொரு ளாகு மென்மனார்"[12]**

என்றும் உணர்த்து நோக்குதற்குரியதாகும். மேலும், புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்ற வைப்புமுறைகளே கையாளப்பட்டுள்ளது என்பதை உணரலாம்.

தலைவன், தலைவி புணர்ந்தப்பின் ஏதேனும் காரணங்களால் பிரியும் போது காதல் மிகுதி ஏற்படும் தன்னுடையவனைப் பிரிந்து வாழ்தல் ஒருபோதும் கூடாது எனப் பெண்ணின் மனம் கவலை அடைந்து அதனைத் தொடர்ந்து இருத்தல், இரங்கல், ஊடல் நிகழ்கிறது என்பதையே அகஇலக்கணநூல்கள் உணர்த்துகின்றன.

"அகவாழ்வுக்குச் சிறந்தது. இல்லிருந்து மகிழும் உடனுறைவின்பமாகலின், அதனை முதற்கண் கூறி, அவ்வின்பத்தினை மிகுவிப்பன பிரிதல் முதலிய நான்குமாகலின், அவற்றைப் பின்னர் கூறினார். பிரிதல் காரணமாகவே இருத்தல் முதலிய மூன்றும் நிகழுமாதலின் அவை பிரிதலின்பின் முறையே கூறப்பெற்றன. புணர்தல் ஒன்றேயாகப் பிரிதற்பகுதிகள் நான்காகக் கூறியதன் கருத்து அறிந்து கொள்ளத்தகும்"[13] என்பார் இளசைக் கிழார்.

தலைவனும், தலைவியும், குறிஞ்சி நிலத்தில் சந்தித்து கருத்தொருமித்து கூடி மகிழ்தல் புணர்தல் என்றும், தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்திருப்பது பிரிதல் என்றும், தலைவன் பிரிந்து சென்ற பின் தலைவனையே நினைத்து இல்லத்தில் பொறுத்திருப்பது இருத்தல் என்றும், தலைவன் பரத்தையரிடம் நாடிச்

செல்லும் போது தலைவி கொள்வது ஊடல் என்றும், தலைவியான தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தி இருப்பது இரங்கல் என்றும் கூறப்படுகிறது.

"பண்டையோர் மக்கட்கு உரிய பொருளை உரிப்பொருள் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். உரிப்பொருள் மக்கள் வாழ்க்கையை ஒட்டி நிற்கும், அவர்கள் வாழும் வாழ்க்கை நெறி ஒழுக்கமே உரிப்பொருள் என்று கூறினும் தவறாகாது"[14] என்பார் ந.சுப்புரெட்டியார்.

உரிப்பொருள் மக்கள் வாழ்வோடு கலந்து காணப்படுவதும், காதற்போரின் முக்கியமானது ஆகும். "உரிப்பொருள் முக்கியமானது. ஏனென்றால் அதுதான் கருத்து. அது தான் நோக்கம். இது முக்கியமான உணர்வுக்கூறு"[15] என்பார் சா. சிவமணி.

இதன்வழி அகப்பாடல்களில் உரிப்பொருள் பெறும் இடத்தையும், உரிப்பொருளுக்குத் துணையாக முதலும், கருவும் அமையும் என்பதை அறியமுடிகிறது. மேலும், "உரிப்பொருள் தான் இவற்றின் உயிர்நாடியாக இருப்பது. காதல் நாடகத்தின் இயக்கம் இதுவே என்று கூடச் சொல்லலாம். ஒரு பாடலில் இந்தப் பொருள்கள் அனைத்தும் வரவேண்டும் என்ற வரையறை இல்லை. சில வரவும் கூடும் சில வராமல் இருத்தலும் கூடும். உரிப்பொருள் மட்டும் கட்டாயம் வருதல் வேண்டும். சுருங்கக் கூறின், அகத்திணைப் பாடல்களில் உரிப்பொருள் சிறந்து விளங்க முதற்பொருளும், கருப்பொருளும் பின்னணியாக அமைகின்றன என்று தெளியலாம்"[16] என ந. சுப்புரெட்டியாரும்,

"உரிப்பொருள் நம் பிறப்போடு ஒட்டியது. உலகப் பிறப்பை அருளுவது யாண்டும் பரந்தது, உணர்ச்சியுள் வலியது என்பர்"[17] எனக் கா.சு.பிள்ளையும் உரைப்பது பொருளுடையதாகும்.

அகஆக்கத்திற்கு உரிப்பொருளே முதன்மையானதாகும். நிலமும், பொழுதும், சூழலும் மனிதனின் உணர்வுகளை வெளிப்படுத்துவன. இவையே, உரிப்பொருளாக அமைகின்றன. இவ்வகையான உரிப்பொருள் அகத்தை நிலைநிறுத்துகின்றன. இவ்வேறுபாடு அகப்புலவர்களின் கவியாக்கத்தின்

செம்மாந்த நிலையினைச் சுட்டி நிற்கிறது. புறம் பாடிய புலவர்களைவிட அகம் பாடிய புலவர்கள் மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளனர். இதன்வழி மக்களின் உணர்வுகளில் உள்ள அகத்தின் ஆழத்தை அறியலாம். "நானூறு புலவர்கள் இரண்டாயிரம் அகப்பாடல்களைப் பாடியுள்ளனரே: புறத்திணைக்கு இவ்வெண்ணிக்கை இல்லையே என்று அகவிலக்கியப் பனுவல்களைக் கற்கும்போது, மலை சிலையாகக் காட்சியளிக்கும். சங்ககால மாணவர்கள் பாடிப்பாடிப் பயின்று பயின்று அகத்துறைகளைக் கற்றனர்"[18] வ.சுப. மாணிக்கனாரின் கூற்றுவழி அகமே சங்க இலக்கியத்தில் மிகுதி என்பது தெளிவாகிறது.

**அகப்பொருள் பாடியப் புலவர்கள்**

சங்கப்புலவர்கள் பாடல்களை அகம், புறம் எனப் பிரித்துப்பாடியுள்ளனர். அகப்பாடல்களை மட்டும் பாடியப் புலவர்களும், அகம், புறம் பாடியப் புலவர்களும் உண்டு. அதிக எண்ணிக்கையிலான புலவர்கள் அகப்பாடல்களையே பாடியுள்ளனர்.

304 புலவர்கள் புறப்பாடல்களைப் பாடாது அகத்தையே பாடியுள்ளனர். அவர்கள், 873 பாடல்களை பாடியுள்ளனர். 77 புலவர்கள் அகம், புறம் என 1219 பாடல்களைப் பாடியுள்ளனர். இவற்றில் அகப்பாடல்களின் எண்ணிக்கை 913. புறப்பாடல்களின் எண்ணிக்கை 306. புலவர்கள் பாடியப் பாடல்களின் எண்ணிக்கையிலிருந்து அகப்பாடல்களே மிகுதி என்பது உறுதியாகிறது. அகத்தைப் பாடியது தெளிவு.

புறம் பாடாது அகத்தைப் பாடியப் புலவர்களில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் அம்மூவனார் 127 பாடல்களையும், பேயனார் 105 பாடல்களையும், ஓதலாந்தையார் 102 பாடல்களையும் பாடியுள்ளனர்.

**"திணை அடிப்படையில் பாடியப் புலவர்கள்**

| | | |
|---|---|---|
| ஒரே திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 244 |
| இரு திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 40 |
| மூன்று திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 13 |
| நான்கு திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 5 |
| ஐந்து திணைகளிலும் பாடியப் புலவர் எண்ணிக்கை | - | 1 |
| பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு பாடியப் புலவர் எண்ணிக்கை | - | 1 |
| புலவர்கள் எண்ணிக்கை | - | **304"** |

மேலும், அகப்பொருள், புறப்பொருள் என்ற இரண்டும் பாடியப் புலவர்களில் அகப்பொருள் மட்டும் பாடியப் புலவர்களில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் கபிலர் ஆவார். 197 (எட்டுத்தொகையில் 196, பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு 1) பாடல்களையும், ஓரம்போகியார் 109 பாடல்களையும், மருதனிளநாகனார் 74 பாடல்களையும் பாடியுள்ளனர்.

**"திணை அடிப்படையில் பாடியப் புலவர்கள்**

| | | |
|---|---|---|
| ஒரே திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 29 |
| இரு திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 22 |
| மூன்று திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 10 |
| நான்கு திணையில் மட்டும் பாடியப் புலவர்களின் எண்ணிக்கை | - | 7 |
| ஐந்து திணைகளிலும் பாடியப் புலவர் எண்ணிக்கை | - | 8 |
| பத்துப்பாட்டில் பட்டினப்பாலைப் பாடியப் புலவர் எண்ணிக்கை | - | 1 |
| மொத்தம் | - | 77" |

என்னும் எண்ணிக்கை வகைப்பாடு புலவர்களின் திணை உணர்வினை உணர்த்தி நிற்கிறது.

ஒரே திணை பாடியப் புலவர்களின் எண்ணிக்கை 273. மிகுதியான புலவர்கள் ஒரே திணையில் பாடியுள்ளார். ஒரே திணையில் பாடிய புலவர்களின் கவிதிறன், ஒன்றுக்கு மேற்பட்டப் பாடல்களைப் பாடிய புலவர்களின் கவிதிறமைக்கு ஒப்புமையாகவும், திறன்மிக்கதாகவும், திகழ்கிறது. "சங்க காலத்துப் புலவர்களின் இலக்கிய வன்மை மென்மைகளைப் பாட்டின் எண்ணிக்கையை வைத்து அளக்கலாகாது, அளக்கமுடியாது. நூறு பாடியோர் பாவின் வனப்பும், ஒன்று பாடியோர் பாவின் வனப்பும் சங்கத் தன்மையுடையனவாகவே உள. நூல் நூறு எழுதியோர் திறஞ்சான்றோர் எனவும், தொல்காப்பியர், திருவள்ளுவர், இளஞ்கோ போல நூல் ஒன்றே எழுதினார் திறஞ்சாலார் எனவும் கூறுவதுண்டோ? எல்லாம் சிந்தனைத் திறத்தைப் பொறுத்தது"[19] என்னும் வ.சுப.மாணிக்கனாரின் கருத்துரை மிகவும் பொருளுடையதாகும்.

"இலக்கியப் பார்வையில் முப்பொருளில் எது சிறந்தது? முதற்பொருளா? கருப்பொருளா? உரிப்பொருளா? உரிப்பொருளே உயிர்ப்பொருள். உரிப்பொருளை விளக்க வந்தனவே மற்றைய இரண்டும். அவை உடலும், அணிகலன்களும். திணை, துறை குறித்தோர் முதற் பொருளுக்கும், கருப்பொருளுக்கும் தலைமை கொடுத்தனர். எனினும் முன்னோர் முதற்பொருள் இல்லாப்பாட்டைக் கட்டினர் காட்டினர். கருப்பொருள் இல்லாப் பாட்டைக் கட்டினர் காட்டினர். ஆனால் உரிப்பொருள் எதுவுமே இல்லாப்பாட்டைக் கட்டினரா? காட்டினரா? இல்லை. அ∴து ஒன்றே உரிப்பொருள் பாட்டின் உயிர்ப்பு என்பதைப் புலப்படுத்தும். எனவே உரிப்பொருளைத் தலைமையாகவும், பிற இரண்டைத் துணைமையாகவும் கொள்ளலே இலக்கிய நீதி"[20] என்னும் அறிஞர் க. ப. அறவாணனின் கூற்று அகத்தின் உயிர்க்கருத்தை மேன்மைப்படுத்தி நிற்கிறது.

அகவாழ்வில் உரிப்பொருள் என்பது தலைவன், தலைவி இருவரின் உறவு செயல்களின் வெளிப்பாடாகும். களவு வாழ்வின் தொடக்கமான இயற்கைப் புணர்ச்சி தொடங்கி, கற்பு வாழ்வின் பிரிவுகள் வரையான நிகழ்வுகளில் நடைபெறுகிறது. இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்து தலைவன் தலைவியை ஆயத்திடம் சேர்ப்பித்து நீங்குகின்ற பொழுதும், இடர்ந்தலைப்பாட்டின்கண் தலைவி வராமல் இருந்தப் பொழுது பிரிவு நிகழும். பாங்கியிற் கூட்டத்துக்கண் தலைவி தலைவனைச் சேட்படுத்தும் இடத்தும் பிரிவு நிகழும். பகற்குறி, இரவுக்குறி ஆகிய காலங்களில் தலைவன், தலைவியைப் புணர்ந்து பிரிகின்ற காலத்திலும் அல்ல குறிப்பட்டு மீள்கின்ற காலத்திலும் பிரிவு நிகழும். மேலும், கற்பு வாழ்வின் பிரிவுகளான வரைவிடை வைத்துப் பொருள் ஈட்ட நினைக்கும் காலத்திலும் பிரிவு நிகழும். பரத்தை, பொருள், ஓதல், தூது, பகை காரணமாகவும் பிரிவு நிகழும். இவ்வாறு அனைத்து வகையான களவு, கற்புப் பாடல்களிலும் உரிப்பொருள் நுவலுதல் இயல்பாய் இடம்பெறும்.

**குறிஞ்சி உரிப்பொருள்**

மக்கள் வாழும் மலையும், மலைச்சாரலும் குறிஞ்சி நிலம் ஆகும். இங்குக் குளிர்கால யாமத்தில் புணர்ச்சி நிகழும். இளநீல முகில் சூழ்ந்த மலையடுக்குகள் கதிரவனின் செங்கதிர்களால் பொன்னிறமாய் காட்சியளிக்கும். இச்சூழலானது

தலைவன், தலைவியிடத்தே நட்புறவை முதலில் ஏற்படுத்தும் நட்புணர்வு காதலாகும். புணர்தல் ஒழுக்கம் நிகழும். இவ்வகையானப் புணர்தல் ஒழுக்கமே குறிஞ்சி உரிப்பொருளாகும். புணர்தல் ஒழுக்கமானது ஒருவனும், ஒருத்தியும் முதன்முதலில் ஒருவரை ஒருவர் காண்பது முதல், அவ்விருவரும் கூடி மணம் புரிந்து கொள்ளும் வரையுள்ள நிகழ்வுகளைக் கொண்டதாகும். இதனையே, களவொழுக்கம் என்பர். புணர்தலாகிய முதலொழுக்கத்திற்கு உரிய இடமாகக் கருதப்படுவது குறிஞ்சி நிலம் ஆகும்.

**குறிஞ்சித்திணைப் பாடியப் புலவர்கள்**

குறிஞ்சித்திணையில் 170 புலவர்கள் 470 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் கபிலர் ஆவார். கபிலரின் பாடல்கள் 235. அதில் அகப்பாடல்கள் 197. புறப்பாடல்கள் 38. எட்டுத்தொகையில் குறிஞ்சித்திணையில் 190 பாடல்களையும், பத்துப்பாட்டில் 8வது பாட்டாகக் கருதப்படும் குறிஞ்சிப்பாட்டையும் கூட்டி குறிஞ்சித்திணைப் பாடல்களாக 191 பாடல்களையும், மேலும், எட்டுத்தொகை நூல்களில் முல்லைத்திணையில் 1 பாடல், மருதத்திணையில் 1 பாடல், நெய்தல் திணையில் 3 பாடல்கள் பாலைத்திணையில் 1 பாடல் என மொத்தம் இவரது அகப்பாடல்களாக மொத்தம் 197 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் ஐந்து திணையிலும் பாடல்களைப் பாடியப் புலவர் எனனும் பெயரை பெற்று உள்ளவர்.

"களவு, கற்பு பாடல்களாக,

| **களவில்** | | **கற்பில்** | | **கைக்கிளையில்** | |
|---|---|---|---|---|---|
| தோழிக்கு | 124 | தோழிக்கு | 4 | தலைவனுக்கு | 3 |
| தலைவிக்கு | 41 | தலைவிக்கு | 6 | | |
| தலைவனுக்கு | 16 | தலைவனுக்கு | 1 | | |
| நற்றாய்க்கு | 1 | பரத்தைக்கு | 1 | | |
| | 182 | | 12 | | 3 |

இப்பாகுபாட்டினால் கபிலர்தம் இலக்கியத்தில் தோழி தலைமை பெறுகின்றாள்"[21] என்பது அறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் கூற்று.

குறிஞ்சித்திணைப் பாடல்களில் பரணர் 18 பாடல்களைப் பாடியுள்ளார். மேலும் குறிஞ்சித்திணையில் 1 பாடல் முறையே 133 புலவர்கள் பாடியுள்ளனர்.

மலைவாழ் மக்களின் இயற்கை வாழ்வு, காட்டு விலங்குகள், பறவைகள் அந்நில மலர்கள், விளைப்பொருட்கள் ஆகிய கருப்பொருட்களைத் துணையாகக் கொண்டு தமிழ் மக்களின் குறிஞ்சி நில வாழ்வை நாகரிகமான பொருள்களில் புணர்தல் ஒழுக்கங்களைப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். குறிஞ்சி நிலமக்களின் புணர்தல் ஒழுக்கம் கற்பு வாழ்வை விடக் களவு வாழ்வில் மிகுதியாக உரைக்கப்படுகிறது. "குறிஞ்சி, புணர்தலும் புணர்தல் நிமித்தம் எனக் கூறினாலும் மணத்திற்கு முற்பட்ட நிலையைக் கூறுவதே. எனவே திருமணத்திற்கு முந்தைய களவு ஒழுக்கத்தைக் குறிஞ்சி என்றும் திருமணத்திற்குப் பின்னைய பிரிவு (பாலை), இருத்தல் (முல்லை), இரங்கல் (நெய்தல்), ஊடல் (மருதம்) ஆகிய இவற்றைக் கற்பு என்றும் கொள்ள வேண்டும். 1. சங்க இலக்கியத்தில் முல்லைத்திணைப் பாடல்களிலும் நெய்தல் திணைப்பாடல்களிலும் களவு ஒழுக்கம் பேசப்படினும் குறிஞ்சித்திணைப் பாடல்களில் கற்பு ஒழுக்கம் அருகிய நிலையிலேயே பேசப்படுகிறது. 2. எனவே குறிஞ்சியினைக் களவு எனக் கூறுவது பொருந்துவதாகலாம்"[22] என்னும் ப. அருணாசலம் ஆய்வுரையை மேற்கோள் காட்டுவர் பெ. மாதையன்.

எனினும், பெ. மாதையன் அவர்கள் "களவைக் குறிஞ்சிக்கு உரியதாக மட்டுமே காட்டுவது என்பது புணர்தலைக் குறிஞ்சிக்கு மட்டுமே உரியதாகக் காட்டுவதாகும். இவ்வாறே பாலையைக் கற்புக்கு மட்டுமே உரியதாகக் காட்டுவதும் பிரிவைக் கற்புக்கு மட்டுமே உரியதாகக் காட்டுவதோடு பொருந்தும். இவரே சொல்லுவது போல் களவு பற்றிய பாடல்கள் பிற திணைகளிலும் விரவி வருகின்றன. இதைப்போலவே பிரிவு பற்றிய பாடல்களும் பிற திணைகளில் விரவி வருகின்றன. இந்நிலையில் திணை வகுப்பது எவ்வாறு? சங்கப் பாடல்களின் திணை, கூற்றுப் பின்னணிகளிலேயே இந்தக் கருத்தின் வன்மைமென்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது"[23] என உரைப்பர்.

உரிப்பொருள் ஐந்தென ஒவ்வொரு திணைக்குக் கூறப்படினும் அனைத்துத் திணையிலும் சிறுபான்மை விரவி வரும். இதனை "உரிப்பொருள்

ஒவ்வொன்றும், ஒவ்வொரு திணையுடன் இணைத்துக் கூறப்படினும், எல்லாத் திணைகளுக்கும் எல்லா உரிப்பொருள்களும் பொதுமையே. அவ்வந் நிலத்தின் சிறப்புரிமை கருதி, அவ்வந் நிலத்துடன் அவை தொடர்புறுத்தப்படுகின்றன. புணர்ச்சி, எந்நிலத்தும் இருப்பது. எனினும் மலை நிலம் அதனது குளிராலும், பசுமைத் தழைப்பாலும் இன்புணர்வை ஊட்டுவது, மூட்டுவது. வித்தியாதரக் கந்தர்வர்களும் பிற தெய்வக் கூட்டத்தாரும் மலைக் குளிர்ச்சியில் கூடியுறைவதையே இலக்கியங்கள் சிறப்பித்து உரைக்கின்றன. தற்கால வாழ்விலும் கோடைக்கானல், நீலகிரி, ஏர்க்காடு போன்ற இடங்கள், புதிய புதிய இணைகளின் புணர்விடங்களாக உள்ளன. எனவே புணர்தலும், புணர்தல் நிமித்தமும், ஏனைய நிலங்களின் பொதுவாயும், குறிஞ்சிக்குச் சிறப்பு உரிமையாயும் கூறப்பட்டன”[24] என்னும் க.ப. அறவாணனின் கூற்றுவழி புணர்தலும், புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி திணைக்குரிய உரிப்பொருள் என்பது தெளிவாகிறது.

குறிஞ்சித்திணையில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் கூற்றுகள் இடம்பெற்றுள்ளன. களவுக்குரிய நிகழ்வுகளான இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டம், பகற்குறி, இரவுக்குறி போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. தலைவன், தலைவியின் அன்பைப் பெற வேண்டித் தோழியிடம் கையுறை கொடுத்தல், மறுத்தல், உடன்படல், தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவித்தல், தலைவியைக் குறிக்கு உடன்படவைத்தல், தோழி தலைவனிடம் வரைவுக்குத் தூண்டுதல், தலைவியின் அழகைப் பற்றிப் பாங்கனிடம் கூறித் தேரை விரைவாகச் செலுத்தத் தூண்டுதல், தலைவியின் வேறுபாட்டிற்கான காரணத்தைக் கட்டுவிச்சியிடம் குறிக் கேட்டு அறிதல் போன்ற நிகழ்வுகள் இத்திணையில் உரைக்கப்படுகின்றன.

**இயற்கைப் புணர்ச்சியின் அன்புள்ளம்**

தலைவனும், தலைவியும் எதிரிப்பட்டுப் பால் எனும் விதிக்கூட்டத்தால் இணையப்பெறுவது இயற்கைப்புணர்ச்சி ஆகும். இயற்கைப்புணர்ச்சி உணர்வினை,

> **“யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
>
> . . . . . . . . . . . . . . . . . . . . . .

**. . . . . . . . . . . . . . . . . . . . . . .**

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"[25]**

என்கிறான் குறுந்தொகை தலைவன்.

செம்மண் நிலத்தில் பெய்த மழைநீரானது, அம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும், சுவையையும் பெற்று தன் தன்மை மாறி ஒன்றுவது போல நம் இருவர் உள்ளங்களும் தம்முள் கலந்து ஒன்றாயின. மழை பெய்வதற்கு அந்நிலம் யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அந்நிலம் குளிர்ந்த வழி அவ்விடம் சென்ற மேகமும் குளிர்ந்து மழையைப் பெய்தது. மேலும், தலைவனும், தலைவியும் யாதொரு முயற்சியும் இன்றி ஊழ்வினைப் பயனால் தலைவன் தலைவியை கூடினாள் எனப் பாடுவர் புலவர்.

**பாங்கனை இடித்துரைக்கும் தலைவனின் உள்ளுணர்வு**

தலைவன் தலைவியின் பிரிவால் துன்பப்படுவதைக் கண்ணுற்றப் பாங்கன் உரைத்ததற்கு தலைவன் பாங்கனிடம் உரைப்பதாக,

**"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே**

**செம்பூ முருக்கின் நல்நார் களைந்து**

**தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்துப்**

**படிவ உண்டிப் பார்ப்பன மகனே**

**எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்**

**பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்**

**மருந்தும் உண்டோ? மயலோ இதுவே"[26]**

எனப் பாடுவர் ஏனாதி நெடுங்கண்ணன்.

அந்தணனாகிய பாங்கன், அரசனாகிய தலைவனை நோக்கி, நீ தலைவியை விரும்புவது வேதத்தால் விலக்கிக் கூறப்படும் மயக்கம் என்றான். தலைவன் பாங்கனை நோக்கி வேதத்தில் முற்பிறப்பில் பிரிந்தவரை இப்பிறப்பில் கூட்டுவிக்கும் உபாயம் இருக்குமாயின் அது வேதத்தால் விலக்கப்பட்ட மயக்கம்

எனக் கூறுதல் பொருந்தாது என்றும், தலைவி இன்றித் தான் உயிர்வாழ்தல் இயலாது என்பதை உணர்த்தினான். ரா. இராகவையங்கார் "புணராமைக்கு உரிய தடைகளை நீக்கி உதவுதலால், வேதத்தின் அம்மொழிகள் மருந்து போன்றன என்றான். பிரிந்தோரைப் புணர்க்கும் மந்திரங்கள் வேதங்களில் உள்ளன என்றும், அவற்றை வல்லார் வாய்க் கேட்டு உணர்க என்றும், எழுதாக் கற்பின் இன் சொல்லுள்ளும் எனப் பிரித்து வேதத்தின் இதோபதேசப் பகுதி எனப் பொருள் கொள்ளல் பொருந்துவதாகும்"[27] என உரை வகுப்பர். கற்ற கல்வியின் வழி, பிரிந்த தலைவனையும், தலைவியையும் புணர்க்கும் மருந்தறிந்து, தலைவியைக் கூடுவதற்குநெறிக் கூட்டவேண்டும் என உணர்த்தி உரைப்பர் புலவர்.

**இரவுக்குறியின் தலைமக்களின் இன்பம்**

இல்லத்தின் புறத்தே, இல்லத்தில் உள்ளவர்கள் கூறும் மொழி கேட்டும் தொலைவில் தலைவனும், தலைவியும் கூடுமிடம் இரவுக்குறி எனப்படும்.

**"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே**
**மனையகம் புகாஅக் காலை யான"[28]**

என்பது தொல்காப்பியர் சூத்திரம்.

இரவுக்குறியில் தலைவியைச் சந்தித்து இன்பம் துய்த்தத் தலைமகன் அவள் நலனில் நலமுடையவனாய்,

**"செழுந்தேன் திகழ்பொழில் தில்லைப் புறவிற் செறுவகத்த**
**கொழுந்தேன் மலர்வாய்க் குமுதம் இவள்யான் குரூஉச் சுடர் கொண்டு**
**எழுந்தாங்கு அதுமலர்த் தும்உயர் வானத்து இளமதியே"[29]**

எனத் திகழ்வதை திருக்கோவையார் உணர்த்துகிறது. 'அன்பே' இந்நள்ளிரவுப் பொழுதில் நீ குமுத மலர் போல் மலர்ந்து மணம் கமழ்ந்து வெண்மதியாக உள்ளாய் என்று கூறுகிறான். இவ்வாறு, தலைவியைப் புகழும் தலைவன் அவளைத் தோழியோடு சேர்ந்து ஆயத்துடன் சென்று பள்ளிடத்தே துயில் கொள்வாய் இரவு நேரமாவதால் இங்கு நெடுநேரம் தங்காதே என்று கூறிப்பிரிவான். இதன்வழி காதலர்களின் அன்பு பெருக்கத்தை உணரலாம்.

குறியிடத்தைக் குறிக்கும் உரிமையுடையவளாகத் தலைவி என்பதே சங்கப் பனுவல்கள் உணர்த்தும் விதியாகும்.

தலைவன் இரவுக்குறிக்கண் வருகிறான் என்பதை அறிந்த தலைவி, தலைவன் கேட்கும்படியாக இரவுக்குறியின் இடர்பாடுகளைத் தோழிக்கு,

**"அருள்புரி நெஞ்சமொடு எஃது துணையாக**
**வந்தோன் கொடியனும் அல்லன்: தந்த**
**நீ தவறு உடையையும் அல்ல: நின்வயின்**
**ஆனா அரும் படர் செய்த**
**யானே, தோழி தவறு உடையேனே"**[30]

இரவில் ஆண்கரடியானது இரும்பு வேலை செய்யும் கொல்லன் போல் நாற்புறமும் இரையைத் தேடித் திரியும். ஓடத்தில் முதலைகளும், மேலும், காட்டில் ஆண் புலியானது பெரிய பன்றியைக் கொன்று தின்னும், அச்சம் தரும் பாம்பும் உண்டு. இவ்வாறான வழியில் வருகிறான். தலைவன் வழி குறுகலானது. இத்தனை இடர்ப்பாடுகளிலும் வேலினைத் தன் நெஞ்சிலே சுமந்து வழித்துணையாக வந்த என் அன்பிற்கினிய தலைவன் கொடியவன் அல்லர். என்னவனை குறியிடம் வரச் செய்த நானே கொடியவள் எனத் தலைவி கூறியதன் வாயிலாக தலைவன் மீது தலைவி கொண்டுள்ள அன்பின் ஆழத்தைப் புலவர் உணர்த்துவர்.

**அறத்தொடு நிற்கும் தோழியின் அறிவுள்ளம்**

களவு வாழ்வில் தலைவனும், தலைவியும் சந்திக்க விரும்புவர். சந்திப்பிற்கு இடர்ப்பாடுகள் உண்டு. ஒருவர் மற்றவர் மீது அளவற்ற அன்பு கொண்டிருப்பர். கற்பு வாழ்வினை மலர்விக்கத் தலைவனைவிட தலைவியே மிகவும் விருப்பம் கொள்கிறாள். ஆதலால், அவளின் உள்ளம் துன்பத்தில் வாடுகிறது. அவளின் உடல் மெலிகிறது. தலைவியின் உடல்மெலிவதை அறிந்த தோழி 'அறத்தொடு நிற்றல்' என்ற கோட்பாட்டோடு களவு வாழ்வை, கற்பு வாழ்வாக மாற்ற அறிவுள்ளம் கொண்டவளாகத் திகழ்கிறாள். களவு, கற்பு என்ற இரு கைகோள்களில் காதலர்களின் களவொழுக்கம் சமுதாயத்தில் ஏற்கப்பட்டாலும், கற்பு எனப்படும் திருமண வாழ்க்கையே உயரியதாகக் கருதியது சமுதாயம். களவு வழிப்பட்ட கற்பு மணம் என்பது முறையாகும். களவே வாழ்வாகாது. அது கற்பில் முடிய வேண்டும்.

தொல்காப்பியர்,

**“உயரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று”[31]**

என்பர். நாணத்தைக் காக்க உயிரை விடவேண்டும் என்றும், கற்பைக் காக்க (உயிரோடு) நாணத்தை விடவேண்டும் என்கிறார்.

உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்து ஒருவரையொருவர் பிரிய இயலாது தவிப்பர். இந்தத் தவிப்பு விடுபட கற்பென்னும் வாழ்வு வேண்டும்.

**“நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி,**
**இருவேம் ஆய்ந்த மன்றல் இது என,**
**நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?”[32]**

எனத் தோழிக் கூற்றாகப் பாடுவர் கபிலர். இங்குத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ? என்கிறாள். தோழியும் தலைவியும் அறியாச் சிறுமியர் அல்லர். எதனையும் அறியும் ஆற்றலும், நோற்றுப் பெற்ற பண்பும், பாங்கும் நிறைந்தவர்கள் என்கிறாள். இந்தக் களவு மணத்தை நாங்கள் ஆய்ந்து முடித்தோம். இதனால் குடிப்பழி ஏதும் வரப்போவதில்லை என்று செவிலியிடம் உரைகிறாள். தலைவியானவள் மிகுந்தஅன்பு கொண்டவளாக இருப்பினும் அறத்தை மதிப்பவளாகவும், குடிப்பெருமை போற்றும் பண்பு உள்ளவளாகவும் இருக்கிறாள் எனச் சுட்டுவர் கபிலர்.

**முல்லை உரிப்பொருள்**

தலைமகனும், தலைமகளும் பிரிந்து, பிரிவினால் துயரம் அடைந்து மீண்டும் தலைவன் தலைவியை இணையும் காலத்தையும், தலைவி தலைவனை இணையும் காலத்தையும் எதிர்நோக்கிக் காத்திருக்கும் தன்மையைக் குறிப்பது இருத்தல் நிமிர்த்தமாகும் இது முல்லைக்குரிய உரிப்பொருள்.

தொல்காப்பியர் முல்லைத்திணையை முதலில் குறிக்கிறார்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்’”[33]**

என நிலத்தையும்,

**"காரும் மாலையும் முல்லை"**[34]

எனக் காலத்தையும்,

**"ஆயர் வேட்டுவர் "**[35]

என மக்களை குறிக்கும் நெறியில் முல்லையைத் தொல்காப்பியர் உரைப்பது நோக்குற்குரியதாகும்.

இருத்தல் என்பதற்கு இளம்பூரணர் **"தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல்"**[36] என்று பொதுபடவும்; நச்சினார்க்கினியர் **"தலைவன் பிரிவுணர்த்திய வழிப் பிரியாரென்றிருத்தலும், பிரிந்துழிக் குறித்த பருவமென்றென்று தானே கூறுதலும் போல்வன"**[37] எனவும், **"இருத்தல் என்று நுண்ணிய வேறுபாடு காட்டி நுட்பமாகவும் கூறியுள்ளார்"**[38] என்று நா.சோ. பாரதியாரும் கூறுவர்.

இவ்வுரைகளின் வழியில் இருத்தல் என்பது ஆற்றிருத்தல் குறிப்பதாகும் என்பது புலனாகிறது.

தொல்காப்பியர் முல்லைத்திணையை **"முல்லையஞ் சான்ற கற்பு"** என்பதிலிருந்து முல்லைத்திணையைக் கற்புக்கான திணையாகவே சுட்டுவர். இத்திணையில் நிகழும் பிரிவில் தலைவன் போரியல் பிரிவினையோ, வேந்தர்க்குற்றுழிப் பிரிவையோ, காவற்பிரிவையோ மேற்கொள்ளுதல் வழக்கம். இப்பிரிவுக் காலத்தில் தலைவன் வினைமுடித்து வரும் நிலையில் தலைவி ஆற்றியிருத்தலால் இதன் உரிப்பொருளும் **"இல்லிருத்தல் முல்லை"** என குறிக்கப்படுகின்றது. தலைவன் பிரிந்திருக்கும் நிலையில் காதலர்களுக்கிடையே அன்பு மிகும் இருப்பினும் பிரிவுத்துயரை வெளிப்படுத்தாமல் இருத்தல் 'ஆற்றியிருத்தல்' என்பதாகும்.

**முல்லைத்திணைப் பாடியப் புலவர்கள்**

முல்லைத்திணையில் 72 புலவர்கள் 217 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் பேயனார் ஆவார். முல்லைத்திணையில் 103 பாடல்களையும் குறிஞ்சி திணையில் 1 பாடலையும், மருதத்திணையில்

1 பாடலையும் என 105 அகப்பாடல்களைப் பாடியுள்ளார். புறம் பாடாதவர். பேயனாருக்கு அடுத்தநிலையில் முல்லைத்திணைப் பாடல்களைப் பாடியவர் நல்லுருத்திரனார். இவர் முல்லைக்கலியில் 17 பாடல்களைப் பாடியுள்ளார். மேலும், முல்லைத்திணையில் ஒரு பாடலைப் பாடியப்புலவர்கள் எண்ணிக்கை 57.

முல்லைத்திணையில் அதிகமான பாடலைப் பாடிய பேயனாரைக் குறித்துப் "பேயனார் முதல், கரு, உரி என்ற மூன்றானும் மரபுப்படி முல்லை நூறு பாடியவர். இந்நூறும் கற்புத்திணையன. மற்றும் மரபு வழிப்பாடினாலும் உள்ள சிறப்புக் குன்றாது என்பதற்குப் பேயனார் அகங்கள் எடுத்துக்காட்டு. புலவர் நல்ல துறைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார்"[39] எனக் கருத்துரை வழங்குவர் வ.சுப. மாணிக்கம் அவர்கள்.

தேர்ப்பாகனின் விரைவு; வினைமுடித்து மீளும் தலைவனின் உள்ள விரைவுக்கும் உள்ள நிலையினை,

**"ஆறு வனப்பு எய்த அலர் தாயினவே**
**வேந்து விட்டனனே் மா விரைந்தனவே**
**முன்னுறக் கடவுமதி பாக்-**
**நல் நுதல் அரிவை தன் நலம் பெறவே"[40]**

எனப் பாடுவர் பேயனார். மலர்ந்த மலரினை ஒப்ப உள்ளத்துடன் வினைமுடித்த தலைவனின், உள்ளத்தில் காதல் பூத்துள்ளது. தலைவன், தலைவியைக் காண்பதற்காகவும் அவளின் துயரினை தீர்க்கவும் அந்தி மாலைக்கு முன் இல்லத்திலே அவளைக் காண குதிரையின் வேகத்தையும் கடந்து செல்கிறான் தலைவன்.

**வாடைக்காற்றில் தலைவியின் உள்ளம்**

தலைவியை விடுத்துப் பொருள் தேடிச் செல்கிறான் தலைவன். அவனின் வருகையை உணர்ந்த தோழி தலைவியிடம் உரைகிறாள். தினமும் மாலையில் நும்மை வருத்திய வாடைக்காற்றுப் பற்றி,

**"அல்கலும் அலைக்கும் நல்கா வாடை,**
**பரும யானை அயா உயிர்த்தாஅங்கு,**
**இன்னும் வருமே - தோழி - வாரா**

**வன்கணாளரோடு இயைந்த**
**புன்கண் மாலையும் புலம்பும் முந்துறுத்தே"** [41]

எனத் தலைவிக்கு வாடைக்காற்று இன்பத்தை ஊட்டியதை தோழியின் கூற்றாகப் பாடுவர் இளம்புல்லூர்க் காவிதி.

தலைவனை நீங்கியதால் இன்பம் உண்டாக்காத வாடைக் காற்றுடன் மாலைப்பொழுது வந்தது. அக்காற்றானது பருவ யானை பெருமூச்சு விட்டார் போல தலைவிக்குத் துயரத்தினை அளித்தது. இனித் தலைவன் வந்துவிட்டான், வந்த பிறகும் இன்றும் அவ்வாடைக் காற்று வரும். அது இன்ப உணர்வின் வாடையாக வரும். தலைவன் வருகையில் இனி துன்பத்தினைத் தராது. வாடைக்காற்று காலப்பருவத்தின் இயல்பு. தலைவன் பிரிவில் துன்பத்தையும், கூடலில் இன்பத்தையும் அளித்தது வாடைக்காற்று என்பது புலவரின் கருத்தாக்கமாகும்.

**கார்காலமும் தலைவியின் உளப்பாங்கும்**

தலைவன் குறித்துச் சென்ற கார்காலம் வரவுவுற்றது. அவன் வரவில்லை. தலைவியின் துயரை,

**"மனை நடு மௌவலொடு ஊழ் முகை அவிழ,**
**கார் எதிர்ந்தன்றால், காலை காதலர்**
**தவச் சேய் நாட்டர் ஆயினும், மிகப்பேர்**
**அன்பினர் - வாழி, தோழி - நன் புகழ்**
**உலப்பு இன்று பெறினும் தவிரலர்**
**கேட்டிசின் அல்லெனோ, விசும்பின் தகவே?"** [42]

எனத் தோழி ஆற்றுப்படுத்துவதாகப் பாடுவர் புலவர். கார்காலத்தின் வரவை உணர்கிறாள் தோழி. தலைவன் தொலைவிலுள்ள நாட்டில் இருந்தாலும் அவருள்ளம் நம்மையே நினைத்திருக்கும் வினைமுடித்து திரும்புதல் இயலாத நிலையிலும் புகழிற்கு; நேரம் பழியும் கருதாது விரைவாக வந்து விடுவார் எனத் தலைவியைப் பருவம் காட்டி ஆற்றுப்படுத்துகிறாள் தோழி.

**"முல்லை வைந் நுனை தோன்ற, இல்லமொடு**
**பைங் காற் கொன்றை மென் பிணி அவிழ,**

**இரும்பு திரித்தன்ன மா இரு மருப்பின்,**
**பரல் அவல் அடைய, இரலை, தெறிப்ப,**
**மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்ப,**
**கருவி வானம் கதழ் உறை சிதறி,**
**கார் செய்தன்றே, கவின் பெறு கானம்"[43]**

எனப் பாடுவர் குறுங்குடி மருதனார்.

தலைவன் வரும் வழியில் துணையோடு இருக்கும் வண்டானது தனது தேரோசையால் பிரிய நேரும் என வருந்தி, தன் தேர் மணிகளின் நாவினை ஒலிக்காமற் கட்டுவான். இத்தகைய இரக்கமுள்ளத் தலைவன் உன்னைப் பிரிய விரும்பான். விரைவில் இல்லம் சேர்ந்து இன்பம் துய்ப்பான் எனத் தோழி உரைப்பதாகப் பாடுவர் புலவர்.

**"அழுதனள் உறையும் அம் மா அரிவை**
**விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய**
**முறுவல் இன் நகை காண்கம்-**
**உறு பகை தணித்தனன், உரவு வாள் வேந்தே"[44]**

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் அகம்பன்மாலாதனார். வினைமுடித்த தலைவன் தேர்பாகனிடம் உரைக்கிறான். என் காதலியின் துன்பத்தைக் களைய வேண்டும். அவளின் நகை முகத்தைக் காணவேண்டும். என் வரவிற்காக நல்உணவு சமைத்து இருப்பாள் தலைவனின் உடலினும், உயிர் மிகுதியும் இன்பம் வேட்கையில் இருப்பதை உணர்த்துவர் புலவர்.

"காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை எனப்படும். கார்கால மாலையில் முல்லை நிலத்தில் இருத்தல் ஒழுக்கம் நிகழும். இருத்தல் என்பது பிரிந்து போன காதலன் திரும்பும் வரையிலும் காதலி தன் கற்பின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முல்லை ஒழுக்கம். முல்லை ஒழுக்கத்தினையே சுருக்கமாக இருத்தல் என்பர்"[45] என்னும் அ.ச. ஞானசம்பந்தனின் கூற்று ஒப்புநோக்கத்தக்கதாகும்.

முல்லை - காடு அடர்ந்த பசுமையானப்பகுதி. விலங்குகள் இயந்து வாழ்வது இயல்பு. போர்முடித்து வரும் தலைவனுக்கு இக்காட்சிகள் துன்பத்தினை விலக்கி இன்பத்தை உண்டாக்கும்.

**மருதம் உரிப்பொருள்**

மருதத்திற்குரிய உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். தலைவி, தலைவனை ஊடுவதற்குத் தலைமகனின் பரத்தையிற் பிரிவு காரணமாகும். ஊடல் புணர்ச்சியை மையப்படுத்தியும் நிகழும். இயல்பாகவும் நிகழும். ஊடல்கள் தோன்றிய அளவில் மறைந்துவிடும். அங்ஙனம் மறையாமல் நீட்டிக்கின்ற ஊடலும் உண்டு. எல்லா ஒழுக்கத்திலும் ஊடல் உண்டு. ஊடல் உடன் மாறுதலும் உண்டு. சில நீட்டித்தும் இருக்கும். "இருத்தலிலும், ஊடல் நிகழும் இவ்வூடல் மிகும்வழி இரங்குதலும் நிகழும். ஆதலின், ஊடல் ஏனை நான்கு உரிப்பொருள் பற்றியும் வருதலின் அந்நான்கிற்கும் பொது என்று இதைக் குறிப்பிடுகின்றார்"[46] என்னும் பொ.வே. சோமசுந்தரனாரின் பொருளுரை ஊடலின் பரப்பை உணர்த்தி நிற்கிறது.

தலைவன் பரத்தையிற் பிரிந்தால் தலைவி கொள்ளும் மனமாறுபாட்டை ஊடல் என்றும், புலவி என்றும் துனி என்றும் மூன்று நிலைகளாகச் சான்றோர்கள் பிரித்தனர். பேராசிரியர் புலவி என்பது புணர்ச்சியால் வந்த மகிழ்ச்சி குறைவுபடாமல் காலம் கருதிக் கொண்டு பயப்பதோர் உள்ள நிகழ்ச்சி என்றும், ஊடல் என்பதற்கு உள்ளத்து நிகழ்ந்தததனைக் குறிப்பு மொழியாளன்றிக் கூற்று மொழியால் உரைப்பது என உரைப்பர்.

> **"துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
> **கனியும் கருக்காயும் அற்று"[47]**

என்பது வள்ளுவம். காமப்புணர்ச்சிக்கண் துனி, புலவி, ஊடல் என்ற மூன்றும் காமஇன்பத்துக்குச் சிறப்புத் தரும். "காதலிருவர் கருத்தும் ஒத்துத் தம்முள் கூடிக்களித்து வாழுமிடத்து இருவர் நெஞ்சும், புணர்ச்சி கருதி புலத்தலே ஊடுதல் ஆகும்"[48] என்றும், ஊடல், புலவி, புலத்தல் என்பன ஒரே பொருளைத் தருவன என்பது பொ. வே. சோமசுந்தரனாரின் கருத்தாகும்.

தலைவன் தனது இயல்பான நிலையிலிருந்து மாறிய நிலையில் அதனை கண்டத் தலைவி, பிணங்குவாள். இருப்பினும் தலைவன், தலைவி மீது கொண்ட அன்பில் மாறாமல் நிற்பான். அவனின் செயலைக் கண்டு பிணங்கிய ஊடல் அன்பின் வழிபட்டதாகும். அது ஊடல் நிமித்தமாக அமைந்தது. **"மருதம், மாந்தனை நாகரிகப்படுத்திய பகுதி. ஓடித்திரிந்து கொண்டிருந்தவனை ஓரிடத்தில் இருத்திய பகுதி. நாள் உணவுக்குத் தேடி அலைந்தவனுக்கு வாழ்நாள் அளவும் உண்டி அளித்த பகுதி. சிலநாள் உழைப்பால் பல நாள் பிழைப்பிக்கும் பகுதி. உழைத்த நாள்களை விட ஓய்வுநாட்கள் மிகுதி. ஓய்வு உணர்வை அலைக்கும் உடலை அழைக்கும். பரத்தையருடன் பிணைக்கும். தலைவியர் நினைவைப் பிளக்கும் தலைவியரைப் பிணைக்கும். தலைவியர் நினைவைப் பிளக்கும் தலைவியரைப் பிணைப்பிக்கும். ஊடல் வரும். உரை மோதல் வரும். எனவே, மருத நிலச் சிறப்பு நிலை கருதி, அந்நிலத்தோடு ஊடல் ஓதப்பட்டது"[49]** என்னும் க.ப. அறவாணனின் ஆய்வுரை மருதநிலமக்களின் ஊடல் செயலுக்கு அமைதியை உண்டாக்கும் நிலையாகும்.

"வைகறையில் மருத நிலத்தின் ஒழுக்கம் நிகழும். வெள்ளியை உருக்கி வார்த்தாற் போன்ற பளபளப்பான நீர்வளமிக்க வயல் நிலமானது. தனது வளஞ் சேர்ந்த வெண்ணிறத்தால், வளப்பெருக்கால் பல அரிய தொழில் உண்டாகின்றது. மாடமாளிகைகளும், பல்வகைச் செல்வங்களும் ஊடலை உண்டாக்கும். செல்வச் செருக்கே ஊடலுக்குக் காரணமாகும்"[50] என்னும் புலவர் குழந்தையின் ஆய்வுரையும் ஊடலில் மருத நில மக்களின் வாழ்வியல் சூழ்நிலையை உணர்த்தி நிற்கிறது.

பரத்தையரிடத்திலிருந்து தலைவன் வரும் காலம் வைகறையே. எனவே, தலைவி ஊடுதற்குரியக் காலமாக வைகறை உணர்த்தப்பட்டுள்ளது. மருதத்தலைவன் செல்வச் செழிப்பும், கலையுணர்ச்சியும் பெற்றவனாகத் திகழ்கிறான். பரத்தமை ஒழுக்கத்திற்குச் செல்வம் காரணமாக இருந்திருக்கிறது.

**மருதம் பாடியப் புலவர்கள்**

மருதத்திணையில் 59 புலவர்கள் 251 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவராக கருதப்படுபவர் ஓரம்போகியார் ஆவார்.

ஓரம்போகியார் 109 பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் மருத்திணையில் 107 பாடல்களையும், குறிஞ்சித்திணையில் ஒரு பாடலும், நெய்தல் திணையில் ஒரு பாடலும் பாடியுள்ளார். மூன்று திணைகளில் பாடியவர் ஆவார். "களவொழுக்கச் செய்யுட்கள் 15, கற்பொழுக்கச் செய்யுட்கள் 94, தோழிக்கு 45, தலைவிக்கு 42, பரத்தைக்கு 12, தலைவனுக்கு 8, வாயில்கட்கு 1, பரத்தையின் தோழிக்கு 1 என்பன கூற்றுத் தொகைகள். இவர்தம் களவுப்பாடல்களில் தலைவி கூற்று இடம் பெறவில்லை"[51] என வ. சுப. மாணிக்கம் ஓரம்போகியார் பாடல்களை வகைப்படுவர்.

மருதத்திணைப் பாடல்களை மிகுதியாகப் பாடியமையால் மருதப்புலவர் என அழைக்கப்படுகிறார். இவரின் பாடல்களில் தலைவனின் பரத்தை ஒழுக்கத்தின் இழிநிலைகள் இன்னது எனச் சுட்டப்பட்டுள்ளன. தலைவனை நன்னெறிபடுத்த வேண்டும் என்பது புலவரின் உட்கிடக்கையாக இருப்பதை உணரலாம்.

**"முள்ளி நீடிய முது நீர் அடைகரைப்**
**புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்**
**தண் துறை ஊரன் தெளிப்பவும்,**
**உண்கண் பசப்பது எவன்கொல்? - அன்னாய்?"[52]**

என்பது ஓரம்போகியாரின் தலைவன் கூற்றுப் பாடலாகும். இதன்வழி பரத்தமை ஒழுக்கம் சமூக குற்றமாகக் கருதபட்டிருக்கிறது. இப்பண்பில் இருந்து விடுபட்டு ஒழுக்கம் சார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பது ஓரம்போகியாரின் கருத்தாகும் என்பதை உணரலாம்.

மருதனிளநாகனார், மருதத்திணையில் 39 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் ஐந்திணைப் பாடியப் புலவர் என்ற சிறப்பினைப் பெற்றவர். குறிஞ்சி திணையில் 8 பாடல்களையும், முல்லை திணையில் 5 பாடல்களையும், மருதத்திணையில் 39 பாடல்களையும், நெய்தல் திணையில் 5 பாடல்களையும், பாலைதிணையில் 17 என 74 பாடல்களைப் பாடியுள்ளார். 45 புலவர்கள் மருததிணையில் ஒரு பாடலை பாடியுள்ளனர் என்பதும் அறியத் தகுந்ததாகும்.

"பரத்தையிற் பிரிவு வரையில் தலைவன், தலைவியர்களுடைய அன்பு தலைமைக் கருத்தாய் இருந்து இவ்வரலாற்றை நடத்துகின்றது. பரத்தையிற்

பிரிவில் தலைவியின் கற்பே இலக்காக நிற்ப, அதனைச் சுற்றிப் பலப்பல நிகழ்ச்சிகள் புனையப்படுகின்றன. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவாதலின் பலவகைக் குறைபாடுகள் பொருந்திய பரத்தையிற் பிரிவிலும், கற்பு நெறியின் சிறந்த தன்மை புலவர்களாற் புலப்படுத்தப் பட்டிருத்தல் அறிந்து மகிழ்வதற்கு உரியதாகும்"[53] என்னும் உ.வே. சாமிநாத ஐயரின் ஆய்வுரை புலவர்கள் சமுதாயச்சிற்பிகள் என்னும் கருத்தாக்கத்திற்குத் துணையாகின்றது. ஊடல் உரிப்பொருள் கருத்தாக்கம் தலைவியின் மாட்டே நிகழ்வதைப் பல்லாற்றானும் புலவர்கள் உணர்த்திப் பாடியிருப்பது நோக்குதற்குரியதாகும்.

தொல்காப்பியர்,

**"உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**
**புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய"[54]**

என்பது நூற்பா. தலைவன் தன் தவறின்மையைக் கூறிய பின்பும், ஊடல் நிலை எல்லை கடந்த போதும், களவில் தலைவி குறிதப்பிய நிலையிலும் புலத்தலும் ஊடலும் தலைவனிடமும் நிகழும்.

**மருதத்தலைவனின் ஊடல்**

பரணர் மருதத்தலைவனின் ஊடலை,

**"எவ்வி இழந்த வறுமையர் பாணர்**
**பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று**
**இனைமதி வாழியர் நெஞ்சே மனைமரத்து**
**எல்லுறும் மௌவல் நாறும்**
**பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே?"[55]**

தலைவன் கூற்றாகப் பாடுவர். நீண்ட கூந்தலையுடைய தலைவி என்னிடம் அன்பும், ஆதரவும் காட்டாமல் பிணங்குகின்றாள். இனி இவள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளுவாளோ? அறியேன். இவளின் ஊடல் இன்னும் தெளியவில்லை. இனி எங்ஙனம் இருப்பாள் எனத் தலைவனின் ஊடல் மொழியை உணர்த்துவர் பரணர்.

**மருதத் தலைவியின் ஊடல்**

பரத்தையை நாடியத் தலைவனின் இயல்பினை,

> **"மணந்தனை அருளாய் ஆயினும், பைபயத்**
> **தணந்தனை ஆகி உய்ம்மோ - நும் ஊர்**
> **ஒண் தொடி முன் கை ஆயமும்**
> **தண் துறை ஊரன் பெண்டு எனப்படற்கே"[56]**

எனத் தலைவியின் கூற்றாகப் பாடுவர் ஓரம்போகியார்.

உன் செயலால் பரத்தையே உன் மனைவியென ஊரார் கருதுவர். உன் மனைவி என்ற பெருமை என்னைவிட பரத்தைக்கே உரியதாக செய்கிறாய். மனைவியை விடுத்துப் பரத்தைக்கு இல்லாளாக இருக்கும் உன் செயலை ஊரார் விரும்பார் எனத் தலைவனின் பரத்தமையை விரும்பாதத் தலைவியின் உளப்பாங்கினை உணர்த்துவர் ஓரம்போகியார்.

**நெய்தல் உரிப்பொருள்**

நெய்தலுக்கு உரிய பொருள் இரங்கல். தலைவன் பிரிந்த காலத்தில் மனம் வேறுபாடு அடைதல் தொடர்ந்து கடலலை, அவன் பிரிந்த இடம் இவைகள் துன்பத்தை மிகுவிக்கும். இந்தப் பருவத்தில் நீர்ப்பரப்பில் இரைத்தேடி உண்டு கூட்டை நோக்கி விரையும் சேவல், பேடு இவைகளைக் கண்ணுறும் காலத்தில் துன்ப உணர்வு உள்ளத்தில் மிகும். நெய்தல் திணையில் களவு பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மேலும், வரைவிடைப்பிரிபும், ஆற்றாமையும், ஆற்றுவிக்க முயலுதலும் ஆகிய துறைப்பாடல்களும் காணப்படுகின்றன.

"வெஞ்சுடர் வெப்பம்தீரத் தண்ணலும் சோலை தாழ்ந்து நீழற் செய்யவும், தண்பதம் பட்டதெண்கழி மேய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவின் நாற்றம் முன்னின்று, கற்றவும் நெடுந்திரை அழுவத்து நிலாக்கதிர் பரப்பவும், காதல் கைம்மிக்குக் கடற்கானும், கானற்கானும் நிறை கடந்த வேட்கை புலப்பட உரைத்தலின் ஆண்டுக் காமக்குறிப்பு வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் ஏற்பாடு நெய்தலுக்கு வந்தது"[57] என நெய்தல் திணையின் உரிப்பொருளின் தன்மையையும் சிறுபொழுதின் இயல்பினையும் சுட்டுவர் நச்சினார்க்கினியர்.

"தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் கடலும் கானலும் காணுந்தோறும் இரக்கம் மிகுதலால், கடலையும் கடலைச் சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றனர். அன்றியும் கடற்கரைக் கழிகளில் நெய்தல் மலர் சிறந்து விளங்குவதால் நெய்தல் என்று பெயர் வந்ததாகக் கொள்ளலாம்"[58] எனப் புலவர் குழந்தையும்,

"நெய்தற் கடற் கானல். கடலோர மாந்தர்க்கு உணர்வுந்தல் மிகுதி. நெய்தற் பெண்டிர்தம் காதலத் கடலோடியர். அவர்தம் கடற்பிரிவு. அப்பிரிவால் ஏற்படும் உடற்பிரிவு, பெண்டிரை வாட்டும். கடற்காற்றிற்கு ஆற்றாது, நினைவுகளின் பிழிவால் அம்மகளிர் நெக்குருகுவர். அதனால் 'இரங்கல்' - நெய்தல் உரிப்பொருளாயிற்று"[59] என அறிஞர் க.ப. அறவாணனும் குறிப்பது வழி நெய்தல் திணையின் உரிப்பொருளின் இயல்பினை உணரலாம்.

நெய்தல் திணையில் வாழும் மக்களின் அகவுணர்வு இயல்பாகவே மிகுதி. கடலலை கடற்பரப்பில் மோதுவது போன்று தலைவனின் நினைவுகளும் தலைவிக்கு மோதும். தலைவன் உடனுறை இல்லையே என்னும் உணர்வு மனம் வெம்மையை மிகுவிக்கும். தன் உணர்வுகளை உயர்திணை, அஃறிணையிடத்தில் உரைப்பாள். மேலும், கடற்கரைப் பகுதியில் தலைவன் பிரிதலின் காலத்தில் நிகழும் நிகழ்வுகள் இரங்கல் நிமித்தமாகும். நெய்தல் தலைவி இருவேறு மனநிலைகளில் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவாள். தன் அன்பானவனைப் பிரிந்ததினாலாகிய ஆற்றாமையை வெளிப்படுத்துதல், பிரிவினால் தலைவனுக்கு உண்டாகும் துன்பத்தையும் உரைத்தல்.

**நெய்தல் பாடியப் புலவர்கள்**

நெய்தல் திணை அகப்பாடல்களில் 103 புலவர்கள் 341 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர் அம்மூவனார் ஆவார். அம்மூவனாரின் பாடல்கள் 127 அவற்றில் நெய்தல் திணையில் 123 பாடல்களும், குறிஞ்சித்திணையில் 1 பாடலும், பாலைத்திணையில் மூன்றுப்பாடல்களும் பாடியுள்ளார். இவர் புறம் பாடவில்லை. அகம் மட்டுமே பாடியவர் ஆவார். "களவுப்பாடல் - 82, கற்புப்பாடல் - 45, தலைவி கூற்று 56, தோழிகூற்று - 43, தலைவன் கூற்று 17, பரத்தை கூற்று -10 பாடல்களும், நற்றாய் கூற்று -1"[60] என வ.சுப. மாணிக்கனார் வகைப்படுத்துவர்.

மேலும் ‘பிற்கால இலக்கியங்கட்குப் பல புதுவழி திறந்தவர்’ என்றும் ‘நிகழ்ச்சிகளைக் கோவையாக நிரல்படத் தொடுப்பதில் வல்லவர் என்றும் இவரை வ.சுப. மாணிக்கனார் கூறுவர். களவு, கற்பு என இருவகைப் பாடல்களையும் திறம்படப் பாடுபவர்.

அம்மூவனாருக்கு அடுத்தநிலையில் நெய்தல் திணைப்பாடல்களைப் பாடியவர். நல்லந்துவனார் 36 பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் 34 நெய்தல் திணைப்பாடல்களும், குறிஞ்சித்திணையில் 1 பாடலும் பாலைத்திணையில் 1 பாடலும் பாடியுள்ளார். இவர் அகமும், புறமும் பாடியவர் ஆவார். மேலும் நெய்தல் திணையில் 1 பாடல் முறையில் 75 புலவர்கள் பாடியுள்ளனர்.

**களவை மறுத்து இடித்துரைக்கும் தலைவி**

தலைவன் களவை நீட்டிக்க நாணவேண்டியவன் என்பதை,

> **"நாணின கொல், தோழி? நாணின கொல், தோழி?**
> **இரவு எலாம் நல்தோழி நாணின - என்பவை**
> **வாள்நிலா ஏய்க்கும் வயங்குஒளி எக்கர் மேல்,**
> **ஆனாப் பரிய அலவன் அளை புகூஉம்-**
> **கானல், கமழ்ஞாழல் வீ ஏய்ப்ப, தோழி என்**
> **மேனி சிதைத்தான் துறை"[61]**

எனப் பாடுவர் நல்லந்துவனார். தலைவனின் மேனி மெலிவதைக் கண்டு கவலைப்பட வேண்டியவன் தலைவனே, ஆயின் தலைவனானவன் செய்யாது விடுத்த செயலினை நண்டுகள் செய்தனவாம். தலைமகளின் மேனி மெலிவதைக் காணமுடியாமல் நண்டுகள் பொந்துக்குள் போய் விட்டன. அவ்வாறு; பொந்தினுள் போகாதிருந்தால் தலைவிக்கு உங்கள் ஊர் தலைமகன் செய்யும் செயல் முறைதானா? எனக் கேட்கும் இது தலைவனுக்கு நாணத்தை உண்டாக்க வேண்டும். இவ்வாறு தலைவன் நாணாமைக்கு நண்டுகள் நாணின என்பதை உள்ளுறையாக பாடுவர் நல்லந்துவன். தலைவன் வரைவை நீட்டிப்பதில் உளம் கொள்வான் என்பது அகப்பொருள் மரபாகும்.

**வண்டினைத் தூதாக்கிய தலைவி:**

நெய்தற் தலைவி தலைவனின் பிரிவினைத் தாங்காமல்

> **"கானலும் கழறாது கழியும் கூறாது**
> **தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது**
> **ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே**
> **இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்**
> **கமழ்இதழ் நாற்றம் அமிழ்துஎன நசைஇ,**
> **தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து"[62]**

என தலைவியின் மொழியை வண்டின் வழியே உணர்த்துவார் மதுரை கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்.

தலைவி தனது வேட்கை மிகுதியால் கேளாதவற்றைக் கேட்பவையாக விளித்துத் தலைவனிடத்துச் சென்று தன் துன்பமிகுதியினை எடுத்துக் கூறுவதாகும். வண்டே! தலைவனின் பிரிவால் அடையும் துன்பத்தை கடற்கரைச் சோலையும் சென்று தலைவனிடம் கூறாது; உப்பங்கழியும் கூறாது; வண்டுகள் ஒலிக்கும் மணங்கமழும் மலரினையுடைய புன்னையும் போய் சொல்லாது. இவ்விடத்தில் உன்னையன்றி என் மனத்துயரினை எடுத்துக் கூற யாரையும் பெற்றிலேன். ஆகவே, தலைவனிடம் என் துன்பத்தினை உரைப்பாயாக என்கிறாள். அகமரபில் உள்ளக் கருத்தைத் தூதின் வழியே புலப்படுவதைப் புலவர்கள் உத்தியாகக் கையாண்டு உள்ளதை உணரலாம்.

**அன்பின் மிகுதியை உணர்த்தும் அணிகலன்**

> **"கோடு புலம் கொட்ப, கடல் எழுந்து முழங்க,**
> **பாடு இமிழ் பனித் துறை ஓடு கலம் உகைக்கும்**
> **துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன,**
> **வீங்கின மாதோ - தோழி என் வளையே"[63]**

என்பது அம்மூவனார் பாடல்.

தலைவிக் கூற்றாக அமையப்பெற்றதாகும். இங்குத் தலைவி 'பிரிந்தென நெகிழ்ந்தன' என்றாள். அதாவது, தலைவன் தம்மைவிட்டுப் பிரிந்தவுடன் வளையலும் கழன்று விழுந்தன. ஆனால், தலைவன் வந்தவுடன் வளையல்கள்

செறியுற்றன என உள்ளத்தின் இன்பத்தை வளையல் வழி உணர்த்துவாள் தலைவி. என் காதலை நான் மறைக்க எண்ணினாலும் வளையல்கள் ஊராருக்கு பறைச்சாற்றி விடுகின்றன.

காலை நேரத்தில் நெய்தல் நிலத்தில் இரங்கல் ஒழுக்கம் நிகழும். கடலில் அலைகள் மீண்டும் மீண்டும் வந்து மறையும். கடற்கரையில் மணல்மேட்டை உண்டாகி சிறிது நேரம் நிலைத்துப் பின் மறையும். இக்காட்சியானது பிறப்பு, இறப்புக்களையும், நிலையாமையையும் உணர்த்தி இரக்க உணர்வை உண்டாக்குகின்றது. கடலலைபோன்றே அகஉணர்வும் மேலோங்கி பின் இயல்பு நிலைக்கு வரும். தலைவி, தலைவனின் பிரிவை எண்ணி மனம் வருந்துதலும் தன் உள்ளத் துயரத்தை வாய்விட்டு உரைப்பதும் இயல்பாகும்.

**பாலை உரிப்பொருள்**

பாலைக்குரிய உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றிக்கு நிலம் தொல்காப்பியம் வழி அறியப்படுகிறது. ஆயின், பாலைக்கு நிலம் அறியப்படவில்லை. குறிஞ்சி, முல்லை திரிந்த பகுதி பாலை என இளங்கோ சுட்டுவர். அகத்திணையியலில் கைக்கிளை, பெருந்திணைக்கு நிலம் சுட்டப்பெறவில்லை. இவ்வாறான அமைப்புப் பாலைக்கும் உண்டு.

பொருள்வயிற்பிரிவைப் புனைதலைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாலைத் திணைக்கு "பிரிதல் நிமித்தம் கூறப்பட்டது எனலாம். பிரிவிற்கு முன்பே பிரிதலுக்கு அஞ்சுவது பாலை. பிரிவிற்கு அஞ்சுவாளைப் பாலை உரைக்கும். "பிரிவுப்பொருளைப் பற்றி மட்டுமே பதினேழு நூற்பாக்களில் (அகத்திணை 13, 17, 18, 27-37, 46-48) விரிவாக விளக்குவர் நூலாசிரியரைத் தழுவி உரையாசிரியர்களும் பிரிவை விரிவுற ஆய்வர். இலக்கணத்தில் மட்டுமின்றிச் சங்க இலக்கிய உலகிலும் பாலைப் பாடல்கள் மிகுதி"[64] என பாலையின் இலக்கிய பரப்பினை உணர்த்துவர் அறிஞர் க.ப. அறவாணன்.

தொல்காப்பியர் பதினேழு வகை பிரிவுகளைச் சுட்டுவர். ஓதல், பகை, தூது ஆகியவற்றை தலைமைப் பிரிவாக உரைப்பர். மற்றையப் பிரிவுகளை அவற்றைச்

சார்பாகக் குறிப்பர். இவ்வகையானப் பிரிவுகள் களவுக் காலத்திலும் நிகழும், கற்புக் காலத்திலும் நிகழும். களவு காலத்தில் உடன்போக்கு, ஒரு வழி தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு, பகை தணிவினைப் பிரிவு (தூதிற் பிரிவு) துணைவயிற் பிரிவு (வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவு) பொருள் வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு ஆகிய பிரிவுகளும் நிகழும் என்பது தொல்காப்பியரின் பிரிவு கோட்பாடாகும்.

தலைவன், தலைவியின் களவு வெளிப்பட்டவுடன் ஒருவழித்தணந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும். அவ்வாறு மணப்பதற்கு உற்றார் உறவினர்களுடன் தடைகள் ஏற்படும் நிலையில் உடன்போக்கு நிகழும். உடன்போக்குத் தோழியின் துணையுடன் நிகழும். தலைவி உடன்போக்கிற்கு விருப்பம் இல்லாதவளாகக் காணப்படுவாள். ஆயினும், களவு அலராகுமோ எனும் அச்சம். நொதுமலர் வரைவு, இற்செறிப்பு, வினை மேவித் தலைவன் பிரிவானென்ற அச்சம் இக்காரணிகளாலும், மேலும் இருவரும் இணைந்து இன்பமாக இல்லறம் நடத்த வேண்டும் எனும் பண்பும் மற்றும் தலைவனின் அன்பு மிகுதியும் தலைவியை உடன்போக்கிற்குத் தூண்டும் காரணிகளாக அமையப்பெற்று விடுகின்றன. 'தொல்காப்பியர்' **"கொண்டுதலைக் கழிதல்"**[65] எனச் சுட்டுவதும் நோக்கற்பாலது.

உடன் போக்கின் இயல்பை "உடன் போக்கில் இருவரும் கூடியிருப்பினும் இன்னும் மணமாகாமையால் பிரிவோமோ, பெற்றோரால் பிரிக்கப்படுவோமோ? என்று பிரிவுணர்ச்சி இருவர்தம், உள்ளத்தும் ஓடிக் கொண்டிருக்கும்.

> **"இடைச்சுர மருங்கின் அவன்தமர் எய்திக்**
> **கடைக் கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞர் எய்திக்**
> **கற்பொடு புணர்ந்த கெளவை"**

என்றலின் உடன்போக்கில் உள்ளத்துயர் உண்டு என்பது தெளிவு"[66] என அறிஞர் வ.சுப. மாணிக்கனார் உரைப்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

எனவே, பிரிவுப் பாலைக்குரியதாகும். பொருளுக்காக பிரிவு நிகழும். வாழ்விற்குப் பொருள் தேவை. பொருள் ஈட்ட தலைவன் பிரிய நேரும். உடன் தலைவியின் மனமும் வருந்தும் பொருள் ஈட்டப் பிரிதல் அகமரபாக உள்ளது.

அன்பின் இயல்பை புலவர்கள் தலைவன், தலைவியின் சொல்லாடல்கள் வழி உணர்த்துவர்.

**பாலைப் பாடியப் புலவர்கள்**

பாலைத்திணையில் 153 புலவர்கள் 504 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர் ஓதலாந்தையார் 103 பாடல்களைப் பாடியுள்ளார். பாலைத்திணையில் 102 பாடல்களையும், முல்லை திணையில் ஒரு பாடலையும் பாடியுள்ளார். மேலும் அகப்பாடல்களை மட்டும் பாடியச் சிறப்பிற்குரியவராகக் கருதப்படுகிறார். "தலைவன் 35, தோழி 25, தலைவி 19, நற்றாய் 13, கண்டோர் 7, செவிலி 2, அந்தணர் 1, அயலோர் 1 என்ற கூற்று வகையில் பாடற்றொகை அமைந்துள்ளது. களவிற்கு உரியன 38, கற்பிற்கு உரியன 65"[67] என வகைப்படுத்துவர் வ.சுப. மாணிக்கம்.

ஓதலாந்தையாரைத் தொடர்ந்து பெருங்கடுங்கோ 67 பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் பாலைத்திணையில் 66 பாடல்களையும் மருதத்திணையில் ஒரு பாடலையும் பாடியுள்ளார். மேலும் பாலைத்திணையில் 1 பாடல் வீதம் 106 புலவர்கள் பாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**துணைமலர்ப் பிணையலாய் தலைமக்கள்**

இடைச்சுரத்தில் தலைவன், தலைவியை அழைத்துச் செல்வதை,

**"இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்**
**புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்,**
**காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,**
**ஏதில் சிறுசெரு உறுப மன்னோர்**
**நல்லை மன்றம்ம பாலே - மெல் இயல்**
**துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்**
**மணம் மகிழ் இயற்கை காட்டியோயே"[68]**

எனக் கண்டோர் கூற்றாகப் பாடுவர் மோதாசனார். ஒருரினராய் அடுத்தடுத்து வாழ்ந்த காலத்தில் பிணக்குள் மிக அதிகம். ஆயினும், 'துணைமலர்ப் பிணையல் போல்' ஆயினர். அன்பின் நெறியில் இவர்களின் ஊழ்வினை வலிமை வாய்ந்ததாகும். 'நல்லைமன்றம்ம பாலே' என்று கண்டோர் கூற்றாக உரைப்பத்தின்

வழி அன்பின் வாழ்வை போற்றிய சமூகத்தின் உள்ளத்தை அறிய ஏதுவாக அமைகிறது.

பாலை தலைவன் பொருள்ஈட்டத் தலைவியைப் பிரிந்து செல்கிறான். செல்லும் வழியில் தலைவியின் உயர்ந்த பண்புகளை நினைத்து,

**"உயிர்இயைந் தன்ன நட்பின், அவ்உயிர்**
**வாழ்தல் அன்ன காதல்,**
**சாதன் அன்ன பிரிவு அரியோளே"**[69]

எனப் பாடுவர் நரைமுடி நெட்டையார். தலைவன் தன் கடமையை ஆற்றவேண்டுமென்று நினைக்கிறான். தலைவி காதலால் உள்ளம் திகைக்கிறது. மேலும், தலைவனின் உள்ளமானது இருபுறக் கணுக்களில் தீப்பற்றிக் கொள்ள ஒரு புறமும் செல்லவியலாது குழாயின் உள்ளே தவிக்கும் எறும்புபோல் தலைவன் இருக்கிறான். காதலிலும், கடமையிலும் கருத்துடையவன் தலைவன் என்பதே புலவரின் கருத்தாக அமைகிறது.

பட்டினப்பாலைத் தலைவன் தலைவியின்,

**"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய,**
**வாரேன் வாழிய, நெஞ்சே"**[70]

என்றும்,

**"வேலினும் வெய்ய, கானம் அவன்**
**கோலினும் தண்ணிய, தடமென் தோளே"**[71]

எனவும் பாடுவர் உருத்திரங்கண்ணனார். எல்லா வளங்களையும், பெருஞ்சிறப்பினையும் உடைய காவிரிப்பூம்பட்டினமே தலைவனுக்குக் கிடைத்தாலும், தலைவியின் அன்பு மிகுதியால் காதலியானவளைப் பிரிந்து வினைமேற் செல்வதைத் தவிர்கிறான்.

தற்காலிகமாக தலைவியைப் பிரிந்து செல்லாதிருத்தலை,

**"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்"**[72]

எனக் குறிப்பர் தொல்காப்பியர். பிரிதல் தவிர்க்க இயலாதது. ஆயினும், தலைவியின் அன்பினை வேறாக கருத இயலவில்லை என்பதே புலவர்களின் துணிவாகும்.

**கருப்பொருள், உரிப்பொருள், உள்ளுறை உவமம்**

புலவர்கள் அகமாந்தர்களின் உணர்வினைக் கருப்பொருளின் வழியாக உணர்த்திப் பாடுதல் மரபாகும். உள்ளுறை அகத்திற்கே இலக்கிய நுகர்வாளர்களுக்கு உள்ளுறை, உவமம் ஆகிய கூறுகள் படைப்பாளனின் உணர்வினை அறிய ஏதுவாக அமையும்.

**தொல்காப்பியரின் உள்ளுறை உவமம்**

உள்ளுறை உவமம் குறித்து தொல்காப்பியர்,

> **"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**
> **தள்ளாது ஆகுந் திணையுணர் வகையே"[73]**

எனவும்,

> **"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்**
> **கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே"[74]**

எனவும்,

> **"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**
> **உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"[75]**

எனவும் மூன்று நூற்பாக்களை வகுத்துள்ளார். இதற்கு, "உள்ளுறைக் கண்வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும் திணை உணரும் வகை தப்பாதாகும் என இளம்பூரணரும்,

மேற்கூறும் உள்ளுறை உவமம் தான் ஏனைய உவமமென்று கூறும்படி உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாய் நின்றது. அகத்திணை உணர்தற்கு கருவியாக உள்ளுறை உவமம் போல எல்லாத்திணையும் உணருங்கூற்றைத் தள்ளதாய் வரும் என நச்சினார்க்கினியரும்,

உள்ளுறையாவது கருப்பொருட் தெய்வம் ஒழிந்த பொருளை நிலம் எனக் கொள்ளும் என்ப 'குறி' அறிந்தோர் இடமாகக் கொண்டு வரும் என இளம்பூரணரும் உரை வகுப்பர்.

"உள்ளுறை எனும் சொல் தமிழில் தற்போது இருபொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒன்று நூலின்கண் உறையும் செய்திகளைத் தலைப்பு வாரியாக நூலின் முகப்பில் பட்டியலிட்டுக் கூறுவதினைக் குறிக்கும். மற்றொன்று தான் கருதும் கருத்தினை நேரே கூறாது மற்றொன்றின் மீது பொதிந்து வைத்துப் பிறருக்குக் குறிப்பாக உணர்த்துதலைக் குறிக்கும்"[76] என குறிப்புரை வழங்குவர் சு. மகேஸ்வரி.

"ஓர் அகப்பொருள் செய்யுளில் சில அடிகளில் வரும் கருப்பொருள்களால் பெறப்படும் உள்ளுறைப் பொருள். அச்செய்யுளின் மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளுக்குதவியாகி அதனோடியைந்து ஒரு பொருள் பயந்தால் அ∴து உள்ளுறையுவமாகும்"[77] என ந. சுப்பையாபிள்ளை உரைப்பதையும்,

"உள்ளுறையுவமைகள் இயற்கை வருணனைகள் என்று கருதிவிட்டால் அவ்வுவமைகள் அமைந்த பாடல்களின் உரிப்பொருள் புலப்படா. அப்பாடல்கள் சுவையற்றதாகி விடும். எனவே உள்ளுறைப் பொருள்பாட்டின் உயிர்பொருள் விளங்கும்"[78] என லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் உரைப்பதையும்,

"வெளிப்படையாகக் கூறியுள்ள பொருள் ஆண்மைக்கு வேண்டுதலின்றி அதனோடு ஒப்பாகக் கொள்ளப்படும் உட்பொருளே இயைபுடையாய் இருக்குமாறு கூறப்படுவது உள்ளுறையுவமம்"[79] என வே. வேங்கடராசலு செட்டியார் உரைப்பதையும்,

"உள்ளுறையுவமம் என்பது கருப்பொருளின் அடிப்படையில் உரிப்பொருளின் தொடர்பால் விளங்குவது"[80] என சோம. இளவரசு உரைப்பதையும்,

"உள்ளுறையாவது தலைவி, தோழி முதலியோர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறத்தகாது செவ்வியயாலே தெய்வம் ஒழிந்த திணைக் கருப்பொருள்களை வெளிப்படையாக வேறு பொருள்படத் தொடுத்து அத்தொடர்பு தாம் கருதிய பொருட்டு உவமம் போல அமைத்து அவ்வுவமத்திற்குப் பொருளாக தமது கருத்தினை நுண்ணறிவுடையோர் உணர்ந்து கொள்ளும்படி வியத்தகு முறையில் சொல்லாகும் ஓர் உபாயமாம்"[81] என பொ.வே. சோமசுந்தரனார் உரைப்பதையும் மேற்கோள் காட்டுவர் ஆ. சிவலிங்கனார்

இவ்ஆய்வுரைகள் வழி உள்ளுறை உவமம் என்பது கருப்பொருள், உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்துப் பிரிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பது உள்ளுறை என விளக்குகின்றன.

**கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள்**

புலவர்கள் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருளைக் கொண்டு 355 பாடல்களை பாடி உள்ளனர். இவற்றில் குறிஞ்சித் திணையில் 137 பாடல்களையும், முல்லைத் திணையில் 6 பாடல்களையும், மருதத்திணையில் 86 பாடல்களையும், நெய்தல் திணையில் 100 பாடல்களையும், பாலைத் திணையில் 26 பாடல்களையும் புலவர்கள் பாடியுள்ளனர். இவற்றில் புணர்தல் ஒழுக்கமான குறிஞ்சித் திணைப் பாடியப் புலவர்களே மிகுதியாக கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்களைப் பாடியுள்ளனர். முல்லைத்திணையில் மிகவும் குறைவான பாடல்கள் காணப்படுகின்றன.

**குறிஞ்சிப் பாடல்கள்**

குறிஞ்சித் திணையில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் நற்றிணையில் 56 பாடல்களும், குறுந்தொகையில் 23 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 30 பாடல்களும், கலித்தொகையில் 14 பாடல்களும், அகநானூற்றில் 14 பாடல்கள் என 137 பாடல்கள் உள்ளன. குறிஞ்சி கருப்பொருள் பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, குறவர், கானவர், குறத்தியர், கிளி, மயில், சிங்கம், புலி, கரடி, யானை, சிறுகுடி, அருவிநீர், சுனைநீர், வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, சந்தனம், தேக்கு, மூங்கில், தொண்டகப் பறை, குறிஞ்சி யாழ், குறிஞ்சிப் பண், வெறியாடல், தேன் அழித்து எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல் ஆகியவையாகும். தலைவன், தலைவியின் உள்ளுணர்வான அகப்பொருளை வெளிப்படையாகக் கூறுவது மரபாகாது என்பதை அறிந்தப் புலவர்கள் உள்ளுறையாக, உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவதுப் போல தான் கூறும் கருத்திற்கு இணையான கருப்பொருளின் செயலினை ஒப்பிட்டுக் கூறுவர்.

தலைவன் சிறைப்புறமாக இருக்கும்போது, அவன் வரைவை நீட்டித்தமையைச் சுட்டிக்காட்டி விரைவில் மனம் முடித்தல் வேண்டும் என்னும் கருத்தாக்கத்தில்

**"எற்றோ வாழி? - தோழி? - முற்றுபு**
**கறிவளர் அடுக்கத்து இரவில் முழங்கிய**
**மங்குல் மாமழை வீழ்ந்தென, பொங்கு மயிர்க்**
**கலை தொட  இழுக்கிய பூநாறு பலவுக் கனி,**
**வரைஇழி அருவி உண்துறைத் தரூஉம்**
**குன்ற நாடன் கேண்மை**
**மென்தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்றே"[82]**

தோழி கூற்றாகப்பாடுவர் மதுரை எழுத்தாளர் சேந்தன்பூதன்.

மலைஉச்சியில் ஒருவர்க்கும் பயன்படாமல் பழுத்த பலாக்கனி ஆண்குரங்கு தொட்டமையால் வீணாகவில்லை. அருவியில் வீழ்ந்து நீர்த்துறையில் உள்ளவர்களுக்குப் பயன்பட்டமைபோல, அலர் காரணமாக பிரிந்த தலைவன் தலைவியின் வாழ்வு வீணாகவில்லை. வரைவினால் விருந்தோம்பல் முதலியன செய்து பலருக்கும் பயன்பட வாழ்வார்கள் 'குன்ற நாடன் கேண்மை, மென்தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்று' அதற்கு அவன் நாட்டுப் பலாக்கனியையே உள்ளுறையில் வைத்து தோழி கூற்றாக உணர்த்துவர் புலவர்.

தலைவன் வரைவில் மணம் கொள்ளாது களவுவொழுக்க இன்பத்திலேயே ஊறிக் கிடக்கின்றவனைத் தலைவி இற்செறிக்கப்பட்டமையை,

**"கோழிலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை**
**ஊழுறு தீம் கனி, உண்ணுநர்த் தடுத்த**
**சாரற் பலவின் களையொடு, ஊழ் படு**
**பாறை நெடுஞ் கனை, விளைந்த தேறல்**
**அறியாது உண்ட கடுவன் அயலது**
**கறி வளர் சாந்தம் ஏறல் செல்லாது,**
**நறு வீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்**
**குறியா இன்பம், எளிதின், நின் மலைப்**
**பல்வேறு விலங்கும், எய்தும் நாட"[83]**

தோழி கூற்றாகப் பாடுவர் கபிலர்.

தலைவனை நோக்க தோழி "நின்னுடைய நாட்டில் செழிப்பான வாழைகள் மிகுந்திருக்கும். நன்றாகப் பழுத்த குலைகள் அவற்றில் தொங்கும். அவற்றிலிருந்து கனிகள் வெடித்து தேனைச் சொட்டிக் கொண்டிருக்கும் தம்மை

உண்போர் பிறகனிகளைச் சுவைக்காதவாறான பலாப்பழங்களில் இருந்து தேன் வடிந்து கொண்டிருக்கும் இந்த இரண்டு வகைத் தேனும் கற்பாறைகளிலுள்ள குழிகளில் தேங்கியிருக்கும் அவ்வழிவரும் ஆண்குரங்கு தாகமிகுதியால் இத்தேனை நீர் என பருகிய மயக்கத்தால் அம்மரத்தின்கீழே அயர்ந்து தூங்கும். அதே போல மான் வேட்டைக்கு வந்த தலைவனோ மான் போன்ற மைவிழியாளைக் கண்டு இன்ப போதையில் தலைவியை வரைந்து வாழ வேண்டுமென்ற அறநெறியையும் மறந்து மயங்கி இருக்கின்றான். கபிலரின் உள்ளுறை உவமம் தோழியின் அறிவுத் திறனையும் கருப்பொருள் பண்பினையும் எடுத்தியம்புகிறது. தோழி நற்றாயிடம் அறத்தொடு நிற்றலை

**"அன்னாய், வாழி வேண்டு, அன்னை் கானவர்**
**கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்**
**பொன் மலிபுது வீ தாஅம் அவர் நாட்டு,**
**மணி நிற மால் வரை மறைதொறு, இவள்**
**அறை மலர் நெடுங் கண் ஆர்ந்தன பனியே"[84]**

எனப் பாடுவர் கபிலர்.

வேடர்கள் கிழங்கு எடுத்தர் பொருட்டுத் தோண்டிய நெடிய குழிகள் நிறையுமாறு வேங்கையில் பொன் போலுள்ள உதிர்ந்த பூக்கள் படியும் நம் தலைவருடைய நாட்டின்கண் நிற்கின்ற நீலமணி போன்ற நிறத்தையுடைய பெரியமலை மறையுந்தொறும் இவளுடைய மலர் போன்ற கண்கள் நீர் சொரிந்தன. இவற்றில், கானவர் கிழங்கு அகழ்தற் பொருட்டுத் தோண்டிய குழிகள் நிறைய வேங்கையின் மலர்கள் பரக்கும் என்றது தலைவனது நட்பின் பொருட்டு ஆகும். தலைவியின் துயரம் அனைத்தும் நின்முயற்சியால் வரைவு மாட்சிமைப்படுதலின் இன்பமாய் நிறைந்தது என்ற உள்ளுறை அமைய புலவர் பாடியத்திறன் எண்ணுகுற்குரியதாகும்.

**முல்லை பாடல்கள்**

முல்லைத் திணையில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் நற்றிணையில் 4 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 2 பாடல்களும் என 6 பாடல்கள் உள்ளன. முல்லைக் கருப்பொருள் குறும்பொறை,

இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர், காட்டுக் கோழி, எருமை, மான், கானாற்றுநீர், தோன்றி, காயா, கொன்றை, வரகு, ஏறுகோட்பறை, முல்லையாழ், சாதாரி பண், ஏறுதழுவுதல் ஆகியவையாகும். முல்லைத் திணை கற்பொழுக்கமாகக் கருதப்படுவதால் உள்ளுறை பாடல்கள் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. மேலும், குறுந்தொகை, கலித்தொகையில் உள்ளுறை அமைந்த பாடல்கள் இடம்பெறவில்லை. தலைவன் உரைத்த கார்பருவம் வந்தும், அவனின் வரவு நிகழவில்லை.

**"தளவின் பைங்கொடி தழீஇ, பையென**
**நிலவின் அன்ன நேர் அரும்பு பேணி,**
**கார் நயந்து எய்தும், முல்லை அவர்**
**தேர் நயந்து உறையும், என் மாமைக் கவினே"[85]**

என தலைவியின் ஆற்றாமையைத் தோழிக்கு உரைப்பதாகப் பேயனார் பாடியது. முல்லையானது தன் அரும் நிலையை பேணித் செம்முல்லை தழுவி வேனிலைக் கடந்துகிறது. நானும் அவர் என்னிடம் உரைத்த மொழியைப் பேணி, உசாத்துணைத் தோழியாகிய நின்னைப் பற்றுக் கோடாகக் கொண்டேன். பிரிவுத் துன்பமாகிய கோடையை ஆற்றித் தலைவனின் வருகையை எண்ணி உயிர்வாழ்கிறேன் என்கிறாள். முல்லை வளர்ச்சியினையும், தலைவியின் உணர்வினையும் புலவர் உள்ளுறையாகப் பாடுவது எண்ணுதற்குரியதாகும்.

வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகனுக்கு,

**"வான் இகுபு சொரிந்த வயங்கு பெயற் கடை நாள்,**
**பாணி கொண்ட பல் கால் மெல் உறி**
**ஞெலி கோல் கலப் பை அதளொடு சுருக்கி**
**பறிப் புறத்து இட்ட பால் நொடை இடையன்**
**நுண் பல் துவலை ஒரு திறம் நனைப்ப,**
**தண்டு கால் வைத்த ஒடுங்கு நிலை மடி விளி**
**சிறு தலைத் தொழுதி ஏமார்ந்து அல்கும்**
**புறவினதுவே - பொய்யா யாணர்"[86]**

எனத் தேர்ப்பாகனுக்கு உரைப்பதாக இடைகாடனார் பாடுவர்.

ஆடுகள் வேறிடம் செல்லாமல் இடையன் விளித்த அளவில் மீண்டும் சேர்ந்து தங்கும். அவ்வாறே, என் நெஞ்சம் சோர்வு நிலையில் உள்ளது. இந்நிலையைப் போக்கும் முறையாகப் பாகன் சோர்வு நீங்கப் பெற்றேன். விரைவில் தலைவியை காண்பேன் என்கிறான் தலைவன். பிரிதல் துன்பத்தை மிகுவிக்கும் நிலையை ஈண்டு உணரலாம்.

**மருதப் பாடல்கள்**

மருதத் திணையில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் நற்றிணையில் 10 பாடல்களும், குறுந்தொகையில் 7 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 49 பாடல்களும், கலித்தொகையில் 10 பாடல்களும், அகநானூற்றில் 10 பாடல்கள் என 85 பாடல்கள் உள்ளன. மருதக் கருப்பொருள் ஊரன், கிழத்தி, மனைவி, உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர், நாரை, அன்னம், குருகு, எருமை, நீர்நாய், பேரூர், மூதூர், ஆற்றுநீர், குளத்துநீர், தாமரை, வஞ்சி மரம், செந்நெல் அரிசி, நெல்லரி கிணை, மணமுழவு, மருதயாழ், மருதப்பண், நெல்லரிதல், புதுநீராடல் ஆகியவையாகும்.

**"தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையோடு**
**வெண் பூம் பொய்கைத்து, அவன் ஊர்"என்ப் அதனால்**
**தன் சொல் உணர்ந்தோர் மேனி**
**பொன் போல் செய்யும் ஊர்கிழவோனே"[87]**

எனப்பாடுவர் ஓரம்போகியார்.

தான் பெற்றபிள்ளைக்கு அன்பினை ஊட்டுவது தாயின் கடமையாகும். முதலை பசிக்குத் தன் பார்ப்பினைத் தானே தின்று மகிழும் கொடும் பண்புடையது. இத்தகைய அன்பில்லாத முதலை போன்றவன் என்றும், முதலை உறையும் நீர் நிலையில் காணலாகும் வெண்பூ காணாது. தலைவனின் தவறுகளுக்குத் துணை நிற்கும் வாயில்களைக் குறிப்பதாகும்.

ஓரம்போகியார் மருதநிலக் கருப்பொருள்களையே உள்ளுறையாகக் கொண்டு பாடிய திறம் எண்ணுதற்குரியதாகும்.

மருதக்கலித் தலைவி தலைவனின் பரத்தமையை,

**"வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற் கொண்ட**
**ஞாங்கர் மலர் சூழ்தந்து, ஊர் புகுந்த வரி வண்டு,**
**ஓங்கு உயர் எழில் யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்**
**ஆங்கு அவை விருந்து ஆற்ற, பகல் அல்கி, கங்குலான்,**
**வீங்கு இறை வடுக்கொள, வீழுநர்ப் புணர்ந்தவர்**
**தேம்கமழ் கதுப்பினுள், அரும்பு அவிழ்நறு முல்லை**
**பாய்ந்து ஊதி, படர்தீர்ந்து, பண்டுதாம் மரீஇய**
**பூம்பொய்கை மறந்து, உள்ளாப் புனல் அணி நல்ஊர"**[88]

என மருதனிளநாகனார் பாடுவர்.

வண்டானது பொய்கையில் உள்ள தாமரை மலரின் தேனினை உண்டு பின்பு வயல்களில் மலர்ந்திருக்கும் குவளைமலர்களை நுகர அவ்வூருக்குச் சென்றது. வயல்களில் உள்ள மதநீரில் முன்பே இருக்கும் வண்டுகள் இவ்வண்டுக்கு விருந்தாற்றின. இவ்வாறு, பகல் முழுவதும் சுற்றிய வண்டானது பின்பு அவ்வூர் மக்கள் மாலையில் சூடும் முல்லை மலர்களில் தேனினைப் பருக அதன்மீது அமர்ந்து கொண்டது. இத்தகைய இயல்பினை உடைய ஊரனே உம்முடையச் செயலும் இத்தகையதே எனத் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைப் புலவர்கள் இழிவாகப் போற்றினர் என்பதை உணர்ந்து கொள்ள இயலும்.

பரத்தமையை நாடிச்சென்றத் தலைவன் தோழியிடம் வாயில் வேண்டுவதாக,

**"சேற்று நிலை முனைஇய செங் கட் காரான்**
**ஊர் மடி கங்குலில், நோன் தளை பரிந்து**
**கூர் முள் வேலி கோட்டின் நீக்கி,**
**நீர் முதிர் பழனத்து மீன் உடன் இரிய,**
**அம் தூம்பு வள்ளை மயக்கி, தாமரை**
**வண்டு ஊது பனி மலர் ஆரும் ஊர**
**யாரையோ? நிற் புலக்கேம். வாருற்று"**[89]

எனப் பாடுவர் அள்ளூர் நன்முல்லையார். நள்ளிரவில் எருமையான தனது நிலையான தொழுவத்திலிருந்து கட்டுத்தளை அறுத்து தனது கொம்பினால் முள்வேலியை உடைத்து வயலுக்குள் ஓடும் பொழுது வள்ளைக் கொடிகளை

மிதித்து, மீன்களைக் கலக்கம் அடையச்செய்து ஓடிய எருமையானது வண்டுகள் மொய்க்கும் தாமரை மலர்களை ஆசையோடு அருந்துகின்றது. எருமை செயல்பாடுகளைப் போன்று தலைவனின் செயல் உள்ளதாக தோழி கூற்றாக உரைப்பர். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தில் நெறிபிழற்சியைச் சுட்டுவர் புலவர்.

**நெய்தல் பாடல்கள்**

நெய்தல் திணையில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் நற்றிணையில் 38 பாடல்களும், குறுந்தொகையில் 13 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 33 பாடல்களும், கலித்தொகையில் 8 பாடல்களும், அகநானூற்றில் 8 பாடல்கள் என 100 பாடல்கள் உள்ளன. நெய்தல் கருப்பொருள் சேர்ப்பன், புலம்பன், நுளையர், நுளைச்சியர், கடற்காகம், சுறாமீன், பாக்கம், பட்டினம், உவர் நீர்க்கேணி, தாழம்பூ, முண்டகப்பூ, புன்னை, ஞாழல், மீன்கோட்பறை, நாவாய்ப்பம்பை, விளரியாழ், செவ்வழிப் பண், உப்பு விற்றல், மீன் பிடித்தல் ஆகியவையாகும்.

நெய்தல் நிலத் தலைவன் வதுவைக்கு காலம் தாழ்த்துவதை,

> **"வலம்புரி உழுத வார் மணல் அடைகரை**
> **இலங்கு கதிர் முத்தம் இருள் கெட இமைக்கும்**
> **துறை கெழு கொண்க நீ தந்த**
> **அறை புனல் வால் வளை நல்லவோ தாமே?"[90]**

தோழி கூற்றாக பாடுவர் அம்மூவன். வலம்புரி சங்கானத் தலைவனே, அடைகரையாகிய தலைவியிடம் முத்துகளாகிய உன் அருளினைத் தந்தாய். முத்துக்கள் இருள் கெட ஒளியை தரும் இயல்புடையன. இங்கே, தலைவியின் துயர் இருளாகக் கொள்ளப்பட்டது. நீ களவு மணம் செய்து கொண்டதனால் ஊராரின் அலர் மொழியால் அல்லற்படும் தலைவியின் துயராகிய இருள் ஒழியும் படி 'வதுவைக்' கொள்வாயாக. தலைவிக்கு வரும் தீங்கினை விரைவாக நீக்கி மணம் செய்து தலைவியை ஒளிபெறச் செய்ய வேண்டும் என தோழியின் மொழியாடலில் உணர்த்துவர் புலவர்.

தலைவன் சிறைப்புறமாக இருப்பதை அறிந்த தோழி அலர் அச்சத்தினைக் கூறி தலைவியை விரைவில் வரைவுக்கு உட்படுத்த வேண்டி,

**"கானல் அம் சிறுகுடிக் கடல் மேம் பரதவர்**
**நீல் நிறப் புன்னைக் கொழு நிழல் அசைஇ,**
**தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி,**
**அம் கண் அரில் வலை உணக்கும் துறைவனொடு**
**"அலரே அன்னை அறியின், இவண் உறை வாழ்க்கை,**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்**
**கருங் கால் வெண் குருகு வெரூஉம்**
**இருங் கழிச் சேர்ப்பின் தம் உறைவின் ஊர்க்கே?"[91]**

எனத் தோழி கூற்றாகப்பாடுவர் அம்மூவனார். மீனவர்கள் மீன் தேடிக் கடலுக்கும் செல்லும் காலத்தினை எதிர்நோக்கி இருக்கும் பொழுது புன்னை மரநிழலில் வலையை உலர்த்துவர் என்பது தலைவன் சிறைப்புறமாக இருந்து தலைவியைக் கூடுவதற்கு யாரும் இல்லாத காலம் பார்க்கும் நிலையைக் குறிப்பதாகும்.

வண்டிச் செல்வதனால் ஏற்படும் ஓசைக்குக் குருகு அஞ்சுமென்பது, தலைவன் தலைவியைத் திருமணம் செய்யும் போது உண்டாகும் மணமுரசின் ஒலியைக் கேட்கும் பொழுது அலர் தூற்றுவோர் அஞ்சி ஒடுங்குவார் என்னும் உள்ளுறை குறிப்பு புலவனின் அகப்படைப்பாக்கத் திறனுக்குச் சான்றாகும்.

**பாலைப் பாடல்கள்**

சங்க இலக்கியக் பாலைத் திணையில் கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் நற்றிணையில் 8 பாடல்களும், குறுந்தொகையில் 1 பாடல்களும், ஐங்குறுநூற்றில் 6 பாடல்களும், அகநானூற்றில் 11 பாடல்கள் என மொத்தம் 26 பாடல்கள் உள்ளன. கலித்தொகையில் உள்ளுறை அமைந்தப் பாடல்கள் காணப்பெறவில்லை. பாலை கருப்பொருள் எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர், புறா, பருந்து, கழுகு, செந்நாய், குறும்பு, நீரில்லாக் கிணறு, குராஅம்பூ, மராஅம்பூ, பாலை, உழிஞை, ஓமை, வழியிற் பறித்த பொருள்,

பதியிற் கவர்ந்த பொருள், துடி பறை, பாலை யாழ், பஞ்சுரம், போர் செய்தல், பகலில் சூறையாடல் ஆகியவையாகும்.

பொருளீட்டச் சென்ற தலைவனின் மனநிலையை,

**"வேனில் அரையத்து இலை ஒலி வெரீஇ,**
**போகில் புகா உண்ணாது, பிறிது புலம் படரும்**
**வெம்பு அலை அருஞ் சுரம் நலியாது**
**எம் வெங் காதலி பண்பு துணைப் பெற்றே"[92]**

எனத் தோழி கூற்றாகப் பாடுவர் ஓதலாந்தையார். கோடையில் சலசலவென சருகுகளின் ஒலியினால் பறவை தான் உண்ண வந்ததையே மறந்து அம்மரம் விட்டு வேற்றிடம் சென்றன. அதேபோல், நானும் அறிவில்லாத உலகத்தாருக்கு அஞ்சி என் அன்பு தலைவியை விடுத்து பொருள்தேடச் சென்றேன் என்றான். இருப்பினும் என் பாதையில் எம்மை விரும்பும் காதலியின் பண்பும் என்னுடன் வந்ததால் வெம்மையை உணரவில்லை எனப் பண்பில் உயர் குணம் உடையவளாகத் தலைவி திகழ்ந்தாள் என்பதை உணர்த்துவர் ஓதலாந்தையார்.

**"புலவுக்களம் துழைஇய துகள்வாய்க் கோடை**
**நீள்வரைச் சிலம்பின் இரைவேட்டு எழுந்த**
**வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து,**
**வேறுவேறு கவலைய ஆறுபரிந்து, அலறி,**
**ஊழைமான் இனநிரை ஓடும்**
**கழைமாய் பிறங்கல் மலைஇறந் தோரே"[93]**

எனப் பாடுவர் நக்கீரனார். அலர் பற்றி கூறுகையில் மேல்காற்றானது புலால் நாறும் இடத்தைத் தேடி புழுதியை எப்பொழுதும் தன்னகத்தே கொண்டது என்பதில் அலர் கூறும் பெண்கள் மற்றவர்களின் பழியானவற்றையே ஆராய்ந்து அதனைப் பற்றியே பேசிபேசி பெரிதுபடுத்துவர் என்பதைக் குறித்தது. மேலும், மேல்காற்றின் ஒலியைப் புலியானது மானினைப் பற்றியதால் உண்டான ஒலியென கருதி மற்ற மான்களெல்லாம் அச்சப்படும் என்பது தலைவியின் உடல்மெலிவிற்குக் காரணம் தலைவனைப் பற்றியது என்பதை அறியாத என் அன்னையோ தெய்வத்தால் உண்டானது என அஞ்சுகிறாள் எனத் தலைவி உரைப்பதாகப் பாடுவர் நக்கீரனார்.

இவற்றில் தலைவி, தோழியின் நட்பும் நற்றாயின் அன்பும் உணர்த்தப்பட்டதன்வழி அகஉறவின் பிணைப்பை இன்னது எனச் சுட்டுவர் நக்கீரனார்.

"நாணில் செயல்களை நாணுடைய மொழிகளால் புலப்படுப்பது உள்ளுறை. சுருங்கச் சொல்கைக்கு ஆற்றல் உண்டு. கேட்டார் மனந்தாக்கும் கூர்மையுண்டு. ஆதலின் உள்ளுறை பண்பட்ட தமிழ் இலக்கியக் கருவி, தலைவனை இடித்துரைக்குங்காலை இக்கூர்ங் கருவியை இலக்கியர்கள் ஆளுவர். புலவன்தான் புலப்படுத்த எண்ணும் கருத்தோட்டத்திற்குத்தக இயற்கையைச் சரிபடுத்திக் கொள்வான், ஒழுங்குற ஆக்கிக் கொள்வான்"[94] என்னும் வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வுரை ஈண்டு ஒப்பத்தக்கதாகும்.

தலைவன் கற்பு வாழ்வினை நினையாது களவை நீட்டிக்கும் இடத்தும், அலர் காரணமாக விரைவில் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டும், தலைவி, தலைவன் மீது பேரன்புக் கொண்டதனால் அவளது உடல் பசலை படர்ந்துள்ளது என்பதனை உரைக்கும் இடத்தும், கார்கால வந்தும் தலைவன் வரவில்லையே என்று ஆற்றிருக்கும் நிலையிலும், பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டத் தலைவனின் இழிவு நிலை இடித்துரைக்கும் இடத்தும், மாலைப் பொழுதில் தன் இல்லம் நோக்கிச் செல்லும் பறவைகளைக் காணும் பொழுது தன் தலைவன் உடன் இல்லையே என இரங்கும் பொழுதும், பிரிவு துயரம் தலைவியை வாட்டும் இடத்தும் இவை அனைத்தையும் உள்ளத்தில் நினைத்தவாறு அகப்பொருளை நேர்ப்படச் சொல்லுதல் நாகரிகமாகாது என்பது புலவர்களின் உட்கிடக்கை. இவ்செயலினை உள்ளுறை உத்தியில் நன்கு கையாண்டு திணை வல்லுநர்கள் என்னும் கருத்தாக்கத்தைப் புலவர்கள் உருவாக்கி இருப்பது உணரற்பாற்று.

**உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள்:**

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்கள் என்ற நிலையில் மிகுதியானப் பாடல்களைப் புலவர்கள் பாடியுள்ளனர். உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள் சங்கஇலக்கியத்தில் மிகமிக குறைவாகக் காணப்படுகிறது. ஏனெனில் முதற்பொருளும், கருப்பொருளுமே தான் உரிப்பொருளுக்கு களத்தை அளிக்கிறது.

அகப்பாடல்களில் அடி நீட்சி இயற்கைப் புனைவுக்கு இடமளிக்கும். அடியளவு குறுக்கம் உரிப் பொருளுக்கு சிறப்பிடம் வழங்கும். "தமிழுக்கு ஒரு தனிப்பெரு முதல் நூலான திருக்குறள் காமத்துப்பாலென ஓரியல் வகுத்து ஐந்திணைத் துறையனைத்தையும் செவ்விபெறப் பாடுகின்றது. உலகிற்கு அறங்கரைய வந்த திருவள்ளுவர் காமக்கூறுகளை அகத்திணை நெறிப்படிப் பாடுவானேன்? தமிழினத்து அறிவின் இமயத்துப் பிறந்த தூய புலநெறி வழக்கைச் சொல்லாதுவிடுதல், தமிழ்ப் புலமை பெற்ற தமக்கும், தமிழில் எழுதப்படும் தம் வாழ்வு நூலுக்கும் இழுக்காம் என்று கருதியிருப்பர். மேலும் இக் காதல்நெறி நன்றெனத் தெரிந்திருந்தும், மக்கட்கு அறமாக உரையாவிடில், உலகிற்குச் செய்த வஞ்சகமாம் என்றும் கருதியிருப்பர்"[95] என்னும் வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வரை வழியாக அறஇலக்கியமான திருக்குறளும் அகத்திற்கு அறம் பாடியது என்பது ஈண்டு ஒப்புதற்குரியதாகும்.

எட்டுத்தொகை நூல்களான நற்றிணையின் பாக்கள் 9-12 அடியெல்லையும், கலித்தொகையின் பாக்கள் 11-80 அடியெல்லையும், அகநானூற்றின் பாக்கள் 13-31 அடியெல்லையும் கொண்டுள்ளதனால் இவற்றைப் புலவர்கள் பாடும் பொழுது முதலும், கருவும், உரியும் அமைத்துப் பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வகையான நூல்களில் புலவர்கள் இயற்கை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு முப்பொருளும் தோன்ற இயற்றியுள்ளனர். குறுந்தொகையின் பாக்கள் 4-8 அடியெல்லையும், ஐங்குறுநூற்றின் பாக்கள் 3-5 அடியெல்லையும் கொண்டுள்ளன. இருப்பினும் ஐங்குறுநூற்றினை திணைக்கு ஒரு புலவர் வீதம் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர் இருப்பினும் குறுந்தொகைப் போல உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்களை சிறக்கப்பாடவில்லை. ஏனெனில், ஐங்குறுநூற்றில் பத்துப்பத்து பாடல்களும் ஒரே கருத்தினை வெவ்வேறு உத்திகளில் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. "ஐங்குறுநூற்றுப் பாக்கள் 3-6அடியெல்லையன. இவ்வடிச் சிறுமையால், இந்நூலும் குறுந்தொகை போல உரிப்பொருளையே சிறக்கப் பாடுகின்றதெனினும், குறுந்தொகைச் சுவைக்கு ஐங்குறுநூறு ஈடாகாது. குறுந்தொகை பலர் யாத்த பாடலின் தொகுதி. வேறுவேறு காதற்றுறைகளின் மேல், இருநூற்றுக்கு மேற்பட்ட புலவர்களின் அறிவுக்கூறு ஆங்குச் சுவைசெய்யக்

காண்கின்றோம்"[96] என்பார் வ.சுப. மாணிக்கனாரின் கூற்றுவழி குறுந்தொகையில் உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளன என்பது உணரத்தக்கதாகும்.

பத்துப்பாட்டு நூலில், ஆய்வு எல்லைக்குட்பட்ட அகம் சார்ந்தவை மூன்று. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை இவை அனைத்தும் அடியளவில் நீண்டவை. இருப்பினும் குறிஞ்சிப்பாட்டு நிரல்பட களவொழுக்கத்தை விரித்து மொழிகிறது. முல்லைப்பாட்டிலும், பட்டினப்பாலையிலும் உரிப்பொருள் சிறப்பித்துக் கூறப்படினும், புறம் சார்ந்தக் கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

**குறிஞ்சித்திணையில் உரிப்பொருள் பாடல்கள்**

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், பிரிந்தமையால் கலங்கி தன் நெஞ்சிற்குக் கூறியதாக

**"இல்லோன் இன்பம் காமுற்றாஅங்கு**
**அரிது வேட்டனையால் - நெஞ்சே - காதலி**
**நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு**
**அரியள் ஆகுதல் அறியாதோயே"[97]**

என பரணர் பாடுவர். வறுமையாள் வாடும் வறியவன், பொருளுடையவர் கொடுத்தலை தெய்வத்தால் கிடைத்தது என எண்ணி மகிழ்ச்சி அடைகிறான். அவனது மனம் பொருளானது மேலும் கிடைக்க வேண்டும் என எண்ணுகிறான். அதேபோல் பால்வரை தெய்வத்தால் கிடைக்கப்பெற்ற இயற்கைப் புணர்ச்சியில் மகிழ்ச்சியை நல்கிய தலைவி நாம் விரும்பும்பொழுதெல்லாம் பெறுதற்கு அரியவள் ஆகுதலையும் நீ உணர வேண்டும் எனத் தலைவன் தன் நெஞ்சிற்கு கூறுகிறான். தலைவன் நெஞ்சிற்குக் கூறியதாக,

**"ஒடுங்கு ஈர் ஓதி, ஒண்நுதற் குறுமகள்**
**நறுந்தண் நீரள் ஆர் அணங்கினளேளு**
**இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்**
**சில மெல்லியவே கிளவி**
**அனை மெல்லியள் யான் முயங்குங் காலே"[98]**

என ஓரம்போகியார் பாடுவர். தலைவி புணர்தலின் போது கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலன்களால் பெறப்படும் இன்பத்தை நல்கினாள். ஆனால், அவள் தன்னை விட்டு நீங்கிய பொழுது வருத்தத்தைத் தருபவளாக உள்ளாள். தலைவியின் பிரிவு தனக்குத் துன்பத்தை நல்குவதாக தலைவன் நெஞ்சிற்குக் கூறிக் கொள்கிறான். பரணரும், ஓரம்போகியாரும் 'புணர்தல்' ஒழுக்கத்தை தெள்ளிதின் கையாண்டு உள்ளதை உணரலாம்.

**முல்லைத்திணையில் உரிப்பொருள் பாடல்கள்**

வினைமுடித்துத் திரும்பியத் தலைவனை நோக்கி தோழி வினையின் போது தலைவியை நினைத்தீரா?

**"உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி,**
**நினைந்தனென் அல்லெனோ பெரிதே? நினைந்து**
**மருண்டனென் அல்லனோ, உலகத்துப் பண்பே?**
**நீடிய மராஅத்த கோடு தோய் மலிர் நிறை**
**இறைத்து உணச் சென்று அற்றாங்கு,**
**அனைப் பெருங்காமம் ஈண்டு கடைக்கொளவே"[99]**

தோழி கூற்றாகப் பாடுவர் ஔவையார். தலைவியைக் காணவேண்டுமென்ற வேட்கை தனக்கு இருந்ததாகவும், வினைமுடித்தவுடன் வேட்கை அதிகரித்தது என்றும், இல்லம் திரும்பி தலைவியைக் கண்ணுறும் நிலையில் வேட்கை குறைந்துவிடும் எனத்தோழிக்கு உரைக்கிறான்.

**"கிழவி நிலையே வினையிடத் துரையார்**
**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்"[100]**

என்பர் தொல்காப்பியர்.

வினைமேற்கொண்ட தலைமகன் இடத்து தலைவியின் நினைவு தோன்றாது. எனவே, வினைமுடிந்தவிடத்துத் தோன்றுதல் வெளிப்படை என்றும் தொல்காப்பியரின் அகப்பொருண்மை ஈண்டு ஒப்புதற்குரியதாகும்.

**"சேயாறு செல்வாம் ஆயின், இடர் இன்று,**
**களைகலம் காமம், பெருந்தோட்கு என்று,**
**நன்றுபுரிந்து எண்ணிய மனத்தை ஆகி**

**முரம்புகண் உடைய ஏகி, கரம்பைப்**
**புகுவழிப் படுத்த மதியுடை வலவோய்**
**இன்று தந்தனை தேரோ-**
**நோய் உழந்து உறைவியை நல்கலானே?"[101]**

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் பேயனார். நெடுவழியில் தேரினைச் செலுத்தி வந்தால் நெடுநேரம் ஆகும் என்பதையும், தலைவியின் துன்பமும் மிகுதியாகும் என்பதையும் அறிந்து பருக்கைக் கற்களை உடைய மேட்டுநிலம், கரம்பை நிலங்கள் வழியாகவும் தேரினைச் செலுத்திப் புதுவழியை உண்டாக்கி விரைவில் இல்லம் வந்து தனது வாய்மையை மேலோங்கச் செய்தாய், தன் சொல் கேட்டு ஆற்றியிருந்த தலைவியின் துன்பத்தையும் நீக்கினாய் எனப் புகழ்ந்தான். இப்பாடலுக்கு மு. கோவிந்தசாமி "இடரின்றுகளை எல்லாம் காமம் பெருந்தோட்கென்று நன்று புரிந்தண்ணிய மணத்தை இன்று தந்தனைதேரோ நோயுழந்துறைவியை நல்கலானே. பாகன் இன்று தேரைத் தரவில்லை தலைவியைத் தந்தான்"[102] என்னும் ஆய்வுரை ஒப்புதற்குரியதாகும்.

**மருதத்திணையில் உரிப்பொருள் பாடல்கள்**

தலைவனின் பரத்தமையை மறந்து ஏற்றுக் கொள், புலத்தல் வேண்டாம் என்று தோழி கூற தலைவி வாயில் மறுப்பதாக,

**"நல் நலம் தொலைய, நலம் மிகச் சாஅய்,**
**இன்உயிர் கழியினும் உரையல், அவர் நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ?**
**புலவி அ/து எவனோ, அன்பிலங் கடையே?"[103]**

பாடுவர் அள்ளூர் நன்முல்லையார். தலைவன் என்னை நீங்கி, பரத்தமையை நாடிச்சென்றதனால் என்மீது அன்பு இல்லாத உள்ளத்தினை உடையவனாக இருப்பதனால் புலத்தலால் பயன் ஏதும் இல்லை என்ற கருத்தினை உரைக்கிறாள். ஒற்றுமையுடைய காதலர்மாட்டே புலத்தலால் பேரின்பம் ஏற்படும், அ.்து இல்லாதவரிடம் புலத்ததலால் என்ன பயன்? அன்புள்ள இடத்தில்தான் புலத்தலால் பயன்உண்டு என்பது புலவரின் துணிபாகும். **"தலைவனைத் தலைவி காய்தற்கண் வந்தது"[104]** என்னும் இளம்பூரணாரின் உரைநெறி பொருத்தப்பாடுடையதாகும்.

மேலும், **"அன்பிலை, கொடியை என்றலும் உரியள்"**[105] என நச்சினார்க்கினியரும் உரைப்பது ஒப்பதகுந்ததாகும்.

**"நீரும் நிழலும் இனிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே இனிது"**[106]

என்றும் வள்ளுவரின் குறளும் புலத்தலின் இனிமையைச் சுட்டி நிற்பது நினையத் தகுந்ததாகும்.

**நெய்தல்திணையில் உரிப்பொருள் பாடல்கள்**

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்றத் தோழிக்குத் தலைவி,

**"நோம், என் நெஞ்சே நோம் என் நெஞ்சே:**
**இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி,**
**அமைதற்கு அமைந்த நம் காதலர்**
**அமைவு இலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே"**[107]

எனத் தலைவி கூற்றாகப் பாடுவர் காமம்சேர் குளத்தார்.

தலைவன், இயற்கைப் புணர்ச்சியில் நின்னைப் பிரியேன் எனக்கூறியதற்கு இல்லை பிரிவு உண்டு என எண்ணிய என் மனதின் வெளிபாடாக என் கண்கள் நீர் சொறிந்த அளவில் தலைவன் கண்ணீரைத் துடைத்து என்னை ஆற்றுவித்தான். அன்றிலிருந்து இன்றுவரை தலைவன் தன் நெஞ்சத்து இருத்தலை எண்ணி ஆற்றிருந்தேன். ஆனால், தலைவனை 'அமைவிலர்' என்று கூறியச் சுடுச்சொல் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது எனத் தோழிக்குத் தலைவி கூறினாள்.

**"உள்ளின், உள்ளம் வேமே஌ உள்ளாது**
**இருப்பின், எம் அளவைத்து அன்றே, வருத்தி**
**வான் தோய்வற்றே, காமம்,**
**சான்றோர் அல்லர், யாம் மரீஇயோரே"**[108]

எனத் தோழி கிழத்திக்கு உரைப்பதாகப் பாடுவர் ஔவையார்.

தலைவன் சான்றோர் அல்லர், இருப்பினும் காதல் நினைவுகளும், தலைவனை நினையாமையும் வருத்துகின்றன. ஆகவே உயிர் நீத்து வானில் சென்றாலும் என்காமமானது ஆண்டும் வந்து வருத்தும் யான் யாது செய்வேன்

எனக் கலங்கினாள், தலைவி. தலைவியின் அக ஒழுக்கத்தைப் புலவர்கள் படைத்துக் காட்டிய திறன் நினையத்தகுந்ததாகும்.

**பாலைத்திணையில் உரிப்பொருள் பாடல்கள்**

பிரிவிடை ஆற்றாள் என எண்ணியத் தோழிக்குக் கிழத்தி,

> **"கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,**
> **நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு,**
> **எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,**
> **பசலை உணீஇயர் வேண்டும்-**
> **திதலை அல்குல் என் மாமைக் கவினே"[109]**

எனக் கிழத்தி கூற்றாகப் பாடுவர் வெள்ளிவீதியார்.

நல்ல பசுவின் இனிமையான பாலானது தான் ஈன்ற கன்றினாலும் உண்ணப்படாமல், பசுவினைப் புரப்போருடைய கறக்கும் பாத்திரத்தில் கொள்ளப்படாமல் இருவருக்குமே பயன்படாமல் மண்ணில் சிந்தி வீணாவதுபோல வரி படர்ந்த அல்குலையுடைய என்னுடைய, மாந்தளிர் போன்ற பேரழகு பசலையால் எனக்கும் பயன்தராது, என் அன்பானவனுக்கும் பயன்தராது அழிகிறது என்கிறாள் தலைவி. இதனை, "திதலை அல்குல் மாமைக் கவின் கன்றுக்கும் கலத்திற்கும் ஆகாது. நிலத்துக் காங்கு எனக்கு என்னைக்குமாகாது பசலையுணீஇயர் வேண்டும் அழகு திதலைமாமை அது மங்கிய நிலை - பசலை மாமை - மாந்தளிர் நிறம். பசலை- பீர்க்கம்பூ நிறம்"[110] என்னும் மு. கோவிந்தசாமியின் நயவுரை ஒப்புதற்குரியதாகும்.

பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியதாக,

> **"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்" எனச்**
> **செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு**
> **அம் மா அரிவையும் வருமோ?**
> **எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே"[111]**

பாடுவர் உகாய்க்குடி கிழார்.

வினைமேற் செல்லும் இடங்களுக்குத் தலைவி செல்லார் என்பது அகமரபு. இதனை அறிந்தும் தலைவன் அன்பு மிகுதியால் தலைவியின் மாமை நிறம் தான்

உடன்இல்லாமையால் சிதையும் எனக் கவன்றான். மேலும், பொருள் தேடத் தலைவி வருவாளோ? அன்றித் தனியாக செல்வேனோ? எனத் தலைவன் நெஞ்சிடம் உரைத்துக் கொள்வதாகப் புலவர் உணர்த்துவர்.

மேற்சுட்டிய ஆய்வுரைகள் வழியே உரிப்பொருள் திறனை உணர்வதற்குப் புலவர்கள் காட்டிய வழி வகைகளை அறியலாம்.

**தொகுப்புரை**

முதற்பொருளால் கருப்பொருளும், கருப்பொருளால் உரிப்பொருளும் தம்முள் இயைவு கொண்டு உள்ளது. அகமாந்தர்களின் உணர்வுகளுக்கு உரிப்பொருள் களமாகும்.

உரிப்பொருள் அகமாந்தர்களின் திணைசார்ந்த வாழ்வியலை தெள்ளிதின் உணர்த்தி நிற்கிறது.

உரையாசிரியர்கள் உரிப்பொருளுக்கு முதன்மை வழங்கி உள்ளனர். இளம்பூணரின் உரை நெறியான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இம்மூன்றையும் விளக்கி உரைக்கபட்டுள்ளது.

304 புலவர்கள் புறப்பாடல்களைப் பாடாது அகப்பொருள் மட்டும் அமைந்த 873 பாடல்களை பாடியுள்ளனர். அகம், புறம் பாடிய 77 புலவர்களில் அகப்பாடல்களின் எண்ணிக்கை 913. புலவர்கள் பாடியப் பாடல்களின் எண்ணிக்கையின்வழி அகப்பாடல்களே மிகுதி என்பது உறுதியாகிறது. புலவர்கள் புறத்தைவிட அகத்தைப் போற்றியதை உணரலாம்.

அம்மூவனார் 127 பாடல்களை அகத்தில் மட்டுமே பாடிஉள்ளதைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கபிலர் 197 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் அகமும், புறமும் பாடியப் புலவர்கள். இவரின் பங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்கள் சங்க அகத்திணையில் இடம் பெற்றுள்ளனர். கருப்பொருள், உள்ளுறை, உரிப்பொருள் பற்றி தொல்காப்பியர் மற்றும் உரையாசிரியர்களின் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

உள்ளுறை அகத்திற்கே உரியதாகும். படைப்பின் உயர்வினை உள்ளுறை வழியே உணரலாம். பாடல்களில் உள்ளத்தினை ஆழ்ந்து செலுத்திப் பயின்றால் உள்ளுறைப்பொருளினை அறிய முடியும்.

புலவர்களின் படைப்பாக்கத் திறனுக்கு உள்ளுறை, உவமம் இறைச்சி சான்றாகும்.

குறிஞ்சித் திணைப் பாடியப் புலவர்களே அதிகமாக கருப்பொருளின் உள்ளுறையாக உரிப்பொருள் அமைந்தப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள் சங்கஇலக்கியத்தில் மிகமிக குறைவாகக் காணப்படுகிறது. உரிப்பொருள் அமைந்தப் பாடல்களைப் புலவர்கள் அகத்திணைநெறிப்படியும், புலநெறி வழக்கப் படியும், மக்களுக்கு காதல் இன்பத்தையும் அறமாக பாடியுள்ளனர். சங்க அகப்பாடல்களில் அடி நீள நீள இயற்கைப் புனைவுக்கு வாய்ப்புண்டு. அடியளவு குறைவுபடின் உயரியப் பொருளான உரிப்பொருளுக்கே சிறப்பிடம்.

திணை ஒழுக்கத்தின் அடிப்படையில் புணர்தலில் மகிழ்வும், பிரிதலில் உறுதியும், இருத்தலில் மனவலிமையும், ஊடலில் தெளிவும், இரங்களில் இரக்கமும் உள்ளவர்களாக அகமாந்தர்களைப் படைத்துக் காட்டி உள்ளனர் புலவர்கள்.

# சான்றெண் விளக்கம்


1. தொல். பொருள். அகத். நூ. 3
2. தொல். பொருள். அகத். நூ. 4
3. தொல். பொருள். இளம்பூரணர் உரை ப. 8
4. தொல். பொருள். அகத். நூ. 19
5. தொல். பொருள். அகத். நூ. 20
6. தொல். பொருள். அகத். நூ. 15
7. டாக்டர் வ. சுப. மாணிக்கம், தொல்காப்பியக் கடல் ப. 75-76
8. தொல். பொருள். அகத். நூ. 16
9. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 159
10. நம்பி. அகத். நூ. 25
11. மாறனகப் பொருள், நூ. 30
12. தமிழ்நெறி விளக்கம், நூ. 13
13. இளசைக் கிழார் ச.சோ. பாரதி தொல். பொருட்படலம் அகம், ப. 185
14. டாக்டர். ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப. 14
15. சா. சிவமணி, சங்க அகத்திணைக்கோட்டுபாடு நோக்கில் தமிழ் மலையாள நெய்தல் நில நாவல்கள் ப. 41
16. டாக்டர் ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப. 13
17. காசு. பிள்ளை, பழந்தமிழர் நாகரிகம், ப. 4
18. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 274
19. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 270-271
20. க.ப. அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும் ப. 98.
21. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 310

22. பெ. மாதையன், அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப. 86
23. மேலது. ப. 86
24. க.ப. அறவாணன், அற்றை நாட் காதலும் வீரமும் ப. 117
25. குறுந். பா. 40
26. குறுந். பா. 156
27. வி. நாகராசன், (உ.ஆ), குறுந்தொகை மூலமும், உரையும் ப. 361-362
28. தொல். பொருள். களவு. நூ.129
29. திருக்கோவையார்: 166
30. அகம். பா. 72: 18-22
31. தொல். பொருள்: நூ. 111
32. குறிஞ்சிப்பாட்டு பாடல் அடி: 20-22
33. தொல். பொருள். நூ. 5
34. தொல். பொருள். நூ. 6
35. தொல். பொருள். நூ. 23
36. தொல். பொருள். இளம்பூரணர் உரை ப.16
37. தொல். பொருள். நச்சி. உரை. ப.77
38. தொல். பொருள். மு. அருணாசலம்பிள்ளை (ஆய்வுரை) சோமசுந்தரபாரதி (உ.ஆ)ப. 183.
39. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 353.
40. ஐங். பா. 483
41. நற். பா. 89: 7-11
42. நற். பா. 115: 6-11
43. அகம். பா. 4: 1-7

44. நற். பா. 81: 7-10

45. அ.ச. ஞானசம்பந்தன், அகமும், புறமும் ப. 61

46. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ) கலித்தொகை ப. 7

47. குறள்: 1306

48. பொ. வே. சோமசுந்தரனார் (உ.ஆ) கலித்தொகை ப. 7.

49. க.ப.அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், ப. 118

50. புலவர் குழந்தை, தொல்காப்பியத்தமிழர், ப.97.

51. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப.297

52. ஐங். பா. 21

53. காவியா சண்முகசுந்தரம் (தொ.ஆ) ந.சஞ்சீவி கட்டுரைக் களஞ்சியம், ப. 380.

54. தொல். பொருள். கற்பு. நூ. 15

55. குறுந். பா. 19

56. ஐங். பா. 83

57. நச்சினார்க்கினியர் (உ.ஆ) தொல். பொருள். ப. 67

58. புலவர் குழந்தை (உ.ஆ) தொல். பொருள். ப. 139.

59. க.ப. அறவாணன், அற்றைநாட் காதலும், வீரமும் ப. 118.

60. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப.278

61. கலி. பா. 131: 15-20

62. அகம். பா. 170: 1-6

63. ஐங். பா. 192

64. க.பா. அறவாணன், அற்றைநாட் காதலும், வீரமும் ப. 119

65. தொல். பொருள். அகத்திணை. நூ. 15

66. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 294-295

67. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 294

68. குறுந். பா. 229

69. அகம். பா. 339. 12 - 14

70. பட்டின. அடி. 218 - 220

71. பட்டின. அடி. 299 - 301

72. தொல். பொருள். அகத். நூ. 183

73. தொல். பொருள். அகத். நூ. 49

74. தொல். பொருள். அகத். நூ. 50

75. தொல். பொருள். அகத். நூ. 51

76. சு. மகேஸ்வரி, நற்றிணையில் உள்ளுறை ப. 8

77. சிவலிங்கனார் ஆ.,தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும், இறைச்சியும் ப. 51

78. மேலது, ப. 52

79. மேலது, ப. 52

80. மேலது, ப. 56

81. மேலது, ப. 54

82. குறுந். பா. 90

83. அகம். பா. 2: 1-9

84. ஐங். பா. 208

85. ஐங். பா. 454

86. நற். பா. 142: 1 - 8

87. ஐங். பா. 41

88. கலித். பா. 66: 1-8

89. அகம் பா. 46

90. ஐங். பா. 193

91. நற். பா. 4

92. ஐங். பா. 325

93. அகம். பா. 249: 14-19

94. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 282.

95. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 98

96. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப.20

97. குறுந். பா. 120

98. குறுந். பா. 70

99. குறுந். பா. 99

100. தொல். பொருள். கற்பு. நூ. 184

101. குறுந். பா. 400

102. கோவிந்தசாமி.ந., குறுந்தொகை நயவுரை. ப. 352.

103. குறுந். பா. 93

104. இளம்பூரணர், தொல். பொருள். கற்பு. நூ. 6

105. நச்சினார்க்கினியர், தொல். பொருள். கற்பு. நூ. 48

106. குறள். 1309

107. குறுந். பா. 4

108. குறுந். பா. 102

109. குறுந். பா. 27

110. கோவிந்தசாமி மு., குறுந்தொகை நயவுரை. ப. 32-33

111. குறுந். பா. 63

# இயல் - 3

# சங்கப் புலவர்களின் அகமாந்தர்கள் உருவாக்கம்

அகத்திணை காதலைப்பாடும் இலக்கியமாகும். அன்பென்பது உயிரினங்களின் பொது பண்பாகும். சங்கப் பனுவல்கள் தலைவன், தலைவியை முதன்மை அகமாந்தர்களாகப் போற்றுகின்றன. "சுட்டி ஒருவர் பெயர்க் கொளப் பெறார்" என்னும் தொல்காப்பியரின் சூத்திரமே அகமரபாகப் புலவர்கள் பின்பற்றியுள்ளனர். மேலும் தலைவன், தலைவியரின் அக வாழ்விற்குத் தோற்றாத் துணையாகத் திகழ்ந்த தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், பாங்கன் ஆகிய மாந்தர்களின் பண்புநலன்களும், அகத்துறைகளும் விவரிக்கப்படுகின்றன. அகமாந்தர்களின் மனஉணர்வுகளை வெளிப்படுத்துவதில் தொல்காப்பியர் சுட்டியுள்ள எண்வகை மெய்ப்பாடுகளைப் புலவர்கள் தம் பாடல்களில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்பது ஆராயப்படுகின்றன. மேலும், தலைமை மாந்தர்களின் அகம் சார்ந்தக் கருத்துக்களையும், பிரிவில் அடையும் துயரங்களையும் கூறும் நிலையில் துணைமை மாந்தர்களான பாங்கனும், தோழியும் எந்நெறியில் துணைப்புரிகின்றனர் என்பதும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**அகப்பொருள் மாந்தர்கள்**

ஒத்த அன்பால் தலைவனும், தலைவியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அவ்விருவரின் உள்ளத்தால் இன்புறக் கூடியதாக அமையப்பெற்றவையே அகப்பொருள் பாடல்கள் ஆகும்.

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே"[1]**

என்பர் தொல்காப்பியர். அகவாழ்வில் கூடுகின்ற ஒருவனும், ஒருத்தியும் யார் என்பதைக் கூறுகிறார். தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் முதல் நாள்

சந்திப்பிலே கூடி பால்வரைத் தெய்வத்தின் ஆணையால் தனியிடத்துச் சந்தித்துக் கூடுகின்ற நிகழ்வே அகப்பொருளின் தொடக்கமாகும்.

தலைவனும், தலைவியும் பத்துவகைப் பொருத்தங்களுடன் விளங்க வேண்டும். அவை பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, காமவாயில், நிறை, அருள், உணர்வு, திரு என்பவையாகும். இவை, தவிரத் தலைமக்களுக்கு ஆகாதப் பண்புகளையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். அவை நிம்பிரி, கொடுமை, வியப்பு, புறமொழி, வன்சொல், பொச்சாப்பு, மடிமை, குடிமை, இன்புறல், ஏழ்மை, மறப்பு, ஒப்புமை என்பவையாகும்.

**"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்"[2]**

எனக் கூறுவர். அகமாந்தர்கள் 'புலனெறி' வழக்கிற்கு உரியவர்கள் ஆவார்.

மேலும், "செல்வதானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினாலும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனதாகக் கூறுதல்"[3] என்று இளம்பூரணர் உரை வகுப்பர்.

நச்சினார்க்கினியர் "உலகத்தோடு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அயமெனக் கருதி அந்நல்லோர்க்குள்ளனவற்றிற் சிறிது இல்லனவும் கூறுதலின்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கன்றே நாடகம் என்னாது, வழக்கு என்பாராயிற்று"[4] என உரைப்பர்.

எனவே, உலகத்தில் சமூகப் பண்பாட்டோடு வளர்க்கப்பட்ட ஒருவனும், ஒருத்தியும் அவர்களுக்கே உரிய தலைமைப் பண்புகளோடும், நாடக வழக்கிற்குரிய பண்புகளையும் இணைத்து உருவாக்கப்பட்டவர்களே அகப்பொருள் மாந்தர்கள் ஆவார். இவ்விரண்டு பண்புகளும் சேர்ந்ததே புலனெறி வழக்காகும். புலவர்கள் படைத்துக் காட்டும் அகப்பொருள் நிகழ்ச்சிகளான, இவை இரண்டும் இணைந்து செய்யுள் வடிவம் பெறலாயிற்று.

அகப்பண்பாட்டு நெறிகளின் இலக்கணத்தை விளக்கியுள்ள தொல்காப்பியர், அகக்கோட்பாட்டில் கூற்றுக்குரிய மாந்தர்களைக் களவுக்குரியோர், கற்புக்குறியோர்

**"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
**சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு**
**அளவியல் மரபின் அறுவகை யோருங்**
**களவினிற் கிளவிக் குரியர் என்ப"[5]**

என வகுப்பர் தொல்காப்பியர். களவுக் கூற்று மாந்தர்களாக அறுவரைச் சுட்டியுள்ளார். தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி ஆவார்கள். இம்மாந்தர்களைக் கொண்டே புலவர்கள் அகப்பாடல்களைப் பாடினர்.

களவிற்கு அடுத்துத் தொல்காப்பியர் கற்புக் காலத்தில் நிகழும் கூற்றுகளாக பன்னிருவரை,

**"பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்" [6]**

உரைப்பர். பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோரையும் சேர்த்துப் பன்னிருவரை கற்பிற்குரிய கூற்று மாந்தர்களாகச் சுட்டியுள்ளார். புலவர்கள் வரையறுத்துப் பாடப்படும் திணை ஒழுக்கத்தில் ஒழுகுபவர்கள் தலைவனும், தலைவியும் ஆவார். இவர்களையே முதன்மை பாத்திரமாகக் கொண்டு பாடியுள்ளனர். இவர்களின் ஒழுக்கம் செம்மையாக நடைபெறுவதற்குத் துணைமை மாந்தர்களான தோழி, செவிலி, நற்றாய், கண்டோர், பாங்கன், பாணன், விறலியர், அறிவர், பரத்தையர், கூத்தர், இளையர், விருந்தினர், தேர்ப்பாகன் ஆகியோர்கள் துணைப் புரிகின்றன. தலைவனும், தலைவியும் நல்லறம் வாழ்வதற்கு நல்லுள்ளம் கொண்டவர்களாகத் துணை மாந்தர்கள் திகழ்கிறார்கள்.

**அகத்திணை மரபு**

அகமாந்தர்களின் பெயர்கள் அகப்பாடல்களில் இடம் பெறாது. ஏனெனில், மக்கள் அனைவருக்கும் பொதுவாக நிகழும் அனுபவ உணர்வு என்பதால்

தலைவன், தலைவி பெயர்கள் இடம் பெறாது. ஆனால், புறத்திணைப் பாடல்களில் இயற்பெயர் இடம்பெறும்.

**"மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர்ப்**
**பெயர் கொளப் பெறஅர்"**[7]

என்பர் தொல்காப்பியர். காதலர்கள் ஒற்றுமையாக உள்ளவர்கள். இருவருக்கும் உள்ள பிணைப்பு அன்பு. அகப்பாட்டானது பொதுமைத் தன்மை வாய்ந்ததாகும். மேலும் கற்போர் உள்ளத்தை எளிதில் தனிவயப்படுத்திக் கொள்ளும் திறன் அகப்பாடல்களுக்கு உண்டு.

தலைவனும், தலைவியும் யாவரும் அறியாதவாறு தனியிடத்திலே சந்தித்துக் கூடிக் களவு வாழ்வில் எதிர்ப்பட்டுப் பின்பு பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்துக், கற்பு வாழ்வில் ஈடுபடும் வாழ்வே அகப்பொருள் வாழ்வாகும்.

தலைவன் - தலைவி முதலான அகமாந்தர்களின் பண்புகளையும், பெருமைகளையும் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். இலக்கியத்தினைச் சமூகத்தில் இருந்து பிரித்துப் பார்க்க இயலாது. அவை, சமூகத்தோடு பிணைந்தப் பிணைப்பாக நோக்க வேண்டும். சமூகத்தோடு ஒன்றி வாழ்வது.

**தலைமகனின் பண்புகள், அகத்துறைகள்**

தலைவனானவன் பிறப்பு, குடிமை, ஆண்மை, கல்வி, அறிவு ஆகிய வாழ்வியல் கூறுபாடுகளை உடையவனாவான் என்பதை,

**"பெருமையும் உரனும் ஆரூஉ மேன"**[8]

என உரைப்பர் தொல்காப்பியர்.

இந்நூற்பாவிற்கு,

**"பெருமையாவது பழியும், பாவமும், அஞ்சுதல். உரன் என்பது அறிவு"**[9]

என இளம்பூரணர் உரை வகுப்பர்.

தலைவனானவன் இடையூறு நேர்ந்தக் காலத்தில் நெஞ்சழிவதும், இன்பம் நேர்ந்தக் காலத்தில் மகிழ்தலுமான எளியோர்களின் குணங்களின்றி

எந்நிலையிலும் ஒரே மனதினைப் பெற்றவனாக இருத்தலே பெருமையினை உடைய ஆண்மகனின் தகுதிப்பாடாகும். மேலும், **"தலைமகன், அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன குணம்"**[10] என நக்கீரனார் உரைத்து அதற்கு, "அறிவு என்பது, எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை அறிவது. நிறை என்பது, காப்பனக் காத்துக் கடிவனக் கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பு என்பது, ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல், கடைப்பிடி என்பது கொண்ட பொருள் மறவாமை"[11] என உரையும் வகுப்பர். இதன்வழி தலைவனின் இயல்புகள் இன்னது என அறிந்து கொள்ள ஏதுவாக அமைகிறது.

**களவு வாழ்க்கை**

களவு வாழ்க்கையில் சமூகத்திற்குக் கட்டுப்பட்டவனாக இருக்கக் கூடிய தலைவன், காமம் மீதூர அவனின் இயல்பு குணங்கள் மாறி விடுகின்றன. இவ் காரணத்தினால் நான்கு கூட்டங்கள் திகழும் என்பது தொல்காப்பியர் கூற்று.

**"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
**பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்**
**றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே"**[12]

எனக் காமக் கூட்டங்களை முறைபடுத்துவர் தொல்காப்பியர் களவியலின் கிளவிகளாவன

1. காமப்புணர்ச்சியாகிய இயற்கைப் புணர்ச்சி
2. இடந்தலைப்பாடு
3. பாங்கற் கூட்டம்
4. பாங்கியிற் கூட்டம்

என்பனவாகும்.

**இயற்கைப்புணர்ச்சி**

தினைப்புனக் காக்கத்தலைவியும், தோழியும் செல்கின்றன. குமரப் பருவம் எய்திய தலைவன் தன் வேட்டைநாயுடன் மலையைச் சுற்றித்திரிகின்ற நிலையில் தலைவி இருக்குமிடத்தை அடைகின்றான். தலைவி அழகும், ஆண்மையும்

பொருந்தியத் தலைவனைப் பார்க்கின்றாள், நம்பியும் பார்க்கின்றான். பாலது ஆணையால் கலந்தனர்.

இயற்கைப் புணர்ச்சியில்,

**"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**[13]

என்பது தலைவன் கூற்றாக அமைந்த பாடலாகும்.

செம்மெண் நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணொடு கலந்து, அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று, தனது தன்மை மாறி ஒன்றாக கலப்பது போன்று நம் உள்ளங்களும் ஒன்றாக கலந்தன. பாலது ஆணையால் இருவரும் சந்தித்தோம். இவ்வுறவானது என்றும் தொடரும் எனத் தலைவனின் கூற்றாகும் அவனின் அன்பு மிகுதியும், உறுதித்தன்மை ஈண்டு உணரற்பாற்று.

**இடந்தலைப்பாடு**

**"தந்த தெய்வம் தருமெனச் சேறலும்**
**முந்துறக் காண்டலும் முயங்கலும் புகழ்தலும்**
**உடன்புணர் ஆயத்து உய்த்தலும் எனஐந்து**
**இடந்தலைப் பாட்டின் இலக்கண விரியே"**[14]

என நம்பியகப்பொருள் ஆசிரியர் உரைப்பர். இயற்கைப்புணர்ச்சியில் தலைவியைக் கூட்டுவித்த பால்வரை தெய்வம் தலைவியை மீண்டும் தரும் என்று அந்த இடத்துக்கண் செல்லுதலும், தலைவியைக் காணுதலும் முயங்கலும், புகழ்தலும் பின்பு தலைவியை அவள் ஆயத்தாரிடத்து விடுத்துச் செல்லுதலும் என இடந்தலைப்பாட்டை ஐந்து நிலைகளில் சுட்டுவர் நம்பியாசிரியர்.

**"சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்**
**தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇ"**[15]

எனச் சுட்டுவர் தொல்காப்பியர். 'சொல்லிய நுகர்ச்சி' முதல் 'இரு நான்கு கிளவி' வரை என இடர்ந்தலைப்பாடு குறித்து உரை வகுப்பர் இளம்பூரணர்.

தாமே கூடும் இடந்தலைப்பாடு, பாங்கனாற் குறித்தலைப் பெய்யும் இடந்தலைப்பாடு என்று இடந்தலைப்பாடு இரண்டாயிற்று என உரைப்பர் நச்சினார்கினியர்.

மெய்தொட்டுப் பயிறல் முதலாகத் தீராத்தேற்றம் ஈறாகக் கூறப்பட்ட எட்டுக் கிளவிகளுமே இடந்தலைப்பாடு ஆகும்.

'சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்' என்பது, மெய்த்தொட்டுப் பயிறல் முதலாகக் கூடுதலுறுதல் வரையிலும் சொல்லப்பட்ட இயற்கைப் புணர்ச்சிக்குரிய இன்பத்தை மீண்டும் விரைவாகப் பெறுதல் என்றும், தீராத் தேற்றம் என்பது நின்னைப் பிரியேன் என்பதாகும் என்றும், சிவலிங்கனார் ஆய்வுரை வழங்குவர். மேலும், நம்பியகப்பொருள் கூறும் 'தந்த தெய்வம் தருமெனச் சேறல் முதலாகப் புகழ்தல்' ஈறாகக் கூறப்பெற்றவை 'சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்' என்பதற்குள் அடக்கிவிடலாம். 'உடன் புணர் ஆயத்து உய்த்தல்' என்பது தீராத் தேற்றம் நிகழ்ந்த பின்னர் நிகழ்வது ஆதலின் அதனுள் அடக்கிவிடலாம். இவ்சிவலிங்கனாரின் ஆய்வுரை நெறியில் முதல் நூலாசிரியின் நெறியில் வழிநூல் ஆசிரியர் பயின்ற வந்து உள்ளனர் என்பதைத் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம்.

ஆறு பாடல்கள் இடந்தலைப்பாட்டிற்கு உரியவையாகும். இயற்கைப்புணர்ச்சிக்கு அடுத்துக் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்படத் தலைவன் கூற்றாக,

**"ஒள் இழை மகளிரொடு ஓரையும் ஆடாய்,**
**வள் இதழ் நெய்தற் தொடலையும் புனையாய்,**
**விரி பூங் கானல் ஒரு சிறை நின்றோய்**
**யாரையோ? நிற் தொழுதனெம் வினவுதும்:**
**கண்டோர் தண்டா நலத்தை - தெண்திரைப்**
**பெருங் கடல் பரப்பின் அமர்ந்து உரை அணங்கோ?**
**இருங் கழி மருங்கு நிலைபெற்றனையோ?**
**சொல், இனி மடந்தை என்றனென்: அதன் எதிர்**
**முள் எயிற்று முறுவல் திறந்தன்**
**பல் இதழ் உண்கணும் பரந்தவால், பனியே"[16]**

எனப் பாடுவர் பராயனார்.

தலைவன், தலைவியிடம் உன்னைத் தொழுது கேட்கின்றேன். பெரிய கடற்பரப்பில் கண் விரும்பி உறையும் கடல் தெய்வமோ? கரிய உப்பங்கழி அருகில் நிலைபெற நின்றனையோ? வேறு யாரோ பெண்ணோ? மடந்தையோ? நீ மொழிவாயாக? என வினவுகிறான். அதற்கு தலைவி விடையாக, முள்ளைப்போன்ற கூரிய பற்களிலிருந்து புன்னகையையும், மையுண்ட கண்கள் பனி பரந்தன. ஆகவே, யாம் முன்பு தழுவிய இவளே இப்பொழுது அம்முகக் குறிப்பினைக் காட்டினாள் என உணர்ந்தான்.

**"கோடல், எதிர்முகைப் பசுவீ முல்லை,**
**நாறுஇதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ,**
**ஐதுதொடை மாண்ட கோதை போல,**
**நறிய நல்லோள் மேனி**
**முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே"** [17]

எனப்பாடுவர் சிறைக்குடி ஆந்தையார். தலைவன் இடந்தலைப்பாட்டின் கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியதாக தலைவன் கூற்றும் ஈண்டு ஒப்பத்தக்கது.

தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது என்பதாக அமைந்த அகம் 230, 280 ஆகிய பாடல்களையும் இடந்தலைப்பாட்டிற்கான பாடலாகும். தலைவியின் மேன்மையை எடுத்தியம்புவதாகப் புலவர்கள் பாடி உள்ளது நினையத்தகுந்ததாகும்.

இடந்தலைப்பாட்டில், தலைவன் சொல்லியது, தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது, தலைவியை கண்ணுற்று நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது என்ற துறைகளில் தலைவன் கூற்று அமையப் பெற்றிருக்கிறது என்பதை உணர இயலுகிறது.

**பாங்கற் கூட்டம்**

இடந்தலைப் பாட்டின் பின்னர், தலைவன், தலைவி கூடுதல் கடினம். இந்நிலையில் தலைவன் பாங்கனின் உதவியை நாடுவான். களவு வாழ்வு மேம்பாட்டிற்குத் துணை நிற்பவன் பாங்கள்.

**"பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப"**[18]

என்றும்,

**"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே"[19]**

என்றும்

**"பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே"** [20]

எனவும் பாங்கற்கூட்டத்தைச் சுட்டுவர் தொல்காப்பியர்.

இப்பன்னிரண்டு வகையில் முதல் மூன்று கைக்கிளைக்கு உரியவை, இறுதி நான்கும் பெருந்திணைக்குரியவை. "பிரம்மம் முதலிய நான்கும் கந்திருவப் பகுதியாகிய களவும் உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும் காமக் கிழத்தியும் காதற் பரத்தையும் அசுரம் முதலாகிய மூன்றுமென இவையாகும்" என்பது இளம்பூரணர் உரை. 'பிரமம், பிரசாபத்தியம். ஆரிடம், தெய்வம், முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், அசுரம், இராக்கதம், பேய்' என்பது நச்சினார்க்கினியர் உரை ஆகும்.

தலைவன் கூற்று நிகழ்த்துவதை,

**"பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்**
**நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்**
**குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்"[21]**

எனக் குறிப்பர் தொல்காப்பியர்.

பெற்ற வழி மகிழ்ச்சியும் என்பது இடந்தலைப்பாட்டினை ஒட்டி இன்பம் பெற்ற வழி மகிழ்தல் ஆகும். பிரிந்த வழிக் கலங்கலாவது தலைமகள் பிரிந்த வழித் தலைமகன் வருத்தமுறுதல் ஆகும். இவ்விரு துறைகளும் இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் மூன்றிற்கும் பொதுவானதாகத் திகழ்கிறது.

27 அகப்பாடல்கள் பாங்கற்கூட்டத்திற்கு உரியனவாகும். இவற்றில் பாங்கன் கூற்றாய் குறுந். 78, 204 ஆகிய பாடல்கள் திகழ்கின்றன. இருபத்தைந்தும் பாடல்கள் தலைவன் கூற்றாகும்.

**"மால்வரை இழிதரும் தூவெள் அருவி**
**கல் முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற்**
**சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**

**நீர் ஓரன்ன சாயல்**
**தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே" [22]**

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் கபிலர்.

இயற்கைப் புணர்ச்சியில் அவளைத் தழுவிய உணர்வு "பன்மலர்ச் சாரலை" நினைவுப்படுத்துகிறது. பகைவரை அழிக்கும் என் வலிமையானது நீரினும் மென்மையுடைய தலைவியின் அன்பால் மறைந்தது என்பது தலைவியின் மொழியாகப் பாடுவர் கபிலர்.

பாங்கற்கு உரைத்தது, கழறிய பாங்கற்கு அழிந்து உரைத்தது, பாங்கற்கு இவ்விடத்து இத்தன்மைத்து என உரைத்தது, தலைமகன் தன் வேறுபாடு கண்டு வினாவிய பாங்கற்கு உரைத்தது, தலைமகன் கழற்றெதிர் மறுத்தது, பாங்கன் தலைமகற்கு உரைத்தது என்னும் துறைகளில் காணப்படுகின்றன.

**பாங்கியிற் கூட்டம்**

செவிலியின் மகள் தோழி. உண்மையின் வடிவாக விளங்குபவளாகவும், உலகியலை நன்கு உணர்ந்தவள். தலைவன், தலைவி சந்திப்புக்குத் தோன்றாத் துணையானவள் தோழி. பாலது ஆணையால் தெய்வத்தால் கூட்டப்பெற்ற தலைவன், தலைவி காதல் நிலையினைத் தோழி அறிந்து கொள்ளும் முறையே 'பாங்கிமதி உடன்பாடு' ஆகும்.

தலைவன், தலைவியைத் தோழியின் ஆளுமையால் இணைவதை புணர்ச்சியுணர்தல் என்றும் பொருண்மையில் வகுப்பர் இளம்பூரணர்.

**"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென**
**மதியுடம் படுத்தல் ஒருமூ வகைத்தே"[23]**

என பாங்கியற் கூட்ட வகையைச் சுட்டுவர் தொல்காப்பியர். மதியுடம்பாடு குறையுறவுணர்தல், முன்னுறவுணர்தல், இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என மூன்று நிலைகளை உடையதாகத் திகழ்கிறது. நச்சினார்க்கினியர் தலைவன், தலைவி கருத்தினைத் தன் கருத்துடன் ஒப்பிட்டு உணர்வாள் தோழி எனக் குறிப்பர்.

தொல்காப்பியர் களவியலில் தலைவன் கூற்று நிகழ்த்தும் இடங்களை,

**"பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்**
**ஊரும் பேருங் கெடுதியும் பிறவும்**
**நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்**
**தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி**
**குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்**
**தண்டா திரப்பினும் மற்றைய வழியும்**
**சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்**
**அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்**
**கேடும் பீடுங் கூறலும் தோழி**
**நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி**
**மடல்மா கூறும் இடனுமா ருண்டே"** [24]

எனச் சுட்டுவர். தலைவன் களவுப் புணர்ச்சியை விரும்பித் தோழியிடம் இரந்து உமது ஊரும் பெயரும் என்ன என்ற இடத்தும், புலிகளும், மான்களும் இவ்வழியில் வந்ததோ என்ற இடத்தும், தலைவன் கருத்துப் பிறிதொன்று எனத் தோழி கருதுமாறு மொழியும் இடத்தும், தலைவன் கூறுகின்ற குறை தலைவியாய் இருப்பதைத் தோழி உணருமாறு உரைத்தல் என்ற இடத்தும், பின்பும் தலைவியுடன் கூட்டத்தை இரப்பினும் குறியிடத்துத் தலைவியை எதிர்ப்பாடின்றி ஆற்றானாய் இரந்து பின்நிற்றல் என்ற இடத்தும், மதியுடம்பட்ட தோழி கூடாமை என்ற இடத்தும், தலைவியிடத்துத் தோன்றிய கேட்டையம் அவன் அதனை ஆற்றியிருந்த பெருமையையும் கூறுதல் என்ற இடத்தும், தோழி தலைவனிடம் காவலர் கடிவர் என்பனவாகக் கூறிக் கூட்டத்தைத் தவிர்த்தவிடத்தும் எனத் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

"சங்க இலக்கியத்தில் 882 களவுப் பாடல்கள் உள. இவற்றுள் 40 பாடல்களே இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்ற மூன்று வகைக்கும் உரியன. எஞ்சிய 842 பாடல். 95 விழுக்காடு - தோழியிற் புணர்ச்சி என்னும் ஒரு வகைக்கே வருவன. இதனால் தோழியின்றிக் காதலர்களின் களவொழுக்கம் நீளாது என்பதும், ஐந்திணை இலக்கியப் படைப்புக்குத் தோழி என்னும் ஆள் (பாத்திரம்) இன்றியமையாதவள் என்பதும், தோழியிற் புணர்ச்சிக்குரிய துறைகளே புலவர்களின் நெஞ்சைக் கவர்ந்தன என்பதும்

பெறலாம்"[25] என்னும் வ. சுப. மாணிக்கனாரின் ஆய்வுரைத் தோழியின் அக ஆளுமையை உணர்ந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது.

தலைவன், காதலை உரைப்பது அகமரபாகும். தலைவியும், தோழியும் ஒருங்கு இருக்கும் நிலையில் காதலை உரைப்பவன் தலைவன். காதலை உரைத்த நிலையில் சந்திப்பது கடினம். சந்திப்பிற்குத் தோழியின் உதவி இன்றியமையாதாதாகும். அன்பின் மிகுதியால் தன்னைத் தவிர்த்து காதலை முன்னிறுத்தி செயலாற்றுவான் தலைவன்.

தலைவனின் இன்னல்களை மாற்றுபவள் தோழி. தலைவி குறை தீர்க்க விரும்புமாறு தன்னுள்ளே கூறியதை,

**"ஒன்று, இரப்பான் போல் எளிவந்தும் சொல்லும் உலகம்**
**புரப்பான் போல்வது ஓர் மதுகையும் உடையன்**
**வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்,**
**நல்லார் கண் தோன்றும் அடக்கமும் உடையன்**
**இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க**
**வல்லான் போல்வது ஓர்வன்மையும் உடையன்**
**அன்னான் ஒருவன் தன் ஆண் தகைவிட்டு, என்னைச்**
**சொல்லும் சொல், கேட்டீ - சுடரிழாய் - பல்மாணும்**
**"நின் இன்றி அமையலேன் யான்" என்னும் அவன் ஆயின்,**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**கூறுவென் போலக் காட்டி**
**மற்று அவன் மேஎவழி மேவாய், நெஞ்சே"** [26]

எனப் பாடுவர் கபிலர்.

ஆண்மைக்குரிய பண்புகளான எளிமை, பெருமிதம், அறிவு, அடக்கம், அருள், ஆற்றல் உடையவன் என் முன்னே தோன்றித் தலைவியானவள் இல்லையென்றால் எனக்கு வாழ்வில்லை என உரைக்கிறார். தன் ஆண்மைக்குரிய தகுதிகளை விடுத்து இறந்துபடுவேன் என்று கூறினானே எனத் தலைவனின் உரையாடல்களை எண்ணிக் கொண்ட தோழி. தலைவனின் குறையை முடிக்க எண்ணினாள். காதலினைத் தலைவியிடம் எவ்வாறு உரைப்பது அவளின்

மனநிலை எவ்வாறு இருக்கும் எனத் தனக்குத் தானே மொழிவதாகக் கபிலர் பாடுவது தோழியின் அகக்கடப்பாட்டினை உரைப்பதாகத் திகழ்கிறது.

**"மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது**
**பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்"[27]**

எனச் சுட்டுவர் தொல்காப்பியர். அதாவது, தலைவியின் நாணம் ஊறுபடாமல் மேலும் அவனின் நெஞ்சம் அறிந்து உரைக்கும் திறன் கொண்டவள் தோழி என்பது தொல்காப்பியரின் கூற்றாகும்.

**கற்பு வாழ்க்கை**

களவின் முடிபு நிலையை கற்பின் தொடக்க நிலையையும் குறிப்பது கரணத்தின் வழியே ஒத்த அன்புடையோரை இல்லறத்தில் இணைப்பதுமான செயலே கற்பு ஆகும்.

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"[28]**

எனக் கற்பை உணர்த்துவர் தொல்காப்பியர். கற்பென்பது கரணத்தால் இணைக்கப்படுவது. இவைக் கொடுப்போர் கொடுக்க கொள்வோர் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். இருவரின் இசைவு, இணைவுக்குத் தேவை. மேலும் இக்கொடுப்போர் இன்றிப் புணர்ந்தவுடன் உடன்போதலும் 'கற்பு' என்றே

**"கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிற காலை யான" [29]**

எனச் சூத்திரம் வகுப்பர் தொல்காப்பியர். கரணத்தால் இணையும் வரைவினை,

**"வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்**
**குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்**
**கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே"[30]**

என முன் நிறுத்துவர் நம்பியாசிரியர். வரைவியலில், 'வரைவுமலிவு, 'அறத்தொடு நிற்றல்' ஆகிய இருவகைக் கிளவித் தொகைகள் உண்டு எனக் குறிப்பிடுகின்றார். மேலும் தொடர்ந்து,

**"கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி**
**பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்று**
**ஈங்க நால்வகைத்து இல்வாழ்க்கையே"[31]**

எனச் சூத்திரம் வகுத்ததன்வழி 'இல்லறத்தை' மகிழ்வுக்கு உரிய ஒழுக்கமாக உரைப்பது நோக்குதற்குரியதாகும். இல்லறவுறவினைக் கற்பியலில்,

**"பொற்பமை சிறப்பின் கற்பெனப் படுவது**
**மகிழ்வும் ஊடலும், ஊடல் உணர்த்தலும்**
**பிரிவும் பிறவும் மருவிய தாகும்."[32]**

என நம்பி உரைப்பின் வழி ஊடல், ஊடல் உணர்தல் எனப் பிரிவை வகைப்படுத்துவர். இல்லறத்தில் ஊடலும், ஊடல் தீர்த்தலும் அகமரபு என்பதும் பொருளாகிறது. மேலும் கற்பியலில்,

**"இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே**
**ஓதற் பிரிவே காவல் பிரிவே**
**தூதிற் பிரிவே துணைவயின் பிரிவே**
**பொருள்வயின் பிரிவஎனப் பொருந்திய ஏழும்**
**வளமலி கற்பின் கிளவித் தொகையே"[33]**

எனப் பிரிவின் வகைகளை உரைப்பர் நம்பியாசிரியர். **"கரணத்தின் அமைந்து முடிந்த காலை"[34]** என்னும் தொல்காப்பியரின் கற்பு நெறியை விரிவுப்படுத்தி உரைப்பது பொருள் உடையதாகும்.

**உடன்போக்கு**

அகமரபில் கொடுப்போரும், கொள்வோரும் திருமணத்திற்கு உறுதுணையாக இல்லாத சூழ்நிலையில் தலைவனும், தலைவியும் உடன்போக்கை நிகழ்த்துவர். இவற்றில் 'உடன்போக்கு புணர்ந்தவுடன் போதல்', 'கொண்டுதலைக்கழிதல்' ஆகிய இரு துறைகள் உள்ளன.

உடன்போகா நின்ற தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியதாக,

**"வினை அமை பாவையின் இயலி, நுந்தை**
**மனை வரை இறந்து வந்தனை: ஆயின்,**
**தலை நாட்கு எதிரிய தண் பத, எமிலி**

**அணி மிகு கானத்து அகன் புறம் பரந்த**
**கடுஞ் செம்மூதாய் கண்டும், கொண்டும்,**
**நீ விளையாடுக சிறதே: யானே,**
**மழ களிறு உரிஞ்சிய பராரை வேங்கை**
**மணல் இடு மருங்கின் இரும் புறம் பொருந்தி,**
**அமர் வரின், அஞ்சேன், பெயர்க்குவென்**
**நுமர் வரின், மறைகுவென் - மா அயோளே"[35]**

என மதுரைமருதன் இளநாகனார் பாடுவர். தலைவியே, உன் இல்லத்தை விடுத்து என்னுடன் நின்றாய் வருந்தாதே. இவ்வழகிய காட்டின் தம்பலப்பூச்சிகளுடன் நீவீர் விளையாடுக. வேங்கை மரத்தின் பின்புறம் அமர்ந்துள்ளேன். அச்சமயத்தில் வழிப்பறிச் செய்வோர் வந்தால் அவர்களுடன் அஞ்சாது போரிட்டு இவ்விடம் விட்டுச் பெயரச்செய்வேன். ஆயின், ஒரு வேளை உன்னைத்தேடி உன் சுற்றத்தார் வருவாரெனில் அவர்களிடம் போரிடமாட்டேன் என்கிறான். பகைவர்களைக் கண்டு அஞ்சாத நெஞ்சம், காதல் உறவினர்களைக் கண்ட நிலையில் நெகிழும் எனத் தலைவன் கூற்றாக உரைப்பதன் வழி, தலைவனின் அகத்தை மதுரை மருதன் இளநாகனார் வெளிப்படுத்திக் காட்டும் உத்தி நோக்குதற்குரியதாகும்.

**பொருள்வயிற்பிரிவு, வினைவயிற்பிரிவு**

ஆடவர்களின் ஆளுமைப் பண்பில் வினையும் பொருளும் முதன்மையானதாகும். வினை பொருள் பொருட்டு பிரிதல் நிகழும்.

**"பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்**
**பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்**
**நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளுஞ்**
**சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியுங்**
**காமத்தின் வலியுங் கைவிடின் அச்சமுந்**
**தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்**
**உடன்சேறற் செய்கையோ டன்னவை பிறவும்**
**மடம்பட வந்த தோழிக் கண்ணும்**
**வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்**
**மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்**
**அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்**
**பேரிசை யூர்திப் பாகர் பாங்கினுங்**

**காமக் கிழத்தி மனையோள் என்றிவர்**
**ஏமுறு கிளவி சொல்லிய எதிருஞ்**
**சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி**
**இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்**
**அருந்தொழில் முடித்த செம்மற் காலை**
**விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்**
**மாலை யேந்திய பெண்டிரும் மக்களுங்**
**கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்**
**ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇ"** [36]

எனப் பதினேழு கூற்றுகளை உரைப்பர் தொல்காப்பியர். இவை கற்பியல் தலைவனின் பொருள், வினை குறித்தனவாகும். "பிரிவன் எச்சத்து" எனும் பகுதியில் தொடங்கி "மடம்பட வந்த தோழிக்கண்ணும்" எனும் பகுதி வரையானக் கூற்றுகள் பொருள்வயிற் பிரிவுக்குரியவையாகவும் "வேற்றுநாட்டு அகல்வாயின்" தொடங்கி "ஏனைய வாயிலோர் எதிரொடு தொகைஇ" வரையான கூற்றுகள் வினைவயிற் பிரிவிற்குரியவையாகும் என உரையாசிரியர்கள் வகைப்படுத்துவர்.

**"பிரியும் காலை எதிரிநின்று ஆற்றிய**
**மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்"**[37]

என்னும் தொல்காப்பியரின் சூத்திரனார். பொருள் வினையின் காரணமாகத் தோன்றும் பிரிதலில் தோழியின் பணியினைச் சுட்டுகிறது.

தலைவன் "பெருமையும் உரனும் உடையோன்" இப்பொருண்மை மூலமாகத் திகழ்வது அவனின் பொருளும், வினையுமே ஆகும். "வினையே ஆடவர்க்கு உயிரே"[38] என்னும் பாலைப் பாடிய பெருங்கடுங்கோவன் வினையின் கூற்று ஈண்டு ஒப்பத்தக்கதாகும் வள்ளுவன். "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை"[39] எனுவும்

**"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு"**[40]

எனவும் உரைப்பது எத்துணை பொருள் சிறப்புரை என்பதை உணர்ந்து கொள்ள நலம் பயக்கும்.

இல்லாதவர்களுக்கு ஈயும் அறம் செய்வதற்கும் செறுநர் செறுக்கழிக்கும் திறம் பெறுவதற்கும், பயிலியது கெழீஇய நட்புடைய தலைவியோடு இல்லத்தில் இனிதிருந்து இன்பம் துய்ப்பதற்கும் பொருள் இன்றியமையாதாக உள்ளன. "பெருமை நோக்கமும் மனத்திட்பமும் ஆண்பாலுக்கு உரிய பண்புகள் என்று தொல்காப்பியர் சுட்டுவர். ஆதலின் நீடிய காமத்தில் அழுந்திக் கடமை குறைதலும் வறுமைப்படுதலும் தலைவனுக்கு உளவாகா. பொருளாவது கடமையை எளிமைப்படுத்தும் கருவி. இக் கருவியை ஈட்டுதற்குத் தலைவர்கள், தலைவியர்களை விட்டுப் பிரிப. பொருள்வயிற்பிரிவு என்னும் இத்துறை சங்கப்புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும், கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக்கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருப்பக் காணலாம்"[41] என்னும் வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வுரை வழி பொருளும் வினையும் ஆடவரின் உயிர் என்பதை உணர்ந்து இயலும்.

பொருள்வயிற் பிரிந்த தலைமகன் ஆற்றானாய்,

**"நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்**
**பெருந் தண் கொல்லிச் சிறு பசுங் குளவிக்**
**கடி பதம் கமழுங் கூந்தல்**
**மட மா அரிவை தடமென் தோளே?"[42]**

தலைவன் நெஞ்சு உரைத்தாகப் பாடுவர் எயினத்தை மகன் இளங்கீரனார். பொருள்தேடிச் சென்ற தலைவன் ஆற்றாமையால் இருக்கிறான். இந்நிலையில் தலைவியின் தோள் துய்த்தல் அரிதானதாகும். இந்தத் துயரத்தை நெஞ்சிடத்தே உரைத்ததாகப் பாடுவர் புலவர் இதன்வழி தலைவனின் அன்பு உணர்வினை உணரலாம்.

**"நட்டோர் இன்மையும், கேளிர் துன்பமும்,**
**ஒட்டாது உறையுநர் பெருக்கமும், காணூஉ**
**ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல -**
**பொன்அவிர் சுணங்கொடு செறிய வீங்கிய**
**மென்முலை முற்றம் கடவா தோர்" என,**
**நள்ளென் கங்குலும் பகலும், இயைந்து இயைந்து,**
**உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி**

**ஆள்வினை மாரியின் அவியா நாளும்**
**கடறுஉழந்து இவணம் ஆக"** [43]

எனப் பாடுவர் இருங்கோன் ஒல்லையான் செங்கண்ணனார். பொருள் வயிற் பிரிந்து போகா நின்ற தலைவன், தன் நெஞ்சிற்கு உரைத்ததாகும்.

தம்மோடு நட்புக்கொண்டோர் பொருளில்லாமல் வறுமையில் வாடுவதையும், தம் சுற்றத்தார் துன்புறுதலையும், நம்மோடு பொருந்தாத பகைவர் செல்வச் செழிப்போடு இருப்பதையும் பார்த்தும் தன் தலைவியின் அன்பிலே மடிபெருக்கி ஒரே இடத்தில் வாழ்ந்திருப்பர். இத்தகைய குணமின்றிப் பிறர் துன்பத்தைப் போக்குவதற்காகவும், தன் கடமையுணர்வினை நிலைநாட்டவும் இரவிலும் பகலிலும் 'கவலை' என்னும் பெருநெருப்பினை 'முயற்சி' என்னும் மழையால் அவித்தேன். கடமையுணர்வின் பொருட்டு வீட்டை விட்டு இதோ காட்டில் கடமைத் திட்பம் கொண்டு நடக்கின்றேன் எனத் தன் நெஞ்சிற்கு உரைத்துக் கொள்கிறான் தலைவன். உலகவாழ்வியலையும் அகவுணர்வினையும் புலவர் எடுத்தியம்பும் திறம் நோக்கற்பாலது.

களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் தலைவன் காதல் உணர்வு, வீரமும், அறிவும், இரக்கம், உண்மை தன்மை ஆகியப் பண்புநலன்களில் முதன்மைப்பெற்று விளங்குவதை அறிந்து கொள்ள முடிகிறது. தலைவனின் பண்புகளில் பொருள் பண்பைப் விட அகப்பண்பே மேலோங்கி நிற்பதை உணர்ந்து கொள்ள இயலுகிறது.

**தலைமகளின் பண்புகள், அகத்துறைகள்**

**களவு வாழ்க்கை**

தலைவனோடு ஒத்த பிறப்பும், குடிமையும் கொண்டவள் தலைவி. அச்சம், நாணம், மடம் என்னும் குணங்களைப் பண்புகளாகக் கொண்டவள்.

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"**[44]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இவற்றிற்கு இளம்பூரணர் "அச்சமும், நாணும், பேதைமையும் இம்மூன்றும் நாடோற முந்துறுதல் பெண்டிர்க்கு இயல்பு

என்றவாறு"[45] எனவும் "அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல் வண்ணம், நல்லறிவு, பிறர்காணுதற்கு அருமை என்பன பெண்ணின் பண்புகள்"[46] என்பார் ச. வே. சுப்பிரமணியன் அவர்களும் உரை வகுப்பர்.

களவுக் காலத்தில் தலைவியானவள். நற்றாயின் நெறிப்பாட்டுக்கு உரியவள். தலைவனிடம் அன்பு வயப்பட்ட தலைவி களவுக் காலத்தில் நேரும் சந்திப்புகளில் அவனுக்கு உண்டாகும் துன்பத்தை எண்ணி வருந்துவாள். ஊராரின் அலருக்கு அச்சம் கொண்டவளாக உள்ளாள்.

தலைவன் முன் தன் வேட்கையைத் தலைவி வெளிப்படுத்த மாட்டாள். ஆயினும் மெய்ப்பாடுகளின்வழியே உணர்த்துவாள். குறியிடம் கூற உரிமையுடையவள் தலைவி.

தலைவி அடக்கம், மனநிறை, செம்மை (நேர்மை) செப்பு (நா வன்மை) அறிவு, அருமைப்பாடு ஆகியவற்றில் பண்புள்ளவாகப் படைக்கப்பட்டு உள்ளாள். களவு மேற்கொண்ட தலைவி, தன் களவை தோழியிடம் கூறாமல் மறைப்பாள். தோழியானவள் தலைவியின் காதலை அவளின் செயல்மாறுப்பாட்டினைக் கொண்டு அறிந்து கொள்வாள். களவொழுக்கத்தில் தலைவி, தலைவனிடம் பெரும்பாண்மையான இடங்களில் மற்றும் தலைவன் சிறைப்புறத்தானாக நிற்கும் நிலையில் தன் உள்ள உணர்வினைத் தலைவன் கேட்கும்படி தோழியிடம் கூறுவாள்.

வரைவு வேண்டல், வரைவிடைப்பிரிவு, சேட்படுத்தல், அச்சம் நீடல், விருந்துப்பகுதி, இரவுக்குறி, பகற்குறி, காப்புமிகுதி, ஒரு வழித்தணத்தலில் ஆற்றாமை, அறத்தொடு நிற்றல், வேற்று வரைவு முதலான துறைகளில் தலைவியின் அகஉணர்வினைப் புலப்படுத்தி உள்ளனர்.

களவியலில் தலைவி கூற்று நிகழும் இடங்களை,

> **"கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்**
> **இட்டுப்பிரி விரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்**
> **வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்**
> **நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்**
> **பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்**

**வருந்தொழிற் கருமை வாயில் கூறினும்**
**கூறிய வாயில் கொள்ளாக் காலையும்**
**மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு**
**நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்"[47]**

எனக் கூற்று இடங்களைக் குறிப்பர் தொல்காப்பியர்.

'கைப்பட்டுக் கலங்கல்' முதலாகக் 'கூறிய வாயில் கொள்ளாக் காலை' யீறாகச் சொல்லப்பட்ட பன்னிருவகையினும் தலைமகள் தோழிக்கு உரைக்கப்பெறும். அதாவது உரைக்குங்கால் மனைப்பட்டுக் கலங்கி மேனி சிதைந்தவழியே உரைக்கப்பெறுவது. ஆண்டும் இதற்கு என்செய்வோம் என உசாவுதலொடு கூடத் தனது காதன்மைதோன்ற உரைக்கும் என்றவாறு"[48] என்பது இளம்பூரணர் உரையாகும். தலைவி, தலைவனுடன் தான் சேரும் கூட்டத்திற்கு நேரிடும் இடையூறுகள் பற்றிய நிகழ்வுகளைத் தோழியிடம் கூறிய பின்னர் நேரும் இடர்பாடுகளைக் களைந்து மீண்டும் கூட்டம் நேர ஆராய்ந்து வழிமுறைகளை அறிதலின்வழி இவை பாங்கியிற் கூட்டத்தின் வகைக்குள் அடங்கும்.

தலைவன் கையகப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைக் களைந்தேன் எனத் தலைவி,

**"நரந்தம் நாறு இருங் கூந்தல் எஞ்சாது நனிபற்றி,**
**பொலம் புனை மகரவாய் நுங்கிய சிகிழிகை**
**நலம் பெறச் சுற்றிய குரல் அமை ஒருகாழ்**
**விரல் முறை சுற்றி, மோக்கலும் மோந்தனன்:**
**நறாஅ அவிழ்ந்தன்ன என்மெல் விரற் போது கொண்டு,**
**செறாஅச் செங்கண் புதைய வைத்து,**
**பறாஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்:**
**தொய்யில் இளமுலை இனிய தைவந்து,**
**தொய்யல் அம் தடக் கையின், வீழ்பிடி அளிக்கும்**
**மையல் யானையின், மருட்டலும் மருட்டினன்.**
**அதனால்,**
**அல்லல் களைந்தனன், தோழி நம்நகர்**
**அருங்கடி நீவாமை கூறின், நன்று" என**

**நின்னொடு சூழ்வல், தோழி "நயம்புரிந்து,**
**இன்னது செய்தாள் இவள்" என,**
**மன்னா உலகத்து மன்னுவது புரைமே"[49]**

தோழியிடத்துக் கூறியதாகக் கபிலர் பாடுவர்.

தலைவி, தலைவன் கையகப்பட்டு எய்திய புணர்ச்சி நிகழ்ந்தமையைத் தோழியிடம் கூறினாள். களவில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர், திருமணம் நிகழ வேண்டும். நொதுமலர், தலைவியின் களவு வாழ்க்கை அறியாமல் மணம் பேச வருதலும் கூடும். அப்பொழுது தலைவி, தோழியிடம் வேற்றுமணம் நிகழாதவாறு, தாய்க்கு அறத்தொடு நிற்குமாறும் வேண்டினாள். இதன்வழி களவு வாழ்க்கை நெறியே தொடர்ந்து கற்பு வாழ்க்கையாக அமைந்ததில் அகமாந்தர்கள் உறுதி பூண்டு இருந்தனர் என்பதை உணர இயலுகிறது.

முன்னிலைப் புறமொழியாகத் தலைமகள் தோழிக்கு நற்றிணைத் தலைவி,

**"நாள் மழை தலைஇய நல் நெடுங் குன்றத்து**
**மால் கடல் திரையின் இழிதரும் அருவி**
**அகல் இருங் கானத்து அல்க அணி நோக்கி,**
**தாங்கவும் தகைவரை நில்லா நீர் சுழல்பு**
**ஏந்து எழில் மழைக் கண் கலுழ்தலின், அன்னை,**
**"எவன் செய்தனையோ? நின் இலங்கு எயிறு உண்கு" என**
**மெல்லிய இனிய கூறலின், வல் விரைந்து**
**உயிரினும் சிறந்த நாணும் நனி மறந்து,**
**உரைத்தல் உய்ந்தனனே - தோழி - சாரல்,**
**காந்தள் ஊதிய மணி நிறத் தும்பி**
**தீம் தொடை நரம்பின் இமிரும்**
**வான் தோய் வெற்பன் மார்பு அணங்கு எனவே"[50]**

என உரைத்ததாக நொச்சி நிலமங்கிழார் பாடுவர்.

வரைவு கொள்ளாமல் பகற்குறிக்கண் வந்தொழுகிய தலைவன் வரவில்லை. வருத்தம் அடைந்தாள் தலைவி. முன்நாள் பகல் குறியிடம் கண்டு கண்ணில் நீர் வழிந்தது. கண்ணுற்றால் நற்றாய். தலைவனின் உயரிய அன்பு பிணைப்பை கூற விழைந்தேன். நற்றாயிடம் கூறுவது நலமில்லை என உணர்ந்து வேற்றுமொழி பேசலானேன் என்கிறார். அகத்தலைவி கற்பு நெறியில் செம்மாந்த

நிலையில் திகழ்வதை உணரலாம். எவ்வாறாயினும் களவுநெறியை நற்றாயிடம் உரைப்பது மரபு அன்று என்பதையும் புலப்படுத்தி உள்ளார் புலவர்.

**வரைவு கடாஅதல் - வரைவிடை மறுத்தல்**

தலைவியின் களவு வாழ்வினைக் கற்பு வாழ்வாக மாற்றும் இறுதி நிலை உடையது வரைவகடாஅதல், வரைவு மறுத்தல் என்னும் துறைகள் ஆகும்.

> **"வரைதல் வேண்டித் தோழி செப்பிய**
> **புரைதீர் கிளவி புல்லிய எதிரும்**
> **வரைவுடம் படுதலும் ஆங்கதன் புறத்தும்**
> **புரைபட வந்த மறுத்தலொடு தொஇைக்**
> **கிழவோன் மேன என்மனார் புலவர்"[51]**

எனத் தொல்காப்பியம் சுட்டும்,

> **"வேற்றுவரைவு வரின் அது மாற்றுதற் கண்ணும்"[52]**

என நம்பியாசிரியர் உரைப்பர்.

தோழி தலைமகளை வரைந்து கொள்ளும் பொருட்டும். நிலையிலும் குற்றந்தீர்ந்த சொல்லைத் தலைவனிடம் கூற அதனைத் தலைவன் ஏற்றுக் கொண்டதைத் தோழி கூறியச் சொல் கேட்டு வரைவு உடன்படுதற் கண்ணும் என்னும் நிலையிலும், குற்றம்பட வந்த வரைவு மறுத்தல் என்னும் இடத்தும், தலைமகளுக்கு கூற்றுகள் நிகழும். மேலும், வரைவினை ஏற்றுத் தலைவன் வரைவிற்காக பொருளீட்டத் தலைவியைப் பிரிந்துச் செல்லும் நிலையில் ஆற்றாமையால் தலைவிக் கூற்று நிகழ்த்துவாள்.

உடன்போக்குத் துணிந்த தலைமகன் அதனை ஒழிந்து, தானே வரைவிடை வைத்துப் பிரிய நயந்ததனைக் குறிப்பினால் உணர்ந்த,

> **"சிறு தினை கொய்த இருவி வெண் கால்**
> **காய்த்த அவரைப் படு கிளி கடியும்**
> **யாணர் ஆகிய நல் மலை நாடன்**
> **புகர் இன்று நயந்தனன் போலும்**
> **கவரும் - தோழி - என் மாமைக் கவினே"[53]**

எனத் தலைவி உணர்ந்துத் தோழிக்கு உரைத்ததாகப் பாடுவர் கபிலர்.

அகத்தலைவன் பொருள் ஈட்டி மணப்பது என்பது மரபாக உள்ளதைப் புலவர் உணர்த்துவர். மேலும், எந்நிலையிலும் தலைவன் மாறாப் பண்பு கொண்டவன் எனத் தலைவி உரைப்பது எண்ணதற்குரியதாகும்.

**கற்பு வாழ்க்கை**

கற்பு நெறியைப் போற்றுவது அகமரபினால் ஒன்றாகும். கற்பு வாழ்வில் தலைவனையே உயர்வு நிலையில் எண்ணுவதைப் புலவர்களின் பனுவல்கள் வழி அறியலாகிறது. தலைவனின் மாறுபாடுகள் தலைவியின் மனத்துயரத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

அகத்தலைவிக்கு உயிரினும் ஒப்ப நாணம் இருந்திருக்கிறது. இல்லற நெறியில் துன்பம் வருவதை எண்ணி வருந்தும் நிலையிலேயே தோழி தோன்றாத் துணையாகத் திகழ்கிறாள்.

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறரும்"[54]**

என அகத்தலைவியின் கற்பைச் சுட்டுவர் தொல்காப்பியர். "கற்பு என்பது, கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கம். காமம் என்பது அன்பு. நற்பால் ஒழுக்கம் என்பது தன் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கம். மெல் இயற்பொறை என்பது, மெல் என்ற நெஞ்சினராய்ப் பொறுக்கும் பொறை. நிறை என்பது, மறைக்கக்கூடிய செயல்களைப் பிறர் அறியாதவாறு மறைக்கக் கூடிய நெஞ்சு. வல்லிதின் விருந்து புறந்தருதல் என்பது, வறுமையையோ செல்வத்தையோ கருதாது இயன்றவரை விருந்தினரைப் பாதுகாத்து அவர்களை மனம் மகிழ்வித்தல். சுற்றம் ஓம்பல் என்பது, தொடர்புள்ள மக்களைப் பாதுகாத்து, அவர்கள் உண்டபின் தான் உண்டல். அகப்பொருள் நூல்களில் தலைமகள் பன்னீராட்டைப் பிராயத்தளாய்க் குறிக்கப்பெறுவாள், நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றை இவளது குணங்களாக உரைப்பர்[55] களவியலுரையாசிரியர். இவ்வுரைக் கற்பு நெறி தலைவியின் குணஇயல்பினை அறிவதற்கு ஏதுவாக அமைகிறது.

**"அவனறி வாற்ற அறியும் ஆகலின்**
**ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்**
**ஊரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்**
**பெருமையில் திரியா வன்பின் கண்ணும்"[56]**

எனத் தலைவியின் கூற்றுப் பகுதியைச் சுட்டுவர் தொல்காப்பியர்.

தலைவனின் இயல்பைத் தலைவி நன்கு அறிவாள். ஆகவே, அவனை உயர்வாக கூறுமிடத்துக் கூற்று நிகழ்த்துவாள். தலைவனின் பண்பினைத் தோழி கூறுமிடத்துத் தலைவி அவற்றை மதிப்பிட்டு கூறுமிடத்தும் தலைவிக்கு உரிமை கொடுத்த தலைமகனிடத்தும் ஆகிய மூன்று இடங்கள் இல்லற நெறியில் தலைவி கூற்று நிகழும் இடங்கள் என்பதை அறிய இயலுகிறது.

தலைவியானவள் எல்லாநிலைகளிலும் தன் நிலையினை எண்ணாமல், தலைவனே கண் கண்டதெய்வமாக போற்றியுள்ளதனை அறியமுடிகின்றன. அன்பின் அழகியாகவும், பாசத்தில் பகலவனாகவும், பொறுமையின் வடிவமாகவும், தலைவனை நினைப்பதில் தன்னிகரில்லாதவளாகவும், தன் குலப்பெருமையை நிலைநாட்டுபவளாகவும், செல்வத்தை சேர்க்காது வறியவர்களுக்கு வழங்குபவளாகவும், துன்பத்தில் துவளாமலும், கணவன் சொன்னச் சொல்லை மீறாதவளாகவும், தலைவன் பொருளீட்டச் செல்லும் பொழுது சுற்றத்தாரைப் பேணிக் காப்பவளாகவும், கற்பு நெறி தவறாமல் தலைவனின் பிரிவில் ஆற்றிருப்பவளாகவும் இருப்பதே சங்க இலக்கியப் பெண்ணின் பண்பாகப் புலவர்கள் தம் பாடல்களில் புலப்படுத்தியுள்ளனர். வரைவிடை "ஆற்றல் வேண்டும்" என்ற தோழிக்கு,

**"ஒன்றேன் அல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்**
**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்,**
**நின்று கொய்ய மலரும் நாடனொடு**
**ஒன்றேன் - தோழி - ஒன்றினானே" [57]**

எனக் கிழத்தி உரைத்ததாகப் பாடுவர் கபிலர்.

பொருத களிறு, மிதித்தலால் வேங்கை மரம் சாய்ந்து நின்ற நிலையில் பூவைப் பறித்து சூடிக் கொண்டனர். மேலும், தலைவன் என்னை ஆற்றுவித்து

மணம் முடிப்பான் அவனின் அருள் உள்ளமே என் வாழ்க்கைக்கு உயிராகத் திகழ்கிறது எனத்தலைவி உரைப்பதைப் பாடுவர் கபிலர். கபிலர் தலைவியின் அன்பு உறுதித்தன்மையை தெள்ளிதின் உணர்த்திக் காட்டுவது ஈண்டு நினையத்தகுத்ததாகும்.

**பரத்தையிற் பிரிவு**

தலைவன் மேற்கொள்ளும் பரத்தமை ஒழுக்கம் இருவருக்கிடையேயும் ஊடலை உருவாக்குகின்றது. ஊடலின் நோக்கமாவது இனி பரத்தமையைத் தலைவன் நாடிச் செல்வதனைத் தவிர்க்க வேண்டும் என்பதே ஆகும். "உலகில் அகத்திணை என்னும் அன்பிலக்கியத்தைக் கண்ட நம் அறிவு மூதாதையர்களே பரத்தையிற் புணர்ச்சியையும் ஒருகூறாக இயைத்திருத்தலின், வேறென் செய்வது? தகும் என்று அமைதி கூறவே நம் மனம் விழைகின்றது. இந்நூற்றாண்டுப் பெரும்புலவர் டாக்டர் உ.வே.சா. அவர்கள் தம் குறுந்தொகைப் பதிப்பின் அரிய நூலாராய்ச்சியில் "இப் பரத்தையிற் பிரிவு உலகியலையே கருதி அமைந்தது போலும்" என ஒருவகைத் தெளிவு செய்வர். 966 கற்பியற் பாக்களில் 279 பரத்தையிற் பிரிவுக்கு உரினவாயிருத்தலின், இப்பிரிவு விரிந்த நிலையில் ஆராய வேண்டுவது எனவும், இத் திணைக் கண் இதன் பொருத்தம் கண்டு தெளிய வேண்டுவது எனவும் போதரும். இன்பம் கருதிய இப்பிரிவுத் துறைகள் ஊடல் பொருளான மருதத் திணைப்பாற் படும்"[58] என்பார் வ.சுப. மாணிக்கம்.

தொல்காப்பியர் பரத்தையிற் பிரிவில் தலைவியின் கூற்றுகளாக,

**"கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**கிழவோள் செப்பல் கிழவ தென்ப"[59]**

பதினாறு பொருண்மைகளில் பரத்தையிற் பிரிவு பற்றிய தலைவி கூற்று நிகழ்வதைத் தொல்காப்பியர் உரைத்துள்ளார். இவை அனைத்தும் தலைவியின் ஊடல், தலைவனது பணிவை நகைப்பது, பரத்தையர் பற்றி எள்ளல், வாயில் மறுத்தல் போன்றவற்றில் அடங்கும். பரத்தையை நாடிச்சென்ற தலைவன் இல்லம் வரும்போது தன் இல்லத்தில் நுழைவதற்கே அஞ்சுகின்றான். இல்லம் புகும் உரிமையை

இழக்கின்றான். கேட்டுப் புகும் நிலைத்து ஆழாகின்றான். எனவே, வாயில் நேர்தல், வாயில் மறுத்தல் என்ற இரண்டு துறைகளும் அதிகம் காணப்படுகிறது.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் ஆற்றாமையே வாயிலாகத் தலைவியை நெருங்கினான். காலம் தாழ்த்தியமைக்குக் காரணம் கேட்பதாக

**"யாரை நீ எம் இல் புகுதர்வாய்? ஓரும்**
**புதுவ மலர்தேரும் வண்டே போல் - யாழ**
**வதுவை விழவு அணி வைகலும் காட்டினையாய்-**
**மாட்டு மாட்டு ஓடி, மகளிர் தரத்தர,**
**பூட்டு மான் திண் தேர் புடைத்த மறுகு எல்லாம்**
**பாட்டு ஆதல் சான்ற நின் மாயப் பரத்தைமை-**
**காட்டிய வந்தமை கைப்படுத்தேன் - பண்டு எலாம்**
**கேட்டும் அறிவேன்மன் யான்"**[60]

என்பது மருதக்கலிப் பாடல்.

புதிது புதிதாய் மலர்களை ஆராய்ந்து நுகரும் வண்டை போல நீயும் நாள்தோறும் பரத்தையரை நாடிச் செல்கிறாய். உமது தேரானது சென்ற வீதிகளில் எல்லாம் உம்முடைய பேச்சாகவே இருக்கின்றது. உனது பரத்தமை ஒழுக்கத்தினை நானும், கேட்டு அறிந்துள்ளேன். ஆகவே, இல்லம் நுழையவேண்டாம் எனத் தலைவி வாயில் மறுத்து கடிந்துக் கொள்வதிலிருந்து பரத்தையொழுக்கத்தினை கைவிடும் பொருட்டுத் தலைவனிடம் ஊடல் நிகழ்த்துகின்றாள் என்பர் புலவர்.

நற்றிணையில், குறிஞ்சி நிலத்தலைவியும் வாயில் மறுத்து ஊடிக் கொள்வதனை,

**"இசை பட வாழ்பவர் செல்வம் போலக்**
**காண் தொறும் பொலியும், கதழ் வாய் வேழம்,**
**இருங் கேழ் வயப் புலி வெரீஇ, அயலது**
**கருங் கால் வேங்கை ஊறுபட மறலி,**
**பெருஞ் சினம் தணியும் குன்ற நாடன்**
**நனி பெரிது இனியன் ஆயினும், துனி படர்ந்து**
**ஊடல் உறுவேன் - தோழி - நீடு**
**புலம்பு சேண் அகல நீக்கி,**
**புலவி உணர்த்தல் வன்மையானே"**[61]

எனப் பாடுவர் கபிலர். தனக்கு நேர்ந்த பிரிவச்சத்தைத் தலைவனும் உணரத் தான் ஊடுவதாகத் தலைவி தோழியிடம் எடுத்துரைக்கின்றாள். இவ்வாறாகத் தலைவியைப் பொறுமையின் வடிவமாக புலவர்கள் களவு வாழ்விலும் சரி, கற்பு வாழ்விலும் சரி தலைவனையே எண்ணி எண்ணி தனது வாழ்வினை வாழ்பவளாகச் சித்தரிக்கப்படுகின்றாள். தலைவியின் களவுக்கால உணர்வுகள் முழுமையான கூற்றுகளாக வெளிக்காட்டப்படவில்லை. இருப்பினும் காப்புமிகுதி, வரைவு வேண்டல், பருவ வரவு, பிரிவிடை ஆற்றாமை எனும் துறை சார்ந்த சூழல்களில் அவளின் கூற்றுகள் வெளிப்படுகின்றன. கற்புக் காலத் தலைவிக் கூற்றில் செலவுக்குறிப்பு, பருவ வரவு, உடன்போக்கு, பிரிவிடை ஆற்றாமை பரத்தமைப்பிரிவில் வாயில் நேர்தல், வாயில் மறுத்தல் துறையமைந்தப் பாடல்களின் வழி தலைவியின் பண்பு வெளிப்படுகின்றன.

**பாங்கனின் பண்புகள், அகத்துறைகள்**

சங்க இலக்கியப்பாடல்களில் தலைவனின் தோழன் பாங்கன். தலைவனை நீங்காது எப்பொழுது உடன் இருப்பதினாலும், தலைவனின் பாங்கறிந்து நடப்பதனாலும் பாங்கன் எனப் பெயர் பெறுபவன். இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு நிகழும் கூட்டங்களுக்கு உதவுபவன். தலைவன் கூறிய குறியிடம் சென்று தலைவியைத் தொலைவில் நின்று அவளின் நிலையினை கண்டு, தலைவனிடம் கூறி இருவருக்கும் கூட்டம் நிகழத் துணைபுரிவான். புலவர்கள் தலைவியின் தோழியைப் பற்றிய பாடல்களை மிக மிகுதியான பாடியுள்ள நிலையில், தலைவனின் தோழனாகிய பாங்கனைப் பற்றிய கூற்றுப் பாடல்கள் மிகக் குறைவாகவே பாடியுள்ளனர். ஏனெனில், தலைவியை நேரிலே பார்த்துப் பாங்கன் உரையாற்றுவது தமிழ் அகத்திணைக்கு ஒவ்வா செயலாகும். பாங்கன் தலைவியைக் காண்பான். ஆனால், தலைவியைப் பாங்கன் பார்த்துப் பேசினான் எனப் புலவர்கள் புனையவில்லை. அது மரபல்ல எனக் கருதியுள்ளனர். அப்படியே தலைவி பாங்கனைக் கண்டாலும் ஓர் வழிப்போக்கன் என்றே எண்ணுவாள். "பாங்கன் தலைவனுடன் சேர்ந்து அவன் செல்லுழி எல்லாம் செல்லும் வழக்கமுடையவன். விட்டுப் பிரியாத தோழமைக் கொண்டவன். தலைவன் ஒருத்திபாற்பட்ட பின்னும், பாங்கன் முன்போல் உடன்வருதல் தகாதன்றோ.

இதனை அவன் எப்படி அறிவான்? தலைவனது புதிய உணர்ச்சியையும் புதிய உறவையும் அவன்தன் மெய்ப்பாட்டாலும் சொல்லாலும் தெரிந்து கொண்ட பாங்கன் குணமும் குலமும் அறிவும் சுட்டி மாற்ற முயல்கின்றான். பயனின்மை கண்டபின் அவனோடு கூட வருவதை நிறுத்திக் கொள்கின்றான்"[62] என ஆய்வுரை வழங்குவர் வ.சுப. மாணிக்கம்.

தலைவனுக்குப் பாங்கன் குறையுறஉணர்வதாக,

**"பெருவரை மிசையது நெடுவெள் அருவி**
**முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி,**
**சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப -**
**நோதக் கன்றே - காமம் யாவதும்**
**நன்று என உணரார் மாட்டும்**
**சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே"[63]**

எனப் பாடுவர் நக்கீரனார்.

பாங்கன், தலைவனிடம் காமமானது பேதைமை குணம் உடையது, அறிவில்லாதவரிடத்தும் சென்று தங்குகின்ற பெரிய அறிவில்லாமையை உடையதாகும். எனவே காமத்தினைத் தவிர்ப்பாயாக எனத் தோழமையுணர்வுடன் தலைவனின் நலனில் அக்கறையுள்ளவனாக உரைக்கின்றான். இருப்பினும், தலைவனின் மனம் தலைவியையே எண்ணி வேதனையுறுவதை அறிந்த பாங்கன், குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டு, தன் உள்ளே சொல்லியதாக அமைந்த துறை அமைந்த அம்மூவனார் பாடியப் பாடல்.

**"இரவினானும் இன் துயில் அறியாது**
**அரவு உறு துயரம் எய்துப - தொண்டித்**
**தண் நறு நெய்தல் நாறும்**
**பின்இருங் கூந்தல் அணங்குற்றோரே"[64]**

"நெய்தல் மலர்களால் மணம் கமழ்கின்ற மலரினைக் கூந்தலில் அணிந்த இந்நங்கையின் விழியால் தாக்குண்டோர், இரவில் துயில்கொள்வதென்பது அறிதானச் செயல், ஆகவே தலைவன் தலைவியின் பொருட்டுத் துயர் கொண்டது இயல்பே என உணர்ந்து பாராட்டி, தலைவன், தலைவியைச் சந்திக்க உதவிப்புரிகின்றான் பாங்கன்.

**"இருந்திக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்**
**அருமணி இழந்த நாகம் போன்றதும்"[65]**

என்னும் இளங்கோவின் அடிகள் ஈண்டு ஒப்புதற்குரியதாகும்.

**தோழியின் பண்புகள், அகத்துறைகள்**

தலைவன், தலைவியின் காதல் வாழ்வில் ஒளி விளங்குபவள் தோழியாவாள். காதல் வாழ்வினை வளமுடையதாக ஆக்குபவள். தோழியின்றேல் களவு வாழ்வும் இல்லை. கற்பு வாழ்வும் சீராகச் செல்வதற்குச் செம்மையான வேறு பாதை இல்லை. காதலால் கருத்தொருமித்து வாழும் காதலர்தம் வாழ்வினைத் தமது அறிவாற்றலால் புனையவல்லவள் தோழி. மேலும் தலைவன் தன்னை நாடி உதவிக் கேட்கும் பொழுது தலைமகனின் வீரம், பெருமை, பிறப்பு செல்வாக்கு ஆகிய எழுவும் தோழிக்குப் புலப்படுவதில்லை. தலைவன், தலைவி மீதுள்ள வேட்கையால் இளமை நலனை நுகரும் வன்கொடுமை உள்ளவனா? அல்லது உண்மை காதல் கொண்டவனாகத் தலைவியை, இல்வாழ்க்கையில் ஈடுபடுத்தி இல்லறத்தை, நல்லறமாக நடத்துபவனா? என்பதை தன் மனதில் ஆராய்ந்து கையுறை மறுத்தும், தலைவன் மீது கோபம் கொண்டவளாகவும், நகையாடியும், தலைவனின் உள்மனஎண்ணத்தை ஆராய்ந்து தலைவியின் மீது தலைவன் கொண்டுள்ள உண்மை காதலின் ஆழத்தை அறிந்து தலைவனுக்கு தலைவியைக் காண உதவிச் செய்யும் புத்திக் கூர்மை உடைய தாயாகத் திகழ்பவள் தோழி.

தலைவனைக் கண்டவுடன் தன் நிலை மறந்து மயங்கிவிடும் தலைவியைப் போல் இல்லாமல், பல நாள்கள் தலைவனின் செயல்களை உற்று நோக்கி ஆராய்ந்து தலைவியை தலைவனிடம் சேர்த்து வைப்பாள். தலைவனிடம் குறை கண்டால் கழறியுரைத்து அவனைத் திருத்த முயல்வாள். தலைவன் தலைவியரின் காதல் ஒழுக்கத்தினை நற்றாய், செவிலியாகித் தன் தாயாருக்கும் அறத்தொடு நின்று திறம்படவுரைத்துத் தலைமக்களை வரைவிற்கு இசையச் செய்பவளைத் தொல்காப்பியர் "தோழி தானே செவிலி மகளே"[66] என்ற நூற்பாவில் செவிலித் தாயின் மகளாகக் கருதப்படுவள்.

தலைவியானவள் தன் தோழியிடம் தலைவனைக் கண்ட இயற்கைப் புணர்ச்சி நிகழ்ச்சியை மறைப்பாள். தலைவி மறைத்தாலும், தலைவியின் நாற்றம்,

தோற்றம், மாற்றம், பதற்றம் இவற்றின் மூலம் கண்டறியும் நோக்கு உடையவளாகக் காணப்படுவாள்.

இரவுக்குறி, பகற்குறி இவற்றின் மூலம் வரும் இடையூறுகளையும், ஊரார் அலர் தூற்றுவர், களவினைத் தாயார் அறிந்து தலைவியை இல்லத்திலேயே இருத்தித் தடைசெய்வதாக இன்னும் பலவாறுக் கூறியும் தலைவனை வரைவிற்கு விரைவுபடுத்துவாள். தலைவனை காணாத நாட்களில் தலைவி வருத்தத்தைப் போக்கி ஆற்றுப்படுத்தும் அன்புள்ளம் கொண்டவளாகத் திகழ்பவள். தான் வேறு, தலைவி வேறு என என்றுமே நினையாத தன்னலத்தன்மை இல்லாதவளாகப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அகத்திணையில் களவு வாழ்வில் முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், சேட்படுத்தல், குறைநயத்தல், பகல் இரவுக்குறியிடம் கூறல், வரைவுகடாதல், வரைவுமலிதல், ஆற்றுவித்தல், அறத்தொடு நிற்றல், உடன்போக்குப் போன்ற துறைகளிலும், கற்பு வாழ்வில் செலவழுங்குவித்தல், வாயில் மறுத்தல், வாயில்நேர்தல் போன்ற துறைகளிலும் தோழியின் பங்கு அளவிடற்கரியது.

தலைமகன் சிறைப்புறமாக நிற்பதை அறிந்த தோழி, செவிலித்தாய்க்குச் சொல்லியதாக, தலைமகன் கேட்ப உரைத்ததாக அமைந்த கபிலர் பாடல்

**"அலையல் - வாழி வேண்டு, அன்னை் - நம்படப்பைப்**
**சூருடைச் சிலம்பில், சுடர்ப்பூ வேய்ந்து**
**தாம்வேண்டு உருவின் அணங்குமார் வருமே**
**நனவின் வாயே போல துஞ்சுநர்க்**
**கனவுஆண்டு மருட்டலும் உண்டே் இவள்தான்**
**சுடர் இன்று தமியளும் பனிக்கும் வெருவர**
**மன்ற மராஅத்த கூகை குழறினும்,**
**நெஞ்சுஅழிந்து அரணம் சேரும் அதன்தலைப்**
**புலிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு,**
**முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்**
**எந்தையும் இல்லன் ஆக,**
**அஞ்சுவள் அல்லளோ, இவள்இது செயலே?"** [67]

இரவுக்குறியில் தலைவனைச் சந்தித்துத் தலைவி வருகிறாள். அதனைச் செவிலித்தாய் கண்டுவிட்டாள். இந்நிலையில் நீவீர் கண்டது தலைவி அல்ல என

நிறுவும் தோழியின் அறிவாற்றலைப் புலவர் வெளிப்படுத்தியுள்ளார். செவிலியிடம் இரவில் கண்டதாகக் கூறியது. நீவீர் கனவில் கண்ட நிகழ்ச்சி இதற்கும் தலைவிக்கு யாதொரு தொடர்பு இல்லை. தலைவி விளக்கின்றித் தனிமையில் இருப்பதற்கே நடுங்கும் இயல்பினையும், கூகையின் ஒலியினை கேட்டவுடனே அச்சம் கொள்வாள். இத்தகைய குணம் கொண்டவள் எப்படித் தனியாகச் செல்வாள். நீவீர் கண்டது நிச்சயமாகக் கனவுதான் எனச் செவிலியிடம் கூறும் நிலையிலும், தலைவனுக்கும் தலைவி நிலையினை உணர்த்தி வரைவிற்கும் உட்படுத்தும் செயலின் மூலம் தோழியின் ஆராய்ந்து செயல்படும் அறிவினை வெளிப்படுத்தியுள்ளார் புலவர்.

கற்பு வாழ்வில் பரத்தமையை நாடிச்சென்ற தலைவன் வாயில் வேண்டியதற்குத் தோழி உரைத்ததாக அமைந்த தூங்கலோரி பாடல்

**"உடுத்தும், தொடுத்தும், பூண்டும், செரீஇயும்**
**தழை அணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி,**
**விழவொடு வருதி, நீயே இ/தோ**
**ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனிவிழவு ஆயிற்று என்னும், இவ் ஊரே"[68]**

"பகற்சோறு" உண்டால் இராச்சோறு இல்லாத சீரிய வாழ்க்கையே உம்முடைய முந்தைய நிலையாகும். ஆனால், தற்பொழுது பொய்யான அலங்காரத்தால் பொலிவுபெற்றப் பரத்தையர் கூட்டத்துடன் நெருங்கி, உரிமை மகளாகிய தலைவியைப் புலம்ப வைத்து விழாக்கோலம் பூண்டு நீவீர் வாராநின்றாய். இவ்வாறு, நீவீர் செய்யும் இச்செயலினை ஊரார் பலிக்கமாட்டாரோ? இச்செயலானது உமது ஆண்மைக்கு அழகுத் தரும் செயலா? எனத் தோழி வினவுவதிலிருந்து அவளின் உள்ள துணிவினை வெளிப்படுத்துள்ளார் புலவர்.

தலைவனுக்கு வாயில் மறுத்ததாக,

**"பண்அமை நல்யாழ்ப் பாணனொடு, விசிபிணி,**
**மண்ஆர், முழவின் கண்அதிர்ந்து இயம்ப,**
**மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி,**
**எம்மனை வாரா யாகி, முன்நாள்,**

**நும்மனைச் சேர்ந்த ஞான்றை, அம்மனைக்**
**குறுந்தொடி மடந்தை உவந்தனள் - நெடுந்தேர்**
**இழைஅணி யானைப் பழையன் மாறன்,**
**மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்,**
**வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த**
**கிள்ளி வளவன் நல்அமர் சாஅய்,**
**கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி,**
**ஏதில் மன்னர் ஊர்கொள,**
**கோதை மார்பன் உவகையின் பெரிதே"[69]**

எனப் பாடுவர் நக்கீரர்.

தலைவனே, உமது துணையாகிய சுற்றத்துடன் கள்ளுண்டு மகிழ்ந்தவனாய் எமது இல்லத்திற்கு வராமல் நுமது இல்லமாகியப் பரத்தையின் இல்லத்தைச் சென்று அடைந்தாய், அதனைக் கண்ணுற்றப் பரத்தையும் மகிழ்ந்தாள். இச்செயலினை ஊரார் கணுங்கால் உமது இழிச்செயலினை இகழமாட்டார்களா? நிச்சயம் இகழ்வர் எனத் தலைவனை தன்நிலை உணரச்செய்கிறாள் தோழி. இங்கு தோழியின் அறிவற்றாலை புலவர்கள் பாடிய முறை நினையத்தகுந்ததாகும்.

**நற்றாயின் பண்புகள், அகத்துறைகள்**

'நற்றாய்' என்றும் அகமாந்தர் தலைவியின் தாய் ஆவாள். தலைவனொடும், தலைவியொடும் நற்றாய் நேரடியாகக் கூற்று நிகழ்த்துதல் அகப்பொருள் மரபில் இல்லை. தன் மகளின் செயல் ஒழுக்கநிலைகளைத் தனது தோழியான செவிலித்தாயிடம் கேட்டுத் தலைவியை ஆராய்ந்து செயல்படுவார். தன் மகளின் களவொழுக்கத்தைச் செவிலியின் மூலம் மட்டுமே அறிவாள்.

**"தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்" [70]**

எனச் சுட்டுவர் தொல்காப்பியர்.

களவொழுக்கத்தால் உடல் வேறுபாட்டினை அறிந்து செவிலித்தாயுடன் வெறியாடும் வேலனைக் கொண்டும், கட்டுவிச்சியைக் கொண்டும் தலைவியின் வேறுபாட்டிற்கானக் காரணம் அறிந்தாலும் அதனைத் தலைவியிடம் நேரடியாக

வெளிப்படுத்தமாட்டாள். மாறாக, இரவு நேரத்தில் நற்றாய் உறங்காமல் தலைவியைக் காப்பாள். "குமரி வாழும் வீட்டகத்துப் புதிய ஓர் இளைஞன் வருதலும், இரவில் தங்குதலும் அவளுக்கு ஐயத்தை உண்டாக்கின. தாயின் விழிப்பு இரவுப்புணர்ச்சிக்குத் தடையாயிற்று. எதிர்ப்பார்த்தது நடவாமையின், மகளுக்கு ஒரே சினம். அரிதாக ஒரு நாள் நம் மகிழ்ச்சிக்கு உரிய விருந்தினன் வந்தான். பகைவன் வந்த ஊரினர்போல அன்னைத் தூங்கவில்லை. காதலர் தம் இன்பத்துக்குக் குறுக்காக நின்ற இவள் நரகத் துன்பம் என்றும் பெறுக"[71] என அறிஞர் வ.சுப. மாணிக்கனார் கருத்துரை நற்றாயின் இயல்பினை இன்னது எனச் சுட்டி நிற்கிறது.

களவுக் காலத்தில் தலைவனும், தலைவியும் உடன்போக்குச் செல்வதாகவும் நற்றாய் கனவு காண்பதைத் தொல்காப்பியர்

**"தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்"[72]**

எனச் சுட்டுவர். இதற்கு **"நற்றாய்க் குரியதொரு மரபு உணர்த்திற்று"[73]** என இளம்பூரணர் உரை வகுப்பதன் வழி நற்றாயின் இயல்பு சுட்டப்படுவதை உணரலாம்.

தலைவன், தலைவியுடன் உடன்போக்கு நிகழ்த்திய நிலையில் நற்றாயின் மனஉணர்வினை,

**"தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி**
**மன்னும் நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்**
**நன்மை, தீமை அச்சஞ் சார்தலென்று**
**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**
**முன்னிய கால மூன்றொடு விளக்கித்**
**தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்**
**போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**
**ஆகிய கிளவியு மவ்வழி உரிய"[74]**

எனத் தொல்காப்பியர் சுட்டுவர்.

நம்பியகப்பொருள் நற்றாய் கூற்று நிகழும் இடங்களை,

**"புணர்ந்துஉடன் போயது உணர்ந்த பின்னர்**
**அந்தணர் தெய்வம் அயலோர் அறிவர்**

**சிந்தைநோய் அறிவோர் செவிலி பாங்கியொடு**
**கண்டோர்க்கு உரைக்கும் பண்புடை நற்றாய்''[75]**

எனச் சுட்டும்.

தலைவன், தலைவி இருவரும் களவொழுக்கக் காலத்து உடன் போக்குச் சென்றதை அறிந்தபின் அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், சிந்தை நோய் அறிவோர், செவிலி, பாங்கி, கண்டோர் என்ற எண்மருடன் நற்றாய் கூற்று நிகழத்துவாள் என நம்பியகப்பொருள் உரைக்கிறது.

'மகட்போக்கிய தாய்ப் புலம்பல்' எனும் துறையினதாகப் பாடல் காணப்படுகிறது. உடன்போகினால் தலைவி என்பதை அறிந்த தாயிக்கு வருத்தம்.

**''ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளாள்,**
**வான் தோய் இஞ்சி நல் நகர் புலம்ப -**
**தனி மணி இரட்டும் தாளுடைக் கடிகை,**
**நுழை நுதி நெடு வேல், குறும் படை, மழவர்**
**முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த**
**வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்**
**வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,**
**நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து,**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்**
**போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ் சுரம்**
**துணிந்து, பிறள் ஆயினள் ஆயினும், அணிந்து அணிந்து,**
**ஆர்வ நெஞ்சமோடு ஆய் நலன் அளைஇ, தன்**
**மார்பு துணையாகத் துயிற்றுகதில்ல -**
**துஞ்சா முழவின் கோவற் கோமான்**
**நெடுந் தேர்க் காரி கொடுங்கால் முன்துறை,**
**பெண்ணை அம் பேரியாற்று நுண் அறல் கடுக்கும்**
**நெறி இருங் கதுப்பின் என் பேதைக்கு,**
**அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே''[76]**

எனப் பாடுவர் குடவாயிற்கீரத்தனார்.

தலைவன், தலைவியைக் கொடிய வழியில் அழைத்துச் சென்றுவிட்டான். நான் என்ன செய்வேன் எனக் கவன்றாள். மேலும் தாயின் உள்ளம்

செய்வதறியாது பதைப்பதைக்கின்றது. இருப்பினும் தெய்வத்திடம் முறையிட்டாள். தலைவன் தன் மகளை மார்போடும், அன்பு உள்ளத்தோடும் துயில வைக்க வேண்டும் பரம்பொருளே என தொழும் தாயின் உள்ளப் புலப்படுத்துவர் புலவர்.

களவு வாழ்வில் உடன்போக்கு நிலையில் தலைவிக்காக வருந்தும் தாயானவள். கற்புவாழ்வில் 'மனைமருட்சி' எனும் துறையில்

**"பிரசம் கலந்த வெண் சுவைத் தீம் பால்,**
**விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி,**
**புடைப்பின் சுற்றும் பூந் தலைச் சிறு கோல்,**
**"உண்" என்று ஓக்குபு பிழைப்ப, தெண் நீர்**
**முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,**
**அரி நரைக் கூந்தற் செம் முது செவிலியர்**
**பரி மெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,**
**ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?**
**கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென,**
**கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்,**
**ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே"**[77]

எனப் போதனார் பாடுவர்.

உடன்போக்கில் சென்ற தலைவியின் நிலையினை எண்ணி எண்ணி வியப்படைகிறாள் தாய். ஏனெனில் உணவு உண்பதைக்கூட மறுக்கும் சிறுபிள்ளையாக இருந்த தன் மகள் இத்தகைய அறிவும், ஒழுக்கமும் கொண்டு விளங்குகின்றாள். செல்வமகளாக இருந்த தலைவி எப்படி வறுமைநிலையில் வாழ்வினை வாழக் கற்றுக் கொண்டாளோ என தாய் கூறுவதிலிருந்து தாயானவள் தன்பிள்ளை எவ்வளவு வயதானாலும், என்றுமே உள்ளத்தில் பிள்ளையாகவே கருதும் இயல்படையவள் என்பதையும், ஆனால், பருவமடைந்த தலைவிக்கு ஏழ்மை தெரிவதில்லை. தலைவன், தன்மீது வைத்துள்ள அன்பின் ஏற்றமே தெரியும் என்பதே பெண்ணில் இயல்பாக உள்ளதனைப் புலவர் புலப்படுத்தியுள்ளார்.

**செவிலியின் பண்புகள், அகத்துறைகள்**

வளர்ப்பு தாயாகவும், தலைவியை வளர்ப்பதில் பேரன்புக் கொண்டவளாகவும் விளங்குபவர் செவிலித்தாய்.

> **"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்**
> **தாயெனப் படுவாள் செவிலி யாகும்"** [78]

எனச் சுட்டுவர் தொல்காப்பியர். மேலும், செவிலிக்கு கூற்று நிகழும் இடங்களாக நம்பியகப்பொருள்,

> **"தாயொடும் பாங்கி தான்முத லாரொடும்**
> **சேயிழை செவிலியும் செப்பும் ஆங்கே"** [79]

என நம்பியகப்பொருளும் சுட்டும்.

தலைவி, தலைவனுடன் உடன்போக்குச் சென்றதை அறிந்த செவிலி நற்றாய், பாங்கி முதலானோரோடு கூற்று நிகழ்த்துவாள். முதலார் என்போர் நற்றாய், பாங்கி, தவிர்த்து அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், சிந்தைநோய் அறிவோர், கண்டோர் ஆவார்.

தலைவியின் தோழியைப் பெற்றெடுத்தத் தாயாகவும், நற்றாய்க்குத் தோழியாகவும், தலைவியின் அனைத்துத் தேவைகளையும் செய்து கொடுப்பவளாகவும், இரவிலும், பகலிலும் பாதுகாக்கும் பாதுகாவளராகவும் புனையப்படுபவள். தலைவியின் களவு ஒழுக்கத்தினைத் தோழியின் மூலம் அறிந்து நற்றாய்க்குத் தெரிவிக்கும் உண்மை உடையவளாகக் கருதப்படுபவள். தனது பாதுகாவலில் உள்ள தலைவி உடன்போக்கில் தலைவனுடன் சென்ற பொழுது நற்றாய் அளவிற்கு வேதனையுறும் செவிலி, தலைவியைச் தேடிச்செல்வாள். போகும் வழியில் எதிர் வருபவர்களான கண்டோர், அந்தணர், வழிப்போகர் என அனைவரையும் வினவுவாள்.

> **"ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்**
> **தாமே செல்லுந் தாயரும் உளரே"**[80]

எனச் சுட்டுவர் தொல்காப்பியர். இதன் வழி மரபு மீறிச் சுரவழியிலும், பேரூர்ச்சேரியிலும் தாயர் செல்லும் வழக்கம் உண்டு என்பது அறியலாகிறது.

‘இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது‘ எனும் துறையமைந்த வெள்ளிவீதியார் பாடல்

**"காலே பரிதப்பினவே: கண்ணே**
**நோக்கி நோக்கி வாள் இழந்தனவே:**
**அகல் இரு விசும்பின் மீனினும்**
**பலரே மன்ற, இவ் உலகத்ததுப் பிறரே"[81]**

தலைவியைத் தேடிச் செல்லும் செவிலி இடைச்சுரத்தில் தன் மகளானத் தலைவியும், அவளது அன்பானவனையும் தவிர வானத்து விண்மீன்போலப் பலர் உள்ளனரே தலைவியைக் காணவில்லையே என உள்ளமானது உருகியதாகப் புலவர் குறிப்பர். அகவாழ்வில் அகமாந்தர்கள் கொண்ட ஈடுபாட்டை இதன்வழி அறியலாம். பாலைத்திணைப் பாடல்களில் இவ்புனைவு மிகுதியாகக் காணப்படுகிறது.

**கண்டோர் பண்புகள், அகத்துறைகள்**

களவுக் காலத்தில் தலைவன், தலைவியர் இருவரும் காதல் கொள்கின்றன என்பதை அறிந்த பெற்றோர் தலைவியை வேற்றொருவருக்கு மணம் நிச்சயிக்கும் நிலையில் தலைவி தலைவனுடன் சென்று அவனது இல்லத்தில் வரைந்து கொள்ளும் போதும் காட்டு வழியில் சந்திக்கும் மாந்தர் கண்டோர் ஆவார். பாலைத்திணைப் பாடல்களில் கண்டோர் கூற்றைக் காணமுடிகிறது. கண்டோர் கூறும் இடமாக உடன்போக்குத் துறையிலும், பொருள்வழிப்பிரியும் தலைவனுக்கு வழியிடைக் காட்சிகளை உரைப்போராகவும் கூறப்படுகின்றனர். காட்டின் வழியில் தலைமக்களைத் தேடிவந்த செவிலி கண்டோரிடம் வலிமைப்பொருந்திய ஆண்மகனையும், இளம்நங்கையையும் கண்டிரோ? என வினவுவர். அதற்குத் தலைவனும், தலைவியும் இவ்வழியில் சென்றனர் எனக்கூறி நாடிச்செல்லும் ஊரின் தொலைவினைக் குறிப்பிடுவர். அவ்வூரின் வழியினைக் குறிப்பிடுபவர்களாக இருப்பவர்களே கண்டோர் ஆவார். செவிலி கண்டோரிடம் வினவுவதாக,

**"என்மகள் ஒருத்தியும், பிறள்மகன் ஒருவனும்,**
**தம்முளே புணர்ந்த தாம் அறிபுணர்ச்சியர்**
**அன்னார் இருவரைக் காணிரோ? - பெரும**
**"காணேம் அல்லேம் கண்டனம், கடத்திடைட்**
**ஆண் எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய**

**மாண் இழை மடவரல் காயிர் நீர்போறிர்.**
**பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,**
**மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?**
**நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.**

**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,**
**நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?**
**தேருங்கால், நம்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.**
**ஏழ்புணர் இன்இசை முரல்பவர்க்கு அல்லதை,**
**யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?**
**சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே"[82]**

எனப் பாடுவர் பெருங்கடுங்கோ. ஆண்மகனுக்குரிய அழகினையுடைய தலைவனோடு, இளம்பெண்ணையும் கண்டோம். அவ்விருவரும் செய்த செயலினை அறம் என்றே கருதினோம். ஏனெனில், சந்தனம், முத்து, இசை ஆகியவை அதன் பிறப்பிடமான மலை, கடல், யாழில் பிறந்தாலும் தான் பிறந்த இடத்திற்குப் பயன்படாமல் அவற்றினைப் பயன்படுத்துபவர்களுக்கே பயன்படும். உம் மகளும் அத்தகையவளே கலக்கம் கொள்ளாதே. இல்லறமே, நல்லறம் எனக் கண்டோரின் கூற்றுவழி உரைப்பர் பெருங்கடுங்கோ.

பெருமையும், உரனும் கொண்டத் தலைவனும், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பாகி கற்பைத் தம் உயிராகப் போற்றும் தலைவியும், அறிவின் நிறைவாகவும், தலைவனுக்கு உறுதுணையாக அமைந்த பாங்கனும், தலைவிக்குத் தோழமையுடையவளாகவும் சிறுவயதிலேயே காலமறிந்து வினையாற்றும் செயல் திறனைக் கொண்டத் தோழியும், தோழியின் மகளையும் தன் மகளாகக் கருதும் அன்புள்ளம் கொண்ட செவிலியும், குடிநிறை காப்பதில் கண்ணும், கருத்துமாக உள்ள நற்றாயும், உடன்போக்கில் தலைவன், தலைவியின் செயல்களை அறமெனப் போற்றும் கண்டோரும் என அகமாந்தர்கள் அனைவரும் அவரவர் பண்புகளில் நிறைவு பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். இவ்வாறான புலனெறி மாந்தரின் வாழ்வியலைப் பாடுப்பொருளாகக் கொண்டு புலவர்கள் பாடலை படைத்துள்ளனர்.

**மெய்ப்பாடுகள்**

அகவுணர்களை புறத்தே வெளிப்படுத்தும் நிகழ்வே மெய்ப்பாடு ஆகும். மெய்ப்பாடு மனித வாழ்வோடு என்றுமே நிலைபெற்றதாகும். நாம் எழுதத் தொடங்குவதற்கு முன்பு சைகை மொழியைப் பயன்படுத்தி மனிதர்கள் தமது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை உடலசைவுகளால் வெளிப்படுத்தினர். உள்ள உணர்வுகளின் வெளிப்பாடாக மனிதர்களின் உடலில் சலனங்களே மெய்ப்பாடு ஆகும். ஆழ்ந்து நோக்கின் சுவையுணர்ச்சியே விருப்பு, வெறுப்பு முதலியவற்றை உருவாக்கிக் கண்ணீர் விடுதல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலிய மெய்க்குறிகளுடன் வெளிப்படுவதால் சுவைக்கு, மெய்ப்பாடு என்னும் பெயர் பொருந்துவதாகும். சுவையெனினும் மெய்ப்பாடு எனினும் ஒற்றுமை உடையதாகும்.

**"மெய் + படு = மெய்ப்படு ஸ்ரீ மெய்ப்பாடு**
**மெய் (உடல்) + படு = தோன்றுதல்"[83]**

மெய்ப்பாடு என்பது மெய்ப்படு என்பதன் திரிந்த வடிவமாகும். படு என்பது தொழிற்பெயர். அது பாடு என நீண்டு முதனிலைத் திரிந்த தொழிற்பெயராயிற்று. மெய்யில்படுதல் மெய்ப்பாடு. மெய் - உடல் என்று பொருள் கொண்டு நோக்கின் உள்உணர்ச்சிகளின் குறிகள் புறவுடலிற்படுதல் எனப் பொருள்படும். மெய்ப்பாடு உள்உணர்ச்சிகளின் உண்மை புறவுடலிற்படுதல் ஆகும்.

**மெய்ப்பாடு என்பதற்கு உண்மைத் தோற்றம், உண்மை நிகழ்ச்சி, உண்மை நிலை எனப் பொருள் விளக்கம் கூறலாம். உண்மை நிலையில் வெளிப்படாமல் மாறுபட்ட நிலையில் புறத்திலிப் போக்கும் புலப்பட்டால், இதனைப் போல தன்மையுடையது கூறலாமே தவிர அதனை மெய்ப்பாடெனக் கூறஇயலாது. எனவே, தான் மெய்ப்பாடு என்பதன் நேரியப் பொருள் உண்மை நிலை எனலாம். உண்மை நிகழ்ச்சி உண்மைத் தோற்றம் என மெய்ப்பாட்டிற்கு வரையறை செய்ய இயலும்.** பேராசிரியர், **"மெய்ப்பாடென்பது பொருட்பாடு, அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவது தோற்றான் வெளிப்படுதல்"[84]** எனக் குறிப்பர். மேலும், இலக்கியத்தில் அமையும் மெய்ப்பாட்டிற்குப் பேராசிரியர் பொருள் கூறும் போது **"மெய்ப்பாடு என்பது சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்"[85]** என்றும் உரைத்துள்ளார்.

சோமசுந்தரப் பாரதியார் "மெய்ப்பாடு என்பது அகவுணர்களை ஆழ்ந்து ஆராயாமல் பலரும் இனிது அறியப் புலப்படுத்தும் இயற்கை புறவுடக்குறி"[86] என உரைக்கிறார் கூறுகின்றார். மெய் என்பதை உடலாகக் கொண்டு அதில் காணப்படும் அல்லது தோன்றும் குறிகளைப் புறவுடக்குறி எனக் குறிப்பிடுகின்றார்.

சிவலிங்கனார் "மெய்ப்பாட்டியல் என்பது மெய்யின்கண் புலப்படும் உணர்ச்சி வெளிப்பாட்டின் இயல்பு கூறுவதாம்"[87] எனக் குறிப்பர்.

ஒரு செய்யுளைப் படைக்குங்கால் உய்த்துணர வேண்டாது, மேலோட்டமாகப் படித்தால் கிடைக்கும் பொருளை உணர்ந்தாலே படிப்பவருக்கு அச்செய்யுளில் அமைந்துள்ள மெய்ப்பாடு தோன்றும்.

**"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்"[88]**

எனச் சுட்டும் தொல்காப்பியம்.

"யாதானுமொன்றைக் கூறிய வழி யதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்"[89] என்பர் இளம்பூரணர்.

நுட்பமாக ஆராயாமல் செய்யுளைக் கற்றவுடன் வெளிப்படுவதும் செய்யுளின் பொருண்மை (தலைவரு பொருண்மை) மெய்ப்பாடு உணர்த்துவதாக அமைய வேண்டும். உடலில் நிகழும் மாற்றங்களும் மெய்ப்பாடாகும். இலக்கிய மாந்தர்கள் உள்ளத்தில் தூண்டப்பட்ட உணர்ச்சிகளை எவ்வாறு சொற்களால் வெளிப்படுத்த வேண்டும் என்பதை அறிய மெய்ப்பாட்டியல் துணைபுரிகிறது. உள்ளத்தே நிகழ்வுகளால் புறத்தே சொற்களால் வெளிப்படுத்தினாலும் அதனை உணரத்தக்கவர் யாவர் என்பதை மெய்ப்பாட்டியல் இறுதி நூற்பா கூறியுள்ளார்.

**"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" [90]**

என்னும் சூத்திரம் வழி உணர்த்துவர் தொல்காப்பியர்.

மெய்ப்பாடுகளின் நுட்பத்தை அறிந்து கொள்ளும் திறன் கண்களாலும், செவியாலும் அறியவல்ல நுண்ணிறிவுடையோருக்கே உரியது. மற்றவர்களால் அறிந்து கொள்வது அரிது. "பாடலில் உள்ளதொன்றைப் படித்து உணர்ந்து கொள்ளுதலே நன்னயப் பொருள்கோள் . . . . சொற்பொருள் அறிந்தார்க்கு மட்டும் மெய்ப்பாடு தோன்றாது கண்ணாலும், செவியாலும் ஏனை புலன்களாலும் கண்டு கேட்டு உண்டு உயரித்து உற்று அறிந்த பழக்கம் உடையார்க்கே . . . . பாடலிலுள்ள பொருளும் மெய்பாடாகத் தோன்றும். தொல்காப்பியர் திட்ப நுட்பம் மிக்கவர். செய்யுளியல் நூற்பாவில் மெய்ப்பட முடிப்பது என்றார். முடிக்கும் செயல் புலவனுடையது. இங்கு எவ்வளவு மெய்ப்பாடு உள்ள பாடலாக இருந்தாலும் அனுபவ உணர்வுடையவரல்லாத மற்றவர்கட்கு அம்மெய்ப்பாடு புலனாகாது"[91] என்னும் தமிழண்ணலின் ஆய்வுரை வழியே மெய்ப்பாட்டின் பொருள் ஆழத்தை உணர்ந்து கொள்ள இயலும்.

புலவனின் படைப்பு, வாசிப்பவரின் உணரும் நுட்பம் இவை இணைக்கப்படும் போதே மெய்ப்பாட்டினை முழுவதும் உணரதகுவனவாக விளங்கும்.

**மெய்ப்பாடுகளின் வகை, தொகை**

உலக வழக்கு, நாடக வழக்கு என்ற இரண்டு வழக்குகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். உலக வழக்கிலிருந்து உருவாகிய மெய்ப்பாடு இலக்கிய வகையான நாடகத்திலும் இடம் பெற்றது.

**"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான்கென்ப"[92]**

எனக் குறிப்பர் தொல்காப்பியர். உலக வழக்கிலும், நாடக வழக்கிலும் மெய்ப்பாடுகள் உண்டு. ஆயினும் உலக வழக்கிலிருந்தே நாடக வழக்குத் தோன்றுகிறது.

**"எண்வகை இயனெறி பிழையாதாகி**
**முன்னுறக் கிளந்த முடிவின ததுவே"** [93]

என்றும்,

**"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே"[94]**

எனவும் சுட்டுவர் தொல்காப்பியர், மேலும், தொல்காப்பியர் மெய்ப்பாட்டினை வகைகளை,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"** [95]

என்பர். நகை, அழுகை, இளிவரல், (மானக்குறைவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எட்டெனக் குறிப்பிடுவர். எண்வகை மெய்ப்பாட்டுகளிலும் நகைக்கு மறுதலை அழுகை, இளிவரலுக்கு மறுதலை மருட்கை, அச்சத்திற்கு மறுதலை பெருமிதம், வெகுளிக்கு மறுதலை உவகையென காரணகாரியம் உரைக்கப்படுகிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாத நகையை முன்னரும் அதற்கு மறுதலையாகிய அழுகையை அதனை அடுத்தும் இளிவந்து பிறிதொரு பொருளை வியக்குமாதலின் வியப்பினை அதனை அடுத்தும் வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதனை அடுத்தும் அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதனை அடுத்தும், வீரத்தின் பயனாகப் பிறக்கும் வெகுளியை அதனை அடுத்தும், வெகுளிக்கு மறுதலையாக்கிச் சுவைகளுள் நகையைப் போலச் சிறந்த உவைகையை அதன் இறுதிக் கண்ணும் குறிப்பது எண்ணுதற்குரியதாகும்.

நாலிரண்டு என்று தொல்காப்பியர் கூறியது நகை தொடங்கி உவகை ஈறான எண்வகையையே. அவையும் ஓர் இயைபு முறையோடு வரிசைப் படுத்தப்பட்டமை ஆகும். நகை முதல் உவகை வரையிலான அடிப்படையான மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நான்கு நான்கு நிலைப்பற்றிப் பிறக்கும் அவ்வாறான நிலைக்களன்களை உணர்ச்சி பாற்படுவதாகும்.

தண்டியலங்காரம் எண்வகை மெய்ப்பாடுகளை,

**"உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே"**[96]

எனச் சுட்டுகிறது. வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு. காமம், அவலம், உருத்திரம், நகை என்பனவாகும்.

அவைதாம்,

**"வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே**
**காமம் அவலம் உருத்திரம் நகையே"[97]**

தொல்காப்பியர் பெருமிதத்தின் நிலைகளங்களில் ஒன்றாக வீரத்தினைக் குறிப்பிடுகின்றார். ஆயின் தண்டியலங்காரம் வீரத்தினைத் தனி மெய்ப்பாடாகச் சுட்டியுள்ளது. தொல்காப்பியர் காமத்தினை தனியொரு மெய்ப்பாடாகச் சுட்டவில்லை. தண்டியலங்காரம் சுட்டியிருப்பது ஈண்டு ஒப்பத்தகுந்தாகும்.

**"திணையே கைக்கோள் கூற்றே கேட்போர்**
**இடனே காலம் பயனே முன்னம்**
**மெய்ப்பாடு எச்சம் பொருள் வகை என்று**
**அப்பால் ஆறிரண்டு அகப்பாட் டுறுப்பே"[98]**

என்றும்,

**"நகை முதலாம் இருநான்கு மெய்ப்பாடும்**
**நிகழ்பொருள் மெய்ப்பட நிற்ப மெய்ப்பாடே"[99]**

எனவும் குறிக்கும் நம்பியகப்பொருள்.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டினை அகத்திற்கு, புறத்திற்கு எனத் தனித்தனியாக குறிப்பிடவில்லை. செய்யுளியலில் செய்யுளுப்புகளில் ஒன்றாக மெய்ப்பாட்டைக் கூறியுள்ளார். ஆனால், நம்பியாசிரியர் அகப்பொருளுக்கே உரியது என்பதனால், பன்னிரண்டு அகப்பாட்டுறுப்புகளைப் பட்டியலிட்டு அதில் மெய்ப்பாட்டை அடக்கியுள்ளார் என்பது ஈண்டு கருதத்தக்கதாகும்.

**தொல்காப்பிய மெய்பாடும் அகப்பனுவல்களும்**

மாந்தர்களின் அகப்புற ஒழுக்கங்களைச் சமுதாயத்திற்கு உணர்த்திடவும், நெறிப்படுத்திடவும், அறிவுறுத்திடவும் உதவுவன மெய்ப்பாடு ஆகும். இவ்வகையான மெய்ப்பாடுகளின் வழியாக அகமாந்தர்களின் தனது மனதில் மறைத்து வைத்திருக்கும் அன்பு, காதல், விருப்பு, வெறுப்பு, பாசம், மனஉணர்வு, அச்சம், உண்மைதன்மை, பொய்யுரைத்தல், இடித்துரைத்தல், ஆசை, மன சோர்வு, கோபம் முதலான நிகழ்வுகளை மறைத்துக் கட்டுப்படுத்த எண்ணினாலும் அது உடம்பின் வாயிலாக மெய்ப்பாடுகளின் மூலம் பிறரால் அறிந்துக் கொள்ள முடியும். "உரிப்பொருளைச் சிறப்பாக விவரித்தல் காரணமாக செய்யுள் உறுப்புகளில்

ஒன்றாக அமைவதால் அதன் இலக்கணத்தை மரபின் வழியாக வகைப்படுத்தி விளக்குதலின் காரணமாக மெய்ப்பாட்டியல் என்னும் பெயர் உண்டானது. எனவே "மெய்ப்பாடு என்பது போதரும்"[100] என மெய்ப்பாட்டின் பொருண்மையை இன்னது எனச் சுட்டுவர் கண்ணம்மாள்.

**நகை**

நகை என்பது சிரித்தல். இலக்கியத்துள் வரும் "மூரல்" என்பது நகையைச் சார்ந்தே ஆகும். நகைத்தல் மூன்று வகைப்படும். 1. முறுவலித்து நகுதல் 2. அளவே நகுதல் 3. பெருகச் சிரித்தல் என்பனவாகும். நகைபடு பொருளைப் பார்த்தவுடன் முறுவலோடு வரும் மகிழ்ச்சிப் பொருளே நகையாகும். இங்ஙனம் நகைப் பலவாக விரியுமாயின் இதனை எள்ளல், இளமை, பேதமை, மடன் என நான்கு உணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றும் என்பதைத் தொல்காப்பியர்,

**"எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்க"**[101]

என உணர்த்துவர். இவற்றில் எள்ளல் என்பது பிறரை இழிக்காது நகைத்தலையும், இளமை என்பது மழலை மாறாதத் தன்மையும், பேதமை என்பது அறிவின்மையையும், மடன் என்பது ஒன்றை வேறொன்றாகத் திரித்துப் பொருள்கொள்ளல் எனப் பொருள்படும்.

"நகைச்சுவையின் தன்மை என்னவென்றால், இவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்று உனக்குத் தெரியாது; ஆனால் எதனால் சிரிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் எப்படி என்று விளக்குவது, யானை வாய்க் கவளத்தை எடுப்பது போன்றது"[102] என்பார் சிறந்த நகைச்சுவையாளரான ஃபீல்ட்ஸ், கருத்து ஈண்டு நினையத் தகுந்ததாகும். தலைமகளைச் சூளினால் தெளித்தான், என்பதைக் கேட்ட காதற்பரத்தை, தலைவியின் தோழி கேட்டுமாறு, தன் தோழிக்கு நகைத்தப்படியே கூறியதாக,

**"அம்ம வாழி, தோழி மகிழ்நன்**
**நயந்தோர் உண்கண் பயந்து, பனி மல்க**
**வல்லன் வல்லன் பொய்த்தல்**
**தேற்றான், உற்ற சூள் வாய்த்தல்லே"** [103]

எனப் பாடுவர் ஓரம்போகியார். "காதற்பரத்தை" சேரிப் பரத்தையின் மகளாயினும், ஒருவனையே மனதினால் விரும்பி அவனோடு மட்டுமே உறவாகக் கொண்டு வாழ்பவள். "வல்லவன், வல்லவன்" என்று தலைவனை அடுக்கிக் கூறி அவன் சூள் பொய்த்தலையே இயல்பாகக் கொள்பவன், மீண்டும் தலைவியைப் பிரிந்து என்னை நாடி வருவான்" என்பாள் என்பதன் கருத்து, தலைவன், செய்த சூளினைப் பேணாது ஒழுகும் வாய்மையற்றவன் என்பதாகும்.

மேலும், இரவுக்குறியில் சிறைப்புறமாகத் தலைவன் நிற்பதை அறிந்த தோழி, தாய் களவொழுக்கத்தை அறிந்தமையைக் கூறி, விரைவில் வரைவிற்கு உட்படுத்தத் தலைவனுக்கு உரைத்ததாக அமைந்த கபிலர் பாடல்

**"இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை:**
**வல்லே என்முகம் நோக்கி,**
**நல்லை மன்" என நகூஉப்பெயர்ந் தோளே"[104]**

தலைவன் நேற்று இரவில், காளையின் திமிலின்கண் கிடக்கும் கயிற்றினைப் போன்று அழகுபெற அசைந்தாட எனது வீட்டகத்தே வந்து நின்றான். அதனை அறிந்த என் அன்னை என்னையும், தலைனையும் நோக்கினாள். அன்னை அறியாமையால், 'நீ மிகவும் நல்லவள்' எனச் சொல்லி என் முகம் நோக்கி நகைதோன்றச் சென்றாள். அன்னையாவள் தன் மகளின் மீது வைத்துள்ள நம்பிக்கையை நகை என்ற மெய்ப்பாட்டின் வழி உறுதிப்படுத்தியுள்ளதை அறியலாம்.

**அழுகை**

அழுகை என்பது அவலம். இரக்கம் என்றப் பொருள். "தானே அவலித்தலும் பிறரவலங்கண்டு அவலித்தலுமென"[105] இருவகைப்படுத்துவர் பேராசிரியர். இங்ஙனம் அழுகை என்பது இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கு உணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றுவதை,

**"இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே"[106]**

எனக் குறிப்பர் தொல்காப்பியர். இழிவு என்பது பிறரால் இகழப்படும் அவலத்தையும், இழவு என்பது உயிர் உள்ளிட்ட உடமைகளை இழத்தலையும்,

அசைவு என்பது தன்னிலையில் தாழ்தலையும், வறுமை என்பது செல்வமற்ற தன்மையையும் குறிக்கும். இந்நான்கும் தன்னிடத்திலும், பிறரிடத்திலும் தோன்றும். இளம்பூரணர் "இழிவு" என்றும் பேராசிரியர் "இளிவு" என்றும் கொள்கின்றனர். ஆனால் பொருள் கொள்ளும் முறை ஒன்றாகக் கருதப்படுகிறது. அழுகை என்பதனை depression என்பர். இந்நிலை ஆண்களைவிட பெண்களே இம்மெய்ப்பாட்டால் அதிகம் பாதிக்கப்படுவர். சங்க இலக்கியப் பாடல்களில் தலைவிக்கூற்றுப் பாடல்களிலே இம்மெய்ப்பாட்டினை மிகுதியாக வெளிப்படுத்தியுள்ளனர் புலவர்கள்.

பொருள்வயிற்பிரியும் தலைவனிடம் தோழி சொல்லியதாக அமைந்த ஓதலாந்தையார் பாடல்

**"அரும்பொருள் செய் வினை தப்பதற்கும் உரித்தே**
**பெருந் தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்**
**செல்லாய் ஆயினோ நன்றே -**
**மெல்லம் புலம்ப - இவள் அழப் பிரிந்தே"**[107]

எனப் பாடுவர் ஓதலாந்தையார்.

உம்மால் காதலிக்கப்பட்டவள் பிரிவினைத் தாங்கிக் கொள்ளாமல் தினம், தினம் அழுகின்றாள். உன் அன்பானவளை அழவைத்துப் பிரிந்துச் சென்று ஈட்டும் பொருள் பொருளாகுமா? எனத் தலைவனை வாழ்க்கை இன்பத்தை நுகர வேண்டியும், தலைவியின் அவலநிலையையும் எடுத்துரைக்கின்றாள் தோழி.

பாலைக்கலித் தலைவி, தலைவன் செலவுக் குறிப்பு அறிந்தவள். வழியிடைத் துணையாகத் தம்மையும் அழைத்துச் செல்வாயாக,

**"தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்**
**கண்ணீர் நனைக்கும் கடுமைய, காடு என்றால்,**
**என், நீர் அறியாதீர் போல இவை கூறல்?**
**நின் நீர அல்ல, நெடுந்தகாய் எம்மையும்,**
**அன்பு அறச்சூழாதே, ஆற்றிடை நும்மொடு**
**துன்பம் துணையாக நாடின், அது அல்லது**
**இன்பமும் உண்டோ, எமக்கு?"**[108]

எனப் பாடுவர் புலவர். காட்டுவழியில் செல்லும் போது வறட்சியால் வாடுகின்ற நாவினுக்குத் தண்ணீர் பெறாத தடுமாற்றத்தை உடைய வருத்தத்தை அவருடைய கண்ணீர் நனைத்து நீக்கும் கடுமையை உடையது காடு. காடு கடுமையை உடையது என்பதனால் என்னை உடன் அழைத்துச் செல்லவில்லையென்றால் யான் உம்மைப் பிரிந்து உயிர்வாழ மாட்டேன் என்பதை நீவீர் உணர வேண்டுமென்றாள் தலைவி. ‘துன்பம் துணையாக நாடின் அதுவல்லது இன்பம் உண்டோ எமக்கு’ எனத் தலைவி கூறினமையால் வழியிடைத் துன்பத்தை எண்ணாமல் தலைவனுடன் இணைந்து செல்லும் இன்பத்தையே விரும்புதலினன் தலைவியின் உள்ளப் பண்பின் கருத்தினைப் புலவர் வெளிக்காட்டியுள்ளார்.

**இளிவரல்**

இளிவரல் என்பது இழிபு. அதாவது மனக்குறைவு, (மானக்குறைவு) அவமானம், ஒருவர் உயிர் வாழப் பற்றுக்கோடற்ற நிலையில் ஏற்படும் தாழ்வு நிலையை இளிவரல் என்பர். இம்மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நால்வகை உணர்ச்சியில் வெளிப்படும்.

**“மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே”[109]**

எனச் சுட்டுவர் தொல்காப்பியர்.

மூப்பு என்பது முதுமைக் காரணமாக எழும் தளர்ச்சியையும், பிணி என்பது நோயுடைமையையும், வருத்தம் என்பது இடுக்கண்ணையும், மென்மை என்பது இயலாமையையும் குறிக்கும். இந்நான்கும் தன்னிடத்துத் தோன்றினாலும், பிறரிடத்துத் தோன்றினாலும் நிகழும்.

நாம் பிறந்த நாளிலிருந்தே வயதாகும் நிலை ஆரம்பித்து விடுகின்றது. “குழந்தைப் பருவத்தில் கவலைகள் அதிகம் ஏற்படும். குழவிகளும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. . . குமரப்பருவத்திலிருந்து ஒருவர் பலவிதமான கவலைகளுக்கு ஆளாகிறார்.”[110] ஆண்சமூகத்தைவிட பெண் சமூகம்தான் அதிகமாகக் கவலைப்படுகிறார்கள். பூப்புப் பருவத்திலும், மாதவிடாய் நிற்கும் காலங்களிலும் பெண்களிடம் அச்சமும், கவலைகளும் இயற்கையிலேயே உண்டாகின்றன. திருமணத்திற்கு முன்பைவிட திருமணத்திற்கு பின் தான்

பெண்களின் மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகியவை அதிகமாகின்றன. வாழ்க்கையில் ஏற்படுகின்ற அவநம்பிக்கைகள் சமூகப்படிகளில் உயர்ந்த பின்பும், அங்கு நிலைத்து நிற்க மேற்கொள்ளும் போராட்டங்கள், இடர்பாடுகள் ஆகியவைகளுக்கிடையே நம் மனதில் கவலை அதிகமாகின்றன. இந்தக் கவலையின் வெளிப்பாடாக விளங்குவது இளிவரல் என்ற மெய்ப்பாடாகும்.

தலைமகன் இரவுக்குறி வந்ததனை அறிந்தத் தலைவி தலைவன் கேட்ப தோழிக்கு உரைப்பதாக,

**"நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்**
**கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்**
**காலொடு வந்த கமஞ்சூல் மாமழை**
**ஆர் அளி இலையோ நீயே? பேர் இசை**
**இமயமும் துளக்கும் பண்பினை**
**துணைஇலர், அளியர், பெண்டிர் இ/து எவனே?**[111]

எனப் பாடுவர் ஔவையார்.

தலைவன் வரும் இரவுக்குறியில் மழை, இடி, காற்று ஆகியவற்றால் ஏற்படும் ஏதங்கள் குறித்து அஞ்சுவதாகவும், தலைவன் தன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டுத் தலைவன் கேட்ப தோழியிடம் உரைக்கின்றாள். தலைவன் தலைவி இல்லையேல் நான் உயிர்வாழ்தல் அரிது எனக் கூறியதைக் கேட்டத் தோழி தலைவிக்குச் உரைப்பதாக,

**"ஒன்று, இரப்பான் போல் எளிவந்தும் சொல்லும் உலகம்**
**புரப்பான் போல்வது ஓர் மதுகையும் உடையன்**
**வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்,**
**நல்லார் கண் தோன்றும் அடக்கமும் உடையன்**
**இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க**
**வல்லான் போல்வது ஓர்வன்மையும் உடையன்**
**அன்னான் ஒருவன் தன் ஆண் தகைவிட்டு, என்னைச்**
**சொல்லும் சொல், கேட்டீ- சுடரிழாய் - பல்மாணும்**
**"நின் இன்றி அமையலேன் யான்" என்னும் அவன் ஆயின்,**
**அன்னான் சொல் நம்புண்டல் யார்க்கும் இங்கு அரிது ஆயின்**
**என் உற்ற பிறர்க்கும் ஆங்கு உள கொல்லோ?"**[112]

எனப் பாடுவர் கபிலர். வலிமையும், மெய்ப்பொருளும், மனஅடக்கமும், வறுமையைப் போக்க வல்லவனும், தன் ஆளுமைத் தன்மைகளைக் கைவிட்டு, என்னிடம் எளிமையுடையனாக வந்து, தலைவியாகிய உன்னையன்றி உயிர்வாழ மாட்டேன் என்று தலைவன் தன் மனக்குறையைக் கூறினான். தலைவன் தனது அன்புமிகுதியைக் காட்ட இளிவரல் தோன்ற மொழிந்தான்.

**மருட்கை**

மருட்கை என்பதற்கு வியப்பு என்று பொருள். இறும்பூறு என்பதும் பழையவழக்கு. இதனை வடமொழிச் சொற்களில் அற்புதம், ஆச்சரியம், எனக் கூறுவர். இவை புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நால்வகை உணர்ச்சிகளில் வெளிப்படும்.

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே"[113]**

என்பது தொல்காப்பியச் சூத்திரம். "யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினும் தோன்றாதோர் பொருள் தோன்றிய வழி வியத்தல். அது கந்திருவர் அந்தரம் போலது கண்டு வியத்தல் போல்வன"[114] என்பர் இளம்பூரணர்.

முன்னர் கண்டிரா (அ) கேட்டிரா நிலையைக் குறிக்கும். பெருமை என்பது முன்னர்க் கண்டு (அ) கேட்டவை இன்று மிகுந்திருத்தலையும், சிறுமை என்பது மிக நுட்பமானவையையும், ஆக்கம் என்பது ஒன்று மற்றொன்றாதல், பரிணாமம் என்பதனையும் குறிக்கும். இந்நான்கும் தன்னிடத்துத் தோன்றினாலும், பிறரிடத்துத் தோன்றினாலும் நிகழும். செலவுக்குறிப்பினால் வேறுபட்டக் கிழத்திக்குத் தலைவன்,

**"பொன்னும் மணியும் போலும், யாழ நின்**
**நன்னர் மேனியும் நாறு இருங் கதுப்பும்**
**போதும் பணையும் போலும், யாழ நின்**
**மாதர் உண்கணும் வனப்பின் தோளும்:**
**இவை காண்தோறும் அகம் மலிந்து, யானும்**
**அறம் நிலைபெற்றோர் அனையேன் அதன்தலை,**
**பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்:**
**வினையும் வேறு புலத்து இலெனே: நினையின்,**

**யாதனின் பிரிகோ? - மடந்தை-**
**காதல்காணும் கடலினும் பெரிதே"** [115]

எனப் பாடுவர் புலவர். தலைவன் வினையின் காரணமாகப் பிரிந்துச் செல்வதை அறிந்த தலைவி மனதில் வேறுபடுகிறாள். தலைவன் அவளிடம், உம்முடைய மெய்ந்நலனும், பண்புநலனும் கண்டு வியந்து, "நின்னைக் காணுதோறும் அறம் நிலைபெற்றேன்" என்றான். எனவே, பொருளைக் காட்டிலும் உன் அன்பும், நம் புதல்வனும் சிறந்த கிடைத்தற்கரிய பேறுகளாக இருப்ப, இனி நான் உம்மை விட்டுப் பிரியமாட்டேன் என்றான். தலைவிக்கு இந்நிலை வியப்பினை நல்குகின்றன.

**"புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி**
**மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து**
**விண்ணை வெளியாக்கி விந்தைசெயும் சோதி . . ."** [116]

எனப் பாரதியும்,

**"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்"**[117]

என வள்ளுவரும் எதிர்பாராத சில செயல்கள் நடக்கும் போது வியப்பு வரும் என்றும், தான் விரும்பும் பொருள், உயர்ந்தது என நினைக்கும் பொழுது வியப்புத் தோன்றும் என்பதை,

**"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்"**[118]

எனவும் வள்ளுவர் உரைப்பது ஈண்டு ஒப்ப தகுந்ததாகும். அனிச்ச மலரினும், அன்னத்தின் தூவியினும் பெண்டிர் பாதங்கள் உயர்ந்தது எனக் கருதும் நிலையில் வியப்பென்னும் மெய்ப்பாடு தோன்றும் என்பது பொருளாகிறது.

**அச்சம்**

அச்சம் என்பது பயம் "பேரிடுமைபை நேரிடுங் கொல் என எண்ணி உள்ளம் மெலிதல்"[119] எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

இம்மெய்ப்பாடு அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்ற நான்கு உணர்ச்சிகளில் தோன்றும்.

**"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"**[120]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இவற்றில் அணங்கு என்பது பேயும், பூதமும், பாம்பும் முதலியவற்றால் தோன்றும் அச்சம், விலங்கு என்பது கொடிய விலங்குகளைக் கண்டவுடன் தோன்றும் அச்சம், கள்வர் என்பது பிறர் உடைமை கவர்வோர். கண்டவுடன் ஏற்படும் அச்சம், இறை என்பது கடவுள், அரசர், பெற்றோர் ஆசிரியர் ஆகியோரிடம் அச்சம் தோன்றும்.

**"அச்சமே கீழ்களது ஆசாரம்"**[121]

எனவும்,

**"அஞ்சுவது அஞ்சாலை பேதைமை, அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**[122]

எனவும் வள்ளுவர் சுட்டுவர்.

அதன் பொருளாவது ஒன்று அச்சம் தவிர் என்பதையும், மற்றொன்று, அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவை இரண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட அச்ச உணர்வின் இயல்பாகக் கருதலாம்.

தலைவன் பரத்தையர் சேரி சென்றதனைத் தன் தலைவி அறிந்திருக்கமாட்டாள் எனக் கருதியத் தலைவி மாட்டுச் சென்றான். அதற்குத் தலைவி அச்சத்துடன் கூறியதாக அமைந்த மருதன் இளநாகனார் பாடல்,

**"ஒரூஉ நீ எம் கூந்தல் கொள்ளல் - யாம் நின்னை**
**வெரூஉதும் காணுங் கடை"**[123]

தலைவனாகிய உன்மீது அக்கறையும், அன்பும், பாசமும் மிகுந்த என்னை விடுத்து பரத்தையர் மாட்டுச் சென்றதனால் யான் நின்னைக் காண அஞ்சுகின்றேன். எனவே, என் கூந்தலைத் தீண்டாதே. "நீ கண்ணை மூடித் திறப்பதற்குள்

மறைந்துவிடுங்கள்வன்" என்னை விட்டு நீங்குக என அச்சமிகுதியில் "இமைப்பின் இதழ்மறை பாங்கே கெடுதி" என்று கூறுகின்றாள் தலைவி.

தலைவி பகற்குறி, இரவுக்குறி இரண்டிற்கும் அஞ்சுகின்றாள். ஆகவே, தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனத் தோழி மொழிவதாக அமைந்த கபிலர் பாடல்

**"பகல்வரின், கவ்வை அஞ்சுதும்: இகல்கொள,**
**இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்**
**பெருங்கை யானைக் கோள்பிழைத்து, இரீஇய**
**அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்**
**தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்"**[124]

பகல் வரின் ஊரால் அலர் தூற்றுவர் என்றும், இரவு வரின் புலிகள் உலவித் திரியும் காட்டுப்பகுதிகள் கடந்த தலைவியைக் காண வருவதால் தலைவிக்கு மிகுந்த அச்சம் தருவதனால், விரைவில் மணம் செய்து கொள்ளுமாறு தோழி உரைப்பதில் அச்ச உணர்வு வெளிப்படுகின்றன. கள்வர்களின் செயலினை நினைத்த வண்ணம் தோன்றும் அச்சத்தினை,

**"வலிமுன்பின், வல்லென்ற யாக்கை, புலிநோக்கின்**
**சுற்றமை வில்லர், சுரிவளர் பித்தையர்,**
**அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர் தாம்**
**கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்**
**துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர்வௌவலின்,**
**புள்ளும் வழங்காப் புலம்பு கொள் ஆர்இடை"**[125]

எனப் பாடுவர் பெருங்கடுங்கோ.

தலைவன் பொருள் தேடச் செல்லும் வழியில் பிறர்க்குத் துன்பம் செய்தலையே எதிர்பார்த்துக் காத்திருக்கும், உடல் வலிமையும், புலிப்போன்றப் பார்வையும் உடைய தறுகண்மை உடைய மறவரை எண்ணித் தலைவி அச்சம் கொள்கின்றாள்.

துன்பமான சூழ்நிலைகளில் இருந்து தப்புவதற்காக அனைத்து உயிர்களிடத்தும் இயல்பாக எழுகின்ற உள்ளக்கிளர்ச்சியே அச்சம் ஆகும்.

தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டும், பாதுகாப்பிற்குப் பின்னடைவு ஏற்படும் போதும் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றுகின்றன.

**பெருமிதம்**

பெருமிதம் என்பது வீரம். "ஏனைப்பெருமைகளோடு ஒப்பநில்லது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் ஆகும். மேலும், அறிவும், ஆற்றலும், ஆண்மை, பொருள் முதலிய சிறப்புகளால் மக்கள் அனைவரோடும் ஒப்பநில்லாது உயர்ந்து நிற்றல் பெருமிதம் எனப்படுகிறது. இம்மெய்ப்பாடு கல்வி, தறுகண், புகழ்மை, கொடை என்ற நால்வகை உணர்வுகளில்,

**"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"** [126]

வெளிப்படும் எனச் சுட்டுவர் தொல்காப்பியர். கல்வி என்பது நூலறிவும், புலமையறிவும், கலையறிவும் பற்றி உண்டாகும் மெய்ப்பாடாகும். தறுகண் என்பது அஞ்சாமையாள் வரும் வீரம். இசைமை என்பது ஒப்புரவு, கற்பு போன்ற நெறிகளில் உயர்ந்து நிற்பதனால் வருகின்ற இயல்பும், புகழ் எனப்படும். கொடை என்பது வரையாது கொடுக்கும் வண்மை.

அனைவருக்கும் கல்வி, தறுகண், இசைமை, கொடைத் தன்மை இருந்தாலும், இவை அனைத்திலும் உயர்ந்து நிற்போரிடம் காணப்படுவது இப்பெருமிதமாகும்.

பெருமிதம் என்பது ஆற்றலையும், வீரத்தையும் குறிக்கும் மகிழ்வான உணர்வாகக் கருதப்படுகின்றன.

**"சாதலும் இனிதே - காதல் அம் தோழி-**
**அந்நிலை அல்ல ஆயினும், சான்றோர்"**[127]

என்ற பாடலில் தலைவி, தோழியிடம் தலைவன் நம்மிடம் நாட்டமில்லாமல் இருப்பதற்கு வருத்தம் தெரிவிப்பாளாகும், தலைவன் மார்பைச் சேர்தல் இல்லையேல் சாதல் என்ற எண்ணத்தையும் எடுத்துரைத்தாள். தலைவன் பிரிவைத் தாங்காதத் தலைவி அவனை நம்பியது பழியென்றால், அதற்கு வருந்திச் சாதலும் இனிமைப் பயக்குமென்றாள். ஆனால், அவ்வாறு செய்வது உலக

வழக்கிற்கு மாறானது. நான் இறந்துபடாமல் இருக்கிறேன் என்ற நம்பிக்கை ஊட்டுகிறாள் நற்றிணைத் தலைவி.

**"நனைமுதிர் ஞாழல் தினைமருள் திரள்வீ**
**நெய்தல் மாமலர்ப் பெய்த போல**
**ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப**
**தாய் உடன்று அலைக்கும் காலையும், வாய்விட்டு,**
**"அன்னாய்" என்னும் குழவி போல,**
**இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்,**
**நின்வரைப்பினள், என் தோழி**
**தன்உறு விழுமம் களைஞரோ இலளே"[128]**

என்பது அம்மூவனாரின் பாடல்.

தலைவன் அருளின்றிப் பிரிந்தாலும், தலைவி தன்னிலை மாறாது தலைவனின் அன்பு ஒன்றனையே அவாவி உயிர் வாழும் இயல்படையவள் என்பதை, அன்னை அலைத்த குழந்தையைத் தாங்குவதற்குத் தந்தை, சுற்றம், நட்பு ஆகிய யாவர் இருப்பினும், அக்குழந்தையானது தாயின் அன்பையே நாடி ஓடுதல் இயல்பாகும். அதுபோலத் தலைவன் அருளின்றிப் பிரிந்தாலும், அவனன்பு ஒன்றையே அவாவி உயிர் வாழும் இயல்புடையவள் தலைவி எனப் பெருமிதம் தோன்றும் வகையில் எடுத்துரைக்கின்றார் புலவர்.

### வெகுளி

வெகுளி என்பது சினம் அதாவது சினஉணர்ச்சி. வடமொழியில் உருத்திரம் என்பர். இவை உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற உணர்வுகளின் காரணமாகத் தோன்றுவது வெகுளி.

**"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே"[129]**

எனச் சுட்டும் தொல்காப்பியம். உறுப்பறை என்பது உடல் உறுப்புகளைத் துண்டித்தலால் ஏற்படும் சினம். குடிகோள் என்பது பிறரது குடிப்பிறப்பின் உயர்வுக்கும் அவருடைய சுற்றத்தார்க்கும் கேடு நிகழ்ந்தால் சினம் தோன்றும். அலை என்பது அடித்தல், தகுதிக்குரிய மதிப்புக் கிட்டாமை, கடும் சொல்லால்

அடித்தலும் இவற்றால் சினம் தோன்றும். கொலை என்பது அறிவு, ஆற்றல், புகழ் முதலிய நன்மைகளை அழிப்பது கொலை.

**"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்"[130]**

என்னும் புறநானூற்று அடியில் பிறர் ஏளனம் செய்தவண்ணம் வெகுளி பிறந்ததைக் காணலாம்.

தலைவனிடம் இரவுக் குறியால் வரும் ஏதங்களை விளக்கி, விரைவில் வரைவுகொள்வாயாக,

**"முறம்செவி மறைப் பாய்பு முரண் செய்த புலிசெற்று,**
**மறம்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்**
**குறங்கு அறுத்திடுவான் போல், கூர்நுதி மடுத்து, அதன்**
**நிறம் சாடி முரண் தீர்ந்த நீள்மருப்பு எழில் யானை"[131]**

எனப் பாடுவர் கபிலர். மறத்தைத் தன்னிடத்தே கொண்ட நூற்றுவர்க்குத் தலைவனாகிய துரியோதனதைத் தொடையிலே அடித்து உயிரைப் போக்கினான் பீமன், அதுபோல் யானையானது தன் முறம் போன்ற செவியை மறைப்பாகக் கொண்டு, பாய்ந்து, மாறுபாடு செய்த புலியைச் சினந்து தன்னுடைய கூரியக் கோட்டினது நுனியாலே குத்திய யானையின் செயலில் வெகுளி மெய்ப்பாடுக் காணப்படுகின்றன. இப்பாடலில் இவ்வாறாக இரவுக்குறி ஏதங்களைக் கூறி தோழி, தலைவியை விரைவாக மணம் செய்துக் கொள்ளுமாறு அமைந்துள்ளன.

பொருள்வயிற் பிரிந்தவழி, ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு,

**"கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்**
**ஆற்றுஇருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த**
**படுமுடைப் பருந்து பார்த்திருக்கும்**
**நெடுமூதிடைய நீர்இல் ஆறே"[132]**

எனத் தலைவிக் கூற்றாகப் பாடுவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

தலைவன் சென்றவழியானது மறவர்கள் பாலைவழியில் செல்வோரைக் கொல்வர். அவ்வாறு இறந்த உடல்களை உண்பதற்காகப் பருந்துகள், அவர்களின் உடல்களில் நாற்றம் வரும் வரைக் காத்திருந்து உண்ணும் செயலினை உடையது. இத்தகைய கடும்வழியில் தலைவன் செல்லுவதை எண்ணித் தலைவி

கலங்கினாள் என்பதே கருத்தாகும். இப்பாடல்களில் மறவர்களின் தொழிலும் அவர்களது வெகுளித்தன்மையும் வெளிப்படுகின்றன.

**"உறை துறந்திருந்த புறவில், தனாது
செங் கதிர்ச் செல்வன் தெறுதலின், மண் பக,
உலகு மிக வருந்தி உயாவுறுகாலைச்
சென்றனர் ஆயினும், நன்று செய்தனர்" எனச்
சொல்லின் தெளிப்பவும், தெளிதல் செல்லாய் -
செங்கோல் வாளிக் கொடு வில் ஆடவர்
வம்ப மாக்கள் உயிர்த் திறம் பெயர்த்தென,
வெங் கடற்று அடை முதல் பட முடை தழீஇ,
உறு பசிக் குறு நரி குறுகல் செல்லாது
மாறு புறக்கொடுக்கும் அத்தம்,
ஊறு இலராகுதல் உள்ளா மாறே"[133]**

என்பது நற்றிணைப் பாடல்.

ஆறலைகள்வர் தம் அருளற்ற மனதினால் வளையாதக் கோலின் வடிவாகிய அம்பினால் பாலைவழியில் செல்வோரின் உயிரைக் கொள்வர். அப்படி, இறந்துகிடக்கும் உடல் ஒருபுறம் காற்றில் இலைகளால் மூடப்பட்டு முடைநாற்றம் வீசும். அவ்வுடலைத் தின்னவரும் நரி முடைநாற்றம் தாங்காமல் அவ்விடத்தின் அருகே செல்லாமல் அகலும். இத்தகைய வழியைக் கடந்து தலைவன், தலைவி மீது கொண்ட அன்பு மிகுதியால் குறித்தப் பருவத்தில் வந்தடைந்தான் என்பதே புலவரின் கருத்தாகும்.

**உவகை**

உவகை என்பதற்கு மகிழ்வு, உள்ளக் களிப்பு என்பது பொருளாகும். இது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என நான்கு உணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றும்.

**"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே"[134]**

என்பது தொல்காப்பியச் சூத்திரம். செல்வம் என்பது நுகர்ச்சி பொருளால் ஏற்படுவது. இவை உணவு, உடை, பதவி, தகுதி போன்றவற்றால் வருவன. புலன்

என்பது ஐம்புலன்களால் பெறும் உவகை, புணர்வு என்பது உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி இரண்டையும் குறிக்கும். புணர்வு என்பதை காமப்புணர்ச்சி ஆகும். விளையாட்டு என்பது புனலாடலையும், கடலாடலையும் குறிக்கும்.

இரவுக்குறி வந்து நீங்கும் தலைவன் தன் நெஞ்சிற்கு உரைத்தது, புணர்வு பற்றி வரும் உவகையை பரணர்,

**"தொடிக்கண் வடுக்கொள - முயங்கினள்**
**வடிப்புஉறு நரம்பின் தீவிய மொழிந்தே"[135]**

எனப் பாடுவர். தலைவியைக் கண்டும், புணர்ந்தும் பெற்ற மகிழ்ச்சியைத் தலைவன் கூறுகின்றான். இவற்றை 'நன்றும் உவஇனி வாழிய நெஞ்சே'! எனத் தன்நெஞ்சுக்கு உரைக்கின்றான் தலைவன். தலைவியிடம் இளவேனிற் காலத்துத் தலைவன் வருவேன் என்று உரைத்துப் பிரிந்து சென்றனன்.

இளவேனில் வந்தும் தலைவன் வரவில்லையே முன்னர் இவ்வூரில் நாம் இருவரும் விளையாடிய விளையாட்டினை மறந்தாரோ? என மனதுயரத்தில் இருந்த தலைவிக்கு, தலைவன் வந்தமையை அறிந்த தோழி மிக்க உவகையால் உன் அன்பானவன் வந்தான் என முகமகிழ்ச்சியோடு கூறியதாக,

**"வென்வேலான் குன்றின் மேல் விளையாட்டும் விரும்பார் கொல்?**
**மைஎழில் மலர் உண்கண் மரு ஊட்டி மகிழ் கொள்ள,**
**பொய்யினால் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க:**
**தைஇய மகளிர் தம்ஆயமோடு அமர்ந்து ஆடும்**
**வையை வார் உயர் எக்கர் நுகர்ச்சியும் உள்ளார் கொல்**
**என ஆங்கு,**
**நோய்மலி நெஞ்சமோடு இனையல், தோழி**
**நாம் இல்லாப் புலம்பாயின், நடுக்கம் செய்பொழுதாயின்,**
**காமவேள் விழவாயின், "கலங்குவள் பெரிது" என,**
**ஏமுறு கடுந்திண் தேர் கடவி,**
**நாம் அமர் காதலர் துணை தந்தார், விரைந்தே"[136]**

எனப் பாடுவர் பெருங்கடுங்கோ. நற்றிணைத் தலைவனும், கலித்தொகையின் தலைவியும் வெளிப்படுத்திய உவமை நலம் எண்ணுதற்குரியதாகும்.

**தலைமை மாந்தர்களும், துணைமை மாந்தர்களும்**

பிரிவு காலத்தில் அகம் சார்ந்தக் கருத்துக்களை அகத்துள்ளே பொதிந்து வைத்தால் மனஇருக்கம் அதிகமாகும். அதன் அறிகுறியாக பசலைபடர்தல், உடல் மெலிதல் போன்ற நிகழ்வுகளினால் அழகு கெடும், வெறுப்புணர்வு தோன்றும். தலைவனும், தலைவியும் தமது அகக்கருத்துக்களைத் தமது நெருக்கமானவர்களிடமும், தமது நண்பர்களிடம் கூறுவது மனஆறுதலைத் தரும் என்பதற்காக உருவாக்கப்பட்டவர்களே துணைமை மாந்தர்கள் ஆவார். தலைவன், தலைவியின் வாழ்வில் பிரிவு என்பது இருப்பதனால் இருவரிடையே உள்ள அன்பின் ஆழத்தை உணரமுடியும். தனிமையில் இனிமைக் காணமுடியாது. ஆனால், பிரிவின் தலைவன், தலைவியிடையே பிரியம் அதிகமாகும்.

களவுக் காலத்தில் ஒருவரையொருவர் கண்ட நாள் முதல், வரைவு காலம் வரை மறைந்த ஒழுக்கத்தை மேற்கொள்வதனால் இவர்களது ஆற்றாமையும் அவர்களது கூற்றுக்களின் வழியாகத் துணைமை மாந்தர்களிடமும், தமக்குள்ளேயும் நிகழ்த்துகின்றன. இயற்கைப்புணர்ச்சியில் தலைவியைக் கண்டு வந்த தலைவன்,

**"கேளிர் வாழியோ கேளிர் நாளும் என்**
**நெஞ்சுபிணிக் கொண்ட அம்சில் ஓதிப்**
**பெருந்தோட் குறுமகள் சிறுமெல் ஆகம்**
**ஒரு நாள் புணரப் புணரின்,**
**அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே"**[137]

என தலைவன் கூற்றாகப் பாடுவர் நக்கீரர். இதுநாள் வரை வாழ்ந்த நாட்களை தலைவன் மதிக்கவில்லை. என்றுமே நினைக்கத்தக்க நன்நாள் ஒருநாளாவது வேண்டும் என எண்ணியத் தலைவன் தன் நண்பனான பாங்கனிடம் "குறுமகள் சிறுமெல் ஆகம் ஒரு நாள் புணரப் புணரின்" அதன்பின் வீண்வாழ்க்கை சிறுபொழுதும் வேண்டாம் என்று தன் ஆராக் கூறினான்.

**"கடுபுன மருங்கில் கலித்த ஏனற்**
**படுகிளி கடியம் கொடிச்சி கைக்குளிரே**
**இசையின் இசையா இன்பாணித்தே**
**கிளி, "அவள் விளி" என, விழல் ஒவாவே**

**அதுபுலத்து அழுத கண்ணே, சாரல்**
**குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை**
**வண்டுபயில் பல்இதழ் கலைஇ,**
**தண்துளிக்கு ஏற்ற மலர் போன்றவ்வே"[138]**

எனத் தலைவன் கூற்றாகப் பாடுவர் கபிலர்.

தலைவன் கொடிச்சி கிளி கடியும் நிலையிலும், புலந்து அழும் நிலையிலும் தனக்கு இனியவளாய் இருத்தலையும், தலைவியின் தோற்றம், அவளால் அடைந்த காதல் ஆகியவற்றைக் கூறி, பாங்கனால் தன் குறையை முடித்துக் கொள்ள விரும்பினான்.

**"பெருவரை மிசையது நெடுவெள் அருவி**
**முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி,**
**சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப -**
**நோதக் கன்றே - காமம் யாவதும்**
**நன்று என உணரார் மாட்டும்**
**சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே"[139]**

என நக்கீரனார் பாடுவர். இப்பாடலின் மூலம் பாங்கன் காமத்தின் இயல்பினைக் கூறுவதாகவும், தலைவியின் நினைவிலே உள்ள தலைவியின் பேதமை எண்ணியும், வேதனையுறுவதை நினைத்தும், பாங்கன் மனம் வருந்துகின்றான். இருப்பினும் தலைவனின் நிலையை எண்ணியும் அவன் உரைத்த குறியிடம் பார்த்த பாங்கன்,

**"அணங்குடைப் பனித் துறைத் தொண்டி அன்ன**
**முணம் கமழ் பொழில் குறி நல்கினள் நுணங்குஇழை**
**போங்கு அரி பரந்த உண்கண்,**
**அம் கலிழ் மேனி - அசைஇய எமக்கே"[140]**

என்கிறான். தலைவியும், தலைவனின் மீதுள்ள அன்புமிகுதியால் தலைவன் சொன்னக் குறியிடத்தே நிற்பதனைப் பார்த்துப் பாங்கன் வியந்து, தலைவியும் உம் மீது காதல் கொண்டு அவ்விடமே நிற்கின்றாள் வருத்தம் வேண்டாம் விரைந்து சென்று தலைவியைக் காண்பாயாக எனத் தலைவனுக்குத் துணையாக இருக்கின்றான்.

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு**

களவு அலராகவும், அம்பலாகவும் தோன்றியது. இந்நிலையில் தோழி தலைவனை வரைவுகடாதல் நிகழ்த்தியும், களவு வாழ்வினைக் கற்பாக மாற்ற செவிலியிடம் அறத்தொடு நிற்றல் செயல்முறை என உணர்த்திக் கொடுப்போரும், கொள்வோரும் இணைந்து தெரிவிப்பர். வரைவுக்காலம் வருதற்கு முன்பாகத் தலைவன் கற்பு வாழ்விற்குப் பொருளீட்டப் பிரிவான். இதனையே வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவு என்பர். இதனை நம்பியாசிரியர் களவிற்கும், கற்புக்கும் இடைப்பட்ட நிலையில் நிகழும் துறையாகக் குறிப்பர்.

கற்பியலில் இத்துறையை அமைத்து வரைவியல் எனும் இயலுக்குள் இத்துறையை விரித்துரைப்பதே குறிப்பிடத்தக்கது. பொருளீட்டச் செல்லும் தலைவனை எண்ணி தலைவி ஆற்றாமை அடைவாள். அவளின் ஆற்றாமையை, துணைமை மாந்தராகிய தோழி பருவங்காட்டியும், இனிமையான சூழலைக் காட்டி ஆற்றுவிப்பதை,

**"சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்க,**
**பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப,**
**கல் அலைத்து இழிதரும் கடு வரற் கான் யாற்றுக்**
**கழை மாய் நீத்தம் காடு அலை ஆர்ப்ப,**
**தழங்கு குரல் ஏறொடு முழங்கி, வானம்**
**இன்னே பெய்ய மின்னுமால் - தோழி**
**வெண்ணெல் அருந்திய வரி நுதல் யானை,**
**தண் நறுஞ் சிலம்பில் துஞ்சும்**
**சிறியிலைச் சந்தின வாடு பெருங் காட்டே"** [141]

எனப் பாடுவர் நல்வெள்ளியார்.

கார்காலப் பருவம் காட்டி, கார்கால வருகையை வருணனையோடு மொழிந்து பொருள்தேடிச் சென்றத் தலைவன் விரைவில் வருவான். உம் மனம் மகிழ உம்மை மணப்பான் என்று தலைவியின் பிரிவு துயரினைச் செம்மைப்படுத்துகிறாள்.

பாலைநில தலைவியைத் தோழி, உலகம் தோன்றியக் காலம் முதல் பொருள் கருதிப் பிரிபவர் பிரிய வேண்டுபவரே; என்றாலும் தம்மை அடைந்தாரைக் காக்கும் அறம் மறந்தனர் அல்லர் என்பதை,

**"உலகம் படைத்த காலை - தலைவ் -**
**மறந்தனர் கொல்லோ சிறந்திசினோரே-**
**முதிரா வேனில் எதிரிய அதிரல்**
**பராரைப் பாதிரிக் குறு மயிர் மா மலர்,**
**நறு மோரோடமொடு, உடன் எறிந்து அடைச்சிய**
**செப்பு இடந்தன்ன நாற்றம் தொக்கு உடன்,**
**அணி நிறம் கொண்ட மணி மருள் ஐம் பால்**
**தாழ் நறுங் கதுப்பால் பையென முள்கும்**
**அரும் பெறல் பெரும் பயம் கொள்ளாது,**
**பிரிந்த உறை மரபின பொருள் படைத்தோரே"**[142]

எனப் பாடுவர் பெருங்கடுங்கோ. தலைவன் தம்மை அடைந்தவரைக் காக்கும் எண்ணக் கொண்ட உயரியப் பண்பினை உடையவன். ஆகவே, பொருளீட்டி விரைவில் உம்மை வந்தடைவர் என ஆற்றுப்படுத்துகின்றாள்.

**கற்பு வாழ்வில் பொருள்வயிற் பிரிவு**

வாழ்விற்கு அன்பும், பொருளும் முக்கியத் தேவைகளாகும். அன்பை மட்டும் வைத்து குடும்ப வாழ்வினை நிகழ்த்த இயலாது. ஊரார் கடுஞ்சொல் தூற்றுவர். பொருளையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தால் காதல் வாழ்வின் இன்பத்தினை உணரமுடியாது இரண்டும் கலந்த வாழ்வே பிரகாசமான முழுமதி வாழ்வாகும். இதனை எண்ணியத் தலைவன் செலவழுங்குதல் நிகழ்த்திப் பொருள் வயிற்பிரிகின்றான். இந்நிலையில் பிரிவுத் துயர் இருவருக்கும் நிகழும்.

பொருள் வேண்டிப் பிரிந்து செல்லும் இடத்தில் தலைவனுடன் துணைமை மாந்தர்கள் இல்லாமையால் தலைவன் தன்நெஞ்சையே துணையாகக் கொண்டு தனது பிரிவுத் துயரினை ஆற்றிக்கொள்கிறான். இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்கு உரைத்ததாகவும், நெஞ்சினைக் கழறியது என்பதாகவும், மீளக் கருதிய நெஞ்சிற்கு, ஒழியக் கருதிய நெஞ்சிற்கு உரைத்ததாகவும், கிழத்தியை நினைத்து

அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது ஆகியத் துறையமைந்தப் பாடல்கள் காணப்படுகின்றன.

தலைவி, தலைவனை எண்ணி வருத்தும் பொழுது, தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக அமைந்த பாடல்கள் செலவு குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகளுக்குத் தோழி சொல்லியது எனவும், ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்திறது எனவும், உலகியல் கூறித் தலைமகன் பிரிவைத் தலைமகளுக்கு உணர்த்தியது எனவும், தலைமகள் குறிப்பறிந்து தோழி சொல்லியது என்னும் துறையமைந்தப் பாடல் அமையப் பெறுகின்றன. மேலும், பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது எனவும், தலைமகள் பிரிவுணர்ந்து ஆற்றாமை மீதுரச் சொல்லியது என்ற துறைஅமைந்தப் பாடல்கள் தலைவி உரைப்பதாக அமைகின்றன.

பிரிவு உணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகளைத் தோழி உலகியல் கூறி வற்புறுத்தியதாக,

**"பைங் கண் யானைப் பரூஉத் தாள் உதைத்த**
**வெண் புறக் களரி விடு நீறு ஆடி,**
**சுரன் முதல் வருந்திய வருத்தம் பைபயப்**
**பாஅர்? மலி சிறு கூவலின் தணியும்**
**நெடுஞ் சேண் சென்று வருந்துவர்மாதோ -**
**எல்லி வந்த நல் இசை விருந்திற்கு,**
**கிளர் இழை அரிவை நெய் துழந்து அட்ட**
**விளர் ஊன் அம் பகை எறிந்த நெற்றி,**
**சிறு நுண் பல் வியர் பொறித்த**
**குறு நடைக் கூட்டம் வேண்டுவோரே"[143]**

என இளந்தேவனார் பாடுவர். தலைவியே, நீவீர் சமைக்கவும், இனிதுண்டு உன்னுடன் உடனிருத்தலைத் தலைவன் விரும்பினும், அருளியோர்க் களிக்கவும், பேணாரைத் தெறவும், வியர்வை பூக்கும் துன்பத்தோடு தலைவி அடிசில் சமைத்தல் இனிதென உண்ணுதற்கே என்பது போலத் தலைவன் துன்புற்று பொருள் ஈட்டுவது இன்பம் நிறை வாழ்க்கையில் பயன் துய்ப்பதற்கே, தலைவியைப் பிரிந்துச் செல்வது உலகியல் நியதி எனத் தோழி ஆற்றுப்படுத்துகின்றாள்.

"உடனிருந்து துய்க்கும் இன்பியல் வாழ்க்கை ஆண்டுக் கணக்காக நீடித்தற்கில்லை. கடமைகளைச் செய்து குடும்பம் நடத்துதற்குப் பொருள் வேண்டும். அதனை வேற்றூர் சென்றும் வேற்றுநாடு சென்றும் ஈட்டுதற்குத் தலைவியைப் பிரிவான் தலைவன். இப்பிரிவு இன்றியமையாத உலகியல் அறமாகும்"[144] என்னும் வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வுரை இங்குப் பொருளுடையதாகும்.

தலைமகன் பொருள்வயிற் பிரியப் பிரிவிடை ஆற்றாளாய்த் தலைமகள் சொல்லியதாகப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பிரிவிடை ஆற்றாமை கண்டு "வருவர்" என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகவும், ஆற்றாள் என்று கவன்ற தோழிக்கு "யான் யாங்ஙனம் ஆற்றுவேன்" என்று தலைமகள் கூறியதாகவும், "நீ ஆற்றுகின்றலை" என்று கூறிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகவும், தலைமகன் சென்ற கானகத்துத் தன்மை நினைத்து வேறுபட்டேன் என்று தோழிக்குச் சொல்லியதாகவும், கடுஞ்சொல் கூறிய தோழிக்குச் சொல்லியதாகவும், கனாக்கண்டு வேறுபட்டுத் தலைமகள் சொல்லியதாகவும் பாடல்களை அமைந்துள்ளனர் புலவர்கள். மேலும் பிரிவிடை வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவித்ததாகப் பாடல் அமைந்துள்ளன. பிரிவிடைத் தோழி வற்புறுத்தியதாகவும், அழிந்த தலைவியை வற்புறுத்தியதாகவும், வன்புறை எதிரழிந்து வேறுபட்ட தலைவியை வற்புறுத்தியதாகவும், பிரிவிடை மெலிந்த வேறுபட்டு ஆற்றாளாகிய தலைமகளை வற்புறுத்தியதாகவும், கடிது வருவர் தலைவர் என ஆற்றுவித்ததாகவும், நிமித்தம் கண்டு ஆற்றுவித்ததாகவும் புலவர்கள் பாடல்களைப் புனைந்துள்ளனர்.

பொருள்வயிற் பிரிந்தத் தலைவனை என்ணியத் தலைவியின் ஆற்றாமைக் கண்டு தோழி கூறியதாக,

> **"உள்ளார் கொல்லோ - தோழி கள்வர்**
> **பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,**
> **உகிர்நுதி புரட்டும் ஓசை போல,**
> **செங்காற்பல்லி தன்துணை பயிரும்**
> **அங்காற் கள்ளிஅம் காடு இறந்தோரே?"[145]**

எனப் பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடுவர். பாலை நிலத்தில் கள்வர், அம்பின் நுனியைத் தேர்ந்து கொள்ளும் ஒலியைக் கேட்டு, தம் வீரத்தால் உம்மைப் பற்றியச் சிந்தனை தோன்றாமலிருந்தாலும், அவ்வழியில் பல்லியானது தனது துணையை அழைப்பதற்காக ஒலியினை எழுப்பும், அவ்வொலியினைத் தன் இல்லத்தில் பலகால் கேட்டவர் ஆதலால், உன் நினைவு தோன்றி விரைவில் வருவார் என்பது உறுதி. ஆகவே, கவலைக் கொள்ளாதே எனத் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகின்றாள்.

**"அறம்தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த**
**கேளிர் கேடுபல ஊன்றலும், நாளும்**
**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்" எனச்**
**செய்வினை புரிந்த நெஞ்சினர், "நறுநுதல்**
**மைஈர் ஓதி அரும்படர் உழத்தல்**
**சில்நாள் தாங்கல் வேண்டும்" என்று, நின்**
**நல்மாண் எல்வளை திருத்தினர் ஆயின்,**
**வருவர் - வாழி, தோழி"**[146]

எனத் தோழி மொழிந்ததாக பாடுவர் முள்ளியூர்ப் பூதியார்.

இல்வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்துவதற்கும், சுற்றதாரின் பல்வகைத் துன்பங்களைப் போக்குவதற்காகவும், தலைவன் பொருளீட்டும் காலத்தில் துன்பத்தினைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என உரைத்து, உம்முடைய மாட்சிமைபெற்ற ஒளி பொருந்திய வளையல்களைத் திருத்தி அருள் புரிவர் தலைவர். ஆதலால் உம் தலைவர் விரைந்து வருவார் அதுகாரும் ஆற்றியிருப்பாயாக எனத் தோழி மொழிந்தாள்.

**வினைவயிற் பிரிவு**

வினைவயிற் பிரிவு அமைந்தப் பாடல்கள் முல்லைத்திணையில் காணப்படுகின்றன. கார்காலப் பருவத்தில் வினை முடித்துத் தலைவன் வரும் போது இப்பிரிவு புனையப்படுகின்றன.

தலைவி தலைவனை நினைத்து கவலையுறும்போது பாடல்கள் தோழிக்குச் சொல்லியதாகவும், தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் கூறப்படும். தோழியானவள்

தலைவியிடம் பொழுது கண்டு சொல்லுதல், அழிந்து சொல்லுதல், மெலிந்து சொல்லுவதல், ஆற்றாளாகிச் சொல்லுதல், வன்புறை எதிரழிந்து சொல்லுதல், பருவம் காட்டி வற்புறுத்தியது எனவும், பருவம் அன்று என வற்புறுத்தியது எனவும், பருவம் கழிந்தது கண்டு சொல்லுதல், வேறுபட்டுச் சொல்லுதல், ஆற்றாமை மீதூரச் சொல்லுதல், நிமித்தம் தோன்றத் தலைவர் வருவர் என உரைத்தது ஆகிய துறைகளில் பாடல்கள் உள்ளன.

பருவம் கண்டு வருந்தியத் தலைமகளைத் தோழி "பருவம் அன்று" என்று,

**"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை -**
**கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய**
**பருவம் வாரா அளவை, நெரிதரக்**
**கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த**
**வம்ப மாரியைக் கார்என மதித்தே"** [147]

எனத் தோழி உரைத்ததாகப் பாடுவர் கோவர்த்தனார்.

தலைவன் வருவதாகக் கூறிய கார்ப்பருவம் வருவதற்குள் பூவானது மலர்ந்துள்ளது. தலைவன் பொய் உரைக்கவில்லை. கார்ப்பருவத்தில் மெய்மையாக வந்துவிடுவார் எனத் தலைவியை ஆற்றுப்படுத்துகின்றாள்.

மேலும், நற்றிணைத் தலைவி, தலைவனின் அன்பு மிகுதியால் உள்ளம் நலிந்து, உடல் மெலிந்து இருப்பதை எண்ணியத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தியதாக,

**"வரையா நயவினர் நிரையம் பேணார்**
**கொன்று ஆற்றுத் துறந்த மாக்களின் அடு பிணன்**
**இடு முடை மருங்கில், தொடும் இடம் பெறாஅது,**
**புனிற்று நிரை கதித்த, பொறிய முது பாறு**
**இறகு புடைத்து இற்ற பறைப் புன் தூவி**
**செங் கணைச் செறித்த வன்கண் ஆடவர்**
**ஆடு கொள் நெஞ்சமோடு அதர் பார்த்து அல்கும்,**
**அத்தம் இறந்தனர் ஆயினும், நத்துறந்து**
**அல்கலர் வாழி - தோழி - உதுக்காண்**
**இரு விசும்பு அதிர மின்னி,**
**கருவி மா மழை கடல் முகந்தனவே"**[148]

எனப் பாடுவர் மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார். தலைவியே, நமது தலைவர் அளவிடற்கரிய அன்புடையவர், நம்மைவிட்டுச் சென்றாலும் சென்ற இடத்திலேயே தங்கும் இயல்புடையவர் அல்லர். கார்காலம் இன்று முதலே தொடங்குகின்றது. "தலைவர் இப்பொழுதே, வருவார், உம்மீது அன்பு மழைப் பொழிவார்" எனத் தேற்றுகிறாள் தோழி.

பிரிவில் அடையும் துயரத்தினைத் தலைவன் இல்லம் வந்தவுடன் ஒருவரையொருவர் பகிர்ந்து கொள்வர். இவ்வாறு, பகிர்ந்து கொள்வதால் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டு உள்ளன்பு வானளாவி உயரும். பிரிவில் உள்ளத்தில் எழுந்த காதல், காத்திருந்த காதல் என்பதனால் இருவரும் கண்டவுடன், இதுநாள் வரை வாட்டிய வருத்தமெல்லாம் வண்ணமயமாக மாறி இல்லத்தில் இன்பம் மலர்ந்து வாழ்க்கையே ஒளிமயமாக மாறும் என்பதில் ஐயமில்லை. தலைவி, தலைவியரிடையே அகவுணர்வு மிகுந்து, வாழ்க்கையைச் செம்மையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்பர் என்பதே புலவரின் கருத்தாகும்.

**தொகுப்புரை**

"சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்னும் தொல்காப்பியரின் அகமரபினைத் தெள்ளிதின் உணர்ந்தவர்களாகப் புலவர்கள் உள்ளனர்.

அகமாந்தர்களின் பண்பு நலன்கள் அவர்களின் தகுதிக்கு ஏற்ப பாடமாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

தோழியே அகத்தின் அடையாளம் என்பதைப் பல்லாற்றானும் அறிய முடிகிறது.

தலைவியின் அகவுணர்வு ஆளுகையில் தோழியே தன்நேர் இல்லா அகமாந்தராக உள்ளதைப் புலவர்கள் எஞ்ஞான்றும் குறிக்கத் தவறவில்லை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

தலைவனுக்குப் பாங்கன் என்ற அகமாந்தரை வகுத்து, தலைவனின் உணர்வுகளின் ஊடகமாக பாங்கன் திகழ்கிறான்.

களவுக் காலத்தில் தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகிய அகமாந்தர்கள் தலைவனுக்கும், தலைவிக்கும் துணையாக நிற்கின்றனர். மேலும், கற்புக் காலத்தில் தலைவனுக்கும், தலைவிக்கும், மிகப்பரவலாகத் துணை நிற்பவள் தோழியே என்பது புலவர்களின் அகமாந்தர்கள் கூற்று வழி அறியலாகிறது.

தொல்காப்பியரின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாட்டினை அகமாந்தர்களின் புலப்பாட்டு நெறியில் தெள்ளிதின் புலவர்கள் உணர்த்தி உள்ளனர்.

புலவர்கள் மெய்ப்பாடுகளைத் தலைவியின் செயல் உணர்வின் வழியே பல்லாற்றானும் உணர்த்தி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

பிரிவு அகமரபில் ஒரு கூறுபாடாகும். இக்கூறுபாடு தலைவன், தலைவியின் அன்பின் நெறியை இன்னது எனச் சுட்டப் புலவர்கள் ஏதுவாக அமைத்துக் கொண்டதை உணரமுடிகிறது.

# சான்றெண் விளக்கம்

1. தொல். பொருள். களவு. நூ. 2
2. தொல். பொருள். அகத். நூ. 56
3. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, பக். 69
4. அகத்திணை - நூற்பா 53 இன் உரை (நச்சினார்க்கினியர்)
5. தொல்.பொருள். செய். நூ. 181
6. தொல். பொருள். செய். நூ. 182
7. தொல். பொருள். அகத். நூ. 57
8. தொல். பொருள். களவு. நூ. 7
9. தொல். பொருள். இளம்பூரணர் உரை. ப. 163.
10. நக்கீரனார், இறையனார் அகப்பொருள் விளக்கம், ப. 33
11. இறையனார் களவியல், நூற்பா. 2 இன் உரை.
12. தொல். செய். நூ. 178
13. குறுந். பா. 40
14. நம்பி. களவு. நூ.19
15. தொல். களவு. நூ. 11
16. நற். பா. 155
17. குறுந். பா. 62
18. தொல். களவு. நூ. 13
19. தொல். களவு. நூ. 14
20. தொல். களவு. நூ. 15
21. தொல். களவு. நூ. 11
22. குறுந். பா. 95

23. தொல். களவு. நூ. 37
24. தொல். களவு. நூ. 11
25. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 50
26. கலித். பா. 47
27. தொல். களவு. நூ. 24
28. தொல். கற்பு. நூ. 1
29. தொல். கற்பு. நூ. 2
30. நம்பி. வரைவியல். நூ. 1
31. நம்பி. கற்பு. நூ. 3
32. நம்பி. கற்பு. நூ. 1
33. நம்பி. கற்பு. நூ. 2
34. தொல். கற்பு. நூ. 5
35. நற். பா. 362
36. தொல். கற்பு. நூ. 5
37. தொல். கற்பு. நூ. 9
38. குறுந். பா. 135
39. குறள். 247
40. குறள். 752
41. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப.79
42. நற். பா. 346
43. அகம். பா. 279: 1-9
44. தொல். களவு. நூ. 8
45. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, ப. 165

46. சுப்பிரமணியன் ச.வே.உரை, தொல்காப்பியம் தெளிவுரை ப. 469
47. தொல். களவு. நூ. 21
48. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, ப. 192
49. கலித். பா. 54
50. நற். பா. 17
51. தொல். களவு. நூ. 17
52. தொல். களவு. நூ. 21
53. ஐங். பா. 286
54. தொல். களவு. நூ. 11
55. இறையனார் களவியல் - நூற்பா 2 இன் உரை
56. தொல். கற்பு. நூ. 6
57. குறுந். பா. 208
58. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 86.
59. தொல். கற்பு. நூ. 6
60. கலித். பா. 98
61. நற். பா. 217
62. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 49
63. குறுந். பா. 78
64. ஐங். பா. 173
65. சிலப். 13: 57-58
66. தொல். களவு. நூ. 35
67. அகம். பா. 158
68. குறுந். பா. 295

69. அகம். பா. 346
70. தொல். பொருள். களவு. நூ. 47
71. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 55
72. தொல். பொருள். நூ. 4
73. தொல். பொருள். இளம்பூரணர் உரை. ப. 319
74. தொல். அகத். நூ. 39
75. நம்பி. ஒழிபி. நூ. 10
76. அகம். பா. 35
77. நற். பா.110
78. தொல். களவு. நூ. 33
79. நம்பி. ஒழிபி. நூ. 220
80. தொல். அகத். நூ. 40
81. குறுந். பா. 44
82. கலித். பா. 9: 6-20
83. மு. பொன்னுசாமி, சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், ப-14
84. பேராசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் ப. 7
85. மேலது., ப. 10
86. சோமசுந்தரபாரதியார், தொல்காப்பியர் பெரும் படலப் புத்துரை மெய்ப்பாட்டியல், ப.12
87. சிவலிங்கனார், தொல்காப்பிய உரை வளம், ப. 54
88. தொல். செய். நூ. 196
89. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, ப. 502
90. தொல். மெய். நூ. 27

91. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் ப. 171.
92. தொல். மெய். நூ. 1
93. தொல். செய். நூ. 197
94. தொல். மெய். நூ. 2
95. தொல். மெய். நூ. 3
96. தண்டி. பொருள். நூ. 69
97. தண்டி. அணி. நூ.70
98. நம்பி. ஒழிபி. நூ. 2
99. நம்பி. ஒழிபி. நூ. 22
100. ம.கண்ணம்மாள் (க.அ) தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும், உரைகளும், தமிழியல் ஆய்வு, ப. 167
101. தொல். மெய். நூ. 4
102. ABC's of the human Mind, Reader's Digest, p. 170
103. ஐங். பா. 37
104. அகம். பா. 248
105. தொல். பொருள். மெய். நூ. 4 (பேராசிரியர் உரை)
106. தொல். மெய். நூ. 5
107. ஐங். பா. 302
108. கலித். பா. 6: 5-11
109. தொல். மெய். நூ. 6
110. கலைக்களஞ்சியம், தொகுதி - 9 ப. 180 -181
111. குறுந். பா. 158
112. கலித். பா. 47: 1-11

113. தொல். மெய். நூ. 7

114. தொல். பொருள். மெய். நூ. 7 இளம்பூரணர் உரை

115. நற். பா. 166

116. பாரதியார் கவிதைகள் குயில் பாட்டு: 40

117. குறள். 1104

118. குறள். 1120

119. தொல். பொருள். மெய். நூ. 8 பேராசிரியர் உரை

120. தொல். மெய். நூ. 8

121. குறள்: 1075

122. குறள். 428

123. கலித். பா. 87

124. அகம். பா. 118: 6-10

125. கலித். பா. 4 : 1-6

126. தொல். மெய். நூ. 9

127. நற். பா. 327: 3-4

128. குறுந். பா. 397

129. தொல். மெய். நூ. 10

130. புறம். பா. 72

131. கலித். பா. 52: 1-4

132. குறுந். பா. 283: 5-8

133. நற். பா. 164

134. தொல். மெய். நூ. 11

135. அகம். பா. 142: 25-26

136.கலித். பா. 27: 16-26

137.குறுந். பா. 280

138.குறுந். பா. 291

139.குறுந். பா. 78

140.ஐங். பா. 174

141.நற். பா. 7

142.நற். பா. 337

143.நற். பா. 41

144.வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 79

145.குறுந். பா. 16

146.அகம். பா.173: 1-8

147.குறுந். பா. 66

148.நற். பா. 329

## இயல் 4

# சங்கப் புலவர்களின் அகஉணர்வும் சமூகமும்

சங்க இலக்கியம் பழந்தமிழரின் அகவுணர்வுகளையும், சமுதாய மக்களின் வரலாற்றைக் கண்டறியும் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. பன்னெடுங்காலமாகப் பெற்ற அறிவு, பட்டறிவு முதலியவற்றால் நன்கு பண்பட்ட சமூகமாக வாழ்ந்து வந்ததைப் புலவர்களின் பாடலின்வழி நம்மால் அறியமுடிகின்றன. நடைமுறை வாழ்க்கைக்கும், எக்காலத்திற்கும், தேவையான அனைத்து சமூக கருத்துக்களையும், அகநூல்களின் வழி வழங்கியுள்ளனர் புலவர்கள். சங்க கால மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நில அடிப்படையில் எவ்வகையான சமூகம் சார்ந்த வாழ்வினை வாழ்ந்துள்ளனர் என்பதையும் சமூக மக்களின் குடும்ப வாழ்க்கை, தொழில்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியனப் பற்றியும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**சமூகம்**

தமிழ்மொழி தொன்மையான தமிழர்களின் பண்பாட்டைக் காக்கும் மொழியாக அமைந்துள்ளது. பிறமொழிகள் எழுத்துக்கும், சொல்லிற்கும் மட்டுமே இலக்கணம் வகுத்துள்ளன. ஆனால் தொல்காப்பியர், மக்கள் வாழும் வாழ்விற்கு இலக்கணம் கண்டுள்ளார். வேறு எந்த மொழியிலும் அமையாத பொருளதிகாரத்தைத் தன்னகத்தே கொண்ட பெருமையுடையது. பண்டையத் தமிழர்களின் வாழ்க்கை நிலையை எடுத்தியம்பும் கருவூலமாக திகழ்கிறது தொல்காப்பியம். சமூகம் என்பது பரிணாம வளர்ச்சியின் உயிர் என்கின்றார் டார்வின்.

"வேத கால நாகரிகம் ஒரு பொருளதிகாரத்தைப் படைக்கவில்லை; சங்ககாலம் ‘பொருளதிகாரம்’ என்ற சமூக வாழ்க்கை ஆவணத்தைப் படைத்துக் காட்டியுள்ளது. அதன் சார்பாக எழுந்த 2379 சங்கப் பாடல்களில், அக்காலச் சமுதாயக் கோட்பாடுகளைச் செறிந்து வைத்துள்ளது புலமையுலகம். செய்யுளாக்கத்திற்கு முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்ற முப்பொருட் பாகுபாட்டின் வழி வாழ்க்கையின் சாற்றைப் பிழிந்தெடுத்தனவாகச்

சங்கப்பனுவல்கள் விளங்குகின்றன"[1] என கு.வெ. பாலசுப்ரமணியன் உரைப்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மக்கள் பலர் கூடிவாழும் அமைப்பே சமூகம் ஆகும். மனிதன் ஒவ்வொருவரும் நல்வாழ்வு வாழவேண்டுமென்ற நோக்கோடு, ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து வாழ முயற்சி மேற்கொள்கின்றான். இம்முயற்சியின் கூட்டு வாழ்க்கையே சமூகம். இச்சமூக நிகழ்வுகள் அனைத்தும் மக்களின் வாழ்வில் அமையும். "சமுதாயம் என்பதற்கு விளக்கமாக மனிதன் தோன்றிப் பன்னெடு நாட்களுக்குப் பின்பே சமுதாயம் உருவாகி இருக்க வேண்டும். அது என்று என்பதை அறுதியிட்டுத் திட்டமாகக் காட்ட இயலாவிட்டாலும் ஒன்றைத் திட்டமாகக் கூற இயலும். மனித உள்ளம் பண்பாட்டை அறிந்து கொண்ட நாளே சமுதாயம் தோன்றிய நாள். மனித வாழ்வோடு பண்பாடு இணைந்த நாளே சமுதாயம் உருவான பெருநாள்"[2] என அமு. பரம சிவானந்தம் உரைப்பதும்,

"சமுதாயத்தின் ஓர் அங்கமாய் அதனோடு இணைந்தும் முரண்பட்டும் மோதியும் இசைந்தும் குறிப்பிட்ட சூழலில் வாழ்கிறவன் மனிதன். மனித குலத்தில் தானும் ஒருவனாய் வாழும் அவன், வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வு நிலையின் ஒரு வெளிப்பாடாக இலக்கியத்தைத் தோற்றுவிக்கின்றான்"[3] என தி.சு. நடராசன் உரைப்பதும் நோக்கற்பாலது.

சமூகம், சமுதாயம் என்ற சொல் இலக்கண நூலானத் தொல்காப்பியத்திலும், சங்க மக்களின் வாழ்வியலை உணர்த்தும் சங்க இலக்கியத்திலும் இடம்பெறவில்லை. அதற்கு மாறான சொற்களான மன்பதை, உலகம், வையகம் என எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சமூகம் என்ற சொல்லாட்சி பிற்காலத்தில் வழக்கிற்கு வந்த சொல்லாகக் கருதலாம்.

**"உண்டாலம்ம இவ்வுலகம்"[4]**

என்று இலக்கியத்திலும்,

**"இன்சொலால் ஈத்து அளிக்க வல்லார்க்குத் தன்சொலால்**
**தான்கண்ட னைத்துஇவ் உலகு"[5]**

என்றும்

**"உலகத்தார் உண்டு என்பது இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும்"[6]**

உலகப்பொதுமறையான திருக்குறளிலும் சமூகம் என்ற சொல் கையாளப்பெறவில்லை. உலகம், வையகம் என்ற சொற்களே கையாளப்பட்டுள்ளன.

"நீண்ட வரலாற்றுப் பின்புலங்கொண்ட ஒரு சமூகம் தோன்றிய காலம் முதல், பல்துறை சார்ந்த வாழ்வியல் கூறுகளில் குறைநிறைகளைச் செம்மைப்படுத்திக் கொண்டே வருவது இயல்பு. கால வளர்ச்சிக் கேற்பவும், சமூகத் தேவைக் கேற்பவும் கருத்துகள் புத்தாக்கம் பெறுவதும் புதுப்பொலிவு பெறுவதும் இயற்கை. இத்தகைய வளர்ச்சியைக் காலந்தோறும் பெற்று வந்தாலும் அடிப்படையான கருத்தாக்கங்களில் மாற்றம் பெற எந்தச் சமூகமும் விரும்புவதில்லை. காரணம் அவை ஒரு சமுதாயததின் உயிர்நாடியாகத் தனித்தன்மையாக நின்று நிலைத்துப் பயன் தருவதேயாம்"[7] என உரைப்பர் கண்ணகி கலைவேந்தன். அனைத்திலும் தனித்தன்மை பெற்று விளங்கும் சமூகம், ஒவ்வொருத் துறையிலும், ஒவ்வொரு நிலையிலும் தமக்கென தனிமுத்திரையைப் பதித்துள்ளது.

"தொல்காப்பியர் அகப்பொருளை ஒருவர் வழக்காகக் கருதவில்லை, உலகியல் வழக்காகவே (தொல். 698) கருதினார். ஐந்திணைத் துறைகளே ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்வு முறைப்படி ஆசிரியர் கூறவில்லை. தலைவன் தலைவி தோழி செவிலி என்றாங்கு மாந்தர்கள் நிலையில் வைத்தே காதற்றொடர்புகளை நூற்பித்துள்ளார். அதனால் காதலுறுப்பினர் தம் உள்ளோட்டங்கள், உணர்வுகள், உணர்ச்சிகள், வேட்கைகளை நாம் அறிகின்றோம். காதலியக்கத்தை நிரல் படச் சுட்டாமல், ஒவ்வோர் ஆளுக்கும் உரிய காதற் பாகங்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளனர். கூற்றுவகைபட ஆசிரியர் யாண்டும் சொல்லிச் செல்லுதலின் ஐந்திணை ஒரு தொடர் கதையாக நம் எண்ணத்துப்படுதற்கில்லை"[8] எனச் சுட்டுவர் வ.சுப. மாணிக்கம்.

பண்பாட்டுச் சிறப்பினையும், சமூக மேம்பாட்டினையும் கொண்டு பல ஆண்டுகள் வாழ்ந்த மக்களின் சமூகச் சிந்தனைகளை இலக்கியங்களில் பதித்துள்ளனர். சங்க இலக்கியம், மிகுதியானப் பாடல்கள் அகப்பொருள்

பாடல்களாகவே இருப்பினும், இல்லற வாழ்விற்கு சிறப்பினை அளிக்கும் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், விருந்தோம்பல் ஆகிய அனைத்தும் பொதிந்து கிடக்கின்றன.

**அகஉணர்வு**

மனிதனின் மனதினுள் பற்பல உணர்வுகள் ஊற்றாய் உருவெடுக்கும். மனிதர்களின் உணர்வுகளுக்கு ஏற்றார்போல புலவர்கள் இலக்கிய மாந்தர்களின் அகவுணர்வுகளை இலக்கிய வழக்காகவும், உலகியல் வழக்காகவும் பாடல்களில் பதிவுச் செய்துள்ளனர். இவ்வுணர்வுகள் சங்க மக்களின் பண்பாட்டினைக் காக்கும் வகையில் நாகரீகமான முறையில் எடுத்தியம்பியுள்ளன. தனிநபரின் உள்ளுணர்வில் ஏற்படும் மாறுபாடு சமூகமக்களின் உணர்விலும் பலவிதமான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன.

தமிழர்களின் வாழ்வினில் அகவுணர்க்குச் சிறப்பிடமுண்டு. தொல்காப்பியர் அகவுணர்வின் இலக்கணங்களை விரிவாக விளக்கவில்லையெனினும் நூற்பாக்களில் பொதிந்து விளக்கியுள்ளார். தொல்காப்பியரின் சிந்தனைகளை உரையாசிரியர்கள், அகம் என்பதை, "ஒத்த அன்பால் ஒருவனும், ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள்"[9] என நச்சினார்க்கினியரும்,

"உள்ளத்தின்கண் நிகழ்வது; வெளிக்குத் தோன்றாதது; அது பல்வகைய ஆயினும் உணர்ப்புவயின் அறிவதன்றி, இவ்வாறென வெளிக்கு எடுத்துரைத்தல் இயலாதது; அது மனத்தினால் அறியும் மாண்புடையது; அதுவே காதலுணர்வு பருவம் வாய்ந்த ஆடவர், பெண்டிர் அகத்தே பூத்துமலரும் பொற்புடையது"[10] என களவியல் உரையாசிரியர் நக்கீரனாரும் உரைப்பர். இவ்வாறு தலைவன், தலைவியின் உள்ளத்தில் உருவாகிய உணர்வினை, எடுத்துரைக்க இயலாத இயல்பினதாகவும் அகவுணர்வு இருப்பதாக உரையாசிரியர்கள் உரைத்துள்ளன.

"அகமாவது இல்லற வாழ்விற்குரியவராக உயர்ந்த பாலதாணையால் இணையும் தலைவனும், தலைவியும் ஒருவரால் ஒருவரது உள்ளத்தெழும் இன்பம் துன்பமுமாகிய உணர்வுகளாம். அகமென்பது இல்லத்தையும் உள்ளத்தையும் ஒருங்குணர்த்தி நின்றது"[11] எனச் சுட்டுவர் ச. பாலசுந்தரம்.

மனித உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் எண்ணற்றவை.

**"ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல"[12]**

கோடிக்கணக்கான எண்ணங்கள் மனதில் சுழன்றாலும் அவற்றுள் 'காதல் உணர்வு' மட்டுமே 'அகம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டது. "உள்ளத்தே எழும் அவா, உடல் வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிர்விப்பதாகலின் உள்ளம் என்பதனோடு தொடர்புபட அகம் என்றனர். அன்பிற்கும் இன்பத்திற்கும் அடிப்படை உடலன்று; உள்ளமே என்பதனை இப்பெயர் உணர்த்தி நிற்கின்றது. உள்ளத்தையே அகம் என்று குறித்தனர்"[13] என்பார் சரளா ராசகோபாலன். காதலைப் பற்றிப் பாடிய பழந்தமிழ்ப் பாட்டுகளில் பெண்களின் உடல் வருணனை மிகுதியாக இல்லை. காதலரின் உள்ளத்து உணர்வு பற்றிய பாட்டுகளே மிகுதியாக உள்ளன என்பது மு. வரதராசரின் கருத்தாகும்.

உலக உயிர்கள் அனைத்து தமது இன்பத்தை உணர்ந்து களிப்பதும், தன் துன்பத்தை உணர்ந்து வருந்துவதும் பொதுவான செயலாகும். எல்லா உயிர்க்கும் உயிராக அன்பு விளங்குகின்றன.

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தாம் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"[14]**

என உரைப்பர் தொல்காப்பியர். சமூக மக்களின் இன்பத்திற்கு அடிப்படையாக உள்ளவை இல்வாழ்க்கை. இருவரிடம் தோன்றும் பேரன்பு தன்மனதினால் உந்தப்பட்டு உணர்வுகளாக வெளிப்படுகின்றன. இவ்வகையான உணர்வுகளே காதல் என்னும் பெயரில் வழங்கப்பெறுகின்றன. பேரன்பின் வெளிப்பாடாக காதல் அமைந்துள்ளது. இதனையே 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பார் வள்ளுவர்.

தலைவனை பிரிந்திருக்கும் காலத்தில் நோயினால் துன்பம் துவண்டதாகவும், தலைவனின் மார்பினைச் சேர்ந்திருக்கும் நிலையில் இன்பஉணர்வினை நல்கியதை,

**"தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு**
**நோயும் இன்பமும் ஆகின்று மாதோ"**[15]

என நற்றிணைத் தோழி வானத்தை உவமையாக உரைத்துப் பாடுவர் வண்ணக்கன் கம்பூர்கிழான்.

தலைமக்களிடையே திருமணம் நிகழ்ந்ததை அறிந்தத் தோழி எரியும் நெருப்பும், அதனை ஆற்றும் காற்றும் வானில் இருக்கின்றன. அதேபோல் மனதில் தலைவன் தன்னைவிட்டு இருந்த பொழுது துன்ப உணர்வும், தலைவனின் மார்புடன் சேர்ந்திருக்கும் போது உருவான இன்ப உணர்வும் நமது வாழ்விலே இருப்பதாக புலவர் உணர்த்தியுள்ளார்.

அன்பின் ஐந்திணைக்குரியதாக அடிப்படையாக உள்ள காதல் உணர்ச்சிகள் அகவுணர்வாக வெளிப்பட்டு இன்பத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. இதனையே பரிப்பாடல்

**"காதற் காமம் காமத்துச் சிறந்தது**
**விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி"**[16]

புலப்படுத்தியுள்ளன. ஆண் இளமைப் பருவமும், பெண் மங்கைப் பருவமும் அடைந்தவுடன் இருவரிடையேயும் அதுகாறும் காணாத உணர்வு இருவரிடமும் தோன்றும் என்பதே அகவுணர்வின் தொடக்கமாகும். தலைவன், தலைவியை தெய்வமகளோ என ஐயுறுகின்றான். கண் இமைத்தல் கூந்தலில் உள்ள வண்டுகள் மொய்த்தலை அறிந்தவுடன் இவள் மண்ணுலக மங்கையெனக் கருதுகின்றான். இவ்வழகு பொருந்தியப் பெண்ணுடனே, தமது இல்லாளாக வரவேண்டுமென்ற எண்ணம் தோன்றும். இதே நிலையிலே தலைவனைக் கண்ட தலைவியும் எண்ணுகின்றாள். இருவருள் தோன்றும் உணர்வே அகவுணர்வாகும். இவர்களின் இத்தகைய அகவுணர்வு மூலம் பல்வேறு பிரிவுகள், போராட்டங்கள், துயரங்களையும் மீறி தலைவன், தலைவியும் சமூகத்தின் உயரிய குடும்ப வாழ்வினை உணர்த்துகின்றனர். வாழ்வில் இன்ப உணர்வுகளுக்கும், துன்ப உணர்வுகளுக்கும் இடைநின்றுக் கிடப்பதே வாழ்க்கை.

**காதல் உணர்வின் இயல்பு**

காதலும், காதலால் ஏற்படும் உணர்வும் இயல்பானது. வாழ்விற்கு காதலும், வீரமும் நிச்சயப் பொருளாகின்றன. காதல் இயல்பானது. காதல் செய்வேன் என்ற கொள்கை கொள்ளாதது. ஊடல் வளரும் பொழுது, காதலுணர்வும் தாமே வளர்கின்றன. இதனையே அகவுணர்வு என்பர். இவ்வுணர்வு இல்லாதோர் யாவருமில்லை. இருப்பினும் தனிப்பட்ட முறையில் அவரவர் மனதிற்கேற்ப கட்டுப்பாட்டிற்குள் கட்டிப்போட முடியும். கட்டுப்பாடுகள் இருப்பதனால், வெளிகொணராமல் தடுக்கலாம். ஆனால், மனதினுள் இவ்வுணர்வானது உருண்டோடிக் கொண்டே இருக்கும்.

**களவு வாழ்வில் தலைவன் தலைவியின் அகவுணர்வு**

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு தலைவனும், தலைவியும் காதல் வயப்பட்டவுடன் ஒருவரையொருவர் தினமும் பார்க்க வேண்டுமென்ற ஆவலும், உரையாட வேண்டுமென்ற எண்ணம் அகஉணர்வால் ஏற்படும். களவில் இன்பம் கண்டு வரைவை நீட்டிக்கும்பொழுது தலைவியின் மனநிலையானது தலைவன் தம்மை விரைவில் மணம் முடிக்க வேண்டுமென்ற எண்ணம் எழும். தலைவனின் கூற்றுகள் நேரடியாக இருப்பதனால் அவனுடைய ஆற்றாமை உணர்வுகள் நேரடியாக வெளிப்படும். கட்டுப்பாடுகள் நிறைந்த சமூகத்தில் தலைவியின் கூற்று களவுக் காலத்தில் குறிப்பு முறையாக வெளிப்படும் என்பதனை,

> **"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
> **எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை"**[17]

எனவும்,

> **"காமத் திணையிற் கண்நின்று வரூஉம்**
> **நாணும் மடனும் பெண்மைய ஆகலின்**
> **குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**
> **நெறிப்பட வாரா அவள்வயின் ஆன"**[18]

என உரைப்பர் தொல்காப்பியர். ஓர் ஆண்மகன் தன் காதலை வாய்விட்டு வெளிப்படையாகக் கூறலாம். பெண் தன் காதலைக் குறிப்பாக உணர்த்த வேண்டும். தலைவியின் உணர்வுகளையும், பிரிவினால் ஏற்படும் துயரங்களையும்

தலைவனுக்கு உணர்த்த வாயில்கள் துணைபுரிகின்றனர். "தலைவனையும், தலைவியையும் இடைநின்று கூட்டும் தூது"[19] என தலைமக்களின் உணர்வினை இடைநின்று உணர்த்த தூது உரைக்கும் மாந்தர்களின் பண்புகளையும் வாயிற் கூட்டம், வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல் என்ற செயல்பாட்டினைச் சுட்டுகின்றன.

தொல்காப்பியர் அகத்திணையியல் கூற்று மாந்தர்களை வரிசைப்படுத்தவில்லையெனினும் 'கிழவோன்மேன, தோழிமேன, செவிலிமேன தந்தையும் தாயும் முன்னத்தின் உணர்ப, கிழவோற்க இல்லை' முதலான தொடர்களில் இவர்களை உணர்த்துகின்றார்.

தலைவன், தலைவியர்க்கு இடைநின்று அவர்களின் அகஉணர்வினை உணர்த்தும் வாயில்களை

**"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"[20]**

என கற்பியல் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். தலைவன் தலைவியருக்கு இடையே அகவுணர்வு மிகுதியை வெளிப்படுத்தக் களமாக இருப்பவர்கள் வாயில்கள். "தலைமகளின் உணர்வு வெளியீட்டிற்கும், உறவு நிலை பேற்றுக்கும் வாயில் போன்று அமைந்து விளங்குபவர்கள் வாயில்களாவர்"[21] களவு காலத்தில் வாயில்களின் கூற்றுகள் அரிதானது. ஏனெனில்

**"காமக்கூட்டம் தனிமையிற் பொலிதலின்**
**தாமே தூதவர் ஆகலும் உரித்தே"[22]**

என்ற நூற்பாவின்வழி தலைவன், தலைவியரிடம் களவுக்காலத்தில் மறைந்த ஒழுக்கத்தினை மேற்கொள்வதனாலும், தனிமையில் சந்திக்கும் வாய்ப்பினை தலைவனும், தலைவியும் பெற்றதனால் வாயில்களின் தேவை குறைந்து அவர்களே கூற்றினை நிகழ்த்திக் கொள்கின்றனர்.

"இலக்கியத்திற்கு வேறு எத்தன்மை இருப்பினும் போதாது, உணர்த்தும் ஆற்றல் இருத்தல் இன்றியமையாதது: உணர்த்துதல் இல்லையேல் அது

இலக்கியம் ஆகாது. எதை உணர்த்தல் வேண்டும்? புலவரின் மனத்தில் விளங்கிய அனுபவமே, படிப்பவரின் மனத்திலும் விளங்குமாறு செய்தல் வேண்டும். அனுபவித்தது என்ன என்று விளக்குதல் போதாது; அனுபவம் எப்படி ஏற்பட்டது என்று சொல்லுதலும் போதாது; வந்த அனுபவத்தையே தருதல் வேண்டும். ஒரு மனத்திலிருந்து மற்றொரு மனத்திற்கு அந்த அனுபவம் மாறி அமைய வேண்டும்"[23] என அறிஞர் ஆபர் கிராம்பியின் கருத்தை மேற்கோளாகச் சுட்டுவர் மு. வரதராசன்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைவனின் அகவுணர்வு மிகுதியினை,

**"சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை**
**கானயானை அணங்கி யாஅங்கு-**
**இளையள், முளைவாள் எயிற்றள்,**
**வளையுடைக் கையள் - எம் அணங்கியோளே"[24]**

சிறிய பாம்பின் குருளையானது பெரிய யானையை வருத்தியதுபோல, இளைய தலைவி வலிமை வாய்ந்த தலைவனை வருத்தியமை குறிக்கப்பட்டது. தலைவியின் நினைவுகளை தம்மால் மறக்கமுடியவில்லை எனவும், மேலும் ஐங்குறுநூற்று பாடலில்,

**"வளையள் முளை வாள் எயிற்றள்**
**இளையள் ஆயினும், ஆர் அணங்கினளே"[25]**

வயதில் இளையவளேயாயினும் எனக்கு உய்தற்கு அரிய துயரினைத் தருபவளாக இருக்கின்றாள் என தமது அகவுணர்வு மிகுதியை வெளிப்படுத்தியுள்ளான்.

தலைவியின் அகவுணர்வு அதிகமாகும் பொழுது அவளது எண்ணச் செயல்களை,

**"முட்டுவேன்கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன், யானும்: ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல்" எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே"[26]**

எனப் பாடுவர் ஔவையார்.

தலைவன் தன்னை விரைவில் மனம் செய்துக் கொள்ளவில்லையே என்ற அகவுணர்வு மிகுதியினால் ஊர் உறங்குவதை கண்டு, தமது மனநிலையை கேட்பார் இல்லையோ? எதனோடு எமது தலையை முட்டிக்கொள்வேன். என் உடலினை எதனைக்கொண்டு தாக்கிக் கொள்வேன்? ஏதேனும் ஒரு சாக்குப் போக்குச் சொல்லி ‘ஆஓ’ என்று அலறலாமா? அப்பொழுதாவது உறக்கத்தில் உள்ளவர்கள் விழித்து என்ன என்று வினவமாட்டார்களா? இவற்றில் எதனைச் செய்யலாம் என யோசிக்கும் களவு தலைவியின் அகவுணர்வு மிகுதியானது பரிவு உணர்வினை உணர்த்தியுள்ளார் புலவர்.

தலைவியானவளுக்கு இயல்பாகவே அச்சம் மிகுதி. தலைவன்மீது கொண்ட அன்பு மிகுதியால் அவனையே, எண்ணி, எண்ணி வேதனையுறும் அன்புள்ளம் கொண்டவள். சாதல் என்ற நிகழ்விற்கு அனைவரும் அஞ்சுவர். இருப்பினும் தலைவியானவள் தனது அகவுணர்வு மிகுதியினால் சாதலுக்கு அஞ்சாதத் தலைவி, தலைவன் பிரிவிற்கு அஞ்சுவதை,

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவல்இ "சாவின்**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல், என் காதலன்"[27]**

எனப் பாடுவர் அம்மூவனார். மேலும், தலைவிக்கு அகவுணர்வு மிகுந்திருப்பதனால் இப்பிறவியின்றி, மறுபிறவியிலும் உமது தலைவியாக யான் தொடரவேண்டுமென்று,

**"இம்மை மாறி மறுமை ஆயினும்,**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே"[28]**

எனப் பாடுவர் புலவர். தலைவன், தலைவியரின் காதல் பிறவிதோறும் தொடர வேண்டும் என தலைவி தனது அகவுணர்வு மிகுதியால் உரைப்பது பிரிவு துயரினை ஏற்படுத்துகின்றன. மேலும், இம்மை, மறுமைப்பற்றிய சிந்தனையும், மறுப்பிறப்புப் பற்றிய சிந்தனையும் நமது நன்மை, தீமைகளுக்கேற்ப வினைப்பயன் தொடருமென்றக் கருத்தினை உரைத்துள்ளனர் புலவர்கள்.

**அம்பல், அலர், கௌவையால் மிகும் அகவுணர்வு**

தலைவன் தலைவியின் களவு வாழ்வானது ஊரில் அலராகவும், அம்பலாகவும் பரவியது என்பதனைத் தொல்காப்பியர்,

> **"அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று**
> **அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்"[29]**

அம்பலும், அலரும் களவினை வெளிப்படுத்தும் என உரைப்பர். இதன் காரணமாக தலைவிக்கு அகவுணர்வு மிகும் என்பதனை,

> **"அலரில் தோன்றுங் காமத்து மிகுதி"[30]**

என உரைப்பர் தொல்காப்பியர்.

இதனை வலியுறுத்தும் வகையில்,

> **"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
> **நீராக நீளும்இந் நோய்"[31]**

என வள்ளுவர் உரைப்பர்.

தலைவன், தலைவியின் காதல் வாழ்வு வெளிப்பட்டவுடன் பழிச்சொல்லிற்கு ஆளாகின்றனர். பழிச் சொல்லானது அம்பல், அலர், கௌவை என மூவகைப்படும். அம்பல் என்பது சைகை வழி ஒருவருக்கொருவர் குறைக்கூறுவதையும், அலர் என்பது சொல்வழி ஒருவருக்கொருவர் குறைக் கூறுவதையும், கௌவை என்பது வெளிப்படையாக ஒருவர் மற்றொருவருடன் பழிச்சொல்லும் முறை ஆகும். அம்பல் என்பது அலரின் முகிழ்நிலை. கௌவை என்பது அலரின் முதிர்நிலை ஆகும். இவற்றில்

> **"அம்பலும் அலருங் களவு"[32]**

என அம்பலும், அலரும் களவு நிலைப்பட்டது என உரைத்துள்ளது இறையனார் அகப்பொருள்.

அலரின் நிலையினை எடுத்துக் கூறித் தலைவனை வரைவிற்கு உட்படுத்துவதை,

> **"எல்லி வந்தன்றோ தேர்?" எனச் சொல்லி,**
> **அலர் எழுந்தன்று இவ் ஊரே பலருளும்**

**என் நோக்கினளே அன்னை நாளை**
**மணிப் பூ முண்டகம் கொய்யேன்ஆயின்,**
**அணிக் கவின் உண்மையோ அரிதே் மணிக் கழி**
**நறும் பூங் கானல் வந்து, அவர்**
**வறுந் தேர் போதல் அதனினும் அரிதே”**[33]

எனத் தோழிக் கூற்றாக பாடுவர் உலோச்சனார்.

நேற்றிரவு ஒரு தேர் வந்ததன்றோ என ஊர் முழுதும் அலர் ஒலிக்கப்பட்டது. அன்னையானவள் அலர் மொழியைக் கேட்டு என்னையே நோக்கினாள். ஆகவே குறியிடத்தே தலைவியை காணுதல் இயலாது விரைவில் மணம் செய்துக் கொள்ளுமாறு தோழி உரைத்தாள்.

**"முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்,**
**தடந் தாட் தாழை முள்ளுடை நெடுந் தோட்டு**
**அக மடல் பொதுளிய முகை முதிர் வான் பூங்**
**கோடு வார்ந்தன்ன, வெண் பூத் தாழை**
**ஏறி திரை உதைத்தலின், பொங்கித் தாது சோர்பு,**
**சிறுகுடிப் பாக்கத்து மறுகு புலா மறுக்கும்**
**மணம் கமழ் கானல், இயைந்த நம் கேண்மை**
**ஒரு நாள் பிரியினும் உய்வு அரிது என்னாது,**
**கதழ் பரி நெடுந்தேர் வரவு ஆண்டு அழுங்கச்**
**செய்த தன் தப்பல் அன்றியும்,**
**உயவுப் புணர்ந்தன்று, இவ் அழுங்கல் ஊரே”**[34]

தேரொளியால் ஊரால் அலர் தூற்றுவதாகவும், தலைவி அகவுணர்வு மிகுதலாலும் விரைந்து மணம் முடிப்பின் அலர் நீங்கும் என்பதே கருத்தாக உள்ளன.

ஊர் மக்கள் அன்புள்ளங்களின் காதலினை அலரின் காரணமாக அலை கழிக்கின்றனர். இத்தகைய அலர் இல்லையெனில் தலைவன் விரைவில் வரைவினை மேற்கொள்ளாமல் களவு வாழ்விலேயே திழைத்திருப்பான். இதனால் அறத்தொடு நிற்றல் மூலமாகவும், உடன்போக்கின் மூலமாகவோ விரைவில் திருமணம் நிகழும் என்பது உறுதியாகிறது. இவ்வகையில் சமூக மக்களின் அலர் அன்புள்ளங்களுக்கு, நன்மைப்பயப்பனவாகவே அமைகின்றன.

**அகவுணர்வினை தூண்டும் வெறியாடல்**

நடைமுறை வாழ்வில் மக்கள் இறைவனை வழிப்பட்டு, அதன் விளைவாக சடங்குகளை மேற்கொள்வது மக்களின் மனதில் வேரூன்றியச் செயலாக இருந்தது என்பதை வெறியாடல் உணர்த்துகிறது.

தலைவியின் உடல் உள்ள மாறுபாட்டினை கண்ட தாய், வெறியாடல் என்ற சடங்கினை மேற்கொள்கின்றாள். அகஇலக்கியத்தில் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுவது வெறியாடல் பற்றி துறையமைந்தப் பாடல்கள் ஆகும். "'வெறி' என்னும் சொல் தெய்வத்தைக் குறிப்பதாகும்"[35] எனக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகின்றது.

வெறியாடல் என்னும் நிகழ்வானது குறிஞ்சிநில மக்களிடையே காணப்பட்டதனைப் பாடல்கள் விளக்குகின்றன. "சமுதாயச் சடங்குக்கும் கற்பொழுக்கத்துக்கும் இடையே நிகழும் போராட்டத்தைப் புலப்படுத்தும் முறையில் வெறியாட்டு என்றும் துறை அமைந்துள்ளது. எனவே சுவைமிக்க அகப்பாடல் பலவற்றுக்கான கருவை இத்துறை வழங்கியுள்ளது. மனவுணர்வுகளுக்கு மதிப்பளிக்காது. மரபுவழிச் செல்லும் முதுமைக்கும், மரபு, முதுமை இரண்டினையும் எள்ளி நகையாடி ஆனால் அவற்றின் வரம்புகளை மீற இயலாது தவிக்கும் இளமைக்கும் நடக்கும் போராட்டமே இவ்வெறியாட்டு எனலாம்"[36] என சரளா ராசகோபாலன் உரைப்பதும்,

"களவின் வழி ஒழுகும் தலைவி ஒருத்தியின் மேனி நாள்தோறும் மெலிந்து வருவதை நற்றாய் காண்கின்றாள். இவ்வுடல் வேறுபாடு காப்பு மிகுதியாலும் தலைவனைக் கூடப் பெறாத தலைவியின் காதல் மிகுதியாலும், நொதுமலர் வரைவினாலும், அவள் காதலுக்கு ஏதம் விளைவிக்கக் கூடிய இன்னோரன்ன பிற செயல்களாலும் ஏற்பட்டிருக்கலாம் என்ற உண்மையை ஊகித்தறியாத தாய் இவ்வேறுபாடு எவற்றினானாயிற்று? என்று வினவ அவர்கள் குறிபார்த்துத் தெய்வத்தானாயிற்று என்றனர். மரபு வழிப்பட்ட அத்தாய் இவ்வேறுபாடு முருகனால் வந்தது என்று நம்பி முருகனுக்குப் பூசை நடத்தத் துணிகிறாள். வீட்டை அடுத்துள்ள நல்லதோரிடத்தில் புதுமணல் பரப்பிய வெறியாடல் களத்தில்

பூசை தொடங்குகிறது"[37] என ந. சுப்புரெட்டியர் உரைப்பர். இவர்களின் கூற்றின் வழி வெறியாடல் நிகழ்வினை உணரலாம்.

ஆவேசமாகக் கூத்தினை நிகழ்த்தி முருகனைக் கூவி அழைப்பதே வெறியாட்டு என்பதாகும். இவ்வகையான ஆட்டமும், பாட்டும் அக்காலச் சமுதாய மக்களின் நம்பிக்கையாக வலுபெற்றன. முருக பூசாரியே வேலன் என அழைக்கப்படுகின்றார். தினையை இரத்தத்தில் கலந்து எறிந்து முருகனை ஆவேசத்துடன் கூவி அழைப்பதே வெறியாட்டு எனப்படுகின்றது.

இதனை,

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்"[38]**

என உரைப்பர் தொல்காப்பியர்.

"தலைவியின் உடல்மெலிவு கருதித் தாய் கட்டு பார்த்தலும், கழங்கு பார்த்தலும், வேலனை அழைத்து வெறியாடலும் ஆகிய அகத்திணை நிகழ்வுகள் தொன்மைக் காலச் சமூகப் பண்பாட்டு மரபுகளைக் காட்டுவன"[39] எனச் சுட்டுவர் கு.வெ. பாலசுப்ரமணியன்.

தலைவியின் இவ்வேறுபாட்டிற்கு காரணம் தலைவன் ஒருவனே என்பதனையறிந்த தோழி வெறியாடலையும், வேலனையும் சாடுகின்றாள். சமூகமக்கள் உண்மை உணராதவர்களாக இருக்கின்றனரே என வெறுப்புக் கொள்கின்றாள். தலைவிக்கு வெறியாடல் நிகழ்த்துவதனால் அவளது உணர்வானது மிகவும் வருத்தம் கொள்வதனை, தலைவனுக்கு உரைத்து விரைவில் மணம் முடிக்கும் எண்ணத்தினைத் தூண்டுவதாக வெறியாடல் நிகழ்வு அமைகின்றன. "சமுதாயச் சடங்குக்கும் கற்பொழுக்கத்துக்கும் ஒரு போராட்டத்தை வெறியாட்டிற் காணலாம். முதுமை மரபைப் பின்பற்றும், இளமை முதுமையை எள்ளும் என்ற நிலையில் வெறித்துறைப் பாடல்கள் எழுந்துள. எதிர்ப்புணர்ச்சிகள் புலவோர் பாடுதற்குக் கவர்ச்சியான இடங்களாம். ஆதலின் இத்துறையில் 40 பாடல்கள் சங்கவிலக்கியத்து உண்டு. காமக்கணியார் மூன்று அகச்செய்யுட்கள் பாடிய பெண் புலவர். இம்மூன்றும் (அகம் 22, 98; நற். 268);

வெறிப்பொருளனவே. இவ்வொரு துறையை ஆழ்ந்து பாடவல்ல புலமை பற்றி, ‘வெறி பாடிய’ காமக்கணியார் என்று இவர் சிறப்புப் பெற்றார். அன்னை-மகள் பூசலை ஒரு பெண் புலத்தி பாடுவது சிறப்புத் தானே! கபிலரின் ‘வெறிப்பத்துப்’ பாடல்கள் (ஐங். 241-250) அன்னையின் அறியாமை,வேலனின் அறியாமை, தோழியின் எதிர்ப்பு, தலைவியின் கற்பு முதலியவற்றைத் தொடர்பாக நமக்கு அறிவூட்டுகின்றன”[40] என வலியுறுத்துகின்றார் வ.சுப. மாணிக்கம்.

செவிலிக்கு, தோழி கட்டுவிச்சியின் மூலம் அறத்தொடு நின்றதனை,

**"அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும், பாடுக, பாட்டே - அவர்**
**நல் நெடுங் குன்றம் பாடிய பாட்டே”[41]**

எனப் பாடுவர் ஔவையார். தலைவியின் பசலைக்குக் காரணம் முருகனால் அல்ல, குறிப்பிட்ட குன்றத்தைச் சேர்ந்த தலைவனால் நிகழ்ந்தது என்பதனைச் செவிலிக்கு உணர்த்துவதற்காகவே கட்டுவிச்சியிடம் தலைவனின் குன்றத்தைப் பலமுறை பாடவேண்டும் எனக் கூறிய தோழியின் அறிவாற்றலினால், செவிலியின் உள்ளத்தில் ஐயம் வெளிப்படும் தலைவியின் மெலிவுக்குக் காரணம் இம்மலைவாழ் ஒருவனோ? என்ற எண்ணம் தோன்றுகிறது. இவ்வாறு வெறியாடல் மூலம் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். தலைவன் சிறைப்புறத்தானாக வெறி அறிவுறீஇத் தோழி வரைவு கடாயது என்ற துறையில்,

**"பொய்யா மரபின் ஊர் முது வேலன்**
**கழங்கு மெய்ப் படுத்து, கன்னம் தூக்கி,**
**"முருக" என மொழியும் ஆயின்,**
**கெழுதகைகொல் - இவள் அணங்கியோற்கே?”[42]**

எனப் பாடுவர் கபிலர். தலைவியின் இந்நோயிக்கு காரணம் தலைவனல்லவா? அந்நோயினைத் தீர்க்கும் கடமையும் அவனுடையதன்றோ? தலைவன், தலைவியை வாளா விருப்பதனாலன்றோ அன்னை வெறியாட்டு செய்வதனால் தலைவியே துயரப்படுகின்றாள்? எனக் கூறி அவனது கடமையை உணரச் செய்கின்றாள் தோழி.

வெறியாட்டு நிகழ்த்தியும் தலைவியின் பசலை தீரவில்லை. அன்னைக்கு வருத்தம் நொதுமலர் வரைவு நிகழ்த்த எண்ணுகிறாள். இச்செயலினால் தலைவியின் அகவுணர்வு அச்சம் கொள்கின்றது. தோழியின் உதவியை நாடுகின்றாள் தலைவி. தோழியும் பல்வேறு குறிப்புகளின்வழி தாயிக்கு அறத்தொடு நிற்கின்றாள். பலனின்மையால் தலைவியின் நோய்க்குக் காரணத்தினை வெளிப்படையாகவே அறத்தொடு நிற்பதாக,

**"நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்**
**கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் -**
**அருந் திறற் கடவுள் அல்லன் -**
**பெருந் துறைக் கண்டு, இவள் அணங்கியோனே"**[43]

எனப் பாடுவார் அம்மூவனார். தலைவியின் மெலிவிற்கு மானிடத்தலைவனே காரணம், தெய்வம் அல்ல எனக் கூறி களவினை வெளிப்படுத்துகின்றாள் தோழி.

அறத்தொடு நிற்கும் தோழிக்கு உண்மை உணர்த்தும், நோக்கத்தின் நிலைக்களனாகவும், வரைவினை விரைவில் முடிப்பதற்கும், களவு அகவுணர்வு, கற்புணர்வாக மாறுவதற்கு தூண்டு கோலாய் வெறியாடல் அமைகின்றன. இவ்வெறியாடலினை, செவிலி, நற்றாய், வேலன், அகவன் மகள் ஆகியோர்களிடம் உரைக்கும்பொழுது அறத்தொடு நிற்றலாகின்றது. தலைவனுக்கு உரைக்கும் பொழுது வரைவுகடாதலாகிறது. குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூற்று நூல்களில் வெறியாடல் பற்றிய நம்பிக்கை மக்களிடம் இருந்தது என்பதைப் புலவர்கள் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் கலித்தொகையில் மட்டும் வெறித்துறைக்கூறி வரைவுகடாதலோ, அறத்தொடு நிற்றலோ புலவர்களால் பாடப்படவில்லை என்பதிலிருந்து, இக்காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களிடம் வெறியாடல் என்னும் வழக்கம் நம்பிக்கையை இழந்ததை உணரலாம்.

வெறியாடல் நிகழ்த்துவதால் தலைமாந்தர்களிடையே, களவுக் கால சந்திப்புகள் குறைகின்றன. வெறியாட்டின் பின், நோய் தீரவில்லை. எனவே பெற்றோர் நொதுமலர் வரைவிற்கு முடிவு செய்வதனால் தம்மை வேற்றொருவனுக்கு மணம் முடித்து விடுவார்களோ என்ற அச்சவுணர்வின்

காரணமாக, வெகுவிரைவில் தலைவனை வரைவிற்கு உட்படுத்துதல் நிகழும், இல்லையெனில் நிச்சயம் உடன்போக்கிற்கு அகவுணர்வு தூண்டும்.

**அறத்தொடு நிற்றல்**

தோழி செவிலித்தாய்க்கு காதல் வாழ்வினை உரைக்க முற்படுகின்றாள். சமூக நெறிகேற்ப 'அறத்தொடு நிற்றல்' என்னும் நன்னெறியை எடுத்தியம்புகின்றாள். தலைவனானவன், இல்லற கடமைகளை ஆற்றும் சிறந்த பண்பிற்குரியவன், கண்டார் விரும்பிப் போற்றும் அழகுடையவன், சிறந்த வீரனாகவும் செயல்படுபவன். ஆகவே தலைவி, தலைவனைத் தேர்ந்தெடுத்த இச்செயலானது அறமே. இதனை,

**"முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்**
**புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்"**[44]

என அறத்தொடு நிற்றலை அறச்செயலாகவும்,

**"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி**
**அறத்தியல் மரபிலள் தோழி என்ப"**[45]

தலைவியின் ஒப்புதல் இன்றி அறத்தொடு நிற்கும் உரிமை தோழிக்கு இல்லை என உரைப்பர் தொல்காப்பியர்.

அறத்தொடு நிற்றலினை, "கற்பு அழியாதவாறு தலைவி தலைவனொடு ஒழுகி வந்த களவொழுக்கத்தைத் தமர்க்கு முறையே அறிவுறுத்தி வெளிப்படுத்தலே அறத்தொடு நிற்றலாம். தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் என்ற முறைகளில் அறத்தொடு நிற்பர்"[46] என உரைக்கிறது நம்பியகப்பொருள்.

தொல்காப்பியர் அறத்தொடு நிற்றலை களவிலும், கற்பியலிலும் அதிகமாக கூறாமல் பொருளியலியல் உரைத்துள்ளார். இவற்றிற்கு "டாக்டர் தமிழண்ணல் கூறுவது போல, களவு, கற்பு என்னும் பெருங்கடல்களுக்கு நடுவில் பாலமாக இத்துறை அமைவதால் களவில் அதிகமாகக் கூறாமல் வழுவமைதியாகப் பொருளியலில் கூறுகிறார். அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய இயல்களில் கூற்று முறையில் கூறிச்செல்லும் தொல்காப்பியர், பொருளியலில் செயல்முறைகளில் கூறுவதை நுணுகிக் காண்போர் அறிவர். களவியலில் தோழி

செவிலி ஆகியோரின் கூற்றுகளில் அறத்தொடு நிலையை விளக்கிய ஆசிரியர், வாழ்வியலைச் செயல் முறையில், பொருளியலில் விளக்குகிறார் எனலாம்"[47] எனச் சுட்டுவர் சரளா ராசகோபாலன்.

நொதுமலர் வரைவு, வெறியாட்டு இவற்றைத் தழுவியே அறத்தொடு நிற்றல் நிலை நிகழ்கின்றன. "அறத்தொடு நிற்றல் என்ற துறை களவைக் கற்பாக மாற்றுவதற்கான முயற்சியாகும். களவு, கற்பு என்னும் இரு கரைகளுக்கிடையே ஒரு பாலம் போல விளங்கும் இத்துறை அகத்திணைத் துறைகள் அனைத்திலும் சிறப்புடைத்து"[48] என உரைப்பர் இராம. பெரிய கருப்பன்.

அறத்தொடு நிற்றல் செயலின் மூலம் தலைவியின் அகவுணர்வு மிகுதியால் பெற்றோரிடம் கூற நினைத்தாலும் காதலினை ஏற்றுக்கொள்வார்களா? மாட்டார்களா? என்ற அச்சம் அகம்கொள்ளும். இதனை "அறத்தொடு நிற்றல் துறைப்பாடல்கள் தலைவி தனது காதலைத் தானே வெளியிடாத நாணத்தை வலியுறுத்துகின்றன. பெண்மையினை மாசுபடாமல் மிகப் பத்திரமாகப் பாதுகாக்கும் முயற்சியை நோக்கும்போது சரக்கு வண்டிகளில் கண்ணாடிப் பார்சலுக்கு வெளியே 'Glass – Handle with care' என்று எழுதப்பட்டிருப்பது நினைவுக்கு வருகிறது"[49] என்பர் நா. செயராமன்.

அறத்தொடு நிலை வலித்த தோழியைத் தலைவி முகம்புக்கது என்னும் துறையில்,

**"விழுந்த மாரிப் பெருந் தண் சாரல்,**
**கூதிர்க் கூதளத்து அலரி நாறும்,**
**மாதர் வண்டின் நயவரும் தீம் குரல்**
**மணம் நாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்**
**உயர் மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ -**
**துயர் மருங்கு அறியா அன்னைக்கு, "இந் நோய்**
**தணியுமாறு இது" என உரைத்தல் ஒன்றோ -**
**செய்யாய்: ஆதலின் கொடியை - தோழி-**
**மணி கெழு நெடு வரை அணி பெற நிவந்த**
**செயலை அம் தளிர் அன்ன, என்**
**மதன் இல் மா மெய்ப் பசலையும் கண்டே"[50]**

களவில் இடையூறு நிகழ்வதனாலும், தலைவன் வரைவிற்கு காலத்தாழ்த்துவதனாலும் அகவுணர்வின் வருத்தத்தினை தோழியிடம் கூறி, தமது நிலையினை அன்னையிடம் உரைக்க வேண்டுகின்றாள்.

அறத்தொடு நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் நிகழ்வுகளான, தலைவிக்குக் காப்பு மிகுதியிலும், வெறியாட்டு எடுக்கும் போதும், நொதுமலர் வரைவின் போதும், உடன்போக்கின் போதும் அறத்தொடு நிற்கும் செயலினை நிகழ்த்துகின்றாள். நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நிற்கின்றாள் தோழி,

**"இன்று யாண்டையனோ - தோழி - குன்றத்துப்**
**பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு**
**கண்அகன் தூமணி, பெறூஉம் நாடன்,**
**"அறிவு காழ்க் கொள்ளும் அளவை, செறிதொடி**
**எம்மில் வருகுவை நீ" எனப்**
**பொம்மல் ஓதி நீவியோனே?"[51]**

தலைவி, அறியாப் பருவத்தில் தனது கூந்தலினைத் தீண்டியவனையே, கற்பு வாழ்வின் தலைவனாக வரவேண்டுமென எண்ணுவதில் தவறில்லை. தலைவனும் அறிவு முதிர்ந்த அளவில் இல்லறம் நிகழ்த்த உரிமையுடையவன் எனவும், தலைவியும் கற்பைப் போற்றி வாழ்தலை அறமென எண்ணுக்கின்றாள் என அறத்தொடு நிற்கின்றாள்.

ஊரார் அலர்தூற்றுவதாலும் நொதுமலர் வரைவினாலும் தலைவியானவள் தனது கற்புக்குப்பங்கம் வருமோ? என அஞ்சினாள், உடல் மெலிந்தாள் தலைவியின் இந்நிலைக்கு காரணம் யாது? எனத் தோழியிடம் வினவினாள். செவிலி அதற்கானக் காரணத்தினை,

**"அன்னாய் வாழி வேண்டு அன்னை என் தோழி**
**நனி நாண் உடையள் நின்னும் அஞ்சும்**
**ஒலி வெள் அருவி ஓங்கு மலை நாடன்**
**மலர்ந்த மார்பிற் பாயல்**
**தவ நனி வெய்யள் நோகா, யானே"[52]**

தலைவி காளையொருவனைக் காதலித்துக் கற்புக்கடம் பூண்டாள். அவளால் காதலிக்கப்பட்டவனும் நமது குடும்பத்திற்கு ஏற்ற தகுதியுடையவன். ஆகவே அவனையன்றிப் பிறமணவாளனை மணக்கமாட்டாள் என உறுதிப்படக்கூறி அறத்தொடு நிற்கின்றாள் தோழி.

**அகவுணர்வால் களவை கற்பாக மாற்றதூண்டும் உடன்போக்கு**

உடன்போக்குத் துறையில் தோழி தலைவியிடம் கூறும் கூற்றாக 15 பாடல்கள் அமைந்துள்ளன. தோழி தலைவியிடம் உடன்போக்கு மேற்கொள்வதன் அவசியத்தைக் குறிப்பிடுகின்றாள். உடன்போக்கிற்கு தலைவியின் உள்ளத்தில் அச்சம் சூழ்ந்தாலும், கற்பொழுக்கத்தினை மனத்தில் கொண்டு ஒப்புக் கொள்கின்றாள். "உடன் போக்கினைத் தலைவன் எளிதாக நாடுவதில்லை! கிடைத்தற்கரிய களவுப் புணர்ச்சி என்னும் துணிவுப் புணர்ச்சியைச் சில நாளில் முடித்துக் கொள்ள விழைவதில்லை. களவினிற் பலநாள் ஒழுகி இன்புற்ற பின்னரே, இயல்புப் புணர்ச்சி என்னும் வரைவுப் புணர்ச்சியை மேற்கொள்வான் (ஐங். 6) தோழியின் மனப்பாங்கு வேறு தலைவன் தலைவி இருவர்தம் உள்ளோட்டங்களையும் ஊரின் புறவோட்டங்களையும் கணித்தறிந்த தோழி இனிக் களவு நீளாது, ஊரலர் தாங்காது, பெற்றோர்க்கும் உணர்த்த இயலாது, உடன்போக்கே வழி எனக் காதலரை நெறிப்படுத்துவாள்"[53] என உரைப்பர் வ.சுப. மாணிக்கம்.

உடன்போக்கிற்கானக் காரணங்களை,

> **"ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்**
> **பிரித லச்சம் உண்மை யானும்**
> **அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று**
> **அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்**
> **நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**
> **போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்"[54]**

தான் எடுக்கும் முடிவு சரியானதா? தவறானதா? எனத் தலைவியின் அகவுணர்வில் குழப்பம் ஏற்படும். இதன் விளைவாக உடன்போதற்குறிப்பும், வரைந்து கொள்ளும் குறிப்பும் தோன்றும் என்பர் தொல்காப்பியர்.

தலைவி, தலைவன் இருவரும் உடன்போக்கில் சென்றாலும் ஊரார் தலைவியின் அன்னையே தூற்றுவர். மகள் தவறு செய்தாள் தாயைச் சுட்டி மகளைச் சுட்டுவதுதான் நம் சமுதாய மரபாக உள்ளக் கருத்தினை உடன்போக்குத் துறையமைந்த பாடல்களைத் தொகுத்து நோக்கின் புலனாகும்.

உடன்போக்கு நேர்ந்த தோழி, கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியதை,

**"ஊஉர் அலர் எழ, சேரி கல்லென,**
**ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை**
**தானே இருக்க, தன்மனை யானே,**
**நெல்லி தின்ற முள்எயிறு தயங்க**
**உணல் ஆய்ந்திசினால், அவரொடு - சேய்நாட்டு,**
**விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅன்,**
**கரும்புநடு பாத்தி அன்ன,**
**பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே"**[55]

எனப்பாடுவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

தலைமக்களின் களவொழுக்கம் ஊராரும், சேரியில் உள்ளாரும் அலர் தூற்றினர். இதனை அறிந்த தாய் தலைவியை இல்லத்தில் இற்செறித்தாள். தடைகளைத் தாய் விதித்தாலும் அகவுணர்வு மிகுதியால் காமம் பெருகியவழி, உடன்போக்கில் துணிந்தாள். தாயானவள் தலைவியில்லாத இல்லத்தில் தனித்தே மகிழ்வில்லாமல் நோகட்டும் என தோழி, தாயை அறனில்லாதவள் என சாடுகின்றாள்.

ஊரில் உள்ளோர் தாயினை வன்சொல்லால் வஞ்சித்தாலும் தாயானவள் என்றுமே அன்புள்ளம் நிறைந்தவளாகவும், தலைவியின் செயலினை அறம் என்றே போற்றுகின்றாள்.

**"மள்ளர் கொட்டின் மஞ்ஞை ஆலும்**
**உயர் நெடுங் குன்றம் படு மழை தலைஇச்**
**சுரம் நனி இனிய ஆகுகதில்ல -**
**"அறநெறி இது" எனத் தெளிந்த என்**
**பிறை நுதற் குறுமகள் போகிய சுரனே"**[56]

தலைவன் கூறிய வழியே செல்வது அறமெனக் கருதியத் தலைவியின் செயலும் 'அறநெறி இது எனத் தெளிந்தவள்' எனப் பாராட்டுகின்றாள் அன்னை.

தலைவன், தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லும் பொழுது, தலைவியின் சுற்றத்தார் ஒன்றுக் கூடி தலைவனைத் தடுப்பர். அப்பொழுது தலைவி தன் அகவுணர்வு மிகுதியினால் பிறந்தது முதல் உடனிருந்து சுற்றத்தாரையும் விடுத்து காதலனையேச் சார்ந்து நிற்பாள். தலைவியின் செயலினைக் கண்ட சுற்றத்தார் தலைவியின் இம்முடிவானது அறநெறிப்பட்டதே எனக் கருதி யாதொரு இடையூறும் விளைவிக்காமல் விலகி தம் ஊர் நோக்கி மீள்வர்.

இதனை,

> **"இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்**
> **கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்**
> **கற்பொடு புணர்ந்த கௌவை"[57]**

என உரைப்பர் தொல்காப்பியர். "இடைச்சுரம் மருங்கின் அவள் தமர் எய்திக் கடைக்கொண்டு பெயர்தலில் கலங்கு அஞர் எய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட அப்பால் பட்ட ஒரு திறத்தானம் என்பது, தலைமகள் செல்கின்ற இடைச் சுரத்திடைத் தலைமகள் தமர் எய்தி மீட்டுக் கொண்டு பெயர்தல் மரபாதலின் அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த அலர் உளப்பட"[58] என உரைப்பர் இளம்பூரணர்.

தலைவன், தலைவியிடம் இவ்வொழுக்கமானது, உடன்போக்கானது பழமையான உலகியல் வழக்கம் எனக் கூறி அவளைத் தெருட்டியும், இளைப்புத்தீர மருட்டியும் உடன்கொண்டு தனது இல்லம் அழைத்து சென்று வதுவை மணம் புரிந்து கொள்வான். இவ்வாறு களவுப்புணர்ச்சியில் தமது அகவுணர்வு மிகுதியால் உடன் கொண்டுச் செல்லுதல் பண்டைய தமிழ் சமூகத்தில் வழக்கமாகவே இருந்ததனைப் புலவர்கள் அறத்தொடு நிற்றல் துறையின் மூலம் அறியலாம்.

**நற்றாயின் உணர்வு**

தலைவியின் உடன்போக்குக் காலத்தில் மக்கட்போக்கிய தாய் புலம்பல் எனும் துறையில்

**"வேம்பின் ஒண் பழம் முணைஇ, இருப்பைத்
தேம் பால் செற்ற தீம் பழம் நசைஇ,
வைகு பனி உழந்த வாவல், சினைதொறும்,
நெய் தோய் திரியின் தண் சிதர் உறைப்ப,
நாட் சுரம் உழந்த வாள் கேழ் ஏற்றையொடு
பொரு யானைப் புட் தாள் ஏய்ப்ப,
பிசிப் பிடி உதைத்த ஓமைச் செவ் அரை
வெயில் காய் அமையத்து இமைக்கும் அத்தத்து,
அதர் உழந்து அசையினகொல்லோ"**[59]

எனப் பாடுவர் கயமனார்.

வெளவால்கள் மீது நெய்தோய்ந்த திரிச்சுடர் வீழ்வது போலப் பனித்துளிகள் வீழுகின்றப் பருவத்தில் தலைவி உடன்போக்கை மேற்கொண்டு சுரம் வழியே சென்றாள். கொடுமையானக் காட்டுவழியில் செல்லும் தலைவியின் மெல்லடி நோகுமே? எனத் தாய் உள்ளுணர்வு வருத்தம் கொள்கின்றன.

**"''அருஞ்சுரம் இறந்த என் பெருந்தோட் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வரும்'' என, தாயே,
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி,
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்து, இனிது அயரும் என்ப: யானும்,
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற்கு அருளான் ஆயினும்,
இன்நகை முறுவல் ஏழையைப் பல்நாள்,
கூந்தல் வாரி, நுசுப்பு இவர்ந்து, ஓம்பிய
நலம்புனை உதவியும் உடையன் மன்னே"**[60]

உடன்போக்குச் சென்ற தலைவி தன் தலைவனுடன் நிச்சயம் திரும்பி வருவாள் என தனது அன்புணர்வினால் வீட்டினை அழகுப்படுத்தி நம்பிக்கையை புலப்படுத்தியுள்ளாள் நற்றாய்.

**செவிலித்தாயின் உணர்வு**

மக்கட்போக்கிய செவிலி வருந்திக் கூறுவதனை,

**"புன்தலை மன்றத்து அம்குடிச் சீறூர்,
துணையொடு துச்சில் இருக்கும் கொல்லோ?**

**கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளையொடு**
**எல்லி முன்னுறச் செல்லும் கொல்லோ?**
**எவ்வினை செயுங்கொல்? நோகோ யானே்-**
**அரிசெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,**
**யாய்அறி வுறுதல் அஞ்சி**
**வேய்உயர் பிறங்கல் மலைஇறந் தோளே"[61]**

எனப் பாடுவர் கயமனார்.

தலைவி செல்லும் வழியில் சிற்றூரில் உள்ள குடியிருப்பில் தங்கி விடுவாளோ? அன்றி அவ்விரலில், அம்பையுடைய ஆறலைக் கள்வர்க்கு அஞ்சாத வீரமிக்க காளையாகிய தன் தலைவனுடன் முன்நடந்துச் செல்வாளோ? என மனத்துயரத்தினை வெளிப்படுத்துகின்றாள்.

**"ஞாயிறு காணாத மாண்நிழற் படீஇய**
**மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்,**
**தண்மழை தலைய வாகுக - நம்நீத்துச்**
**சுடர்வாய் நெடுவேற் காளையொடு**
**மடமா அரிவை போகிய சுரனே"[62]**

தலைவியின் உடன்போக்கினை அறிந்த செவிலி தெய்வத்தை வணங்குகின்றாள். தலைவி செல்லும் வழியில் கதிரவன் தன்னுடைய கதிர்களைச் சினம் தணிந்து வழங்குதல் வேண்டும் என்றும், மரங்கள் தழைத்து நிழலினைத் தரவேண்டுமென்றும் செல்லும் தொலைவானது நெடுமையாக இல்லாமல் சிறுமையுடையதாக அமைதல் வேண்டுமென்றும், செல்லும் வழியில் நீர் அருந்தி இனிது செல்ல வேண்டும் என்றும் தெய்வத்திடம் வழிபட்டாள். சுரவழியில் நெடுவேல் காளையுடன் செல்வதால், ஆறலைக் கள்வரால் தனது மகளுக்கு அச்சம் தோன்றாது எனவும், எண்ணுகின்றாள் செவிலி.

**காதலை அறமென கருதிய கண்டோர்:**

கண்டோர் கூற்றமைந்தப் பாடல்கள் பாலைத்திணையில் இடம் பெறுகின்றன. உடன்போக்கில் தலைமக்கள் வருந்துவதைக் கண்டு கண்டோர் கூற்று நிகழும் இடங்களாகும் என்பதனை,

**"பொழுது மாறும் உட்குவரத் தோன்றி**
**வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்**
**ஊரது சார்பும் செல்லுந் தேயமும்**
**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்**
**புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு**
**அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்**
**தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்**
**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**
**கண்டோர் மொழிதல் கண்டது என்ப"**[63]

என உரைப்பர் தொல்காப்பியர். "பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலும் ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் என்பது, காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றி வழுவுதலினாகிய குற்றம் காட்டலும் ஊரது அணிமையும் செல்லும் தேயத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய பக்கத்தினும்"[64] என உரைவகுப்பர் இளம்பூரணர்.

புணர்ந்துடன் போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது செலவும், பகையும் காட்டிச் செலவு விலக்கியதை,

**"எல்லும் எல்லின்று் பாடும் கேளாய் -**
**செல்லாதீமோ, சிறுபிடி துணையே -**
**வேற்றுமுனை வெம்மையின், சாத்துவந்து இறுத்தென,**
**வளைஅணி நெடுவேல் ஏந்தி**
**மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே"**[65]

எனப் பாடுவர் உறையூர் முதுகொற்றன்.

உடன்போக்கில் சென்ற தலைவன், தலைவியின் நலன்கருதி இரவுப் பயணத்தைத் தவிர்க்க என உரைத்ததிலிருந்து காதலைச் சமுதாயம் ஏற்றுக்கொண்டதனை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இடைச்சுரத்துக் கண்டார் தம்முள்ளே சொல்லியதை,

**"இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்**
**புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்,**
**காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,**

**ஏதில் சிறுசெரு உறுப மன்னோர்**
**நல்லை மன்றம்ம பாலே - மெல் இயல்**
**துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்**
**மணம் மகிழ் இயற்கை காட்டியோயே"[66]**

எனப் பாடுவர் மோதாசனார்.

தலைவனும், தலைவியும் நல்லூழின் பயனால் இணைந்தனர் எனவும் இருவரும் இணைவதற்குக் காரணமாய் இருந்த ஊழ்வினையை வாழ்த்தினர்.

**"பைங் காய் நெல்லி பல உடன் மிசைந்து,**
**செங் கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்**
**யார் கொல், அளியர் தாமே - வார் சிறைக்**
**குறுங் கால் மகன்றில் அன்ன**
**உடன்புணர் கொள்கைக் காதலோரே?"[67]**

எனப் பாடுவர் ஓதலாந்தையார்.

தலைமக்களைக் கண்டோர் இருவரின் நெருக்கத்தினை வியந்தும், மகன்றிற் பறவைகள் துணைபுரிந்து வாழாதனவாதலின் இணைபிரியாக் காதலர்களாய் இருந்தனர் எனவும்,

**"புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள், வெள்வேல்**
**திருந்து கழற் காளையொடு அருஞ் சுரம் கழிவோள்,**
**எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்**
**புனை இழை மகளிர்ப் பயந்த**
**மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே"[68]**

மனைகெழு பெண்டிர்க்குப் பெண்ணை வளர்த்து ஆளாக்கி, தக்க பருவத்தில் திருமணம் செய்து கொடுக்கும் கடமைச் சுமை உண்டென்பதனால் சமூகத்தில் பெண் பிள்ளையைப் பெற்றெடுத்தவர்களுக்கு கவலை இயல்பாகவே உள்ளதென்பதும் இப்பாடலின்வழி அறியப்பெற்றதாகும்.

தாம் வளர்த்த பெண், அயலான் ஒருவனோடு சென்றதனை அறிந்தால் பெற்றவள் அடையும் துயரம் பெரிதே என இரங்கினர். உடன்போக்கின் காரணமாக ஏற்படும் துயரானது தந்தையைவிட தாயே மிகவும் வருந்துவாள்.

உடன்போக்கிற்கு இருந்த சமுதாய ஏற்பையும் மேற்கண்ட பாடல்கள் வெளிப்படுத்துவதாக உள்ளன. மேலும் காதலுக்கான எதிர்ப்பு இருந்ததையும் அம்பல், அலர் போன்ற ஊரார் பேச்சுகள் இருந்ததென்பதையும், பாடல்கள் உணர்த்துகின்றன. இருப்பினும், சமூகத்தில் தாய், தந்தையர் காதலை அறமாக ஏற்றுக்கொண்ட நிலையினை,

**"எந்தையும் யாயும் உணரக் காட்டி,**
**ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்,**
**மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப,**
**நன்றுபுரி கொள்கையின் ஒன்றாகின்றே-**
**முடங்கல் இறைய தூங்கணங் குரீஇ,**
**நீடு இரும் பெண்ணைத் தொடுத்த**
**கூடினும் மயங்கிய மையல் ஊரே"[69]**

எனப் பாடுவர் உறையூர்ப் பல்காயனார்.

தலைமக்களின் காதலை தோழி அறத்தொடு நின்றமையால், வரைவிற்கு பெற்றோர் நேர்ந்தனர் என்றும், அதனால் ஊரில் அலர் அடங்கியது என்பதும் புலனாகின்றன. இப்பாடலின்வழி காதலைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டது புலனாகின்றது. களவு வாழ்வில் தலைவனின் அகவுணர்வு பாடல்களைவிட, தலைவியின் அகவுணர்வு பாடல்களே அதிகம் புலவர்கள் பாடியுள்ளனர்.

**கற்பு வாழ்வில் தலைவன், தலைவியின் அகவுணர்வு**

மக்களின் உணர்ச்சிகளில் மிகச்சிறப்பானது காதல். இவ்வுணர்வு உலகம் தழைக்க உதவும் அருமருந்தாகும். தலைவனும், தலைவியும் உண்மையான காதல் வாழ்வின் நிறைவுப் பகுதியே குடும்பம் ஆகும். காதல் திருமண வாழ்விற்கு அடித்தளமாகின்றன. காதல் மேற்கொள்ளும் தலைவன், தலைவியின் களவு வாழ்வில் பிறவிப் பயனாகக் கருதுவதே குடும்ப வாழ்வினையே எனில் மினையாகாது. இல்லறம் என்பது இருஉள்ளங்கள் இணையும் நல்லறமாகக் கருதப்படுகின்றன.

கொள்ளு முறையையுடைய தலைவன், தலைவியைக் கொடுக்கும் முறையையுடைய பெற்றோர் கொடுப்பக் கொள்வது கரணம் எனப்படும். இதுவே

கற்பு வாழ்வாகும். "மணவினைக்குக் காரணமாக விளங்குவது கரணம்"[70] என்பர் இளம்பூரணர்.

கரணத்தினை "வேள்விச் சடங்கு"[71] என்பர் நச்சினார்க்கினியர்.

தலைவன், தலைவிக்கு கொடுத்த இல்லற உரிமை நிலையானது என்பதனை,

**"உரிமை கொடுத்த கிழவனும், பாங்கின்**
**பெருமையில் திரியா வன்பின் கண்ணும்"[72]**

என உரைப்பர் தொல்காப்பியர். தலைவன், தலைவிக்கு இல்லறத்தில் சமமான உரிமையுடையவர்கள் என்பதே இந்நூற்பாவின் கருத்தாகும்.

"கரணத்தில் அமைந்து முடிந்த காலை, நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சி (1091) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ஒழுக்க நெறிக்குப் புறம்பாக வரைந்த உரையை வன்மையாக மறுத்துள்ளார் (92). இதற்குப் பலர் அறிய மணச்சடங்கு முடிந்த பின்னர், அன்பு நெஞ்சங்களைப் பிணித்திருந்த தளைகள் தாமே அவிழ்ந்தன. காதலர்கள் கட்டற்ற கலவியின்பம் கற்பில் துய்க்கின்றனர் என்பது பொருள்"[73] என உரைப்பர் இரா. சாரங்கபாணி.

திருமணத்தின் மூலம் தலைமக்களிடையே இருந்த கட்டுப்பாடு தகர்த்தப்படுகின்றன. மனதில் உள்ள அச்சவுணர்வு அகற்றப்பட்டு கடமையுணர்வு அதிகமாகின்றன.

"திருமணத்தின் மூலம் பிணைக்கப்பட்டு, ஒரு குடியிருப்பினில் கணவன், மனைவி, தாய், தந்தை மகன், மகள், தம்பி, தங்கை போன்ற உறவு முறைகளுடன் பொதுப்பண்பைப் படைத்தும், பாதுகாத்தும் வளர்ச்சியுறுவதே குடும்பம்"[74] என கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது.

"குடும்பம் அதன் உறுப்பினர்களுக்குப் பொதுவான உறைவிடத்தை அளிக்கின்ற ஓர் உயிரின மூல அலகுக் குழுவாகும். இது கணவன் மனைவியரிடையே நிறுவப்பட்ட பாலின உறவும் புணர்ச்சியும் ஏற்பட வழி வகுக்கிறது. அதன் உறுப்பினர்களிடையே காணப்படுகின்ற ஒரு நெருக்கமும்

பற்றும் பாசமுந்தான் அதனுடைய இயல்பான ஒற்றுமைக்கும் கூட்டச் செயலுக்கும் அடித்தளமாக அமைகின்றன”[75] எனச் சுட்டுவர் பாஸ்கல் கிஸ்பர்ட்.

சங்க இலக்கியத்தின் மையக் கருத்தாக அமைவது அன்பின் மூலம் இணையும் இல்லற வாழ்வாகும். “மனித நாகரிகத்தின் விழுமிய அடையாளம் குடும்பம் என்ற நிறுவனம். குருதி வழி உறவினர் சேர்ந்து வாழ்தலும் கூட்டுறவு முறையில் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுதலும் குடும்பம் என்ற நிறுவனத்தின் செயற்பாடுகள்”[76] என விக்டர் பர்னோ கருத்தை கு.வெ. பாலசுப்ரமணியன் மேற்கோளாகச் சுட்டுவர்.

தனிமனிதனாக இருந்த ஒருவனோ, ஒருத்தியோ ஊழ்வினையால் ஒன்றுப்பட்டு காதல் வயப்பட்டு பல்வேறு விதமான அகவுணர்வு எண்ணங்கள் மனதில் மலர்ந்து மனையறம் என்ற இல்வாழ்க்கையின் வழி இளம்தளிர் பிறப்பதினால் அன்புமிகும் என்பதனை,

**“புதல்வற் கவைஇயினன் தந்தை மென் மொழிப்**
**புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்**
**இனிதுமன்ற அவர் கிடக்கை**
**நுனி இரும் பரப்பின் இவ் உலகுடன் உறுமே”[77]**

என இல்லற இனியக் காட்சியைப் பாடுவர் பேயனார்.

மகனை அணைத்து தந்தையிருக்க, அவ்விருவரையும் அணைத்து தலைவியிருக்க என உலக மக்களின் இன்பத்தினை வெளிப்படுத்துவதாகப் புலவர் பேயனார் பாடியுள்ளார். மகன் மீது தந்தைக்கொண்டிருந்த அன்பையும், மகன், கணவன் இருவர்மீதும் அன்னைக் கொண்டிருந்த பேரன்பையும் இக்காட்சிப் புலப்படுத்துகின்றன. இல்லறத்தின் புதல்வனைப் பெற்ற வாழ்வானது முழுமதி வாழ்வாகவும், புதல்வனைப் பெறாத வாழ்வானது பிறைவாழ்வாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தலைவியின் உள்ளம் மலர்ந்ததனை,

**“முளிதயிர், பிசைந்த காந்தன் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ,**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**

**தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிது எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"[78]**

எனப் பாடுவார் கூடலூர் கிழார். தலைவியானவள் சமையலில், சமையல் பொருட்களை மட்டும் கலந்த உணவு தயாரிக்கவில்லை. தன் அன்பினைக் கலந்து சமையலை தயார் செய்தமையால், கணவன் உண்டபின் இனிது எனக் கூறியப்பின் தலைவியின் முகம் நுட்பமாய்ச் சற்றே சிறுமொட்டவில்வது போன்று மகிழ்ந்தது. ஆனால் உள்ளமோ பூக்கள் பூத்துக் காற்றில் குலுங்கியது போல இருந்து என்று இல்லறப் பெண்களின் நிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் புலவர்.

சமுதாயத்தில் குடும்பம் என்பதனை, ஒரு சுற்று வட்டம் அமைத்து, ஆண்,பெண் குழந்தைகள் என்ற அடிப்படையில், தாய், தந்தை, மக்கள், உறவினர் என வளர்ச்சியுற்று குடும்பம் என்ற அமைப்பு உருவாகின்றன. இவ்வமைப்பு தனித்தனிக் குடும்பங்களாக வளர்ச்சியடைந்து சமூகமாக உருபெறுகின்றன.

"இரண்டு அல்லது மேற்பட்ட மனிதர் இருவர் இருப்பதை மற்றவர் உணர்ந்து தங்களுக்கு இடையே பொதுவான ஏதோ ஒன்று இருப்பதையும் அறிந்து பரிமாறிக் கொள்ளும் தொடர்பே சமூகத் தொடர்பு ஆகும். இந்த மனிதத் தொடர்பே ஆண்-பெண் தொடர்பாகவும், குடும்பமாகவும், குடும்பங்களாகவும், சொந்தமாகவும் பரிணமிக்கிறது. தெரு, ஊர், வட்டம், மாவட்டம், நாடு, உலகம் என்று விரிவடைகிறது"[79] என தாயம்மாள் அறவாணன் உரைப்பதும்,

"மானுட வாழ்க்கை இருவகை அமைப்புகளைக் கொண்ட ஒரு முழுப் பொருண்மை; புறத்தே தோன்றும் ஒவ்வொரு வகையான வாழ்க்கை நிலைக்கும் அடிப்படையான அக அமைப்பு ஒன்று உண்டு. புற அமைப்பின் செயற்பாடு, அக அமைப்பின் வெளிப்பாடு தானே தவிர, தன்னிச்சையாக இயங்க வல்லதன்று. இப்புற வெளிப்பாடும் அவ்வப்போது மாறி இயங்கும் கால தேச, நடைமுறைகளுக்கு ஏற்ப அக அமைப்பின் கூறுகளை மாற்றி அமைக்கும் இயல்பினது. இவ்வாறு அக அமைப்புக்கும் புற வெளிப்பாட்டிற்கும் இடையில் தோன்றும் வேறுபாட்டிற்கும் இடையில் தோன்றும் வேறுபாடுகளின் தொடர்ச்சியே வரலாறாகப் பரிணமிக்கிறது"[80] என அ.அ. மணவாளன் உரைப்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

புறஅமைப்பின் செயல்பாடினை, அகஅமைப்பின் வெளிப்பாடாக தனிப்பட்ட தமிழர் நாகரிகமாக அடையாளங்காட்டும் சான்றுகளாக நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை பாடல்கள் அமைந்துள்ளன. இல்லறத்தில் பொருள் இன்மையால் வறுமை இருப்பினும், அன்புணர்வினால் வாழ்க்கையை உயரிய வாழ்வாகக் கருதினர். உள்ளத்தாலும், மெய்யாலும் ஒன்றிணைந்த வாழ்வின் அருமையை,

**"ஒன்றன் கூறுஆடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"**[81]

எனப் பாடுவர் பெருங்கடுங்கோ. இல்லற வாழ்விற்கு அகவுணர்வின் தோன்றும் இளமையின் சிறப்பும், காமத்தின் பெருமையும் அறிய முடிகிறது. சமூகத்தில் வறுமை நிறைந்த வாழ்வினை வாழ்ந்தாலும் காதற்சிறப்பே சிறந்தது என்பதே தலைமக்களின் எண்ணம் என்பது புலனாகிறது. ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் உயிர் போன்றவர்களாகக் கருதப்படுகின்றனர். காதல் உணர்வும், காமவுணர்வும் இரண்டும் ஒன்றேயென புலவர் மருதனிளநாகனாரின் அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றன.

**"காதல் மாறாக் காமர் புணர்ச்சி"**[82]

மெய்காமத்தினைக் குறிக்கவில்லை. உண்மைக் காதலைக் குறிக்கின்றன. இதன்வழித் தோன்றும் இல்லறத்தில் தலைவனை அன்பானவனாகவும், இனியவனாகவும் படைத்துக் காட்டுகின்றார் புலவர்,

**"தவச் சேய் நாட்டர் ஆயினும், மிகப்பேர்**
**அன்பினர் . . . . . . . ."**[83]

தலைவனிடம் அன்புணர்வு மிகுதி வெளிப்படுகிறது. மேலும், குறுந்தொகைத் தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியதாக உள்ள பாடலில்,

**"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்,**
**அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்,**
**இரண்டும் தூக்கின் சீர் சாலாவே -**
**பூப்போல் உண்கண் பொன்போல் மேனி,**
**மாண்வரி அல்குல், குறுமகள்**
**தோள்மாறு படூஉம் வைகலொடு எமக்கே"**[84]

தலைவனுக்கு இவ்வுலகில் நுகரும் இன்பமும் தவமும், துறவறமும் என இவற்றின்மூலம் கிடைக்கும் புத்தேள் உலக இன்பமும் வேண்டாமாம். தலைவியோடு வாழும் இன்ப வாழ்க்கையே (இல்லறவாழ்வு) உயர்வான வாழ்வாகக் கருதும் தலைவனின் அகவுணர்வினைப் படைத்துள்ளார்.

"கணவன் மனைவி உறவு என்பது எப்பிறவியிலும், பிரிக்க முடியாதது என்று கூறும் கருத்துத் தமிழர்களுடையதே ஆகும். இதனால் அன்பகலாத இல்லறமும், ஒழுக்கங்குன்றாத வாழ்க்கையும் அமைய ஓர் அடித்தளம் அமைக்கப்பட்டது. பன் மனைவியர் மணம், பரத்தையிற் பிரிவு என்பனவெல்லாம் மிக அரிதாகச் சிற்சிலரிடையே தோன்றியனவே. இலக்கியச் சுவையின் பொருட்டு இவை பல பரிமாணங்களில் புலவர்களால் சொற்சிற்பமாக்கப் பெற்றன"[85] என உரைப்பர் உ.வே.சாமிநாதையர்.

மனிதன் முதலில் தனித்து தனிமனிதன் என்ற நிலையிலும், மனைவி, மக்கள், என்ற நிலையில் குடும்ப மனிதனாகவும், மக்களின் தன்கடமையாற்றுவதில் சமூக மனிதனாகவும் என்ற மூவகையிலும் சிறந்து நிற்பதே முழுமையான ஆளுமை வளர்ச்சியாகும்.

பெற்றோரின் கடமைகளை,

**"ஈன்றுபுறந் தருதல் என்தலைக்கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"[86]**

எனப் பாடுவர் பொன்முடியார்.

சமூகத்திற்கு வீரர்கள் அவசியமாதலின் ஆண்மக்களைப் பெற்றெடுத்துத் தருதல் பெண்டிரின் கடமை எனவும், மகனைக் கோழையாய் அன்றி வீரனாய் வளர்த்தல் தந்தையின் கடமை என பெற்றோரின் பொறுப்புகளை வரையறுத்துள்ளார்.

பகைவரும் விரும்பும் வண்ணம் பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் பெற்றோருக்கும் புகழ் என்பதனை

**"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மறு இன்று எய்துப,**

**செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சிச்**
**சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்**
**பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**
**வாயே ஆகுதல் வாய்த்தனம்"[87]**

எனப் பாடுவர் செல்லூர்க் கோசிகன் கண்ணனார்.

புதல்வனை உலகில் உள்ளோர் பழிக்காமல், தலைமைப்பண்போடும், பகைவரும் விரும்பும் உணர்வுடன் வளர்ப்பதனால் இச்சமூகத்தில் பெற்றோர் புகழோடும், பெருமிதத்தோடும் வாழ்வர். "குடிமையின் சிறப்பே குடிமகனின் சிறப்பு" என்ற பழமொழி இக்கருத்திற்கு அரண் செய்கின்றன.

அன்புணர்வு மனிதர்களிடம் மட்டும் காணப்படுவதில்லை. உலகவாழ் உயிரினங்கள் அனைத்திற்கும் உண்டு என்பதனை,

**"கணைஇடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளி,**
**குறுநெடுந் துணைய மறிபுடை ஆட,**
**புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை**
**மேய்பதம் மறுத்த சிறுமையொடு, நோய்கூர்ந்து,**
**நெய்தல்அம் படுவில் சில்நீர் உண்ணாது"[88]**

எனப் பாடுவர் எயினந்தை மகன் இளங்கீரனார்.

மான்கள் அன்பின் மகிழ்ச்சியில் திளைத்திருந்த பொழுது, மறவன் எய்திய அம்பினால் பெண்மான் இறந்து விட்டது. ஆழ்ந்த துயரத்தில் வாடிய ஆண்மான் புல்லினையும் மேயவில்லை, நீரினையும் பருகவில்லை. நடக்கவும் சக்தியின்றி உள்ளத்தால் வேதனையுற்றது. கைம்மைப்பட்ட இவ்வாண்மான் தாமும் மடிந்து விடலாமா? என்ற எண்ணம் தோன்றியது. இருப்பினும் தன் குட்டிகளை காப்பாற்ற வேண்டுமென்ற கடமையுணர்வால் மடியவில்லை.

தமிழர்களின் நாகரிகம் நின்று நிலைத்தற்கு முதன்மைக் காரணமாக அமைவது வாழ்வறம் பிறழாத இன்ப உணர்வே ஆகும். இன்ப உணர்வானது இயற்கையே. மனிதன் தனது கடமை தவறாத வாழ்வையும், சிறப்பான இன்ப உணர்வையும் இணைத்து வாழ்ந்த வாழ்க்கையே தமிழர் நாகரிகத்தை இன்றும் நிலைக்கச் செய்கின்றன.

தலைவன், தலைவியின் ஒருவர் மற்றொருவரின் காதல் விருப்பித்தினை நன்கு புரிந்துக் கொள்ளவேண்டும். இருவரிடையேயும் அன்பில் குறைவு ஏற்படக்கூடாதெனில் ஒளிவு, மறைவின்றி வாழ்வினை வாழ வேண்டும். ஊடல் இருப்பினும் உண்மை குறையக்கூடாது. குடும்பப் பொறுப்பு தலைவியுடையது. தலைவன் கடமைதவறும்பொழுது, திருத்தும் பொறுப்பும் தலைவியுடையது. இருவரிடையே பூசல்கள் அதிகரிக்குமானாலும், அதனை சான்றோர்களின் துணைக் கொண்டும், பெற்றோர்களின் துணைக்கொண்டும் அன்பில் குறைவு இல்லாமல் வாழ வேண்டும்.

**பரத்தமையை ஏற்கும் உணர்வு**

தலைவன், தலைவியின் தமது வாழ்வில் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்தாலும் ஒரு குறையாகவே பரத்தமை ஒழுக்கம் அமைந்திருப்பதனைச் சான்றோர்கள் சான்றுக் காட்டி விளக்கியுள்ளனர்.

இவ்வொழுக்கத்தினை,

**"கொடுமை ஒழுக்கம்"**[89]

என்றும்

**"அடங்கா ஒழுக்கம்"**[90]

என்றும்

**"பேணா ஒழுக்கம்"**[91]

எனத் தொல்காப்பியர் சுட்டுவதிலிருந்து சமூக அறவாழ்விற்கு இழுக்கானது என்பது புலனாகின்றன.

சமுதாயத்தில் பெண்களுக்கு மட்டும் கற்பொழுக்கத்தை உரைக்கும் ஆண்கள், தாம் மட்டும் கற்பினை கடைப்பிடிப்பதில்லை. தலைவன், தலைவியின் கற்பு வாழ்வானது முதலில் இன்பத்தையும், தலைவனின் கீழ்த்தரமான பரத்தமையொழுக்கத்தினால் இன்ப வாழ்வில் மகிழ்வு குறைகிறது என்பதனை "சங்க இலக்கியத்தில் காதலுறவுச் செய்கைகள், மகிழ்வில் தொடங்குகின்றன. மெல்ல மெல்ல அம்மகிழ்வு குறைகிறது. அது வாழ்க்கையில் போராட்டங்கள் நிகழ்வதை அடிப்படையாகக் கொண்டு முடிகின்றது. இப்போராட்ட முதிர்வே பரத்தையிற் பிரிவு எனலாம்"[92] எனச் சுட்டுவர் சரளா ராசகோபாலன்.

தலைவனின் பரத்தமையொழுத்தினை கைவிடும் பொருட்டு ஊடல் நிகழ்த்துகின்றாள் தலைவி. பரத்தமை ஒழுக்கம் ஊரிப்போனச் சமூகத்தில் தலைவியின் சொல்லிற்கு மதிப்பில்லாமல் தலைவன் பொய்யுரைத்தும் மீண்டும் பரத்தமை ஒழுக்கத்தினை மேற்கொள்வதனைப் புலவர்கள் உரைத்துள்ளனர். இவை ஆணாதிக்கச் சமூகத்தின் வெளிப்படாக இருந்துள்ளன.

ஆண்களிடம் தொடர்ந்து நீடித்த இப்பரத்தமை ஒழுக்கம் பெண்களினால் மிகவும் வெறுக்கப்பட்டிருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டும் பெண்கள் இருந்தமையை,

**"கைவினை மாக்கள் தம்செய்வினை முடிமார்,**
**கரும்புஉண மலர்ந்த வாசம் கீழ்ப்பட,**
**நீடிய வரம்பின் வாடிய விடினும்,**
**"கொடியோர் நிலம்பெயர்ந்து உறைவேம்" என்னாது,**
**பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்**
**நின்ஊர் நெய்தல் அனையேம் - பெரும்**
**நீ எமக்கு இன்னாதனபல செய்யினும்,**
**நின்இன்று அமைதல் வல்லாமாறே"[93]**

எனப் பாடுவர் புலவர்.

தலைவியை, தலைவன் பேணாமல் கைவிட்டாலும், பரத்தையரை பேணுதல், வழிபடுதலென இன்னாதச் செயல்களைச் செய்தாலும், நின்னையின்றி உயிர் வாழ்தலில் வலிமையில்லாதவளாக இருக்கின்றேன் என்பதிலிருந்து பொருளாதாரத்தில் ஆதாரமாக இருந்த ஆணைவிட்டு விலகமுடியாத பெண்களின் உணர்வினை எடுத்துரைக்கின்றது. இக்கருத்தினை வலியுறுத்தும் நிலையில் "பெண்கள் தனித்துத் தொழில் செய்வதற்கு உரிமைகள் வழங்கப்படவில்லை. அவ்வுரிமை ஆணுக்கு மட்டுமே இருந்தது. 'வினையே ஆடவர்க்கு உயிர்'; பெண்களுக்குக் கணவன்தான் உயிர் என்று கற்பிக்கப்பட்டது. ஆகவே, பெண்கள் கணவனின் நிழலில் வாழ்ந்தனர்; கணவன் விருப்பு வெறுப்புகளை ஒட்டியே மனைவி நடந்துகொள்ளும் நிலையே அக்காலத்தில் இருந்தது"[94] என உரைப்பர் அ. பாண்டுரங்கன்.

பரத்தமை ஏற்றுக் கொண்ட சமுதாயத்தினை,

**". . . . . . . . . . . . . . அவனே**
**"நெடு நீர்ப் பொய்கை நடு நாள் எய்தி,**
**தண் கமழ் புதுமலர் ஊதும்,**
**வண்டு" என மொழிப் "மகன்" என்னாரே"[95]**

தலைவன் நெடிய நீரை உடைய பொய்கை ஆற்றில் நள்ளிரவில் மணம் கமழும் புதிய மலர்களின் தேனை உண்ணுகின்ற வண்டு போன்றவன் என்பதிலிருந்து சமுதாயமானது தலைவனின் பரத்தமை ஒழுக்கத்திற்கு ஒப்புதல் வழங்கியமைப் புலனாகின்றன.

பரத்தமையொழுக்கத்தின் காரணமாக பெண்ணின் அகவுணர்வில் துன்பம் துவண்டது. ஆணின் அகவுணர்வு மகிழ்ச்சியில் மூழ்கியது. சமுதாயத்தில் ஆண்கள் எதனையும் செய்யலாம். ஆனால் பெண்கள் ஆணாதிக்கச் செயலினை பொறுத்துக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவர்களாக, இருந்தமையைப் புலவர்கள் உணர்த்தியுள்ளனர். ஆணின் உலகத்தை பரந்துப்பட்ட சமூகமாகக் காட்டிய இலக்கியம். பெண்ணின் உலகத்தை தன்கணவன், தன் குடும்பம் என்ற சிறுபுள்ளியில் காட்டியுள்ளன. "பரத்தமை சங்க காலச் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆண்கள் பரத்தமை ஒழுக்கத்தில் தோய்ந்து கீழ்மக்கள் போல் நடந்து கொண்டாலும், பெண்களால் அவர்களைக் கண்டிக்கக் கூட முடியவில்லை; பரத்தையரிடம் சென்ற கணவனிடம் தன்னைப் பிரியாது இருக்கும்படி வேண்டுகோள்தான் அவர்களால் விடுக்க முடிந்தது"[96] என அ. பாண்டுரங்கன் உரைப்பதும்,

"சங்க இலக்கியங்களில் தலைவியின் ஊடல், வாழ்க்கைப் போராட்டமாகவே அமைந்து விடுகிறது. தலைவன்-பரத்தை ஒருபுறமாக, தலைவி-தோழி மறுபுறமாக உள்ள இப்போராட்டத்தில் பெண்மையின் அவலமே தொனிக்கிறது. தலைவனின் பரத்தமையால் பரத்தைக்கும் தலைவி, தோழி ஆகியோருக்கும் உள்ள பகைமையும் புலப்படுகிறது"[97] என சரளா ராசகோபாலன் உரைப்பது நோக்குதற்குரியது.

பரத்தமை ஒழுக்கத்தினால் பெண்ணின் அகஉணர்வு, பெண்ணுள்ளே புதைக்கப்பட்டுள்ளது. மேலும், பெண்ணின் உணர்வு அச்சமும், துன்பமும் கலந்த

வாழ்வினை வாழ்ந்துள்ளமையை உணர வாய்ப்பிருக்கிறது. காதல் வாழ்வினை ஏற்றுக்கொண்ட சமுதாயம், பரத்தமையையும் ஏற்றுக் கொண்டமைப் புலனாகின்றன.

**நிலஅடிப்படையில் மக்களின் வாழ்க்கை**

பண்டைய சமூகமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களாகப் பகுத்துக் காணப்பட்டது. மலைகளும், காடுகளும், சமவெளிகளும், கடலோரத்தில் கழிமுகங்களும் இருக்கின்றன.

இந்த அமைப்பினை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்,**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[98]**

என்ற நானில அமைப்பினைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். பாலை நிலம் குறித்து சிலப்பதிகாரம் சுட்டியுள்ளது.

இந்நிலஅமைப்பினை மாற்றியும் உரைக்கலாம் எனத் தொல்காப்பியரே 'சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' என உரைத்துள்ளார். இக்கருத்திற்கேற்ப, கலித்தொகையில் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற அமைப்புமுறையும், ஐங்குறுநூற்றில் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற அமைப்புமுறையும் காணப்படுகின்றன.

"நாட்டை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பிரிப்பது செயற்கையான இலக்கியப் பாகுபாடு அன்று; ஏனெனில் அத்தகைய நிலப்பாகுபாடு தமிழகத்தில் உண்மையாகவே இருந்தது. அங்கிருந்தவர்கள் ஒன்று வேடர் அல்லது ஆடுமாடு மேய்ப்பவர், அல்லது உழவர், அல்லது மீனவர், அல்லது கள்வர், அவர்களது தோற்றம், உடை, உணவு தொழில், பழக்க வழக்கங்கள் முதலியவை இயல்பாகவே வேறுபட்டன"[99] எனச் சுட்டுவர் டாக்டர் ந. சுப்ரமண்யன்.

நிலத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறு மக்களின் தொழில்களும் வேறுபட்டிருந்தன. தொழிலின் காரணமாக மக்களிடையே எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் மாறுபாடுகள் இருந்தன. இருப்பினும், மக்கள் குறுகிய நிலப்பரப்பிற்குள் வாழ்ந்ததனால், இவர்கள் பேசிய தமிழ்மொழியாலும் இவர்கள் ஒருவரையொருவர் சார்ந்தே கூட்டமாக வாழ்ந்தனர். "சிறிய அளவிலேனும் ஐவகை இயற்கை நிலப்பரப்புகளும் தமிழ்நாட்டிலே காணப்பட்டன. உலகின் மனிதன் தோன்றிய நாள் தொட்டு தென்னிந்தியாவில் இருந்து வந்தமையால் அவன் ஒரு நிலப்பகுதியிலிருந்து மற்றொரு நிலப்பகுதிக்கு ஒன்றன் பின் ஒன்றாய் மாறிச் சென்று அவ்வற்றிற்குரிய பண்பாட்டுப் படிநிலைக் கட்டங்களைக் கருதி விழைவித்தனன்"[100] என்பது பி.டி. சீநிவாச அய்யங்கார் கூறியுள்ளதை மேற்கோள் காட்டுவர் கார்த்திகேசு சிவத்தம்பி.

நாட்டின் போராலும், பண்டமாற்று முறையாலும் மக்களின் குழுக்களிடையே சமூக நகர்வுகள் தோன்றின. தனிமனிதனின் திறமையாலும், வளமான இடங்களில் புலம்பெயர்ந்தமையால் வாழ்க்கையில் செல்வந்தர்கள், வறியோர்கள் என்ற வேறுபாடுத் தோன்றினர். "எல்லாச் சமூகங்களிலும் வறுமை இயல்பானதே. அதைப் போக்கும் முயற்சி சங்கச் சமூகத்தில் பெருக இருந்தது. தனி மனித உழைப்பு, உற்பத்தி ஆகியவற்றால் சமூகத்தின் பல் பிரிவுகளும் வறுமை நீங்கின. எனினும், நிலம், நீர், தட்பவெப்பம், அரச இயல்பு ஆகியவற்றால் குடிகள் வறுமையுற நேர்ந்திருக்கிறது"[101] என உரைப்பர் கு.வெ. பாலசுப்ரமணியன். தமிழ்ச் சமூகத்தில் நிலத்தின் அடிப்படையில் குறவர், ஆயர், உழவர், நுளையர் என பெயர் பெற்றிருந்தனர்.

**குறிஞ்சி நில மக்களின் வாழ்வும் தொழிலும்**

குறிஞ்சி நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் குறவர், கானவர் என அழைக்கப்பெற்றனர். சிறுகுடிசைகளில் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த இடம் சிறுகுடி, குறிச்சி என்று அழைக்கப்பட்டன. வேட்டையாடும், தொழிலினை மேற்க்கொண்டனர். காட்டில் வாழும் விலங்குகளோடு போரிட்டு வெல்லும் வில்லாற்றல் உடையவர்கள். வேட்டைக்கு உதவியாக நாயும் உடன் அழைத்துச் செல்வர் என்பதனை,

**"மனைவாய் ஞமலி ஒருங்கு புடைஆட,**
**வேட்டு வலம் படுத்த உவகையன்"[102]**

நாய்களும் மிருகங்களைக் கொன்று இவர்களுக்கு உதவியாய் இருந்தன. காடுகளை எரித்து பின் அந்நிலத்தில் தினைக்கதிர்களை பயிரிட்டனர். தினைப்புனங்களில் முற்றிய தினைக் கதிர்களைக் கவரவரும் பறவைகளை ஓட்டுவதற்குத் திருமணம் ஆகாத வீட்டுப் பெண்களைக் காவலாக அனுப்பினர். காட்டு யானைகள் பயிர்களை அழித்து விடாதவாறு ஆண்கள் பரண்மேல் ஏறி காவல் காத்தனர். மலையிலிருந்து தேன் அடைகளை எடுத்து தேன் சேகரித்தனர்.

**"தேம் பிழி நறவின் குறவர் முன்றில்"[103]**

**"அறைஉறு தீம்தேன் குறவர் அறுப்ப"[104]**

தேன் எடுத்தும், கிழங்குகளைத் தோண்டி எடுத்தும் அவற்றை பண்டமாற்று முறையில் விற்று வாழ்க்கை நடத்தினர். முருக வழிபாட்டினை மேற்கொண்டனர்.

**"குன்றக் குறவன் காதல் மட மகள்**
**மன்ற வேங்கை மலர் சில கொண்டு,**
**மலை உறை கடவுள் குல முதல் வழுத்தி,**
**தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள்"[105]**

ஒரு குறமகள் செய்த கடவுள் வழிபாட்டினை ஐங்குறுநூற்றுப் பாடலில் அறியலாம். முருகப்பெருமான் பொருட்டு வெறியாட்டு நிகழ்த்துவர். வெறியாடும் பொழுது "முருகியம்" என்னும் பறையினை முழங்குவர்.

**முல்லைநில மக்களின் வாழ்வும் தொழில்கள்**

காடும் காடும் சார்ந்தப் பகுதிகளும் முல்லை எனப்பட்டன. மேய்ச்சல் நிலங்களைக் கொண்டிருந்தமையால் ஆடு,மாடு வளர்த்தலை தமது முக்கிய தொழிலாகக் கொண்டனர். இம்மக்கள் கோவலர், ஆயர், இடையர், பொதுவர், அண்டர் என்னும் பெயர்களால் அழைப்பர். காடுகளை அழித்து வரகு, சாமை போன்றப் பயிர்களை பயிரிட்டனர். முல்லை நிலத்தின் ஊர்களை,

**"கோவலர் பெருந்தண் நிலைய பாக்கம்"[106]**

என அழைப்பதை ஐங்குறுநூற்றுப் பாடல் வழி அறியலாம்.

ஆயர், குலப்பெண்கள் பால், மோர் ஆகியவற்றைப் பிற இடங்களுக்கு எடுத்துச் சென்று பண்டமாற்றுமுறையை மேற்கொண்டு வாழ்வினை நடத்தினர்.

**மருத நில மக்களின் வாழ்வும் தொழிலும்**

ஆற்றின் ஓரங்களில் உள்ள சமவெளி நிலம் மருதம் என்பர். நீர் வளத்தின் காரணத்தினால் வேளாண்மை செழித்திருந்தது. வேளாண்மைத் தொழிலால் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். இந்நிலமக்கள் உழவர், உழத்தியர். இம்மக்கள் வாழ்ந்தப் பகுதியே ‘ஊர்’ எனப்பட்டது. ஓரிடத்தில் தங்கி வாழ்க்கை நடத்தியவர்கள் மருதநில மக்கள் ஆவார். செழிப்புடன் காணப்பட்டமையால் நெற்குவியல்கள் மேருமலைபோல் காட்சி தருகின்றன. இல்லங்களில் நெற்கூடுகளில் நெல்லினைச் சேகரித்து வைப்பர். இரவலர்கள் யாராயினும் நெல்லினை வாரி வழங்குவர் என்பதனை,

**“பெருங்களம் தொகுத்த உழவர் போலப்**
**இரந்தோர் வறுங் கலம் மல்க வீசி”**[107]

அகநானூறு பாடல் உழவர்களின் கொடைத் தன்மையைச் சுட்டுகின்றன. செல்வ செழிப்பினாலும் உழவு தொழிலாளும் ஓய்வு நேரம் மிகுந்திருந்தமையால் பரத்தமை ஒழுக்கம் தோன்றக் காரணமாயிற்று. இவ்வூர்களில் மக்கள் வாழும் பகுதிகளை ‘சேரிகள்’ என அழைப்பர்.

**நெய்தல் நில மக்களின் வாழ்வும் தொழிலும்**

கடற்கரையை அடுத்த பெருமணல் பகுதியில் கடல் வளத்தை நம்பியே மக்கள் வாழ்க்கை நடத்தினர். சிறுகுடில் அமைத்து வாழ்ந்ததை,

**“கானல்அம் சிறுகுடி”**[108]

என்பர். இவர்கள் வாழ்ந்தப் பகுதியை,

**“துறை நணி இருந்த பாக்கம்”**[109]

பாக்கம், பட்டினம் என அழைப்பர். மக்களை நுளையர், பரதவர் என அழைப்பர். இங்கு வாழும் மக்கள் மீன் பிடித்தலையேத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தமையால் இவர்களை,

**"பெருங்கடற் பரதவர்"[110]**

என அழைப்பர். படகுகளில் சென்று வாணிபம் செய்தனர். உப்பு விற்றல் தொழிலையும் செய்தனர். ஆகவே, இவர்களை 'உமணர்' எனவும் அழைப்பர் என்பதனை,

**"கதழ்கோல் உமணர் காதல் மடமகள்"[111]**

அகநானூற்றின் வழி அறியலாம்.

**பாலைநில மக்களின் வாழ்வும் தொழிலும்**

பாலை நிலமென்றத் தனிநிலம் அன்று. முல்லையும், குறிஞ்சியும் வெயிலின் கொடுமையாலும் மழையின்றி வளம் இழந்து நிற்கும் பகுதியே பாலையாகக் கருதப்பட்டது. இப்பகுதியை 'சுரம்' என அழைப்பர். இங்கு வாழும் மக்கள் மறவர், எயினர் என அழைக்கப்படுகின்றனர். ஊரினை 'குறும்பு' என அழைத்தனர் என்பதனை,

**"கடுங்கண் மறவர் கல் கெழு குறும்பின்"[112]**

என அகநானூற்று பாடலடி மூலம் அறிய முடிகின்றது. வேட்டையாடுதலும், வழிப்பறியும் தொழிலாக இருந்தன. ஆகவே இவர்களை

**"கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்"[113]**

என அழைப்பர். ஆநிரைகளைக் கவர்தலையும் தொழிலாகக் கொண்டதனை,

**"சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு**
**எருவைச் சேவல் இருஞ்சிறை பெயர்க்கும்**
**வெருவெரு கானம், நம்மொடு"[114]**

அறியலாம். இம்மக்களின் தெய்வம் கொற்றவையாகும்.

தமிழர்கள் நிலஅமைப்பு, நீர்வளம், பொருள் வளம் ஆகியவற்றிற்கு ஏற்றார்போல் மக்களின் தொழில்கள் இருந்தன. பல்வேறு தொழில்களின் காரணமாக மக்கள் குழுக்களாகவும், கூட்டங்களாகவும் வாழ்ந்தனர். தமது நிலத்தில் விளைந்தப் பொருள்களைப் பண்டமாற்றம் செய்து வாழ்ந்தமையையும், சிற்றூர், பேரூர் என்ற அமைப்பு முறைகளில் வாழ்ந்ததையும், கடல்வழி வாணிபம்

செய்தும் தொழில் வளர்ச்சி பெருகபெருக மக்களும் பல்வேறு குழுக்களாக வளர்ந்து வீட்டையும், நாட்டையும் முன்னேற்றினர்.

**பழக்கவழக்கம்**

பழக்கம் என்ற சொல் 'பழகுதல்' அல்லது 'பயிற்சியாதல்' என்ற பொருளில் வழங்கப்படுகின்றன. பழகிப்போன செயல் சமூக இசைவு பெற்று வருவதனையே வழக்கம் என்கிறோம். தனிமனித வழக்கங்களே காலப்போக்கில் சமுதாய வழக்கங்களாக உருப்பெற்று தலைமுறை தலைமுறையாக பழக்கவழக்கங்களாக மாறியுள்ளன. "பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்கம் வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக் கருதப்படுகிறது. நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றியே நிகழக் கூடியதாக ஆகிவிடும் செயலையே பழக்கம்"[115] என்பர்.

பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கம் என்பர். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். தனிமனிதனும், சமுதாயமும் என்ற அமைப்பும் இணைந்தே பழக்கவழக்கங்களை உருவாக்குகின்றன.

**சிலம்புகழி நோன்பு**

சிலம்பு என்பது மகளிர் காலில் பூணும் அணியாகும். திருமணத்திற்கு முன் இவ்வணியைக் கழற்றுதல் வழக்கமாக பேணப்பட்டிருப்பதனைச் சிலம்புகழி நோன்பு என்பர். உடன்போக்கில் சிலம்புடன் நங்கைச் சென்றதனை கண்டோர் கூற்றுப் பாடல்களில் அறியமுடிகிறது. ஆகவே சிலம்புகழி நோம்பு திருமணத்திற்கு முன்பு நிகழ்த்தப்படுவதா? திருமணத்திற்கு பின்பு நிகழ்த்தப்படுவதா என்ற ஐயம் தோன்றினும் திருமணத்திற்கு முன்பு தாய்வீட்டில் நிகழும் வழக்கம் என்பதை பாடல்களின் வழி அறியலாம்.

உடன்கொண்டுபோன தலைமகன் தலைவியைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றபொழுது அவனது தாய் தன்மகளுக்குச் சிலம்புகழிநோன்பு செய்தாள் என்பதனைக் கேட்ட நற்றாய் கலங்கி உரைப்பதை,

**"நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,**
**எம் மனை வதுவை நல் மணம் கழிக" எனச்**
**சொல்லின் எவனோ மற்றே - வென் வேல்,**
**மை அற விளங்கிய கழல் அடி,**
**பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே?" [116]**

எனப் பாடுவர் புலவர்.

பெண்களுக்கு, மணமாகாமுன்பு பெற்றோர் அணிவிக்கும் கன்னிச் சிலம்பினைத் திருமண வினைக்கு முன்னர் கழிப்பது வழக்கமாக இருந்தது என்பதிலிருந்து திருமணத்திற்கு முன்பு பிறந்த வீட்டில் இந்நோன்பு செய்வர் என்பத உறுதியாகின்றன.

"பெற்றோர் மணமாகா முன்னர் அணிந்திருந்த சிலம்பும் வளையுமாகிய கலன்களைக் கழித்து மணமகன் அளிக்கும் சிலம்பும் வளையும் அணியும் சடங்கு சிலம்பு கழீஇ என்றும், சிலம்புகழி செல்வமென்றும் பண்டை நாளில் வழங்கிற்று"[117]

**"பசிப் பிடி உதைத்த ஓமைச் செவ் அரை**
**வெயில் காய் அமையத்து இமைக்கும் அத்தத்து,**
**அதர் உழந்து அசையினகொல்லோ - ததர்வாய்ச்**
**சிலம்பு கழீஇய செல்வம்**
**பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே?"[118]**

நற்றாய் தனது மனையில் சிலம்புகழி நோன்பு நிகழவில்லையென தனது ஆற்றாமையுணர்வினை வெளிப்படுத்துவதாக அமைந்தப்பாடலிலும் அறியமுடிகிறது. மேலும், "சிலம்பு கழிஇயும் வதுவை மணமும் தலைவியின் பிறந்த வீட்டில் நிகழ்த்துதலே சிறப்பாகும். ஓரோவழி உடன்போக்கு நிகழின் இச்சடங்குகளைத் தலைவன் மனைக்கண்ணும் நிகழ்த்துதலும் உண்டு"[119]

சிலம்புகழீ நோன்பு திருமணத்திற்கு முன்பு பிறந்த வீட்டில் நிகழும் நிகழ்வாகவும், உடன்போக்கின்போது மட்டும் தலைவன் வீட்டில் நிகழும் நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

**புலிப்பல் தாலி**

புலிப்பல் கோர்த்துச் செய்யப்பட்ட ஒருவகை அணியைக் குழந்தைகளின் மார்பில் அணிவிப்பர். இதனைப் புலிப்பல் தாலி என்பர். இதனை

**"புலிப்பற் தாலிப் புதல்வற் புல்லி"[120]**

பிள்ளைகளுக்கு புலிப்பல்லினால் தாலியைச் செய்து கட்டுவது பழக்கவழக்கமாக இருந்தது.

**விருந்தோம்பல் பண்பு**

பண்டையத் தமிழரின் நற்பண்புகளுள் ஒன்றாக விருந்தோம்பல் விளங்கின. விருந்தினரை உபசரித்து மகிழ்வது மகளிரின் தனிச் சிறப்பாகும். இதனைப்

**"கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்"[121]**

விருந்தோம்பலைச் சிறப்பித்துள்ளார் தொல்காப்பியர்.

விருந்தோம்பலில் பெண் பெரும்பங்கு பெறுவதனால் 'விருந்தோம்பலின் நட்டாள்' எனத் திரிகடுகம் கூறுகிறது.

விருந்தோம்பலின் சிறப்பு கருதி தனியோர் அதிகாரம் படைத்துள்ளார் திருவள்ளுவர். விருந்தோம்பல் அந்நாளில் போற்றப்பட்ட பேரறமாகக் கருதினர்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"[122]**

அனிச்சப்பூவை முகர்ந்தவுடன் வாடிவிடக்கூடியது. தம்வீடு நோக்கி வந்த விருந்தினரை முகம் மாறுபட்டுப் பார்த்தாலே வாடிவிடுவர் என்பது பொருளாகும். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் நற்றிணைத் தலைவி,

**"வாளை ஈர்ந் தடி வல்லிதின் வகைஇ,**
**புகை உண்டு அமர்த்த கண்ணள், தகை பெறப்**
**பிறை நுதல் பொறித்த சிறு நுண் பல் வியர்**
**அம் துகில் தலையில் துடையினள், நப் புலந்து,**
**அட்டிலோளே அம் மா அரிவை -**
**எமக்கே வருகதில் விருந்தே"[123]**

பரத்தமை ஒழுக்கத்தினை மேற்கொண்டத் தலைவன் விருந்தினர்வுடன் இல்லம் சென்றான். தலைவி தலைவன் மீது கொண்டிருந்த ஊடலை மறந்து முகம் மலர்ந்து

விருந்தினை "வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ" உபசரித்தாள் என்பதிலிருந்து விருந்தானது தலைவன், தலைவியின் ஊடலை தவிர்த்தது என்பதனை அறியலாம்.

வழிப் போக்கர்களுக்கும், தன்மனை நாடிவருவோர் யார் பசியென வந்தாலும் அவர்களுக்கு உணவு படைத்தலே அறமெனக் கருத்தினர். "குறிஞ்சி நிலத்தின் வழிச் செல்வோர்க்கு அங்கு கிடைக்கும் தினை, வரகு, அவரை, எள், ஐவன நெல், வெண்ணெய், கரும்பு, தோரை, ஐயவி, இஞ்சி, வாழைப்பழம், மூங்கில் நெல், தே, மாங்கனி, பலாக்கனி போன்றவற்றைக்கொடுத்து உபசரிப்பார்"[124] என மலைபடுகடாம் கூறுகிறது.

மாலை பொழுதில் கதவினை அடைக்கும்பொழுது,

**"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,**
**"வருவீர் உளீரோ?"[125]**

விருந்தினர் யாவராயினும் உள்ளீரா? என அழைத்தும் யாரும் வரவில்லையெனில் கதவினை மூடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இவற்றிலிருந்து, அக்கால மக்கள் விருந்தினை தமது முக்கிய பழக்கவழக்கமாகக் கருதினர் என்பது புலனாகிறது.

**நம்பிக்கை**

மனிதனின் மனத்தின் ஏற்படும் அச்சஉணர்வினால் நம்பிக்கை தோன்றுகின்றன. மனித வாழ்வில் நிகழும் தீமைகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையில் மனித மனம் ஏதேனும் காரணம் கற்பித்துக் கொள்கின்றன. இவையே நம்பிக்கையாக உருவெடுக்கின்றன. இலக்கியத்தில் உள்ள நம்பிக்கைகளும், நிமிர்த்தங்களும் தலைமக்களின் கிளர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுள்ள தடுமாற்ற நிலைகளிலும், நன்மை நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக தோன்றியவைகளாகவே புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். இவற்றை, தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை கொண்டும் நிமித்தங்களை நோக்கிய தன்மை கொண்டும் அறியலாம்.

மனித வாழ்வில் நம்பிக்கைகள் எப்பொழுது தோன்றின என்பதனை அறுதியிட்டுக் கூறமுடியாது. "அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின்

நடப்புக்களோடு இயைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன"[126] எனவும்

"இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்ளுகின்றது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன"[127] எனவும் காந்தி உரைப்பர்.

"சிலவற்றை மறுக்க முடியாத உண்மை என்று கருதி ஏற்றுக் கொள்வதே நம்பிக்கை என்று வரையறுக்கலாம்"[128] எனச் சுட்டுவர் தே. லூர்து. மேலும் "எதையும் காரண காரிய அடிப்படையில் எண்ணிப் பார்க்காமல் பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்த கருத்துக்களை அவ்வாறே ஏற்றுக்கொள்வது நம்பிக்கையாகும்"[129] என உரைப்பர் யோகிஸ்வரன்.

**தெய்வ நம்பிக்கை**

பழங்கால மனிதன் இயற்கையைக் கண்டு பயந்து தெய்வத்தை வழிபடத் தொடங்கினார். "விலங்குகள் போல் வாழ்ந்த மக்கள் மனிதப்பண்புடன் வாழ்வதற்கு வழிகாட்டியது தெய்வ நம்பிக்கையாகும். தெய்வ நம்பிக்கை இல்லாமல் மக்கள் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. அது நாகரிகமற்ற காலம். மனிதர்களையேஅடித்து தின்று காட்டு மிராண்டித்தனமாக வாழ்ந்த காலம், வரலாற்றுக்கு எட்டாத காலம்"[130] என உரைப்பர் சாமி. சிதம்பரனார்

மக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபட்டாலும் வழிபடும் தெய்வம் அந்தந்த நிலத்திற்குரிய தெய்வத்தை மட்டும் வழிபடுவர். "குன்றக் குறவர் முருகனையும், முல்லை நிலத்து ஆயர் மாயோனையும் தம் குலத்திற்குரிய வழிபடு தெய்வமாக கொண்டனர்"[131] என்பார் சண்முகபிள்ளை.

**"அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்**
**வழிபடு தெய்வம் கண் கண்டாஅங்கு"[132]**

ஆர்வமுடையவர் தம் வழிபடு தெய்வத்தைக் கண்டு விரும்பி வழிபடுவர்.

**ஆழியிழைத்தல்**

தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவி, தலைவன் வரவினை எதிர்ப்பார்த்து தானே குறிப்பார்த்தலே ஆழியிழைத்தல் எனப்படும். இதனைப் பிற்காலத்தில் இலக்கியத்தில் கூடலிழைத்தல் என்பர். இவற்றில் இருவேறு முறைகள் கூறப்படுகின்றன.

1. தலைவியானவள் ஒரு வட்டம் வரைந்து அதனுள் பல சிறு வட்டங்களை வரைந்து அவற்றினை எண்ணி அவை ஒற்றையா? இரட்டையா எனப் பார்த்து, முதலில் தான் மனதில் நினைத்ததிற்கேற்ப குறிப்பார்த்தல்.
2. தலைவியானவள் தன் கண்களை மூடிக்கொண்டு மணலில் ஒரு வட்டம் வரைய அவ்விருக்கோடுகளும் இணைந்து வட்டமாக முழுமையடைந்தால், தான் நினைத்தது நிறைவேறும் எனவும், வட்டம் இணையாமல் இருந்தால் தான் நினைத்தது நிறைவேறாது எனவும் நம்பிக்கைக் கொள்வர்.

பிரிந்தத் தலைவன் வரவினை தலைவி கோடிட்டு தன் மனதினை ஆற்றுப்படுத்துவதை,

**“வீங்குஇழை நெகிழ விம்மி, ஈங்கே**
**எறிகண் பேதுறல், ஆய்கோடு இட்டுச்**
**சுவர்வாய் பற்றும் நின்படர் சேண்நீங்க**
**வருவேம் என்ற பருவம் உதுக்காண்”**[133]

எனப் பாடுவர் குறுந்தொகைப் புலவர்.

தலைவி கோடிட்ட நாட்கள் மிகுந்து குறையாமல் இருந்தமையால் கண்கலங்கினாள். தலைவன் வருவதாக குறித்து நாட்களைச் சுவரில் கோடுகளால் இட்டுக் குறித்து அக்கோடுகளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக கழித்து அறியும் இயல்பு நம்பிக்கையாகக் கருதப்பட்டது.

இதே கருத்தமைந்த அகநானூற்றுப் பாடலில்,

**“நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி உழந்து**
**ஆழல் வாழி தோழி”**[134]

தலைவி கோடிட்டுக் குறித்து வைத்த நெடிய சுவரினை நோக்கி அழுத துன்பநிலை உரைக்கப்பட்டுள்ளது.

**விரிச்சிக்கேட்டல்**

நம் மனம் கவலையுறும் நிலையில், பிறர்கூறும் சொற்களைச் சகுனமாகக் கேட்கும் வழக்கம் நம்பிக்கையாக உருப்பெற்றுள்ளன. இதனை விரிச்சிக் கேட்டல் என அழைப்பர். "விரிச்சி என்பது வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும்"[135] என்பர் சு. வித்தியானந்தன்.

ஒருவர் ஒரு செயலினை சிந்தித்திருக்கும் போது அயலிலிருந்தவர்கள் தாம் சிந்தித்தவற்றிற்கு நேர்மறையாகவோ அல்லது எதிரிமறையாகவோ தாம் மேற்கொள்ளப்போகும் செயலின் பயனை நிச்சயிக்கும் என மனதில் நம்பிக்கைக் கொள்ளுதலே விரிச்சி எனப்படும். "நற்சொல் அல்லது வாய்ச்சொல் என்பார்கள். நல்ல சகுனங்களில் ஒன்று. நாம் எதையாவது எதிர்பார்க்கும் போது சம்பந்தமில்லாதவர் யாரிடமோ பேசும் பேச்சில் நமக்கு இணக்கமான சொல் வந்தால் அதை அசரீரிவாக்கு என்று இப்போது சொல்கிறார்கள். அதுவே விரிச்சி"[136] எனச் சுட்டுவர் கி.வா. ஜகந்நாதன்.

விரிச்சிக் கேட்டலை,

**"பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப -
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்: அதனால்,
நல்ல, நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல், தலைவர், வாய்வது் நீநின்
பருவரல் எவ்வம் களை, மா யோய்" என
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ்சிறந்து,
பூப்போல் உண்கண் புலம்புமுத்து உறைப்ப"[137]**

என நன்னிமித்தமாகப் பாடுவர் நப்பூதனார்.

முதுபெண்டிர் மாலைபொழுதில் முல்லைப் பூக்களை நாழியில் கொண்ட நெல்லோடு தூவி, தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்பதனை நம்பிக்கையாகக் கொண்டிருந்தனர். தலைவனின் பிரிவினை எண்ணி தலைவி ஆற்றாமல் இருக்கும்பொழுது, பச்சிளங் கன்று பாலுண்ணாமையால் பசியால் வருந்தியதைப் பார்த்த இடையர் பெண்ணொருத்தி மேய்ச்சலை முடித்து இன்னே வருகுவர் உம் தாயார் எனக் கூறிய ஆறுதல்மொழியானது, தலைவன் வினைமுடித்து விரைவில் வருவான் என தலைவிக்கு நன்னிமித்தம் ஆயிற்று.

மேலும், விரிச்சிக் கேட்டலை,

**"நெடு நா ஒள் மணி கடி மனை இரட்ட,**
**குரை இலைப் போகிய விரவு மணற் பந்தர்,**
**பெரும்பாண் காவல் பூண்டென, ஒருசார்,**
**திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப"[138]**

நற்றிணைப் பாடலிலும்,

**"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்**
**புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்**
**உள்ளூலும் உள்ளாம் அன்றே - தோழி"[139]**

குறுந்தொகைப் பாடலிலும் நன்னிமித்தம் உணர்த்தும் பாங்கில் பயின்று வந்துள்ளன. விரிச்சிக் கேட்டலின் மூலம் தெய்வத்தைப் பரவித் தொழுவது மக்களின் நம்பிக்கையாக இருந்தன. ஒரு சமுதாயத்தின் உண்மை நிலையினைக் கண்டறிய அச்சமுதாயத்தின் பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் அறிவது அவசியமாகின்றன.

**தொகுப்புரை**

அகமாந்தர்களின் வழியே சமுதாயத்தின் பழக்க, வழக்க நெறிமுறைகளை ஆங்காங்கே புலவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பது புலனாகிறது.

தலைவன், தலைவி அக ஒழுக்கத்தில் வாயில்கள் முக்கியப் பங்காற்றி உள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், களவுக் காலத்தில் தலைவியின் அகத்தின் திண்ணிய வலிமையைப் புலவர்கள் செம்மாந்த நிலையில் படைத்துக் காட்டி உள்ளனர்.

வெறியாடல் முருக வழிப்பாட்டினை உணர்த்துவது. நற்றாய் இச்சடங்கினை மேற்கொள்வாள். ஆயின், இதன் உட்பொருள் தலைவியின் பசலை நோயே என்பது புலவர்களின் கருத்தாக உள்ளது அறியத்தகுந்தாகும். வெறியாடல் என்னும் இச்சடங்கு களவைக் கற்பாக மாற்றும் ஒருவழக்கமாக உள்ளதை உணரமுடிகிறது.

கலித்தொகையில் இந்த ‘வெறியாடல்’ புலவர்களால் பாடப்பெறவில்லை என்பது உணரத்தக்கதாகும்.

தலைவன், தலைவியின் அகவாழ்வினை சமுதாயம் கண்ணுறுகிறது. சமுதாயத்தின் வெளிபாடு அம்பலாகவும், அலராகவும் உரைப்பது அகமரபாகும். மேலும், உடன்போக்கினை ஏற்று உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

இல்லறத்திற்கு தேவை அன்பு; பொருள் அன்று; என்னும் அன்புக்கோட்பாடு புலவர்களின் உள்ளகிடக்கையாக இருப்பதை அறிய முடிகிறது.

இல்லறத்தை நெறிபடுத்துவதில் தலைவி முன்நிறுத்தப்பட்டுள்ளாள். பெற்றோரின் நல்நெறியும், சான்றோர்களின் கருத்துரையும் இல்லறத் தலைவிக்குத் தோன்றாத்துணையாக அமைந்து உள்ளதை புலவர்களின் பாடல் வழி அறியலாகிறது.

ஐந்நிலங்களின் நில அமைப்புக்குத்தக்கவாறு மக்களின் வாழ்வியல் அமைந்து இருந்ததை புலவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். இதன்வழி நானிலமக்கள் இயற்கையை ஒட்டியே, வாழ்வு முறையை அமைந்து கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

பழக்கமும், வழக்கமும் மக்களின் வழியே சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

‘சிலம்புகழிநோன்பு’ என்னும் வழக்கம், சங்க காலத்தில் உள்ளதை உணரமுடிகிறது. குழந்தைக்கு ‘புலிப்பல்’ தாளியை அணிவிக்கும் வழக்கம் காணலாகிறது. ‘விருந்தோம்பலை’ செவ்விய அறமாக மக்கள் போற்றி உள்ளனர். ஆழியிழைத்தல், விரிச்சிக்கேட்டல் என்பது அகத்தின் வழக்காறுகளாக இருப்பதை அறியலாகின்றன.

# சான்றெண் விளக்கம்

1. கு. வெ. பாலசுப்ரமணியன், தமிழில் அகமும், புறமும் ப. 211
2. அ.மு. பரம சிவானந்தம், சமுதாயமும் பண்பாடும் ப. 26
3. தி.சு. நடராசன், திறனாய்வுக்கலை ப. 52
4. புறம். பா. 182:1
5. குறள். 387
6. குறள். 850
7. கண்ணகி கலைவேந்தன், பதிப்பாசிரியர் தரணி போற்றும் தமிழர் பண்பாடு, ப.1
8. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 223
9. நச்சினார்க்கினியர், தொல்காப்பிய உரைவளம், அகத்திணையியல், ப. 93
10. நக்கீரனார், களவியல் என்ற இறையனார் அகப்பொருள் உரை, ப. 3.
11. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, ப.19.
12. குறள். 337
13. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியம் (அகம்) ப. 13
14. தொல். பொருளி. நூ. 27
15. நற். பா. 294 : 1-2
16. பரி. பா. 9 : 13,14
17. தொல். களவு. நூ. 28 : 1-2
18. தொல். களவு. நூ. 18
19. தமிழ் தமிழ் அகர முதலி ப. 961
20. தொல். கற்பு. நூ. 52
21. தெ. கிருஷ்ணன், அகத்திணை மாந்தர், ப. 209
22. தொல். களவு. நூ. 29
23. டாக்டர் மு. வரதராசன், இலக்கியத் திறன், மறுபதிப்பு, ப. 208-209

24. குறுந். பா. 119
25. ஐங். பா. 256 : 3-4
26. குறுந். பா. 28
27. நற். பா. 397
28. குறுந். பா. 49
29. தொல். பொருள். பொருளி. நூ. 29
30. தொல். பொருள். கற்பு. 22
31. குறள். 1147
32. இறை. அகப். நூ. 24
33. நற். பா. 191: 6-12
34. நற். பா. 203
35. கலைக்களஞ்சியம், தொகுதி 9, பக். 505
36. முனைவர். சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப. 194.
37. டாக்டர் ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப. 123.
38. தொல். பொருள். நூ. 63
39. கு.வெ. பாலசுப்ரமணியன், தமிழில் அகமும் புறமும், ப. 209
40. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 61
41. குறுந். பா. 23
42. ஐங். பா. 245
43. ஐங். பா. 182
44. தொல். பொருள். களவு. நூ. 24 : 41-42
45. தொல். பொருள். பொருளி. நூ. 11
46. நாற்கவிராசநம்பி, அகப்பொருள் விளக்கம், ப. 159
47. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியங்களில் தோழி, ப. 56
48. RM. Perikaruppan, The Tradition and talent in Sankam Literature, P. 136.

49. நா. செயராமன், முல்லைப்பாடல்கள், ப. 91

50. நற். பா. 244

51. குறுந். பா. 379

52. ஐங். பா. 205

53. வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல் ப. 71-72

54. தொல். பொருள். பொருளி. நூ. 29

55. குறுந். பா. 262

56. ஐங். பா. 371

57. தொல். அகத். நூ. 44 : 3-5

58. தொல். பொருள். இளம்பூரணர் உரை. ப. 48

59. நற். பா. 279 : 1 - 8

60. அகம். பா. 195 : 1 - 10

61. அகம். பா. 321 : 10 - 17

62. குறுந். பா. 378

63. தொல். பொருள். அகத். நூ. 43

64. தொல். பொருள். இளம்பூரணர் உரை. ப. 45

65. குறுந். பா. 390

66. குறுந். பா. 229

67. ஐங். பா. 381

68. ஐங். பா. 382

69. குறுந். பா. 374

70. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருள். களவு. ப. 249

71. தொல். பொருள். களவு. ப. 144 நச்சினார்க்கினியர் உரை

72. தொல். பொருள். கற்பு. நூ. 145 : 3,4

73. முனைவர் இரா. சாரங்கபாணி. அணிந்துரை, தமிழ்க்காதல்.

74. Encyclopaedia, Brittanica Volume – 9, P. 54

75. பாஸ்கல் கிஸ்பர்ட் எஸ். ஜே. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் (ஜே. நாராயணன் மொழிபெயர்ப்பு) ப. 99

76. கு.வெ. பாலசுப்ரமணியன், தமிழில் அகமும், புறமும் ப. 213

77. ஐங். பா. 409

78. குறுந். பா. 167

79. முனைவர். தாயம்மாள் அறவாணன், தமிழ்ச் சமூகவியல் - ஒரு கருத்தாடல் முதற்பதிப்பு, பக். 3-4

80. முனைவர் அ.அ. மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், ப.44

81. கலித். பா. 18 :10 -11

82. அகம். பா. 220 : 15

83. நற். பா. 115 : 8 - 9

84. குறுந். பா. 101

85. குறுந்தொகை, உ.வே.சா. பதிப்புரை, நூலாராய்ச்சி, P.xxix.

86. புறம். பா. 312 : 1 - 2

87. அகம். பா. 66 : 1-6

88. அகம். பா. 371: 3-7

89. தொல். பொருள். கற்பு. நூ. 6 : 28

90. மேலது. நூ. 9 : 6

91. மேலது. நூ. 9 : 14

92. முனைவர் சரளா. இராசகோபாலன், சங்க இலக்கியங்களில் தோழி ப. 294-295

93. குறுந். பா. 309

94. அ. பாண்டுரங்கன், சங்க இலக்கியம் ப. 174.

95. நற். பா. 290 : 6-9

96. அ. பாண்டுரங்கன், சங்க இலக்கியம் ப. 174

97. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியங்களில் தோழி, ப. 298.
98. தொல். பொருள். அகத். நூ. 5
99. டாக்டர் ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 330
100. கார்த்திகேசு சிவத்தம்பி, முல்லைத் திணைக்கான ஒழுக்கம், ப. 174.
101. கு.வெ.பாலசுப்ரமணியன், தமிழில் அகமும் புறமும் ப. 217 - 218
102. நற். பா. 285 : 5 - 6
103. அகம். பா. 78 : 7
104. அகம். பா. 322 : 12
105. ஐங். பா. 259 : 1 - 4
106. ஐங். பா. 439 : 3
107. அகம். பா. 30 : 8 - 9
108. அகம். பா. 320 : 5
109. நற். பா. 101 : 5
110. குறுந். பா. 320 : 1
111. அகம். பா. 140 : 5
112. அகம். பா. 87 : 7
113. அகம். பா. 363 : 10
114. அகம். பா. 297 : 16-18
115. கலைக்களஞ்சியம் - தொகுதி- 7: பக். 29-30
116. ஐங். பா. 399
117. நற்றிணை விளக்கவுரை ஔவை துரைசாமி பிள்ளை ப. 1091-92
118. நற். பா. 279
119. ஐங்குறுநூறு பொ.வே. சோமசுந்தரனார். ப. 557
120. குறுந். பா. 161: 3
121. தொல். பொருள். கற்பு. நூ. 11

122. குறள். 90

123. நற். பா. 120

124. மலைபடுகடாம் அடி: 102-144

125. குறுந். பா. 118

126. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் ப. 103-104

127. மேலது ப. 103

128. லூர்து. தே. நாட்டார் வழக்காற்றில் சிலஅடிப்படைக் கூறுகள் ப. 237

129. யோகிஸ்வரன். பி. தமிழ்க் கவிதைகளில் சமுதாய சிக்கல்கள் ப. 86

130. சாமி. சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் ப. 28

131. சண்முகபிள்ளை. மு., சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும், ப. 2

132. நற். பா. 9 : 1-2

133. குறுந். பா. 358 : 1-4

134. அகம். பா. 61 : 4-5

135. டாக்டர். சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 196

136. கி. வா. ஜகந்நாதன், விடையவன் விடைகள் ப. 64

137. முல்லைப்பாட்டு அடி : 6-23

138. நற். பா. 40 : 1-4

139. குறுந். பா. 218 : 1-4

# முடிவுரை

**"சங்கப்புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்"** எனும் தலைப்பிலான இவ்வாய்வில் அகப்பொருளின் தன்மை, அகமாந்தர்களை வெளிப்படுத்திக்காட்டும் புலவர்களின் படைப்பாற்றல் ஆகியவை ஆராயப்பெற்றுள்ளன. எப்பொருள் மாறினும், உரிப்பொருள் மாறாதன்மை கொண்டது என்பதனையும், தொல்காப்பியரின் களவு, கற்புக் கோட்பாடுகளைப் புலவர்கள் எவ்வகையில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதையும் இவ்வாய்வு உற்றுநோக்கியுள்ளது. மக்களின் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு சங்கஇலக்கியங்கள் படைக்கப்பட்டிருப்பதை இவ்வாய்வு முன்நிலைப்படுத்துகிறது. இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்ட மெய்மைக் கூறுகளான....

- ❖ சங்ககால மக்கள் காதல் வாழ்வினை உண்மை வாழ்வாகக் கருதினர் என்பதை அறியமுடிகின்றது.
- ❖ சங்க நூல்களில் மிகுதியாக உள்ளப் பாடல்கள் அகப்பாடல்களே. அகஉணர்வு உயிராகவும், புறவுணர்வு உடலாகவும் திகழ்கிறது. உடலாகவும், உயிராகவும் அகம் உள்ளதைப் புலவர்கள் படைப்புகள் வழி அறியலாகிறது.
- ❖ ஆண்பாற்புலவர்களைவிட, பெண்பாற்புலவர்கள் மிகமிகக் குறைவு என்பதன்வழி பெண்களின் கல்வியறிவும், சுதந்திரமும் குறைவு என்பதையும் அறியமுடிகின்றது.
- ❖ மனித வாழ்க்கையின் உயிர்நாடியான காதலும், காதலின் நுட்பமான அன்பென்னும் உள்ளுணர்வு புலவர்களின் கருவாக அமையப்பெற்று இருப்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- ❖ சங்கப்புலவர்களின் எண்ணிக்கையிலும், அகப்புறப் பாடல்களின் எண்ணிக்கையிலும் சிற்சில மாறுபாடுகள் உரையாசிரியர்களிடையே காணப்படுகிறது. ஆயினும், புறப்பாடல்களை விட அகப்பாடல்கள் மிகுதி, அதிகமான புலவர்கள் அகம் பாடியுள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பெண்பாற் புலவர்களிடையே சிற்சில

வேறுபாடுகள் காணப்படுகிறது. இவ்வேறுபாட்டிற்குப் புலவர்களின் பெயர்களில் அடைமொழி சிறிது வேறுபட்டமையே என்னும் காரணத்தை எடுத்தியம்பியிருக்கிறது.

- சங்க இலக்கியம் பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றும், போற்றப்படுவதற்குக் காரணம் புலவர்கள் கருத்துக்களைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டதே காரணமாக அமைகின்றது.

- களவு வாழ்வில் தலைவன் நெஞ்சொடு உரைத்தல் துறை அமைந்த பாடல்கள் பின் நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், புணர நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், புணர்ந்து நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், அல்ல குறிப்பிட்டு நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், உடன் போகும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தலாக அமைந்தப் பாடல்கள் 51 ஆகும். கற்பு வாழ்வில் நெஞ்சிற்கு உரைத்தல் என்ற துறை அமைந்தப் பாடல், பிரிவு வலித்த நெஞ்சிற்குத் தலைவன் கூறல், இடைச்சுரத்து நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், பாசறைத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், வினைமுற்றிய தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், வாயில் வேண்டிப் பெற்ற தலைவன் நெஞ்சிற்குக் கூறல் என 102 பாடல்களில் தலைவன் தன் நெஞ்சை விளித்துப் பாடுவதாகப் புலவர்கள் புனைந்துள்ளனர்.

- தலைவி களவு வாழ்வில் ஆறு பாடல்களும், கற்பு வாழ்வில் ஏழு பாடல்களும் என ‘நெஞ்சொடு உரைத்தல்’ துறையில் 13 பாடல்களை மட்டுமே பாடியுள்ளனர். இவை தலைவன் நெஞ்சொடு உரைத்தல் பாடலை விட மிகமிகக் குறைவாகும். புலவர்கள் தலைவி தனக்குத் தானேப் பேசிக் கொள்வதை விட தோழியிடம் பேசுவதே அதிகமாகப் புனைந்துள்ளமை அறியமுடிகின்றது.

- நெஞ்சொடு உரைத்தல் துறை அமைந்தப் பாடல்களை நோக்கும் நிலையில் தலைவனே அகவுணர்வு மிக்கவனாகக் கருதப்படுகின்றான். அதிலும் களவு வாழ்வை விடக் கற்பு வாழ்வில் பிரியும் தலைவன் நெஞ்சுக்கு உரைக்கும் பாடல்களே மிகுதி என்பதை உணர முடிகிறது. களவைவிடக்

கற்பில் தலைவனின் கடமைகளும், பொறுப்புகளும் மிகுதியின் பொருட்டு கற்பில், தலைவியைப் பிரியும் நிலையே அதிகம் காணப்படுகின்றன. எனவே, தலைவியைப் பிரிந்த நிலையில் 'நெஞ்சொடு உரைத்தல்' பாடல்களை மிகுதியாக புலவர்கள் பாடியுள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

- ஓதலாந்தையார் 'நெஞ்சொடு உரைத்தல்' பாடல்களை, மிகுதியாகப் பாடியப் புலவர் ஆவார். 'நெஞ்சொடு உரைத்தலில்' பாலைத்திணை பாடல்களிலே மிகுதியும் காணப்படுகிறது.

- நெஞ்சொடு உரைத்தலின் மூலம் தலைவன், தலைவியின் தன் உள்ளத்தில் எவ்வகையான எண்ணங்களைக் கொண்டுள்ளனர் விரைவில் தலைவன் மணந்து கொள்ள வேண்டுமென்ற அவா, தலைவன், தலைவி மீதுக் கொண்ட பேரன்பு, தலைமகளின் உள்ளுணர்வு போராட்டங்கள், எண்ண அலைகள், உண்மைத் தன்மை ஆகிய அகக்கூறுபாடுகளைப் புலவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

- நெஞ்சொடு உரைத்தல் பாடலின் மூலம் தலைவனும், தலைவியும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்புமிகுதியை, உண்மைக் காதலின் நிலையை உணரமுடிகிறது.

- வாழ்வில் பொருள் இன்றியமையாதது இருப்பினும், பொருளைவிட தலைவியின் அன்பே சிறந்தது. 'இளமை மீளாது' என்பதனையும் அறிந்த தலைவன் 'செலவழுங்கலை' மேற்கொள்கின்றான் என்பது உண்மையே ஆகும்.

- முதற்பொருளால் கருப்பொருளும், கருப்பொருளால் உரிப்பொருளும் சிறக்கின்றத் தன்மையை உணரமுடிகின்றன. அகமாந்தர்களின் உள்உணர்வுகளை வெளிப்படுத்த உரிப்பொருள் படைக்கப்பெற்ற திறம் எடுத்தியம்பப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு திணைக்கும் உரிய உரிப்பொருள் தலைமக்களின் வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்களாகக் கருதப்படுகின்றன. திணை மாந்தர்களுக்கு உயரியப் பொருளாக உரிப்பொருள் கருதப்பட்டுள்ளது.

முதற்பொருள், கருப்பொருளைவிட உரிப்பொருளே முதன்மைத் தன்மைகுரியதாக உள்ளது.

- ஒரு செய்யுளின் முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணை உணர்த்தப்படும், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணை உணர்த்தப்படும், உரிப்பொருள் மட்டுமே வரின் உரிப்பொருள் வழியே திணை உணர்த்தப்பட்டுள்ளது என்பது எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

- தலைவனும், தலைவியும், குறிஞ்சி நிலத்தில் சந்தித்துக் கருத்தொருமித்து கூடி மகிழ்தல் புணர்தல், தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்திருப்பது பிரிதல், தலைவன் பிரிந்து சென்ற பின் தலைவனையே நினைத்து இல்லத்தில் பொறுத்திருப்பது இருத்தல், தலைவன் பரத்தையரிடம் நாடிச் செல்லும் நிலையில் தலைவி கொள்வது ஊடல், தலைவியான தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தி இருப்பது இரங்கல் ஆகிய திணை ஒழுக்கங்கள் உரிய பாடல்களின் வழியே உணர்த்தப்பட்டுள்ளன.

- சங்க இலக்கியத்தில் 304 புலவர்கள் அகப்பொருள் மட்டும் அமைந்த 873 பாடல்களை பாடியுள்ளனர். அகம் மற்றும் புறம் பாடிய 77 புலவர்களில் அகப்பாடல்களின் எண்ணிக்கை 913. அகத்தின் ஆளுமை புலவர்களின் கருத்தாக்கத்தில் முதன்மையாகத் திகழ்கிறது.

- அகத்தில் அம்மூவனார் 127 பாடல்களைப் பாடியுள்ளார் என்பதை அறியமுடிகின்றன.

- அகம், புறம் பாடியப் புலவர்களில் கபிலர் 197 பாடல்களைப் பாடியுள்ளது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- குறிஞ்சித்திணையில் 170 புலவர்கள் 470 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் கபிலர். முல்லைத்திணையில் 72 புலவர்கள், 217 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் பேயனார். மருதத்திணையில் 59 புலவர்கள் 251 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் ஓரம்போகியார். நெய்தல் திணை 103

புலவர்கள் 341 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் அம்மூவனார். பாலைத்திணையில் 153 புலவர்கள் 504 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் ஓதலாந்தையார். ஒவ்வொரு திணையிலும் ஒரு புலவர் திணை ஆளுமையில் மிகுதியும், திறன் உடையவராகத் திகழ்வது குறிக்கப்பட்டுள்ளது.

❖ உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள் அகத்திணைகளில் மிகமிக குறைவாகக் காணப்படுகின்றன. அகப்பாடல்களில் அடிநீட்சி இயற்கைப் புனைவுக்கு களமாக அமையப்பெற்றுள்ளது. அடியளவு நீட்சிக்குறைவில் உரிப்பொருள் உணர்த்தப்பட்டுள்ளது என்றும் திணை உத்திக் கோட்பாடு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

❖ புணர்தலில் மகிழ்வும், பிரிதலில் உறுதியும், இருத்தலில் மனவலிமையும், ஊடலில் தெளிவும், இரங்களில் இரக்கமும் உள்ளவர்களாக அகமாந்தர்கள் திகழ்கிறார்கள் என்பது புலவர்களின் அகச்சிந்தனை மரபாக உள்ளது சுட்டப்பட்டுள்ளது.

❖ "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்னும் தொல்காப்பியரின் அகமரபினைத் தெள்ளிதின் உணர்ந்தவர்களாகப் புலவர்கள் உள்ளனர்.

❖ அகமாந்தர்களின் பண்பு நலன்கள் அவர்களின் தகுதிக்கு ஏற்ப பாடமாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

❖ தோழியே அகத்தின் அடையாளம் என்பதைப் பல்லாற்றானும் அறிய முடிகிறது.

❖ தலைவியின் அகவுணர்வு ஆளுகையில் தோழியே தன்நேர் இல்லா அகமாந்தராக உள்ளதைப் புலவர்கள் எஞ்ஞான்றும் குறிக்கத் தவறவில்லை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

❖ தலைவனுக்குப் பாங்கன் என்ற அகமாந்தரை வகுத்து, தலைவனின் உணர்வுகளின் ஊடகமாக பாங்கன் திகழ்கிறான்.

- களவுக் காலத்தில் தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகிய அகமாந்தர்கள் தலைவனுக்கும், தலைவிக்கும் துணையாக நிற்கின்றனர். மேலும், கற்புக் காலத்தில் தலைவனுக்கும், தலைவிக்கும், மிகப்பரவலாகத் துணை நிற்பவள் தோழியே என்பது புலவர்களின் அகமாந்தர்கள் கூற்று வழி அறியலாகிறது.

- தொல்காப்பியரின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாட்டினை அகமாந்தர்களின் புலப்பாட்டு நெறியில் தெள்ளிதின் புலவர்கள் உணர்த்தி உள்ளனர்.

- புலவர்கள் மெய்ப்பாடுகளைத் தலைவியின் செயல் உணர்வின் வழியே பல்லாற்றானும் உணர்த்தி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

- பிரிவு அகமரபில் ஒரு கூறுபாடாகும். இக்கூறுபாடு தலைவன், தலைவியின் அன்பின் நெறியை இன்னது எனச் சுட்டப் புலவர்கள் ஏதுவாக அமைத்துக் கொண்டதை உணரமுடிகிறது.

- அகமாந்தர்களின் வழியே சமுதாயத்தின் பழக்க, வழக்க நெறிமுறைகளை ஆங்காங்கே புலவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பது புலனாகிறது.

- தலைவன், தலைவி அக ஒழுக்கத்தில் வாயில்கள் முக்கியப் பங்காற்றி உள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், களவுக் காலத்தில் தலைவியின் அகத்தின் திண்ணிய வலிமையைப் புலவர்கள் செம்மாந்த நிலையில் படைத்துக் காட்டி உள்ளனர்.

- வெறியாடல் முருக வழிப்பாட்டினை உணர்த்துவது. நற்றாய் இச்சடங்கினை மேற்கொள்வாள். ஆயின், இதன் உட்பொருள் தலைவியின் பசலை நோயே என்பது புலவர்களின் கருத்தாக உள்ளது அறியத்தகுந்தாகும். வெறியாடல் என்னும் இச்சடங்கு களவைக் கற்பாக மாற்றும் ஒருவழக்கமாக உள்ளதை உணரமுடிகிறது.

- கலித்தொகையில் இந்த ‘வெறியாடல்’ புலவர்களால் பாடப்பெறவில்லை என்பது உணரத்தக்கதாகும்.

- ❖ தலைவன், தலைவியின் அகவாழ்வினை சமுதாயம் கண்ணுறுகிறது. சமுதாயத்தின் வெளிபாடு அம்பலாகவும், அலராகவும் உரைப்பது அகமரபாகும். மேலும், உடன்போக்கினை ஏற்று உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

- ❖ இல்லறத்திற்கு தேவை அன்பு; பொருள் அன்று; என்னும் அன்பு கோட்பாடு புலவர்களின் உட்கிடக்கையாக இருப்பதை அறிய முடிகிறது.

- ❖ இல்லறத்தை நெறிபடுத்துவதில் தலைவி முன்நிறுத்தப்பட்டுள்ளாள். பெற்றோரின் நல்நெறியும், சான்றோர்களின் கருத்துரையும் இல்லறத் தலைவிக்குத் தோன்றாத்துணையாக அமைந்து உள்ளதை புலவர்களின் பாடல் வழி அறியலாகிறது.

- ❖ ஐந்நிலங்களின் நில அமைப்புக்குத்தக்கவாறு மக்களின் வாழ்வியல் அமைந்து இருந்ததைப் புலவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். இதன்வழி நானிலமக்கள் இயற்கையை ஒட்டியே, வாழ்வு முறையையும் அமைந்து கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

- ❖ பழக்கமும், வழக்கமும் மக்களின் வழியே சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

- ❖ ‘சிலம்புகழிநோன்பு’ என்னும் வழக்கம், சங்க காலத்தில் உள்ளதை உணரமுடிகிறது. குழந்தைக்கு ‘புலிப்பல்’ தாளியை அணிவிக்கும் வழக்கம் காணலாகிறது. ‘விருந்தோம்பலை’ செவ்விய அறமாக மக்கள் போற்றி உள்ளனர். ஆழியிழைத்தல், விரிச்சிக்கேட்டல் என்பது அகத்தின் வழக்காறுகளாக இருப்பதை அறியலாகின்றன.

**மேலாய்வு களங்கள்**

1. உளவியல் நோக்கில் அகமாந்தர்கள்
2. தொல்காப்பிய அகக்கோட்பாடுகளும் அக இலக்கியங்களும்
3. சங்க அகப்புலவர்களின் அகமொழியாடல்

# முடிவுரை

**"சங்கப்புலவர்களின் அகப்பொருள் கருத்தாக்கம்"** எனும் தலைப்பிலான இவ்வாய்வில் அகப்பொருளின் தன்மை, அகமாந்தர்களை வெளிப்படுத்திக்காட்டும் புலவர்களின் படைப்பாற்றல் ஆகியவை ஆராயப்பெற்றுள்ளன. எப்பொருள் மாறினும், உரிப்பொருள் மாறாதன்மை கொண்டது என்பதனையும், தொல்காப்பியரின் களவு, கற்புக் கோட்பாடுகளைப் புலவர்கள் எவ்வகையில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதையும் இவ்வாய்வு உற்றுநோக்கியுள்ளது. மக்களின் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டு சங்கஇலக்கியங்கள் படைக்கப்பட்டிருப்பதை இவ்வாய்வு முன்நிலைப்படுத்துகிறது. இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்ட மெய்மைக் கூறுகளான....

- சங்ககால மக்கள் காதல் வாழ்வினை உண்மை வாழ்வாகக் கருதினர் என்பதை அறியமுடிகின்றது.
- சங்க நூல்களில் மிகுதியாக உள்ளப் பாடல்கள் அகப்பாடல்களே. அகஉணர்வு உயிராகவும், புறவுணர்வு உடலாகவும் திகழ்கிறது. உடலாகவும், உயிராகவும் அகம் உள்ளதைப் புலவர்கள் படைப்புகள் வழி அறியலாகிறது.
- ஆண்பாற்புலவர்களைவிட, பெண்பாற்புலவர்கள் மிகமிகக் குறைவு என்பதன்வழி பெண்களின் கல்வியறிவும், சுதந்திரமும் குறைவு என்பதையும் அறியமுடிகின்றது.
- மனித வாழ்க்கையின் உயிர்நாடியான காதலும், காதலின் நுட்பமான அன்பென்னும் உள்ளுணர்வு புலவர்களின் கருவாக அமையப்பெற்று இருப்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- சங்கப்புலவர்களின் எண்ணிக்கையிலும், அகப்புறப் பாடல்களின் எண்ணிக்கையிலும் சிற்சில மாறுபாடுகள் உரையாசிரியர்களிடையே காணப்படுகிறது. ஆயினும், புறப்பாடல்களை விட அகப்பாடல்கள் மிகுதி, அதிகமான புலவர்கள் அகம் பாடியுள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பெண்பாற் புலவர்களிடையே சிற்சில

வேறுபாடுகள் காணப்படுகிறது. இவ்வேறுபாட்டிற்குப் புலவர்களின் பெயர்களில் அடைமொழி சிறிது வேறுபட்டமையே என்னும் காரணத்தை எடுத்தியம்பியிருக்கிறது.

- சங்க இலக்கியம் பல நூற்றாண்டுகள் கடந்தும், இன்றும், போற்றப்படுவதற்குக் காரணம் புலவர்கள் கருத்துக்களைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டதே காரணமாக அமைகின்றது.

- களவு வாழ்வில் தலைவன் நெஞ்சொடு உரைத்தல் துறை அமைந்த பாடல்கள் பின் நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், புணர நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், புணர்ந்து நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், அல்ல குறிப்பிட்டு நீங்கும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், உடன் போகும் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தலாக அமைந்தப் பாடல்கள் 51 ஆகும். கற்பு வாழ்வில் நெஞ்சிற்கு உரைத்தல் என்ற துறை அமைந்தப் பாடல், பிரிவு வலித்த நெஞ்சிற்குத் தலைவன் கூறல், இடைச்சுரத்து நின்ற தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், பாசறைத் தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், வினைமுற்றிய தலைவன் நெஞ்சிற்கு உரைத்தல், வாயில் வேண்டிப் பெற்ற தலைவன் நெஞ்சிற்குக் கூறல் என 102 பாடல்களில் தலைவன் தன் நெஞ்சை விளித்துப் பாடுவதாகப் புலவர்கள் புனைந்துள்ளனர்.

- தலைவி களவு வாழ்வில் ஆறு பாடல்களும், கற்பு வாழ்வில் ஏழு பாடல்களும் என 'நெஞ்சொடு உரைத்தல்' துறையில் 13 பாடல்களை மட்டுமே பாடியுள்ளனர். இவை தலைவன் நெஞ்சொடு உரைத்தல் பாடலை விட மிகமிகக் குறைவாகும். புலவர்கள் தலைவி தனக்குத் தானேப் பேசிக் கொள்வதை விட தோழியிடம் பேசுவதே அதிகமாகப் புனைந்துள்ளமை அறியமுடிகின்றது.

- நெஞ்சொடு உரைத்தல் துறை அமைந்தப் பாடல்களை நோக்கும் நிலையில் தலைவனே அகவுணர்வு மிக்கவனாகக் கருதப்படுகின்றான். அதிலும் களவு வாழ்வை விடக் கற்பு வாழ்வில் பிரியும் தலைவன் நெஞ்சுக்கு உரைக்கும் பாடல்களே மிகுதி என்பதை உணர முடிகிறது. களவைவிடக்

கற்பில் தலைவனின் கடமைகளும், பொறுப்புகளும் மிகுதியின் பொருட்டு கற்பில், தலைவியைப் பிரியும் நிலையே அதிகம் காணப்படுகின்றன. எனவே, தலைவியைப் பிரிந்த நிலையில் ‘நெஞ்சொடு உரைத்தல்’ பாடல்களை மிகுதியாக புலவர்கள் பாடியுள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

- ஓதலாந்தையார் ‘நெஞ்சொடு உரைத்தல்’ பாடல்களை, மிகுதியாகப் பாடியப் புலவர் ஆவார். ‘நெஞ்சொடு உரைத்தலில்’ பாலைத்திணை பாடல்களிலே மிகுதியும் காணப்படுகிறது.
- நெஞ்சொடு உரைத்தலின் மூலம் தலைவன், தலைவியின் தன் உள்ளத்தில் எவ்வகையான எண்ணங்களைக் கொண்டுள்ளனர் விரைவில் தலைவன் மணந்து கொள்ள வேண்டுமென்ற அவா, தலைவன், தலைவி மீதுக் கொண்ட பேரன்பு, தலைமகளின் உள்ளுணர்வு போராட்டங்கள், எண்ண அலைகள், உண்மைத் தன்மை ஆகிய அகக்கூறுபாடுகளைப் புலவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.
- நெஞ்சொடு உரைத்தல் பாடலின் மூலம் தலைவனும், தலைவியும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்புமிகுதியை, உண்மைக் காதலின் நிலையை உணரமுடிகிறது.
- வாழ்வில் பொருள் இன்றியமையாதது இருப்பினும், பொருளைவிட தலைவியின் அன்பே சிறந்தது. ‘இளமை மீளாது’ என்பதனையும் அறிந்த தலைவன் ‘செலவழுங்கலை’ மேற்கொள்கின்றான் என்பது உண்மையே ஆகும்.
- முதற்பொருளால் கருப்பொருளும், கருப்பொருளால் உரிப்பொருளும் சிறக்கின்றத் தன்மையை உணரமுடிகின்றன. அகமாந்தர்களின் உள்உணர்வுகளை வெளிப்படுத்த உரிப்பொருள் படைக்கப்பெற்ற திறம் எடுத்தியம்பப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு திணைக்கும் உரிய உரிப்பொருள் தலைமக்களின் வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்களாகக் கருதப்படுகின்றன. திணை மாந்தர்களுக்கு உயரியப் பொருளாக உரிப்பொருள் கருதப்பட்டுள்ளது.

முதற்பொருள், கருப்பொருளைவிட உரிப்பொருளே முதன்மைத் தன்மைகுரியதாக உள்ளது.

- ஒரு செய்யுளின் முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணை உணர்த்தப்படும், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணை உணர்த்தப்படும், உரிப்பொருள் மட்டுமே வரின் உரிப்பொருள் வழியே திணை உணர்த்தப்பட்டுள்ளது என்பது எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.
- தலைவனும், தலைவியும், குறிஞ்சி நிலத்தில் சந்தித்துக் கருத்தொருமித்து கூடி மகிழ்தல் புணர்தல், தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்திருப்பது பிரிதல், தலைவன் பிரிந்து சென்ற பின் தலைவனையே நினைத்து இல்லத்தில் பொறுத்திருப்பது இருத்தல், தலைவன் பரத்தையரிடம் நாடிச் செல்லும் நிலையில் தலைவி கொள்வது ஊடல், தலைவியான தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தி இருப்பது இரங்கல் ஆகிய திணை ஒழுக்கங்கள் உரிய பாடல்களின் வழியே உணர்த்தப்பட்டுள்ளன.
- சங்க இலக்கியத்தில் 304 புலவர்கள் அகப்பொருள் மட்டும் அமைந்த 873 பாடல்களை பாடியுள்ளனர். அகம் மற்றும் புறம் பாடிய 77 புலவர்களில் அகப்பாடல்களின் எண்ணிக்கை 913. அகத்தின் ஆளுமை புலவர்களின் கருத்தாக்கத்தில் முதன்மையாகத் திகழ்கிறது.
- அகத்தில் அம்மூவனார் 127 பாடல்களைப் பாடியுள்ளார் என்பதை அறியமுடிகின்றன.
- அகம், புறம் பாடியப் புலவர்களில் கபிலர் 197 பாடல்களைப் பாடியுள்ளது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- குறிஞ்சித்திணையில் 170 புலவர்கள் 470 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் கபிலர். முல்லைத்திணையில் 72 புலவர்கள், 217 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் பேயனார். மருதத்திணையில் 59 புலவர்கள் 251 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் ஓரம்போகியார். நெய்தல் திணை 103

புலவர்கள் 341 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் அம்மூவனார். பாலைத்திணையில் 153 புலவர்கள் 504 பாடல்களைப் பாடியுள்ளனர். இவர்களில் முதன்மையானவர் ஓதலாந்தையார். ஒவ்வொரு திணையிலும் ஒரு புலவர் திணை ஆளுமையில் மிகுதியும், திறன் உடையவராகத் திகழ்வது குறிக்கப்பட்டுள்ளது.

❖ உரிப்பொருள் மட்டும் அமைந்தப் பாடல்கள் அகத்திணைகளில் மிகமிக குறைவாகக் காணப்படுகின்றன. அகப்பாடல்களில் அடிநீட்சி இயற்கைப் புனைவுக்கு களமாக அமையப்பெற்றுள்ளது. அடியளவு நீட்சிக்குறைவில் உரிப்பொருள் உணர்த்தப்பட்டுள்ளது என்றும் திணை உத்திக் கோட்பாடு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

❖ புணர்தலில் மகிழ்வும், பிரிதலில் உறுதியும், இருத்தலில் மனவலிமையும், ஊடலில் தெளிவும், இரங்களில் இரக்கமும் உள்ளவர்களாக அகமாந்தர்கள் திகழ்கிறார்கள் என்பது புலவர்களின் அகச்சிந்தனை மரபாக உள்ளது சுட்டப்பட்டுள்ளது.

❖ "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்னும் தொல்காப்பியரின் அகமரபினைத் தெள்ளிதின் உணர்ந்தவர்களாகப் புலவர்கள் உள்ளனர்.

❖ அகமாந்தர்களின் பண்பு நலன்கள் அவர்களின் தகுதிக்கு ஏற்ப பாடமாகக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

❖ தோழியே அகத்தின் அடையாளம் என்பதைப் பல்லாற்றானும் அறிய முடிகிறது.

❖ தலைவியின் அகவுணர்வு ஆளுகையில் தோழியே தன்நேர் இல்லா அகமாந்தராக உள்ளதைப் புலவர்கள் எஞ்ஞான்றும் குறிக்கத் தவறவில்லை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

❖ தலைவனுக்குப் பாங்கன் என்ற அகமாந்தரை வகுத்து, தலைவனின் உணர்வுகளின் ஊடகமாக பாங்கன் திகழ்கிறான்.

- களவுக் காலத்தில் தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர் ஆகிய அகமாந்தர்கள் தலைவனுக்கும், தலைவிக்கும் துணையாக நிற்கின்றனர். மேலும், கற்புக் காலத்தில் தலைவனுக்கும், தலைவிக்கும், மிகப்பரவலாகத் துணை நிற்பவள் தோழியே என்பது புலவர்களின் அகமாந்தர்கள் கூற்று வழி அறியலாகிறது.

- தொல்காப்பியரின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாட்டினை அகமாந்தர்களின் புலப்பாட்டு நெறியில் தெள்ளிதின் புலவர்கள் உணர்த்தி உள்ளனர்.

- புலவர்கள் மெய்ப்பாடுகளைத் தலைவியின் செயல் உணர்வின் வழியே பல்லாற்றானும் உணர்த்தி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

- பிரிவு அகமரபில் ஒரு கூறுபாடாகும். இக்கூறுபாடு தலைவன், தலைவியின் அன்பின் நெறியை இன்னது எனச் சுட்டப் புலவர்கள் ஏதுவாக அமைத்துக் கொண்டதை உணரமுடிகிறது.

- அகமாந்தர்களின் வழியே சமுதாயத்தின் பழக்க, வழக்க நெறிமுறைகளை ஆங்காங்கே புலவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பது புலனாகிறது.

- தலைவன், தலைவி அக ஒழுக்கத்தில் வாயில்கள் முக்கியப் பங்காற்றி உள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், களவுக் காலத்தில் தலைவியின் அகத்தின் திண்ணிய வலிமையைப் புலவர்கள் செம்மாந்த நிலையில் படைத்துக் காட்டி உள்ளனர்.

- வெறியாடல் முருக வழிப்பாட்டினை உணர்த்துவது. நற்றாய் இச்சடங்கினை மேற்கொள்வாள். ஆயின், இதன் உட்பொருள் தலைவியின் பசலை நோயே என்பது புலவர்களின் கருத்தாக உள்ளது அறியத்தகுந்தாகும். வெறியாடல் என்னும் இச்சடங்கு களவைக் கற்பாக மாற்றும் ஒருவழக்கமாக உள்ளதை உணரமுடிகிறது.

- கலித்தொகையில் இந்த 'வெறியாடல்' புலவர்களால் பாடப்பெறவில்லை என்பது உணரத்தக்கதாகும்.

- தலைவன், தலைவியின் அகவாழ்வினை சமுதாயம் கண்ணுறுகிறது. சமுதாயத்தின் வெளிபாடு அம்பலாகவும், அலராகவும் உரைப்பது அகமரபாகும். மேலும், உடன்போக்கினை ஏற்று உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.
- இல்லறத்திற்கு தேவை அன்பு; பொருள் அன்று; என்னும் அன்பு கோட்பாடு புலவர்களின் உட்கிடக்கையாக இருப்பதை அறிய முடிகிறது.
- இல்லறத்தை நெறிபடுத்துவதில் தலைவி முன்நிறுத்தப்பட்டுள்ளாள். பெற்றோரின் நல்நெறியும், சான்றோர்களின் கருத்துரையும் இல்லறத் தலைவிக்குத் தோன்றாத்துணையாக அமைந்து உள்ளதை புலவர்களின் பாடல் வழி அறியலாகிறது.
- ஐந்நிலங்களின் நில அமைப்புக்குத்தக்கவாறு மக்களின் வாழ்வியல் அமைந்து இருந்ததைப் புலவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். இதன்வழி நானிலமக்கள் இயற்கையை ஒட்டியே, வாழ்வு முறையையும் அமைந்து கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.
- பழக்கமும், வழக்கமும் மக்களின் வழியே சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.
- ‘சிலம்புகழிநோன்பு’ என்னும் வழக்கம், சங்க காலத்தில் உள்ளதை உணரமுடிகிறது. குழந்தைக்கு ‘புலிப்பல்’ தாளியை அணிவிக்கும் வழக்கம் காணலாகிறது. ‘விருந்தோம்பலை’ செவ்விய அறமாக மக்கள் போற்றி உள்ளனர். ஆழியிழைத்தல், விரிச்சிக்கேட்டல் என்பது அகத்தின் வழக்காறுகளாக இருப்பதை அறியலாகின்றன.

**மேலாய்வு களங்கள்**

1. உளவியல் நோக்கில் அகமாந்தர்கள்
2. தொல்காப்பிய அகக்கோட்பாடுகளும் அக இலக்கியங்களும்
3. சங்க அகப்புலவர்களின் அகமொழியாடல்